
# சித்த மருத்துவம் சிறப்பு

1021



ஆசிரியர்:
டாக்டர் ஆர். தியாகராஜன்,
எல்.ஐ.எம்.,

இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி இயக்ககம்,
சென்னை - 106.
1995

1023

# சித்த மருத்துவம் சிறப்பு

1021

ஆசிரியர் :

டாக்டர். **ஆர். தியாகராஜன்,** எல்.ஐ.எம்.,

துணை முதல்வர் (ஓய்வு)

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை

கவுரவ ஆலோசகர் :

சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்

(இந்திய அரசு)

சென்னை.

தமிழ்நாடு சித்தமருத்துவ வாரியம், சென்னை.

1994

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **SIDDHA MARUTHUVAM SIRAPPU**<br>**சித்த மருத்துவம் சிறப்பு** |
| Author | : | Dr. R. Thiyagarajan, L.I.M.<br>Rtd. Vice - Principal,<br>Govt Siddha Medical College,<br>Palayamkottai. |
| Publisher | : | Director of Indian Medicine &<br>Homocopathy,<br>Arumbakkam, Madras - 600 106. |
| Language | : | Tamil |
| Edition | : | Second (First Edition - 1986)<br>Second Edition - 1995) |
| Month of Publication | : | December - 1995 |
| Paper Used | : | Maplitho Paper |
| Size of the Book | : | 13.5 x 19.5 Cms |
| Printing Types Used | : | 12 Point |
| Number of pages | : | 366 Pages |
| Number of Copies | : | 3000 Books. |
| Price | : | Rs. |
| Printing | : | Tansi Press, Guindy, Ms-32. |
| Laser Composing | : | Sri Venkateswara Enterprises,<br>18, Meeran Sahib Street, Ms - 2. |
| Binding | : | 12.2 Kgs Pulp Board |
| Wrapper Design | : | Artist Karthik |

**திரு. ச. அன்சர் அலி,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர்

தமிழ்நாடு
சித்த மருத்துவ வாரியம்
அரும்பாக்கம்,
சென்னை - 600 106.

# வாழ்த்துரை

மறுபதிப்பாகி உங்கள் கரங்களை அலங்கரிக்கும் இந்நூல் சித்த மருத்துவ பட்டப்படிப்பிற்கும், பட்ட மேற்படிப்பிற்கும் ( எம்.டி., - சிறப்பு மருத்துவம் ) பாடநூலாகும்.

பாட நூலில்லா குறைபோக்கும் முகத்தான் 1986-ஆம் ஆண்டு தன் தனி முயற்சியால் தனியார் அச்சகம் ஒன்றின் வாயிலாக இந்நூலை ஆசியர் வெளியிட்டுள்ளார். அரிதன் முயன்று அச்சேற்றப்பட்ட இந்த நூல் ஆசிரியர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம். அவர்கள் பாராட்டுதற் குரியவர், போற்றுதற்குரியவர்.

அதனை மறுபதிப்பாக வெளியிடுவதில் நாம் மகிழ்வு கொள்கிறோம். இதனை மறுபதிப்பாக்கி வெளியிடும் பணியினை மேற்கொண்ட ஆய்வு மருத்துவ அலுவலர் மரு. மு. பரமேஸ்வரன், பி.ஐ.எம்., அவர்களைப் பாராட்டி, அவரிட்ட பணிக்குச் செயலாக்கம் தரும் தமிழ்ப்புலவர்கள் திரு. த. அழகப்பராசு, திருமதி செ. இரா. பிரசன்னா மற்றும் சுவடி நகலெடுப்போர் அனைவர்க்கும், விரைவில் அச்சிட்டளித்த டான்சி அச்சகத்தாருக்கும் நம் நன்றியையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ச. அன்சர் அலி*

**மரு. மு. பரமேஸ்வரன்,** பி.ஐ.எம்.,
ஆய்வு மருத்துவ அலுவலர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்,
சென்னை-106.

# பதிப்புரை

சித்த மருத்துவம் - சிறப்பு எனும் இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. நீண்ட காலமாக மாணாக்கர்கட்குப் பயிற்றுவித்த தனது அனுபவத்தைக் கொண்டு இந்நூலைப் படைத்தளித்தவர் என் ஆசிரியப் பெருமான் **டாக்டர். ஆர். தியாகராசன்,** L.I.M. அவர்கள். பழுத்த மருத்துவ வல்லமை பெற்ற ஆசிரியர்க்கு எனது நன்றி உரித்தாகட்டும்.

நூல்கள் விரைவாகவும் நிறைவாகவும் வெளியிடப்பட வேண்டும் என விழையும் இயக்குநர் திருமிகு. **ச. அன்சர் அலி,** இ.ஆ.ப., அவர்கட்கு எனது உளங்கனிந்த நன்றி. நூல்கள் செம்மையாக வரவேண்டும் என்பதில் முனைப்புக் காட்டும் இணை இயக்குநர் **டாக்டர். வீ.சுப்பிரமணியன்,** எம்.டி (சித்தா) அவர்கட்கும் நம் நன்றி உரித்து. மேலும் தனி அலுவலர் **டாக்டர். இ. வேலுச்சாமி,** எம்.டி (சித்தா) அவர்கட்கும், என்

சிந்தனைக்குச் செயல்வடிவம் தரும் தமிழ்ப்புலவர்கள் திரு. த. அழகப்பராசு, எம்.ஏ., பி.எட்., திருமதி. செ.இரா.பிரசன்னா, எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., ஆகியோர்க்கும், மற்றும் அச்சுப் பிழை சீர்செய்வதில் துணைநின்ற திருமதி. தா. நாகம்மா, திரு. வெ. சாரங்கபாணி, திருமதி. க. லலிதா ஆகியோர்க்கும், மற்றுமுள்ள சுவடி நகற்பிரிவு பணியாளர்கட்கும் நம் நன்றி உரியதாகட்டும்.

நன்முறையில் லேசர் அச்சுக்கோத்தளித்த ஸ்ரீ வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ், அச்சிட்டளித்த டான்சி அச்சகத்தார் ஆகியோர்க்கும் நாம் நன்றியுடையோம்.

சென்னை-106.
12.10.95.

**மரு.மு. பரமேஸ்வரன்.**

# முதற்பதிப்பின் முகவுரை

பாளையங்கோட்டை அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியில் B.I.M. பட்டப்படிப்பிற்குப் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்குப் பாடநூல்கள் இல்லாத குறையைத் தீர்க்கும் பொருட்டுத் தமிழக அரசினர் சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற்குழு ஒன்றை அமைத்தனர். (G.O. Ms. No. 1060 Health Dated 13-06-1966) இக்குழுவில் யானும் ஒரு உறுப்பினன். இக்குழு சென்னையில் மும்முறை கூடிற்று. மூன்றாவது கூட்டம் 1967 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 5,6 ஆம் தேதிகளில் நடந்தது. அவ்வமயம் கூட்டத்தில் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் சுகாதார அமைச்சுச் செயலாளர், துணைச் செயலாளர், மருத்துவக் கல்வி நெறியாளர், புதுமருத்துவக் கல்லூரிகளின் தனி அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு சில முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர். அவற்றுள் இன்னின்ன பாடநூற்கள் பாடங்களைப் போதிக்கின்ற இன்னின்னாரால் எழுதப் பெறவேண்டும் என்பதும் ஒன்று. அம்முடிவின்படி குணபாடம் இரண்டாம், மூன்றாம் பகுதிகளும், உடல்கூறு நூலும் என்னால் வெளியிடப் பெற்றன.

கல்லூரி தொடங்கி 22 ஆண்டுகள் ஆகிவிட்டன B.S., M & S பட்டப்படிப்பு மாணவர்களுக்கு இறுதியாண்டில் நடத்தப்பெறும் சிறப்பு மருத்துவத்திற்கு மேல்பட்டப் படிப்பு (M.D.Siddha Course) ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சிகளிலும் நிர்வாகத்தினர் வெற்றியும் அடைந்து விட்டனர். இஃது

போற்றற்குரிய செயலேயாகும். ஆயினும் பட்டப்படிப்பிற்கு உரிய பாட நூல் இல்லாததும் ஒரு மாபெருங்குறையேயாகும். சிறப்பு மருத்துவப் பாடத்திற்கு உரிய பாட திட்டம் சென்னை பல்கலைக் கழகத்தினராலும் ஆரம்ப காலத்தில் நிர்ணயம் செய்யப் படவில்லை. கற்பம், கிரிகை (வெறிநோய்), வர்மம். குட்டம் (தோல் நோய்) என்ற தலைப்புகளைத் தவிர அவ்வவற்றிற்குரிய ஆதார நூற்கள் கூட குறிப்பிடப் படவில்லை. 1968இல் கல்லூரி முதல்வராக இருந்த டாக்டர் C.S. உத்தமராயன் HPIM அவர்கள் இப்பாடத்தை முதன் முறையாக என்னைச் சொல்லிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதின்பேரில் ஒப்புக் கொண்டு மாணவர்களுக்கு ஏறக்குறைய 20 மணி நேரம் ஒவ்வொரு தலைப்பிலும் விரிவுரையாற்றி ஏடுகளில் எழுதிக் கொள்ள குறிப்புகளையும் கொடுத்தேன். நான் 1970 ஏப்ரல் திங்களில் ஒய்வு பெற்றேன். பின்வந்த ஆசிரியர்கள் நான் அவர்களுக்கு மாணாக்கர்களாயிருந்த காலத்தில் சொல்லிக் கொடுத்த குறிப்புகளை வைத்துக் கொண்டு அவர்கள் பாடம் நடத்தி வருகின்றார்கள். 1984 ஏப்ரல் தேர்வின்போது மாணவர்களின் குறிப்பேடுகளை வாங்கிப் பார்க்க நேர்ந்தபோது நான் கொடுத்த குறிப்புகள் நூலாக அச்சேராததால் வரவர அக்குறிப்புகளும் மூன்றில் ஒன்றாகக் குறைந்து பிழைகள் மலிந்தும் இருந்ததைக் காண நேர்ந்தது.

யான் இதனை அச்சிட நந்தி மாத இதழ் மூலம் முயன்றும் அரசை அணுகியதில் அரசின் நடைமுறை ஒத்து வராததாலும் அரசின் அவசரக்கால நடவடிக்கையால் ஏற்பட்ட இன்னல்களினாலும் அச்சாகவில்லை. தற்போது பூமாதேவி அச்சகத்தாரின் கருணையினால் 20 ஆண்டுகளுக்குப் பிறகாவது

அச்சாகியதே என்று எண்ணி அச்சகத்தாருக்கு நன்றி தெரிவித்து அமைதி பெறுவதோடு இந்திய மருத்துவமையக் கழகத்தினரால் அங்கீகரிக்கப் பெற்ற பாடத் திட்டப்படி எழுதப் பெற்ற இந்நூல் சித்த மருத்துவம் பயில்கின்ற மாணவர்களுக்கும் சிறப்பு மருத்துவம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும், மருத்துவர்களுக்கும் நன்கு பயன்படும் என்று கருதுகின்றேன். இந்நூலில் உள்ள குற்றம் குறைகளை அறிவுடையவர் பொறுப்பாராக.

சென்னை, *டாக்டர் ஆர். தியாகராஜன்*
15.8.86

# பொருளடக்கம்

**கற்பம் :**

பக்க எண்.

கற்ப அவிழ்தங்கள் பற்றிய பொதுக் குறிப்புகள் - கற்ப அவிழ்த முண்ணும் காலத்து கடைபிடிக்க வேண்டிய பொதுவான விதிகள் - கற்பங்களும் கற்ப யோகங்களும் - காலசித்தி மூலிகைத் கற்பம் - பொதுக் கற்பங்கள் - சிறப்புக் கற்பங்கள் - தாதுப்பொருள் கற்பம் - சீவப்பொருள் கற்பம் - வாயு தாரணை - மூச்சுப்பயிற்சி - பிரணா யாமத்தின் சில முக்கிய விதிகள் - வாயு தாரணை பயிற்சி - யோகம் ஆதனம் (யோகாசனம்) - பதுமாசனம் - சித்தாசனம் - பத்திராசனம் - போன்ற பிற - இராசயோகம் - இயமநியமம் - முப்பூ. .............................................................. 1-62

**வெறிநோய் :**

கிரிகை - மருந்து ( பதினெண் கிரிகைகளும் அதற்கு மருந்தும்) - கிரிகை பதினெட்டுக்கும் சிகிச்சை விவரம் - யோகசிகிச்சைகள் - 18 கிரிகைக்கும் மருந்து - பிரமை - உன்மாதம் - மத அழிவு (மதாத்தியம்) மத நோய் - வலிப்பு - மூர்ச்சை - அபஸ்மாரம் (மயக்கநோய்) சூதிகாவாதம் - சூதிகாவாத வலிப்பு -

உளப்பிறழ்வு - உடற்கோளாறுகள் - சூதிகாவாத குண மாற்றங்கள் - காக்கை வலிப்பு - அறிகுறி - வலிப்பு - அறிவுக்கேடு - குணக்கேடு - ஆளுமை மாறுபாடு - உள்ளுறுப்பு நோய்களிலும் தீவிர நுண்ம சஞ்சார நோய்களிலும் காணும் உளப் பிறழ்வுகள். ....................................................63-144

*வர்மம் :*

வர்மாணிக்கலை சார்ந்த மூல நூல்கள் - வர்மாணிக் கலையின் அருமை பெருமைகள் - சித்த வைத்தியத்தில் வர்ம பரிகாரம் - வர்மம் - சீறுங்கொல்லி - பிடரிவர்மம் - அடங்கல் - வர்மத்தின் பெயர்த்தொகுப்பு - அறுவை மருத்துவத்தில் வர்மத்தின் முக்கியத்துவம் - வர்மஸ்தானங்கள் அல்லது வர்ம நிலைகள் - திலர்த வர்மம் - நட்சத்திரக் காலம் - செவிக்குத்துக் காலம் - பிடரிக் காலம் - உறக்க காலம் - தும்மிக் காலம் அல்லது திவளைக் காலம் - நேர்வர்மம் அல்லது கூம்புவர்மம் - அடப்பகாலம் - சுருக்கிக்காலம் - உறுமிக்காலம் - அத்தி சுருக்கிக் காலம் - கல்லிடைக் காலம் - மூத்திரக் காலம் - தொடுவர்மம் 96 - வர்ம அடிபட்டுக் கிடப்பவருக்குரிய இளக்குமுறை - தடவுமுறை - வர்மநோய்க்கு மருந்துகள் - சகல வர்மத்திற்கும் எழும்புகிற அடங்கல் முறையின் விவரங்கள். ................................ 145-222

தோற்பிணிகள் :

நோய் இயல் - நோய்க்காரணம் - பொதுக்குறி குணம் - நோய் எண் பகுப்பு - குற்றம் முதலிய வேறுபாடுகள் - தொழுநோய் - நோய் இயல் - நோய் முதல்-பெருநோய் - நோய்ப்பகுப்பு - நோய் முடிவு - மருத்துவம் - பேதிமருந்து - குட்டந்தீர்க்கும் தாதுப்பொருட்கள் - குட்டந்தீர்க்கும் மூலிகைகள் - சில உள் மருந்துகள் - வெண்குட்டம் - வாத வெண்படை - பித்த வெண்படை - கப வெண்படை - மேக வெண்படை - சொரி சிரங்கு - கரப்பான் - வாதக் கரப்பான் - கண்டக் கரப்பான் - வறட்சிக் கரப்பான் - திமிர்வாதக் கரப்பான் - கபாலக் கரப்பான் - பித்தக் கரப்பான் - சேத்துமக் கரப்பான் - தோல்புற்று - படுக்கைப்புண் - சேற்றுப்புண் - தீப்புண் - பித்த வெடிப்பு - கால் ஆணி - நகச்சுற்று - வாய்ப்புண் - வேர்க்குரு - கோடைக் கொப்புளம் - கட்டி, புண் - முகப்பரு - தோல்வறட்சி - தடிப்புகள் - காணாக்கடி - சில்விட தடிப்புகள் - சிறுபாம்புக்கடி - படர்தாமரை - படை தேமல் - புழுவெட்டு - நரை, மயிர் உதிரல் - வழுக்கை - பொடுகு - பாலுண்ணி - மருள், மச்சம் - மேகத் தழும்புகள் - அம்மைக் கொப்புளம் - அக்கி - தழும்பு - தாபிதம் - காளாஞ்சகப்படை - பேன்கள். ........................ 223-227

# கற்பம்

தமிழ் மருத்துவ முறைகளில் கற்பமருந்துகள் தலையாயன. இவைகள் சித்தர்களால் கண்டு தமிழகத்துக்குத் தரப்பெற்றவை. கற்பமென்பது உடம்பினை நோயுறாதபடி நன்னிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணிகளையும் நீக்குவதென்பர். உடம்பினுடைய மேன்மையை முழுதுமாக உணர்ந்தவர் சித்தர். இவர் நரை, திரை, மூப்பறியா நல்லுடம்பு பெற்றோர். இவர் உடலுக்கு உறுதி பயக்கும் பொருட்களை அறிந்து நன்மருந்து செய்து பொய் எனுமுடலை மெய்யென நிலைக்கச் செய்தனர்; சித்த முறையில் உடலில் நன்மையைக் காப்பது ***'காய கற்பம்'*** எனப்படும். இஃது எண்வகைச் சித்திகளை அடைவதற்கேதுவானது. இக்காலத்தில் இக்கற்ப முறைகளை, நமது உடலைப் பேணவும், பல ஆண்டுகள் உயிரோடு வாழவும், பிணிகளைப் போக்கி உடலைத்தேற்றவும், பிணிகள் வராதபடி தடுக்கவும் பயன்படுத்தலாம்.

மனிதன் இல்லற வாழ்விலானாலும் துறவற வாழ்விலானாலும் தன் உடம்பைப் பேணல் முதன்மையானது.

*''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''*

என்று திருமந்திரம் கூறுவதிலிருந்து இதை அறியலாம்.

மேலும் உடம்பின் பயன் என்ற அதிகாரத்துள் ஔவைக் குறள் கூறும் கீழ்க்கண்ட செய்யுட்களையும் நோக்குக.

*''உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை*
*உடம்பினா லுன்னியதே யாம்''* (5)

*''உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே*
*அயிர்ப்பின்றி யாதியை நாடு''* (8)

இத்தகைய உடம்பைக் காப்பது கற்பம். இது உடம்பைக் கல்லைப் போலாக்கும். கல்லினாற் செய்த சிலை பன்னெடுங் காலமாயினும் நரை, திரை, மூப்பு, பிணி இவை எய்தாதது போல கற்பமான உடலும் இக்கேடுகளை அடைவதில்லை. இதனை,

*''கற்பத்தை யுண்டால் காயம் அழியாது*
*கற்பத்தி னாலே காணலாம் கைலையை*
*கற்பத்தி னாலே காணலாம் சோதியை*
*கற்பத்தி னாலே காலையுங் கட்டிடே''*

என்ற திருமந்திரத்தால் தெளியலாம்.

கற்ப வகை கூறுங்கால் அது பொதுகற்பம், சிறப்பு கற்பம் என விரியும். பொதுக் கற்பம் என்பது பொதுவான உடல் நிலையைக் காத்து மேனிக்கு எழிலையும் பலத்தையும் தந்து நரை, திரை, மூப்பாகிய கேடுகளின்றி இறப்பை வராதபடி தடுப்பதுவாம். இவ்வாறு கூறுதலின் இது நீண்டகாலம் உயிருடன் வாழச் செய்யும் என்று கொள்க. சிறப்புக் கற்பம் என்பது சிறப்பாக குற்றக் கேட்டால் உடலின் உறுப்புகளிலாவது உடல் முற்றுமாவது கண்ட பிணியை நீக்கி உடலுக்கு வன்மை தந்து பலமூட்டுவதாகும்.

இவ்வாற்றானே பொது, சிறப்பென விரிந்த கற்பத்துள் மூலிகைக் கற்பம், தாதுக் கற்பம் ஆகியவான அவிழ்தங்களும் மேலும் உடலைக் காக்கும் ஆதனம் முதலிய பயிற்சிகளும் பிராணாயாமம் என்று சொல்லப் பட்ட வாசியும், யோகமும், முப்பூ தீட்சை ஆகியவும் அடங்கும். (முப்பூ என்பது மூன்று முக்கியபூதச் சேர்க்கை (வளி, தீ, நீர்) கொண்டு எண்ணப்பட்டது. இது வைத்திய முப்பூ, வாதமுப்பூ, யோகமுப்பூ என விரியும். வைத்திய முப்பூ பிணிகளை எளிதிற் போக்கி உடலைத் தேற்றும். வாதமுப்பூ எவ்வாறு கீழ்வகுப்புப் பொருட்களை மேம்பாடடையச் செய்யுமோ அதுபோல உடம்பை அதன் அழியும் தன்மையினின்று மாற்றி அழியாதபடி செய்யும். யோக முப்பூ என்பது நமது உடலுள்ளேயே ஊறுகின்ற சிவக்குடிலை நீர் போன்ற சத்துக்களாம். இவை ஆயுட் காலத்தை வெல்லத் தக்கன. யோகம் செய்வதன் மூலம் யோக முப்பூவை, ஒழுங்குபடுத்தி நீண்ட நாட்கள் வாழமுடியும்). இவை தவிர அமுரிதாரணை, தசதீட்சை, இயமம், நியமமாதி, நன்னடத்தை, மனத்தூய்மை ஆகியவும் கற்பமாம். இனி கற்பத்துள் முதலான அவிழ்தம், கற்பப் பொருட்கள், கற்பயோகம் என்பனவற்றை விவரிப்போம்.

### *கற்ப அவிழ்தங்கள் பற்றிய பொதுக்குறிப்புகள்*

கற்ப அவிழ்தங்கள் தாவர, தாதுப் பொருட்களாம். சில மூலிகைகளின் இலையாதி பொருட்களுள் ஒன்றையாவது, பலவற்றையாவது, தனியாகவாவது பிற பொருட்களுடன் கலந்தாவது அன்றி உலோக உபரச, உப்புப் பொருட்களையாவது அவ்வவற்றினுக்குக் கூறப்பட்டுள்ள பக்குவப்படி நாளளவும் பத்தியமுங் காத்து, பெருக்கியோ, குறைத்தோ அளவுப்படி உண்டு வருதலாம்.

பொதுவாக இது, நாடோறும் செய்துண்பது; முடித்து வைத்திருந்து உண்பது என்ற இரு வகையிலும் உண்ணப்படுவது. மூலிகைக் கற்பப் பொருட்களும் கற்ப யோகங்களும் தேரன் யமகவெண்பா, கருவூரார் வாத காவியம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. தாதுக்கற்பம் பற்றி அகத்தியர் செந்தூரம் 300 போன்ற நூற்களில் கூறப்பட்டுள்ளது.

## கற்ப அவிழ்தமுண்ணுங்காலத்துக் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான விதிகள்

கற்ப மருந்துண்ணுங்காலத்துப் பல வரன்முறைகள் அனுசரிக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இவற்றை வழுவாது கடைப்பிடிக்க நற்பலனைத் தரும். சில கற்ப மருந்துகட்குச் சிறப்பான அளவு, துணை மருந்து, நாளளவு, பத்திய முறைகள் முதலியன கூறப்பட்டுள்ளன. அவை அவ்வவற்றின் கீழே தரப்படும். இங்குச் சில பொதுவான வரன் முறைகளையும் விதிகளையும் கூறுவாம்.

கற்பமுண்ணும் பிணியாளனை பத்தினிப் பெண்ணிற்கும் மருத்துவனை அவள்தன் கணவனுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இதை,

*''கற்பமுறை பெண்போற் கணவனெனும் பண்டிதன் சொல்*

*கற்பமுறை''*

என்ற தேரன் யமக வெண்பா அடிகளால் அறிக. இதன் விளக்கம் யாதெனில் எவ்வாறு பத்தினிப் பெண் தன் கணவன் சொற்படி தவறாது நடப்பாளோ அவ்வாறே பிணியாளன் மருத்துவன் கூறுகிறபடி நடக்க வேண்டும் என்பதாம், மருத்துவன் கூறும்

விதிகளைப் பிணியாளன் தவறாது கடைப்பிடித் தொழுக, அவன் கற்ப மருந்தின் முழுப்பலனையும் அடைவான். பத்தினிப் பெண்ணின் கற்பு மேம்பாடடைவது போல அவன் உடல் நிலையும் நன்றாகும்.

இன்னும், கற்பமுண்ணுங் காலத்துத் தூய்மையான மனதுடன் இருத்தல் வேண்டும். ஒருமையில்லாத மாறுபாடான பொல்லாப்புப் பாராட்டாமல், குற்றங்களுக்குக் காரணமான திருட்டு, கபடு, பட்டித்தனம் ஆகியவைகளை நீக்கி அடக்கமாக இருந்து கற்பமுண்ண வேண்டும். மனம் தூய்மையானால் கற்ப மருந்து சிறந்த பலனைத்தரும் என்பதில் ஐயமில்லை.

கற்ப மருந்தை நன்னாள் அறிந்து அருந்த ஆரம்பித்தல் நன்று. பல கற்ப மருந்துகள் முதலில் சிறு அளவில் தொடங்கி நாளுக்கு நாள் பெருக்கி உண்ணப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. சில ஏற்றியும் இறக்கியும் உண்ண வேண்டுவன. இவற்றை உண்ணத் தொடங்கிய பின் இடையீடின்றி ஒரு நாளும் விடாமல் தொடர்ந்து கூறப்பட்ட நாளளவு வரை உண்ணவேண்டும். பெரும்பாலான கற்ப மருந்துகள் ஒரு மண்டல கால அளவு புசிக்கவேண்டியன. அநேக கற்பங்களுடன் மிளகு, உப்பு இவை சேருகின்றன; அனேகத்துக்குப் புளி நீக்கவோ, அன்றி சிறு அளவு புளி சேர்க்கவோ கூறப்பட்டுள்ளது; அகப்பத்தியமான இச்சாபத்தியம் பலவற்றுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கற்பங்களும் கற்ப யோகங்களும்

கற்பப் பொருட்களும், அவற்றைப் பக்குவப்படுத்தும் முறைகளும் உண்ணும் அளவு, நாளளவு, செய்யும் நன்மை அல்லது தீரும்பிணி, பத்தியமுறை ஆகியவையும் இங்குக் கூறப்படும்.

## *காயசித்தி*

*''அஞ்சு யுகத்தி லழியாமற் காயந்தான்*
*மிஞ்சிய கற்பம் விளம்பினோம் நூற்றெட்டுத்*
*தஞ்ச முறவேதான் தின்ன வல்லோர்க்கு*
*பஞ்சு நரைபோய்ப் பதிந்தோங்கி வாழ்வரே''*

திருமூலர் வைத்தியப் பகுதி - பாடல் 67

## *மூலிகைக் கற்பம்*

கற்பமூலிகைகள் நூற்றெட்டு என்று கருவூரார் வாத காவியத்தில் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில கடுக்காய், ஓரிலைத்தாமரை, பொற்சீந்தில், கருவேம்பு, வெண்தூதுவளை, சிவனார் வேம்பு கீழாநெல்லி, பொற்றலைக் கையான், செங்கொடிவேலி, கருநெல்லி, வெண் கரந்தை, மருதோன்றி, வெண்ணீர்முள்ளி, செந்நாயுருவி, வெள்ளை எருக்கு, செங்கள்ளி, கருந்துளசி, செங்கரந்தை என்பன.

தேரன் யமக வெண்பாவில் கூறப்பட்டுள்ள மூலிகைக் கற்பப்பொருட்களையும் கற்பயோகங்களையும் பின்வரும் பகுதிகளில் காணலாம்.

## *பொதுக் கற்பங்கள் [மூலிகை]*

### *1. இஞ்சித்தேன்:*

தேனில் இஞ்சியைக் கீற்றுகளாக்கிப்போட்டு ஊற வைத்து கற்பமுறைப்படி உண்டு நரை, திரை, மூப்பு முதலிய நீக்கி உடல்நலம் பெற்று பிரதிமை போலத்தான் வசித்ததாக தேரன் கூறுகிறார்.

*2. நெல்மாநெய் :*

நெல்லின் வெண்மை பொருந்திய அரிசியை இடித்து அரைத்து மாவுடன் பசுவின் நெய் கூட்டிப் புசிக்கவும் கற்பமாம்.

*3. பொன்னாங்காணி :*

வயலில் செழிப்பாக வளர்ந்த பொன்னாங்காணி இலையை நெய்விட்டு வதக்கி மிளகு, உப்பு முதலிய சேர்த்துப் புளி நீக்கிப் பத்தியங் காத்து உணவுடன் கற்பமுறைப்படி உண்ண உடல் அழகுடன் நிலைக்கும்.

*4. வேம்பு :*

வேப்பந்துளிர், முதிர்ந்த இலை இவைகளை இடித்து இதற்கு அரைப்பங்கு ஓமம், உப்பு சேர்த்து இடித்துப் பொடித்து பக்குவப் படுத்தி உரோகிணி நட்சத்திரத்தில் நல்ல நாள் பார்த்து உண்ண உடலுக்கு நன்மை உண்டாம்.

(வேம்பின் சமூலத்தை இடித்துக் குடுவைக்குள் பாதி நிரப்பி பழுத்துக் கனிந்த வாழைப் பழத்தை வைத்து மேலே வேம்பின் சமூலம் கொண்டு மூடி, குடுவையை மூடி சீலை செய்து பல தினங்கள் கழித்தெடுத்துப் பார்க்கப் பழம் கெடாது காயாகும் என்பர்.)

*5. கற்றாழை :*

கற்றாழையை ஊறுகாயாவது, வற்றலாவது செய்து கற்ப முறைப்படி உண்ண இரசவர்க்க பண்டங்களும் கனிகளும் புசித்தலினால் ஏற்படும் நன்மையுண்டாகும்.

*6. மணத்தக்காளி :*

மணத்தக்காளியினது காய், கனி, இலை, வேர் முதலானவைகளை ஊறுகாய், வற்றல், கறி, குடிநீர் ஏதாவது செய்து மணத்தகளி (திருமணத்தால் உண்டாம் மகிழ்ச்சி) உண்டாய் உயிர் வாழ உடல் நலம் நல்கும்.

*7. விளா :*

விளாமரத்தினது இலை, காய், பழம், பட்டை, வேர் இவற்றைக் குடிநீர், கறியாகச் செய்து புசிக்க மரணத்தைத் தடுக்கும்.

*8. வாட்கோரைக் கிழங்கு :*

வாட்கோரைக் கிழங்கைக் கல்பமாக உண்ண நரை, திரை, மூப்பு உண்டாக்கும் முதுமையும், வருத்தமும் நீங்கி இளமை உண்டாகும்.

*9. அமுக்கினாங் கிழங்கு:*

நகுடவேர் என்னும் அமுக்கினாங் கிழங்கைச் சூரணம், நெய் செய்து பத்தியப்பழுது வராமல் கற்பமாயுண்ண அழகும் ஆயுளுமுண்டாம்.

*10. கொடி வசளை :*

கொடி வசளை இலைக்கறியை உணவுடன் புசித்துவர பலமுண்டாகும்.

*11. பெருங்கானான் :*

பெருங்கானானை பக்குவம் செய்து உணவுடன் ஒரு மண்டலம் உண்ண வன்மையும் மன வலிமையும் உண்டாகும் (முட்டைக்கானான் மற்றோர் வகை)

### 12. உருளைக்கிழங்கு :

உருளைக்கிழங்கை வேகவைத்து தோல் நீக்கி அரிந்து நெய்யிட்டு, வெங்காயம், மிளகு, உப்பு முதலிய சம்பாரம் சேர்த்துப் பக்குவம் பண்ணி உணவுடன் ஒரு மண்டலம் புசிக்க நற்பலம், வீரியம் உண்டாம். இது இறைச்சியைவிட வன்மை பெற்றது. இதற்கு அபிசித மூலம், மதனகாமியாதி மூலம் என்றும் பெயர். (பிசிதம்-மாமிசம்).

### 13. கல்யாணப்பூசனி :

பூசனியின் சக்கையைக் கறியாக உண்டு, சாற்றைச் சந்தனக் குழம்புபோல நித்தமும் உடலில் பூசி ஊறவைத்தும் வந்தால் உடல் உரம் பெற்று உறுதிபெறும். இதனால் உடல் வெப்பமும் குறையும். அக்கினிக் கட்டு எனப்படும்.

### 14. கையான் :

கையாந்தகரைச் சமூலத்தைச் சூரணம் செய்து இளநீரில் ஒரு மாதமும், தேனில் ஒரு மாதமும் கொள்ள நரை, திரை மாறும்.

### 15. களிப்பறட்டை :

பிணியினால் நொந்து நலிந்து போன உடம்பைத் தேற்றி வன்மைப்படுத்திக் கொள்ள களிப்பறட்டைச் சமூலத்தைப் பாகம் பண்ணி உளுந்துத் தூள், மிளகு, உப்புப் பொடி சேர்த்து நெய்விட்டு காயம் முதலிய சம்பாரம் சேர்த்து தாளிதம் செய்து பத்தியத்துடன் ஒரு மண்டலம் புசித்து வர வேண்டும்.

## சிறப்புக் கற்பங்கள் [மூலிகை]

### 1. எருக்கு :

முதிர்ந்த எருக்கங் கட்டை, வேர், சமூலம் இவற்றுடன் சுக்கும் வகைக்கு நெல் அள்வு நல்ல தண்ணீரில் ஒரு மண்டலம் கற்பமாக உண்டால் வாதப்பிணி அறும்.

முன்போலவே திப்பிலியுடன் உண்ண பைத்திய (பித்தம்) மும் மிளகுடன் உண்ணக் கபமும் தீரும்.

### 2. அழிஞ்சில் :

அழிஞ்சில் கொட்டையை எருக்கைப் போலவே சுக்கு, திப்பிலி, மிளகுடன் புசிக்க வாத முதலான முப்பிணிகளும் நீங்கும்.

### 3. சீதேவியார் செங்கழுநீர் :

இதை அரை மண்டலம் புசிப்பதற்குள் நல்ல குணத்தை கொடுக்கும்.

### 4. கீழா நெல்லிச் சமூலம் :

கீழாநெல்லிச் சமூலத்தினை அரைத்து பசுந்தயிரில் குழப்பிக் கலந்து தினமும் கற்பமுறைப்படி உண்டால் மேக நோயினால் ஏற்படும் வெட்டை முதலிய பிணிகள் நீங்கும்.

### 5. சுரை :

உடம்பை வீங்கச் செய்கின்ற நீரேற்றப் பிணியைப் போக்கக் காயை நீக்கி சுரைக்கீரையைப் பூண்டு சேர்த்துச் சமைத்து ஒரு மண்டலம் அருந்தவோ அல்லது கொடியைக் குடிநீரிட்டுக் குடிக்கவோ வேண்டும்.

**6. கஞ்சா விரை :**

தனுர்வாயுவைப் போக்க கஞ்சாவிரையை மிளகுடன் ஒன்று முதலாகத் தினமும் பெருக்கி ஒரு மண்டலம் புசிக்க நன்மை உண்டாம்.

**7. கர்ச்சூர் :**

மார்பில் நொந்து கடுத்து மார்படைப்பைச் செய்யும் வாயுவைப் போக்கக் கர்ச்சூர் என்ற பேரீச்சங்காயைக் கொட்டை நீக்கி தேனில் ஊறவைத்துக் கற்ப முறையாய்ப் புசிக்க வேண்டும்.

**8. கடுக்காய் :**

மாலையில் கடுக்காய்த் தூளை நல்ல தண்ணீருடன் கற்பமாக உண்டு வர காமாலைப்பிணி வராது. மகோதரம் வந்திருந்தாலும் அது சுத்தமாய் நீங்கிவிடும். இக்கற்பம் பிரமை முதலிய பித்த வியாதிகளையும் போக்கும். கடுக்காயை மாலையில் உண்ண வேண்டுமென்பதை.

*''காலமே யிஞ்சியுண்ணக் காட்டினார் சூத்திரத்தில்*
*மாலையதி லேகடுக்காய் மத்தியானஞ் சுக்கருந்த*
*சூலமே தேகமடா சுக்கிலத்தைக் கட்டிவிடும்*
*ஞாலமே லுனதுவிந்து நற்றேங்காய் போலாமே.''*

என்ற திருவள்ளுவ நாயனார் கற்பம் 300 ஆம் பாடலாலும் உணரலாம்.

**9. நாணல் :**

தருப்பையின் வேரைக் குடிநீரிட்டுக் குடிக்கப் பித்த காங்கை நீங்கும்.

***10. சீரகம் :***

மேலுதடும் கீழுதடும் வீங்கிப் போய் அதிக நோவும் உபத்திரவமும் ஏற்பட்டால் அதை நீக்க அசன வேதி என்பதான சீரகத்தைச் சம அளவு நாட்டுச் சர்க்கரையுடன் தினமும் புசிக்க வேண்டும். இதனால் தேகம் கட்டுப்பட்டு பலமும் உண்டாம்.

***11. ஆலம்பால் :***

பாண்டுவைப் பிணிக்கு அறுகங்கட்டைச் சமூலத்தைப் பொடித்துச் சலித்து சூரணத்துக்கு அப்போதே கறந்த ஆலம்பாலைக் கலந்து ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டு நாள்) கற்ப முறைப்படி விடாமல் அருந்திப் பத்தியங்காக்க வேண்டும்.

***12. புளியாரை :***

புளியாரைத் துவையல் மிளகு, சீரகம், உப்பு அளவுப்படி சேர்த்து உணவுடன் அல்லது தனியாக அருந்த விரைவாதம், மேகவெட்டைப் பிணி ஆகியன தீரும்.

***13. நொச்சில் :***

கப வெப்பச் சேர்க்கையால் உண்டாகும் சீதக்கழிச்சல் கடுப்புத் தீர நொச்சில் கொழுந்துக்குச் சமன் சுக்குப் பொடி சேர்த்து அடி பற்றாமல் மத்தித்து, சீனி நெய் சேர்த்துக் கிளறி ஒரு மண்டலம் அருந்த உடல் மெழுகு மலை போலாகும்.

***14. வள்ளைக்கொடி :*** **(Ipomea Repens)**

வெகுமூத்திரம் என்ற நீரிழிவு நீங்க வள்ளைக்கொடி, இலை, சமூலத்தைக் கீரை சமைக்கிறபடி சமைத்து உணவுடனாவது தனியாகவாவது உண்டு பத்தியம் காக்க வேண்டும்.

*15.* ***மூக்கிரட்டை :***

நாசியை அடைத்து சுவாசத்தைப் பந்தப்படுத்தும் வாதப் பிரஷ்டத்திற்கு மூக்கிரட்டைச் சமூலத்தைக் கீரையாக பாகம் பண்ணி அல்லது குழம்பாக (ஆனம்) ஒரு மண்டலம் புசிக்கநீங்கும்.

*16.* ***குப்பைமேனி :***

வாத கபப் பிணியைப் போக்க குப்பைமேனிக் கீரையை வேகவைத்துப் பாகம் பண்ணி ஆமணக்கு நெய் கொண்டு தாளிதம் பண்ணி கற்பமுறைப்படி ஒரு மண்டலம் புசிக்கலாம்.

*17.* ***தூதுவேளை :***

கண்ணிலே உண்டாம் பித்தநீர் முதலான நோய்களை நீக்க தூதுவேளைக்காயைக்கறி, வற்றல், ஊறுகாய் ஆகவும், இலையைக் கீரையாகவும் சமைத்து நெய்கூட்டி ஒரு மண்டலம் புசிக்க வேண்டும்.

*18.* ***சேராங்கொட்டை :***

வாத கபம் தொந்தித்து இரண்டு காலையும் விலங்கிட்டது போல அசைக்க முடியாதபடி செய்தும், கடினமாயும் மார்பில் கடுக்கிற நோய் மிகுதியாயும் இருந்தால் மரணமுண்டாகாமல் காயசித்தி உண்டாகி உடல் உறுதியடைய சேராங்கொட்டையினது கற்பத்தை உண்ணவேண்டிய முறைப்படி இளகம், நெய், சூரணம் இவைகளுள் ஏதேனும் செய்து ஒரேயளவாய் ஒரு மண்டலம் உண்ண வேண்டும்.

தேரன் கரிசல் முறைப்படி செய்த சேராங்கொட்டை இலேகியம் உண்ணவேண்டும் என்பதை

*''வேறுடலப் பிணிக ளெல்லாம்*

*சேராவழகு வடிவினுக்குச்*

*சேரு மதிகப் பசியுண்டாம்*

*சேங்கன்றென்ன உரமுண்டாம்*

*சேகண்டியைப் போல் தொனியுண்டாம்*

*சேடனெனவே யின்ப மெல்லாம்*

*சேரத் துணையா மென்மேலும்*

*சேயின் முகம் போல் களையுண்டாம்*

*சேல்கே தனன்போ லெழிலுறுமே.''-*

என்பதால் உணரலாம்.

### *19. பனைவேர் :*

பித்த வெப்பத்தினாலுண்டான படலம், மறைப்பு, காமாலை புழுவெட்டு, அருகல் இவைகளுக்குப் பனைமரத்தின் வேரை புதுப்பாண்டத்தில் நறுக்கிப் போட்டு இருமடங்கு நல்ல நீரை வார்த்துச் சூரிய புடம் வைத்தெடுத்து அடுப்பேற்றி தீபாக்கினியாய் எரித்துக் குடி நீரிட்டுக் காலை, மாலை, உச்சி என்னும் முப்பொழுதும் பருக நீங்கும்.

### *20. தேற்றான், நெல்லி :*

தேற்றான் வேர், விதை, பட்டை, இலை, கனி, காய் இவைகளை வெவ்வேறு பக்குவமாயும்; நெல்லிவேர், விதை, பட்டை, ஈர்க்கு, காய், கனி, வற்றல் இவைகளை வெவ்வேறு பக்குவமாகவும், இந்த இரண்டு வகைகளை ஊறுகாய், துவையல் முதலியனவாகவோ பானமாகவோ குடிநீராகவோ கற்பமுறைப்படி பத்தியத்துடன் அருந்த வல்லை, மகோதரம், சூலை வலி, மேக வெப்பம், பாண்டு, பெருவயிறு, மூலம், பெரும்பாடு, வீக்கம்,

வெளுப்பு, மூர்ச்சை' வாயு முதலியவை நீங்கும். எதிர்காலத்திலும் வராமலிருக்கும்; உடல் வலுவடையும்.

### 21. ஓரிதழ்தாமரை :

மேக வெட்டையினால் தலை, முகம், கண்டம் உரம் முதலிய இடங்களில் புண்ணுண்டாகி துர்நாற்றம் அதிகப்பட்டு இருக்கும் கபால நோய்களைப் போக்கவும், கூடிக் கலந்து வாழச் செய்யவும் ஓரிதழ் தாமரைச் சமூலம், பச்சைக்கர்ப்பூரம், கோரோசனையுடன் பசு நெய்யில் செய்த கருத்த மையாகிய மருந்தை முன் சொன்ன இடங்களில் இதமாகத் தடவி வரலாம்.

### 22. ஏலம் :

இரத்தம் வழிந்து வேதனை செய்யும் பீனசப்பிணி நீங்க ஏலம், மிளகு, சீரகம் இவற்றை முறையே ஒன்று, முக்கால், அரை என்ற விகிதப்படி சேர்த்து அதற்கு முத்திப்புப் பாகம் பச்சைப் புனுகு கூட்டி, இதற்கு இரண்டு பங்கு பசுநெய் கலந்து அதை பஞ்சில் தோய்த்து ஒரு நாளைக்கு நாலு தடவை வீதம் உறிஞ்சி ஆக்கிராணம் பண்ண வேண்டும்.

### 23. துளசி :

கற்பமுறைப்படி துளசியின் இலை அல்லது வேர் அல்லது சாற்றை எண்ணெயுடன் காய்ச்சி முழுகினால் பித்தத்தை நண்பனாக்கிக் கலந்த வாதப்பிணி, கபப்பிணி, விடமித்த கபநோயாகிய சன்னி இவை தீரும்.

### 24. வில்வம் :

மயக்கத்தினால் பேச்சை குழறச் செய்யும் நோயும் கபமும் நீங்க வில்வத்தின் காய், கனி, இலை, வேர் முதலானதை உணவு,

ஊறுகாய், குடிநீர், தைலமாக உபயோகிக்க வேண்டும் இது உடலுக்கு அழகையும் மாண்பையும் கொடுக்கும்.

### 25. கிட்டிக்கிழங்கு :

வெண்குட்டம் நீங்க நெய்ச்சிட்டிக் கிழங்காகிய கிட்டிக் கிழங்கைக் கறி, வற்றல் பட்சணமாகப் புசிக்க வேண்டும்.

### 26. கோரைக் கிழங்கு :

வராக பட்சணி என்னும் கோரைக்கிழங்கை மாவாக்கி அக்காரம் (சர்க்கரை) கூட்டி கற்பமாக உண்ண கபத்தைப் போக்கும்.

### 27. சிறுகீரை :

புத்திக் கூர்மையும் உடல் பலமும் உண்டாக சிறு கீரைச் சமூலத்துடன் மிளகுப்பொடி, உப்பு சேர்த்து நெய் ததும்பவிட்டு பாகம் பண்ணி உணவுடன் ஒரு மண்டலம் உண்ணலாம்.

### 28. நன்னாரி :

பித்த மேக வெப்ப காரகக் காங்கையினால் அக்குள் என்கிற வாகு மூலத்தில் உண்டாம் கெட்ட நாற்றம் நீங்க, நன்னாரி சமூலத்தை நெய்யில் வதக்கி, வறுத்து, துவையல் அல்லது வடகமாகச் சிறு புளி, மிளகு, உப்பு சேர்த்து கடுகு நீக்கி ஒரு மண்டலம் பத்தியத்துடன் உண்ணலாம்.

### 29. உத்தாமணி :

சலதோடத்தினால் உண்டாம் விடமித்த சன்னி, சிரசையும் உடம்பையும் பற்றிய பிணி நீங்க உத்தாமணி சமூலக் குடி நீரை அல்லது உத்தாமணிப் பாலினால் தாளித்த கற்சுண்ணாம்பை ஒரு மண்டலம் புசிக்கலாம்.

''தாளியாத கற்சுண்ணத்தின் மீதிலுத்
தாமணிச்சுதை தன்னைய ழுத்தினால்
ஆளிபோல வெதிர்த்துப் புகைந்து நீ
றானசேதி யறியுமுன் சன்னியா
மீளியோசனை தூரம கலும்பொன்
வேந்தனுக்கும் பயஞ்சிறி தாமையா
கேளிதைத்தின முண்ணடைக் காயொடு
கேதம் போய்விடு மோது மளவிலே.''

என்ற தேரன் பாடல் மேற்படி சுண்ணத்தைத் தாம்பூலத்திலுண்ணு மாறும் அது நீக்கும் பிணிகளும் கூறுகிறது.

## 30. ஆல் :

ஆலம்விழுது, அதன் வேர்க்கொம்பு, பால் இவைகளிலொன் றால் ஒரு மண்டலம் பல் துலக்கினாலும் அல்லது பாலைப் பருகினாலும் அல்லது இலையில் உணவிட்டு உண்டாலும் பற்கள் அசைவில்லாமல் உறுதிப்பட்டு கெட்டிப்படும். பல் உறுதியாகும் என்பதும் உடல் உறுதிப்பட்டு வீரிய விருத்தியும் உண்டாகும் என்பதும் தெளிவாகும்.

''ஆலும் வேலும் பல்லுக் குறுதி'' என்ற பழமொழியாலும் இதை உணரலாம்.

## 31. ஆயில்பட்டை :

கறிமலை வேம்பு என்ற ஆயில் பட்டைப் பொடி ஒரு பலத்தைப் புதுப்பாண்டத்திட்டு நல்ல நீர் ஒரு படி சேர்த்து ஒரு நாள் சூரிய புடம் வைத்து அதில் திரிகடுகுப் பொடி வகைக்கு அரைக்கால் பலமாகக் கூட்டி அடுப்பேற்றி கமலாக்கினியாய்க் காய்ச்சி முக்கால் ஆழாக்காகக் குறுக்கி உதயகாலத்தில் தினமும்பருக வாதமாதி

முப்பிணிகளும் தன்னிலைப்படும். சுரம் முதலிய வெப்பப் பிணிகள் நீங்கும். உடம்பு திடம் பெற்று உரமடையும்.

*''ஆயில் அடுபுனல் அனலை அடு நெறி''*

*(தே. கரிசல்)*

என்ற அடியாலும் இதை உணரலாம்.

### *32. எலுமிச்சம்பழம் :*

பித்த காங்கையினால் சீதள முண்டாகி உடல் தளர்ச்சியாய் மூக்கின் மயிரும், கோச மயிரும் மற்றைய இடங்களான முகம், தலை, இவ்விடங்களின் மயிரும் நரைத்து, நடுக்க முண்டாய், உடல்மெலிந்து வாடி, புத்திமாறாட்டமாய், பிடிப்பு, மகோதரம், பக்கசூலை, முடக்கு, பைத்தியம், பிரமை, உன்மத்தம் முதலிய பிணிகளுண்டாய் இருந்தால் எலுமிச்சம் பழத்தைச்சாறு, உறுகாய் ஆக தினம் கற்பமுறையில் பத்தியத்துடன் ஆறு திங்கள் புசிக்க வேண்டும்.

*''கோணத் துளையுங் குறியுளையுங் கொக்காகிக்*
*கோணத் துளையுங் குருளைபோற் - கோணச்*
*சடமதியுண் மாறாமற் சம்பீரக் கற்பஞ்*
*சடமதியுண் மாறாமற் சண்''*

*- தே. யமகவெண்பா.*

### *33. தாமரை மகரந்தப்பொடி :*

தாமரைப்பூவினது மகரந்தப் பொடித் தாதுவுடன் சர்க்கரையும் தேனுங் கூட்டி, உதய காலத்தில் பத்தியத்துடன் புசித்து வர செவிட்டுப் பிணி, நபுஞ்சகம் தீரும்.

### 34. பிரம்மதண்டு மகரந்தப்பொடி :

பிரம்மதண்டுப் பூவின் கால் விராகனெடை தாதுவுடன் முருங்கைப் பிசின் பொடி நெய் வகைக்கு ஒரு விராகனெடை கூட்டிப் பத்தியத்துடன் புசிக்க நபுஞ்சகம் நீங்கும்.

### 35. மலட்டுக்குக் கற்பம் :

மூங்கில் வேர், கருவேல மரத்தின்வேர், நாவல்மரவேர் வகைக்கு அரைப்பலம் நல்ல தண்ணீர் முக்காற்படியுடன் புதுப்பாண்டத்தில் குடிநீர் செய்து காற்பங்காகக் குறுக்கி அதில் பனை வெல்லம், பசுவெண்ணெய் வகைக்கு அரைப்பலம் போட்டு அளவாக, மேல்வாயிலும் கீழ்வாயிலும் படாமல் ஒரு மண்டலம் உண்ண மலடு நீங்கும்.

### 36. சுக்கிலத்தம்பனம் :

காட்டு மாங்காய்ப் பருப்பு, முருங்கைப் பருப்பு, முந்திரிகைப்பருப்பு, கோதுமை வகைக்கு ஒரு பலம் எடுத்து, பன்னிரண்டு பலம் அத்திப்பால் விட்டு ஆறுநாள் அரைத்து, வில்லை கட்டி, ஆறுநாள் நிழலில் உலர்த்தி, இதற்குச் சமஎடை நெய்யும், சர்க்கரையும் சேர்த்திழைத்து, பங்கிட்டு ஒரு மண்டலம் உண்ண விந்து இறுகும்.

புளி, பெண்போகம் நீக்கவேண்டும். பால்பானம் பண்ண வேண்டும். மருந்து முடிந்ததும் ஒரு மண்டலம் மறுபத்தியமும், பெண், புளி, எள் நெய், பழச்சாறு, ஊறுகாய், தயிர், மோர், நாவற் பழம், மாம்பழம், நாரத்தம்பழம், இலந்தைப்பழம், வாழைப்பழம், திராட்சைப்பழம், உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு இவைகளைச் சேர்த்து வர வன்மையும் வீரிய விருத்தியும் உண்டாகும். இதற்குக் காமேசுரகல்பாவிழ்தம் என்பது பெயர்.

### 37. பஞ்ச கற்பம் :

கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம்வித்து, கடுக் காய்த்தோல், நெல்லிப்பருப்பு இவைகளைக் கிரமப் பிரகாரம் காராம்பசுவின் ப்ால் விட்டரைத்துக் கொதிக்கவைத்து, சிரசில் தேய்த்துக் கொண்டு குளித்துவர பிணிகள் வராது. இது பஞ்சகற்பவிதி எனப்படும்.

*''மிருகமத(ம்) பித்தமணி வேம்புகடு நெல்லி*
*கருகுரத்துப் பாலரைத்துக் காய்ச்சி - யொருமிட*
*விங்கற்ப நோய்க்கு மிடமின்றா மெஞ்ஞான்று*
*மைங்கற்ப மீதே யறி''*

ப.கு.சி

## தாதுப்பொருள் கற்பம்

### 1. அயசம்பீர கற்பம் :

எலுமிச்சம் பழத்துடன் அயம் கூட்டிச் செய்யப்படும் அயசம்பீர கற்பத்தினால் பாண்டு, சோபை நோய் சிறப்பாய் தீரும்.

*''ஆட்டுத் துகள்கறி திரிதொடி*
*பப்பத் தரையை யெண்ணருணக்*
*காட்டுக் கனியுள்ளவை யைம்பூ*
*தத்தொரு கலமுள்ளிடு திலநெய்*
*கூட்டுத் தொகைமுற் கூறிடு*
*சில்லிடு குழையிடு மண்டலமே*
*ஒட்டுப் பிளவொன் றிருபோ*
*துணுபாண் டொடுசோ பையுமறுமே.''*

### 2. அயபிருங்கராச கற்பம் :

அயத்தூள், மண்டூரம் இவற்றைக் கரிசாலைச்சாறு, பழச்சாறு இவைகளில் பாவனை செய்து, செய்யப்பட்ட அயபிருங்க ராசகற்பத்தை அளவுடன் தேன், நெய், பழச்சாறு, தயிர் ஆகிய வற்றுடன் இருவேளையாக நாற்பது நாள் கொள்ள இரத்தக் குறைவு, நரை, அசதி இவை தீரும். புளிப்பு நீக்கவும்.

### 3. பூரண சந்திரோதயம் :

தங்கம், இரசம், கெந்தி இவற்றைக் கூட்டாக குப்பி எரிப்புச் சிந்தூரஞ் செய்து அரை முதல் ஒரு குன்றியளவு கர்ப்பூராதிச் சூரணத்தில் கலந்து வெற்றிலையில் வைத்துக் கொள்ள கயப்பிணி களும், கிராணி வகைகளும், சூலை வகைகளும், குன்ம வகை களும், மேக நோய்களும், காமாலையும், கடி நஞ்சு விடமும் நீங்கும்.

இதைக் கீழ்க்காணும் செய்யுட்கள் உணர்த்தும் :

*''பொடியா நோய்போகப் புகன்றிட்டா ரெந்நந்தி*
*மடிவான சூதம் மகத்தான தங்கம்*
*பிடிவான கெந்தி பேரான சத்து*
*குடியாய்ச்சிந் தூரித்துக் கூட்டியே தின்றிடே''*
*''வியாதிகள் போகவெகு நாட்கள் சடமுற*
*பயாதித் திரைநரை பாங்காய் தவிர்ந்திட*
*கயாதிக் கவனங்க லந்தெங்குஞ் சுற்றிட*
*அயாதி யஞான மஞ்சாகும் சித்தியே''*

திருமூலர் வைத்தியம்

*''பாரும் வியாதி பறந்தே யொழிந்திடும்*
*கற்பம் தாகக் காணிதை அருந்த*
*கற்பாந்த மார்கக் காய மழியாது*
*வீரிய விருத்தியா மெல்லிய ராசையுள்*
*பாரீர்சை யோகம் பண்ணவெகு விருத்தி*
*காயஞ் சிவக்குங் கண்கள் சிவப்பேறும்*
*ஆயுளும் பெருகு மருள்விந்து கட்டிடும்*
*ஆல மிதுசித் தடையுமூன் றாம்பிறை*
*போலச் சந்திரோதயம் புகன்றனன் முனியே.''*

தே. கரிசல் 300.

உப்பு போன்றவை சேர்ந்த கற்பங்கள் ***''முப்பூ''*** என்ற பகுதியுள் கூறப்படும்.

## சீவப்பொருள் கற்பம்

***1. பச்சைப் பசும்பால் :***

இதை ஒரேயளவாகக் கறந்த சூட்டுடன் காலையில் மட்டும் பருகப் பிணிகளை எல்லாம் நீக்கும். நாட்பட்ட காங்கைப் பிணியும் நீங்கும்.

***2. காய்ச்சின பால் :***

நல்ல பசுவின் பாலை நன்றாகக் காய்ச்சி இராக் காலத்தில் உண்ணாவிடில் பித்த காங்கையாகிய வெப்பச் சூடுண்டாம்.

### 3. *இந்திரகோபப் பூச்சி :*

*''கருமேகந் தாதுநட்டங் கக்கும் கபம்போக்குந்*
*தருமேநற் காயசித்தி தன்னை - வருமேக*
*சாலமுறை வாரளக தையலே நன்மாரிக்*
*காலமுறை யீயலது காண்''*

(ப.கு)

## *வாயு தாரணை*

### *மூச்சுப் பயிற்சி - பிராணாயாமம்*

அனைத்து உயிரினங்களுக்கும் தீயகம் என்று இன்றைய அறிவியலாரால் அழைக்கப்படும் உயிர்க்கால் அல்லது பிராண வாயு மிக மிக இன்றியமையாததாக உள்ளது. இஃது உயிருக்கு ஆதாரமாக எண்ணப் பட்டதாலேயே இவ்வாறு பெயர்பெற்றது. சுவாசம் அல்லது மூச்சு என்று தொழிலினால் நமது உடலுக்குத் தேவையான உயிர்க்காலை நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். மூச்சு (Respiration) என்பது உள்மூச்சு பூரகம் (Inspiration), வெளிமூச்சு-இரேசகம் (Expiration), கும்பகம் (Retention) என்ற மூன்று நிலைகளையுடையது. பொதுவான நிலையில் நாம் மூச்சினால் உள் வாங்கும் உயிர்க்கால் முழுவதும் நமது உடம்பில் கலந்து விடுவதில்லை. இவ்வாறு உடம்பில் கலவாத உயிர்க்கால் வெளிமூச்சில் ஏனைய கால்களுடன் வீணாகச் சென்று விடுகிறது. இவ்வாறாக வீணாய்க் கழியும் உயிர்க்காலை, மூச்சுக்காற்றை பிராணாயாம பயிற்சி செய்து அதிக நேரம் புப்புசங்களுக்குள் நிறுத்தி கும்பிப்

பதால் உடம்பில் கலக்கச் செய்தனர். இப்பயிற்சியை மூச்சுப் பயிற்சி பிராணாயாமம், வாசி அல்லது வாயுதாரணை எனப்படும். இப்பயிற்சியினால் நரம்பு மண்டலங்கள் பலப்படு கின்றன. நரம்பு விலங்கள் மூளை இவைகளுக்கு ஏனைய திசுக்களைவிட அதிக அளவு உயிர்க்கால் தேவைப்படுகிறது.

இனி, பிராணயாமும் கற்பமுறைகளில் ஒன்று என்பதைக் கீழ் வரும் மேற்கோள்களினால் தெளியலாம்.

1. *''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்*
*காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை*
*காற்றை பிடிக்கும் கணக்கறி வாளர்க்கு*
*கூற்றை உதைக்கும் குறியது வாமே''*

-திருமந்திரம்

2. *''வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்*
*பளிங்கொத்துக் காயம் பருக்கினும் பிஞ்சாம்''*

-திருமந்திரம்

3. *''வாயுவழக்கறிந்த செறித் தடங்கில்*
*ஆயுட் பெருக்க முண்டாம்''.*

-ஔவை குறள்

4. உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே

-சிவ வாக்கியார்.

5. *''நில்லப்பா கண்டங்கி விண்ணொன் றூணி*
*நிலையறிந்து பிராணாயாமஞ் செய்தால் மைந்தா*

கல்லப்பா தேகமது காலன் ஏது
காலனெனும் வியாதியெலாம் காணா தோடும்''

-சுப்ரமணியர் ஞானம்.

6. ''எத்தியே திரியாமற் பிடரி மார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந் தானே''

-காக புசுண்டர்.

7. ''கலைநாலு போகிறதை எட்டிற் சேரு
கபடமற்ற தேகமடா கண்டு பாரே''

-காக புசுண்டர்.

பிராணாயாமத்தினால் அதிக அளவு உயிர்வாயுவான தீயகக்காலை புப்புசங்களிலிருந்து குருதிச் சுற்றோட்டம் எடுத்துச் செல்ல வாய்ப்பு உண்டாகிறது. அது குருதியால் எல்லா உடல் திசுக்களுக்கும் கொண்டு செல்லப்பட்டாலும், நரம்பு** விலங்களும் மூளையும் அவை நன்றாக செயல்படும் பொருட்டு அதிக அளவு பிராணவாயுவைப் பெற்றுக் கொள்ளுகின்றன.

(** இணைக்கப்பட்ட ஆங்கிலப் பகுதி-, டாட்டாரினோவின் நூற் பகுதியினால் தெளியலாம்)

# OXYGEN FOR NERVES

The excitability of the central nervous system, i.e., its ability to become active, varies under different conditions.

One of the conditions for normal activity of the brain and spinal cord is an adequate supply of oxygen to the nerve cells. The cells of the brain and spinal cord consume much more oxygen than the cells of other organs. An inadequate supply of oxygen leads to a decrease in the nerve cells and may kill them. It is also clear that changes in the blood circulation in the brain impair the brain's activity because they disturb the normal supply of oxygen and nutrients.

# ROLE OF THE NERVOUS SYSTEM

The nervous system regulates the activities of the different organs and of the entire organism. Muscular contraction, glandular secretion, heart action, metabolism and the many other processes continuously operating in the organism are controlled by the nervous system.

The nervous system links the various organs and systems, co-ordinates all their activities and ensures the integrity of the organism.

Human Anatomy and Physiology
by **V. TATARINOV**

## *பிராணாயாமத்தின் தத்துவம்*

பிராண வாயுவின் அசைவு எதுவோ அதுவே சித்தத்தின் அசைவென்றும், பிராண வாயுவின் சலனத்தை வென்றால் சித்தத்தை வயப்படுத்தலாம் என்றும் கூறுவர்.

பிராணாயாமத்தில் வெளிவாயுவை உட்கொள்ளுவது பூரகம்; அதை நிறுத்துவது கும்பகம்; கும்பித்த வாயுவை வெளிப்படுத்துவது இரேசகம். இவற்றின் கால மாத்திரை அளவு பூரகத்துக்கு 16., கும்பகத்துக்கு 64., இரேசகத்துக்கு 32. இதை,

*''ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்*
*ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்*
*ஊறுதல் முப்பத் திரண்டதில் ரேசகம்*
*மாறுதல் ஒன்றின் கண்வஞ் சகமாமே''.*

என்ற 'திருமந்திர'ச் செய்யுளால் அறியலாம். எனவே பூரக, கும்ப, இரேசக விகிதம் 1:4:2 என்றபடி இருக்கும். மேலும் இதன் அளவாவது

*''கூடம் எடுத்து குடிபுக்க மங்கையர்*
*ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்*
*நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்*
*கூடிக் கொளிர்கோல அஞ்செழுத் தாமே''.*

என்ற 'திருமந்திர'ப் பாடலால் கூடமானபுப்புசங்களுள் மங்கை யரான வளிகள் 12 விரல் அளவு உட்செல்லுதல், வெளிச்செல்லுதல் ஆகிய சலனமடைகின்றன என்றும், இவ்வாறான 12 விரல் அளவுகளில் 8 விரல் அளவு உடலுட் பெறப்பட்டு மீந்த 4 விரல் அளவு வீணாகக் கழிவதால் வாணாள் வீணாம் என்றும்

இந்நான்கையும் உடலிற் சேர்க்க கற்பமாகும் என்றும் தெளியலாம். இதையே,

*''கலைநாலு பேர்கிறதை எட்டிற் சேரு*
*கபடமற்ற தேகமடா கண்டு பாரே''*

என்ற 'காகபுசண்டர் ஞானம்' அடியாலும் உணர்க.

பத்து வாயுக்களுள் முக்கியமானவை மூன்று நாடியிலும் அவ்வாறே, சுவாசத்தில் இடகலை (சந்திரகலை) இடது நாசியிலும், பின்கலை (சூரியகலை) வலது நாசியிலும் சுழிமுனை இரண்டிலும் போக்குவரவு புரியும். இதை,

*''பார்க்கிலிடை யிடமதுவே திங்களாகும்*
*பகலவனாம் பிங்கலையே வலம தாகும்*
*ஏற்கவுரை சுழுமுனைதா னடுவாம் அங்கி*
*இடையான சந்திரனே அமுத மாகும்''.*

என்ற அடிகள் உணர்த்தும்.

*''பாரு மிடைகலை பிங்கலை மாறியே*
*தாரும் பெருவிரற் காலொடு தானேறி*
*காருங் கழுத்திற் கபாலவரை நின்று*
*வாரு மிடமாய் வலக்கரஞ் சாருமே''.*

*வலக்கரந் தன்னில் வளமான பிங்கலை*
*நிலைக்க இடக்கர நின்றது இடைகலை*
*துலக்க நடுமையஞ் சுழுமுனை யோடிடும்*
*பிலக்க இவைமூன்றாற் பிறந்தது தாதுவே''.*

என்ற திருமூல நாயனார் நாடிப் பாடல்களால் மேற்படி நாடிகளைப் பற்றி அறியலாம். இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகியன நடக்கும் கிழமைகளை.

*''வெள்ளி வெண்டிங்கள் விளங்கும் புதன் இடம்*
*தெள்ளிய ஞாயிறு செவ்வாய் சனிவலம்*
*வள்ளிய வியாழன் வளர்பிறைக் கோஇடம்*
*ஒள்ளிய தேய்பிறைக் கேவல மாமே''*

என்ற பாடலால் அறியலாம். இதுபோலன்றி சுவாசம் மாறி நடப்பின் பிணியாம். அதைப் பயிற்சியின் மூலம் சரிப்படுத்தலாம். இது பற்றி விரிவான செய்திகளை சர நூற்களில் காண்க.

இரு நாசியிலும் வாயு ஓடுவது சுழுமுனை. இக்காலத்தில் சுவாச பந்தனம் பிராணாயாமம் செய்வது நன்று.

### *பிராணாயாமத்தின் பயன்*

மூச்சுப் பயிற்சியினால் உடல் கற்பமாகும் என்று முன்னரே கண்டோம். இப்பயிற்சியால் வாசி செய்து குண்டலியை எழுப்பி மதி அமுது உண்ணலாம். இதை

*''அண்ட முடிமீதி லங்கிர விமதியைக்*
*கண்டு தரிசித்தல் கதி''*

-என காகபுசுண்டர் குறள் உணர்த்தும்.

(யோக, முப்பூ கற்பங்கள், ஆதனம் ஆகியன கூறப்படும் போது இது விரிவாய்க் கூறப்படும்.) மேலும் பிராணா யாமத்தால் மனம் கட்டுப்படும். சக்தியும் பலமும் உண்டாம். எல்லா

நோய்களும் தீரும். உடலுறுப்புகட்குப் பயிற்சி தரும். செரிமான சக்தி பெருகும். நரம்புகளைத் தூய்மையாக்கி அவற்றைத் தூண்டும். (டாட்டாரினோவின் கூற்றைக் காண்க). திடசித்தம், மன ஒருமைப்பாடு, மனமகிழ்ச்சி, உடலழகு, இனியகுரல், ஊக்கம், சுறுசுறுப்பு, உடல் நறுமணம் ஆகியவும் உண்டாம். இவற்றால் ஆயுட்காலம் அதிகப்படும்.

## *பிராணாயாமத்தின் சில முக்கிய விதிகள்*

பிராணாயாமஞ் செய்ய சாத்துவீக குணம் வேண்டும். மூவகை நாடிகள், வாயுக்கள் இவற்றின் தத்துவங்களை முதலில் நன்கு உணர்ந்த பின்னரே இப்பயிற்சியைச் செய்ய வேண்டும். இப்பயிற்சி செய்ய நல்ல காற்றோட்டமுள்ள இடம் வேண்டும். தரை ஈரமற்றதாய் இருக்க வேண்டும். பனியுங் குளிருமில்லாத காலத்து நதிக்கரை, ஏரிக்கரை, தோட்டம், வெளி, மலைப்பகுதி இவ்விடங் களில் செய்யலாம்.

மனத்தை ஒருமைப்படுத்தி இயம, நியமாதிகளைக் கைக்கொண்டு தினமும் பயில வேண்டும். வாயுதாரணை செய்பவர் அரிசி, கோதுமை, நெய், பால், தயிர், மோர் இவை உண்ணலாம். அரை வயிறு அன்னமும் கால்வயிறு நீரும் உண்டு, மீதிக் கால்வயிறு வெறுமையாய் இருக்கவேண்டும். புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, கார்ப்புப் பொருட்களைக் கூடுமானவரை விலக்குவதும் மது, மாமிசம் நீக்குவதும் நன்று. இல்லறத்தார், துறவறத்தார் எவராயினும் இருபாலரும் - ஆடவரும் பெண்டிரும் - இதைச் செய்யலாம்.

அருணோதய முதல் 3 நாழிகை, மத்தியானம், சூரியன் படுவதன் முன்னும் பின்னுமாக 2 முகூர்த்தமென்ற 4 நாழிகை,

அர்த்தராத்திரி ஆக நாலுமுறை செய்ய வேண்டும். காலம் அல்லது வேளை ஒன்றுக்கு 20 முதல் 80 பிராணாயாமம் செய்யலாம். மூச்சை வெளிவிடல், உள்வாங்கல் மெதுவாயும், நிதானமாயும் செய்யவேண்டும். பூரித்த நாடியாலேயே இரேசகம் செய்தால் வியர்வை, நடுக்கம் ஆகிய துன்பங்கள் உண்டாம். வேகமாய் இரேசித்தால் பலக்குறைவு ஏற்படும்.

எதனால் பூரிக்கப்பட்டதோ அதற்கு அன்னியமான நாடியால் இரேசிக்க வேண்டும். ஆனால், எதனால் இரேசிக்கப்பட்டதோ அதனாலேயே பூரிக்கலாம்.

இடகலையால் பிராணனைப் பூரித்த உள்வாங்கி மெல்ல நிரப்பி, கும்பித்து, பின்கலையால் மிக மிக மெதுவாக இரேசிக்க வேண்டும். பிங்கலையால் பூரித்துக் கும்பித்த வாயுவை இடகலையால் இரேசிக்க வேண்டும்.

இதைத் தினமும் செய்ய மூன்று திங்களில் நாடிகள் சுத்தமாகின்றன.

### *வாயுதாரணை - பயிற்சி*

வாயுதாரணை செய்ய பதுமாசனம் அல்லது சித்தாசனம் ஏற்றது. ***'ஆதனம்'*** என்ற பகுதியில் இவை விளக்கப்படும். அட்டாங்க யோகத்தில் இல்லறத்தாருக்குப் பதுமாதனமும், துறவறத்தாருக்குச் சித்தா தனமும் ஏற்றது எனக்கூறப்பட்டுள்ளது.

1. வலது கைக் கட்டை விரலால் வலது நாசித் துளையை மூடிக் கொண்டு இடது துளையால் மெதுவாகக் காற்றை உள்ளே பூரிக்க வேண்டும்.

2. பிறகு, இடது நாசித் துளையையும் மோதிர விரல், சிறு விரல்களால் மூடிக்கொண்டு மூச்சை அப்படியே கும்பகம் செய்யவேண்டும். முடிந்தவரை அடக்கிக் கொண்டால் போதுமானது. சிரமப்பட்டு அடக்க வேண்டியதில்லை.

3. அடுத்து, வலக்கைக் கட்டை விரலை எடுத்துவிட்டு மிகமிக மெதுவாக வல நாசித்துளை வழியாகக் காற்றை இரேசிக்க வேண்டும். இனி,

4. முன்போலவே வல மூக்குத்துளை வழியாகக் காற்றைப் பூரகம் செய்து,

5. சற்று நேரம் கும்பித்து,

6. இட நாசித்துவாரம் வழியாக இரேசிக்க வேண்டும்.

இவ் ஆறும் ஒரு பிராணாயாமம் ஆகும். இதுபோல் தொடர்ந்து செய்யவேண்டும். முன்னரே சொல்லியபடி,

| | | |
|---|---|---|
| பூரகம் | - | 1 |
| கும்பகம் | - | 4 |
| இரேசகம் | - | 2 |

என்ற கால விகிதப்படி இருக்கவேண்டும். தொடக்கத்தில் குறைவான பயிற்சி செய்து நாளாவட்டத்தில் பெருக்கிக் கொண்டே போகலாம்.

வெளிவிடும் மூச்சு அம் (ஹம்) என்ற ஒலியுடனும் உள் வாங்கும் மூச்சு சம்(ஷம்) என்ற ஓசையுடனும் இருக்கு மென்பர். இதை நுணுக்கமாய் அறியவேண்டும்.

பிராணாயாமம் பற்றிய இன்னும் விரிவான பல செய்திகளுக்கு ஞான, யோக, சர நூற்களைக் காண்க: சில திருமூலர் திருமந்திரம், திருமூலர் ஞானம், ஞான சரநூல், பூரணானந்தர் சிவயோக சாரம், ஒளவைக்குறள், திருவள்ளுவர் ஞானம், காகபுசண்டர் ஞானக் குறள், சிவவாக்கியர் ஞானம் முதலியன.

## யோகம்

யோகம் என்பது ஐம்பொறி புலன்களால் மனது சிதறிப் போகா வண்ணம் அதை ஒருமைப்படுத்தி, பேரின்பமொன்றையே மனதிலுண்ணி அகத்தொழின் மாத்திரையான், ஆகம விதிப்படி ஒழுகுவது. இஃது எண் வகையாகும். அவை இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றை தீதகற்றல், நன்றாற்றல், இருக்கை, வளிநிலை அல்லது உயிர்ப்பு, தொகை நிலை, பொறைநிலை, நினைதல், நொசிப்பு என்றும், இவை அனைத்தையும் அட்டாங்க யோகம் அல்லது அகத்தவம் எட்டு என்றும் கூறுவர். இதனை

*''இயம நியமமே எண்ணிலா ஆதனம்*
*நயமுறு பிராணா யாமம்பிரத் தியாகாரஞ்*
*சயமிகு தாரணை தியானஞ் சமாதி*
*அயமுறும் அட்டாங்க மாவது மாமே''.*

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுளால் அறியலாம். இவற்றுள் பிராணாயாமம்' இயமம், நியமம் ஆகியவை வேறு பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன. ஆதனம் என்பது ஆசனம் என்றும் யோகாசனம் என்றும் வழங்கப்பெறுகின்ற யோகம் முறைக்கான உடற்பயிற்சி முறைகளாம். சித்தர்கள் தங்கள் குறிக்கோளான சித்தி

4

எய்தும்பொருட்டு இம்முறைகளைக் கையாண்டு தமது உடலைப் பலப்படுத்தி பேரறிவு விளங்கப் பெற்றனர். பிராணாயாமம் போன்ற ஆதனமும் கற்பமாகும். இவை தவிர ஏனையவை கற்பத்துள் அதி முக்கியம் பெறாதலாலும், அவை நம் போன்றவர் கட்கு எளிதில் ஒழுகக் கூடாமையாலும் அவைகள் 'கற்ப' மென்ற பிரிவின் கீழ்க் கூறாது விடப்பட்டன.

பிராணாயாமம், ஆதனம், குண்டலியை எழுப்பல், மதியமுது உண்ணல் ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உடையன. இவற்றுள் மதியமுது என்பது தீர்த்தம், சிவக்குடிலைநீா் என்ற பெயர்களாலும் அழைக்கப்படும் யோக முப்பூவாம். இதுவும் கற்பமே. ஆதனம், பிராணாயாமம் ஆகிய யோகம் செய்வதால் மதியமுது உடலில் ஊறிக் காயத்தைக் கற்பமாக்கும். இது பற்றி 'முப்பூ' என்ற பகுதியில் கூறப்படும்.

## ஆதனம் [யோகாசனம்]

சிவயோகம் என்ற இராசயோகம் பண்ணுங்காலத்து சித்தாசனம் என்ற ஆசனமும், இல்லறத்தாருக்கு அவர்கள் வாயுதாரணை என்ற உயிர்ப்புப் பண்ணுங்காலத்து பதுமாசனமும் சிறந்ததென்று 'அட்டயோக' நூற்கள் கூறுகின்றன. பொதுவாக ஆசனங்கள் என்ற இருக்கையாவும் உடற்பயிற்சிப் போன்றவை களே. எனினும் இவை பொதுவான உடற் பயிற்சிகளினின்றும் செயலிலும் நிலையிலும் வேறுபடுகின்றன. எவ்வாறெனில், பொது உடற்பயிற்சிகள் உடலின் மேற்புறமுள்ள உடல் தாதுக்களையே வன்மைப்படுத்துகின்றன. ஆனால் யோக இருக்கைகள் உடலின் உள்உறுப்புகளை வன்மைப்படுத்துகின்றன.

"Yogic physical culture, unlike the many western systems of physical culture, does not make a pretence of merely developing the superficial muscles of the body, but the exercises do make them healthy and strong, particularly the trunk muscles, by requisitioning their help to tone up all the involuntary organs of the body which are mainly concerned with such processes as digestion, evacuation, circulation, respiration and secretion, and through them, the automatic nervous system which rgulates their activities from ""Yogic asanas for health and vigour '' V.G. Rele, L.M. & S., F.C.P.S.

சித்தர்கள் சில இருக்கைகளில் இருந்து வளிநிலையறிந்து குண்டலினி சக்தியை எழுப்பி மதியமுதுண்டு பேரின்பம் என்ற சிவநிலையைக் கண்டனர். இவர்கள் உடலும் மெய்ப்பொருளா யிற்று. இதனாலேயே சித்தர்கள் கடவுளைக் கண்டு தெளிந்தவர் என்றும் பக்தர்கள் கடவுளைக் காண முயல்பவர் என்றும் பேரறிஞர் கூறிப் போந்தார்.

நிற்க, ஆசனங்கள் தொகையால் எண்ணற்றன. இதனைத் திருமூலர் ***''பல் ஆதனம்'' ''எண்ணிலா ஆதனம்''*** என்ற சொற்றொடர்களால் குறிப்பதால் அறியலாம். எனினும் இவற்றுள் சிலவே பழக்கத்தில் இருந்து வந்துள்ளன. திருமூலர் தமிழ் மூவாயிரத்தில் பதுமாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், சொத்திராசனம், வீராசனம், கோமுகாசனம் என்ற சில மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் பத்திரம், வீரம், பதுமம், கோமுகம், குக்குடம் ஆகிய ஐந்தும் ஞான சாதனைக்குரிய ஆசனங்களாம்.

யோகாசனப் பயிற்சியினால் உடலின் உள்ளுறுப்புகள் பலமடைகின்றன. உடலில் வீணான சதைப் பிடிப்புகள் ஏற்படு

வதில்லை. உடல் அழகுடன் வளர்ந்து நோயின்றியும் உரத்துடனும் இருக்கும். யோகாசனம் உடலின் எல்லாப் பகுதிகட்கும் குருதிச் சுற்றோட்டத்தை உண்டாக்கும். சுறுசுறுப்பு, புத்தித் தெளிவு, நினைவாற்றல் முதலானவை உண்டாகும். யோகாசனம் செய்ய இதுபற்றி நன்றாய் அறிந்த ஆசிரியர் துணை வேண்டும். எவரது துணையுமின்றிப் பிசகாகப் பழக்கம் பண்ணினால் பல கேடுகள் உண்டாகக் கூடும். இங்கு யோகாசனம் பற்றிய சில பொதுவான விவரங்களே தரப்படுகின்றன.

வயிறு நிறைய உண்டபின் இருக்கைப் பயிற்சி செய்தலாகாது. உணவுண்டு சில மணி நேரங் கழித்தே இதைச் செய்ய வேண்டும். இது போலவே மலம், சிறுநீர் ஆகியவையும் உடலில் தேங்கி இருத்தலாகாது. இவற்றை வெளியாக்கிய பின்னரே பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சி செய்யுமிடம் நல்ல காற்றோட்டமுள்ளதாய் இருக்க வேண்டும். பயிற்சியின் போது வாயினால் மூச்சுவிடல் அல்லது வாங்கல் கூடாது. மூக்கினாலேயே சுவாசிக்க வேண்டும்.

யோகாசனப் பயிற்சி செய்துவந்த பலர் நரை, திரை, மூப்பு, பிணி இவை இன்றி வாழ்வதைக் காணலாம். இவை உடலை நன்னிலையில் வைத்திருப்பது மட்டுமின்றிப் பிணிகள் உடலிற் சேராது தடுக்கின்றன; பிணி வந்திருந்தாலும் அவற்றை நீக்குகின்றன.

("Without doubt yogic exercises assure a normal individual of his physical well being; but they are also both curative and recuperative in action" Yogic assanas By Rele.

மேலும் இப்பயிற்சிகளால் மனம் தூய்மையாகி ஒருமைப் பட்டு எழுச்சியுண்டாகும்.

Above all they (Asanas or yogic exercise) make the mind alert improves concentration and help to maintain a buoyancy, of spirit in short, they create "mens sana in carpore sano '(a sound mind in a sound body)' V.G.Rele.

யோகாசனம் செய்ய மான்தோல், புலித்தோல், சித்திராசனம் (சித்திரக் கம்பளம்), வெண்துகில், தருப்பை ஆகிய ஆசனங்கள் சிறந்தவை. மேடு பள்ளமில்லாத சமதளத்தில் யோகாசனம் செய்ய வேண்டும். கூனுதல், குறுகுதல் தவிர்த்து நேராய் இருக்க வேண்டும். பயிற்சிகள் மெதுவாயும் நிதானமாயும் செய்யப்பட வேண்டும். பொதுவாக வழக்கிலுள்ள சில ஆசனங்களை இனிக் காண்போம்.

*1. பதுமாசனம் :*

சமதளத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்து வலப்பாதத்தை இடத் தொடைமீதும், இடப் பாதத்தை வலத் தொடைமீதும் ஏற்றி, இரண்டு கைகளையும் கோர்த்து மலர்ந்திருக்குமாறு இருத்தல். தாமரை போன்று இருத்தலின் இது பதுமாசனம் எனப்பட்டது. இதனை,

*''ஓரணை யப்பத மூருவின் மேலேறிட்*
*டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்*
*சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்*
*பார்திகழ் பத்மா சனமென லாகுமே''.*

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுளால் அறியலாம்.

பதுமாசனம் செரிமான சக்தியுண்டாக்கும். உடல் நலமும் மன மகிழ்ச்சியும் ஏற்படுத்தும். கீழ்வாயு நோய் தீரும். முக்குற்றங்களும் தன்னிலைப்படும். நரம்புகள் வலுவடையும்.

### 2. சித்தாசனம் :

இது பதுமாசனம் போன்றதே. ஆனால் இவ்விருக்கையில் குதி கால்கள் தொடைமீது ஏறாது, ஒன்றன் மேலொன்றாற் மூலாதாரத்தை அழுத்தும்படி குய்யத்துக்கு மேலும் கீழுமாய் இருக்கும் இவ்வாறிருப்பதால் சின்னாட்களில் காம இச்சை குறையும் என்றும் குறி வளர்ச்சி குன்றிப்பேரம் என்றும் கூறப் படுகிறது. இதனாலேயே துறவிகட்கு இந்த இருக்கை சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. சித்தாசனத்தில் முத்திரையுடன் கூடிய கைகளை முழங்கால் மடிப்பின் மேல் வைத்திருப்பர்.

### 3. பத்திராசனம் :

உட்கார்ந்த நிலையில் இடக் காலைக் கீழாக அதன் மேல் வலக்கால் வரத்தக்கதாய், பாதங்கள் இரண்டும் தொடைகட்குக் கீழாகப்பின்னால் புட்டத்துக் கீழும், முழங்கால்கள் இரண்டும் ஒன்றன் மேலொன்றும் இருத்தக்கத்தாய்க் கைகளிரண்டையும் வல முழங்கால் மடிப்பின்மேல் வைத்தபடி இருத்தல் பத்திராசனம் எனப்படும்.

*''துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து*
*அரிய முழந்தாளி லங்கையை நீட்டி*
*உருசி யொடுமுடல் செவ்வேயிருத்திப்*
*பரிசு பெறுமது பத்திரா சனமே''.*

- திருமந்திரம்

### 4. குக்குடாசனம் :

குக்குடம் என்பது கோழி. இதனால் இவ்வாசனம் கோழியின் அமைப்புடையது என்று தேறலாம். கால்களைத் தொடைகள் மீது வில் போல ஏற்றி, முழங்கையில் உடலைத் தாங்கி இருப்பது.

*''ஒக்க அடியினை யூருவில் ஏறிட்டு*
*முக்கி யுடலை முழங்கை தனிலேற்றி*
*தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்*
*குக்குட ஆசனங் கொள்ளலு மாமே''*

- திருமந்திரம்.

### 5. *மயூராசனம் :*

மயூரம் என்றால் மயில். கையை ஊன்றி முழங்கையில் மடித்து மேற்கை படுக்கைக் கோட்டில் நிறுதிட்டமாய் அதனோடு உடலும் நேராய் இருக்க நிற்பது.

இதனால் வயிற்றுப் பிணிகள் தீரும். செரிமான உறுப்புகட்கு அதிகக் குருதிபாயச் செய்யும்.

### 6. *சிங்காதனம் :*

உட்கார்ந்தபடி முழந்தாட்களில் கைகளை நீட்டி, வாயை நேராக வைத்துக் கண்களிரண்டினாலும் மூக்கின் வேரை நோக்கி இருத்தல்.

*''பாத முழந்தாளிற் பாணிகளை நீட்டி*
*ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்*
*கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்*
*சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே''.*

-திருமந்திரம்.

*7. புயங்காசனம் :*

புயங்கம் என்றால் பாம்பு. கால்களை நீட்டிக் குப்புறப் படுத்துக் கைகளையூன்றி, தலை, மார்பு, வயிற்றின் மேற்பகுதிவரை மேலே தூக்கி வைத்திருத்தல்.

இவ்விருக்கையால் முதுகந்தண்டுக்குப் பயிற்சி கிடைக்கும்.

*8. சலபாசனம் :*

சலபம் என்றால் வெட்டுக்கிளி. சமதளத்தில் குப்புறப்படுத்து, உள்ளங்கை மேல்நோக்கியும், கைகள் உடலோடு நெடுக்கிலுமாக வைத்து, முகவாய் தரையில் பட, கால், தொடைகளை மேலே தூக்கி வைத்திருத்தல்.

இதனால் மலச்சிக்கல் தீரும். வயிற்றுப் பேசிகளுக்கும் வயிற்று உள் உறுப்புகட்கும் பயிற்சிதரும்.

*9. தனுராசனம் :*

தனுர் என்றால் வில். குப்புறப்படுத்துக் கால்களிரண்டையும் மேலே தூக்கி, கைகளைப் பின் மேலாய்க் கொணர்ந்து கால்களைப் பற்றி முன்னாக வளைத்து நிற்பது.

இதனால் கீல் பிணிகள் தீரும். பசியுண்டாகும்.

*10. சிரசாசனம் :*

தலைகீழாகவும் கால் மேலாகவும் நிற்றல். தலையின் கீழாகக் கைகளை மடித்துத் தலைக்கு அணை போல வைத்திருக்க வேண்டும். இதனால் மூளைக்கு அதிகம் குருதி பாய்ந்து மூளை பலப்படும். நரம்புமண்டலம் தூண்டப்படும். இதைப் பெண்கள் சூல்கொண்ட போதும், தீட்டான காலத்தும் செய்யக் கூடாது.

*11. சர்வங்காசனம் :*

மல்லாந்து படுத்து, கால்களை மெதுவாக ஒட்டியபடியே மேலே தூக்கிப் பின் புட்டபாகத்தையும் இடுப்புப் பாகத்தையும் மேலே தூக்கிக் கைகளால் முதுகுப்புறத்தில் தாங்கி நிற்றல்.

இது நரை, திரை, மூப்பை மாற்றி இளமையுண்டாக்கும். உடலின் எல்லா உறுப்புகளும் பலப்படும் வீதன கோளங்கள் தூண்டப்படும். இதனுல் பெரு நோய் தீரும்.

*12. சவாசனம் :*

சவம் என்றால் பிணம். மல்லாந்து படுத்துக் கால்களை நேராயும், கைகளை உடலோடு பக்கவாட்டிலும் வைத்து நேராய்ப் படுத்திருத்தல்.

இது களைப்பைப் போக்கும். புத்துணர்ச்சி உண்டாக்கும்.

இவை தவிர இன்னும் பலவகையான ஆசனப் பயிற்சிகள் உண்டு.

அவற்றை விரிவாய்க் கூறும் நூற்களில் அறிந்து கொள்க.

## சில ஆசனங்களும் அவற்றால் நீங்கும் பிணிகளும்

*பட்சிமோத்தாசனம் :*

முழங்கால் பின் தசைகள், வயிற்றுப்பேசிகள் முதுகென்பு பலப்படும். வயிற்றை முன்னுக்கு வளைப்பதால் வயிற்று உள் உறுப்புகள் பலம் பெறுகின்றன. மலச்சிக்கல், பசியின்மை தீரும்.

*சக்கராசனம் :*

முதுகெலும்பு, கழுத்து பலப்படும். மார்பு விரிந்து வயிற்றுத் தசைகள் பலப்படும். நாடிகள் உறுதியடையும். மலச்சிக்கல் நீங்கும்.

***சர்வாங்காசனம் :***

முதுமையைப் போக்கும். குருதிச் சுற்றோட்டம் நன்றாக ஏற்படும். வீதனகோளக் கேட்டால் விளையும் நோய்கள் தீரும். பெண்களுக்குக் கருப்பைக் கோளாறுகள் தீரும். மலச்சிக்கல், நாடி பலமின்மை, தலைவலி, அலித்தன்மை ஆகிய நீங்கும்.

***ஹலாசனம் :***

என்புக்கூடு (கங்காளம்) நெகிழ்வடையும். முதுகென்பு பலப்படும். முதுமையைத் தவிர்க்கும். வயிற்று உறுப்புகளின் பிணிகள் தீரும்.

***யோகநித்திரை - கர்ப்பாண்டாசனம் :***

முதுகு, வயிற்றுப் பேசிகள் முதுகந்தண்டு உறுதியடை கின்றன. சுறுசுறுப்பைக் கொடுக்கும். வயிற்றுப்பிணிகள் வாரா. புலன்கள் அமைதியடையும்.

பத்மாசனம், சுகாசனம், பத்தபத்மாசனம் இவற்றால் வாத நோய்கள் தீரும். அடிவயிற்றுப் பகுதிக்குக் குருதி நன்றாகப் பரவும். துறவறத்தாருக்குப் புலனடக்கம் உண்டாகும்.

***யோகமுத்திரை:***

முதுகென்பு, பொருத்துக்கள் உறுதியடையும். வயிற்று உறுப்புகளில் நோய்கள் வாரா, மலச்சிக்கல், தாதுஇழப்பு, பலக்குறைவு தீரும்.

***மச்சாசனம் :***

கழுத்து உறுதியடையும். சுரப்பிகள் நல்ல நிலையில் இயங்கும். முதுகென்பு உறுதிப்படும். செரிமான சக்தியுண்டாகும்.

மலச்சிக்கல் தீரும். மார்பு விரிந்து அதிக அளவு உயிர்க்கால் புப்புசங்களுக்குள் செல்லும்.

***புயங்காசனம் :***

வயிற்று உறுப்புகளுக்கு இரத்தவோட்டம், சீராகச் செல்லும். நுரையீரல், முதுகென்பு பலப்படும். பசிமிகும். மலச்சிக்கல் தீரும். நோய் எதிர்ப்புச்சக்தி அதிகப்படும்.

***சலபாசனம் :***

வயிற்றுப் பேசிகள், வயிற்றறை உள்ளுறுப்புகள், பலப்படும். மலச்சிக்கல் தீரும்.

புப்புசப்பிணி, தமரகப்பிணி கொண்டோர் பிணியுள்ள போது இவ்வாசனத்தைச் செய்யக்கூடாது.

***மச்சாசனம் :***

குடல்களில் தொழில் நன்றாக நடக்கும். சீரணம் மிகும். சோம்பல் தீரும். மலம், நீர் நன்றாகக் கழியும். கபம் வெளிப்படும்.

***மயூராசனம் :***

முக்குற்றங்களையும் தன்னிலைப்படுத்தும். செரிமான முண்டாக்கும். முழங்கை வயிறு, மார்பு முதலியவை பலப்படும்.

***பாத ஹஸ்தாசனம் :***

முதுகு, விலாப்பேசிகள் உறுதியடைகின்றன. அடிவயிற்றுக் குப் பயிற்சி கிடைக்கிறது.

***கருடாசனம் :***

துறவறத்தைக் கடைப்பிடிக்கத் துணை செய்யும் தொடை களும் கணுக்களும் உறுதிப்படும். அண்டவாதம், வாத தம்பனம் வராமல் தடுக்கும்.

***திரிகோணாசனம் :***

விலாப்பேசிகள் உறுதிப்படும். புப்புசங்கள், அடிவயிறு, முதுகுப்பேசிகள் முதலியவை புத்துணர்ச்சி பெறும்.

***சிரசாசனம் :***

தலை, முக உறுப்புகள் குறிப்பாக மூளை அதிகக் குருதி பெறுகிறது. பீனியல், பிட்யூட்டரி சுரப்பிகள் நன்றாகச் செயல்படும்.

***அரை மச்சயேந்திராசனம் :***

வயிற்றுப்பகுதி நோய்கள் தீரும். முதுகெலும்புகள் புத்துணர்ச்சி பெறுகின்றன. ஈரல் உறுதியடையும். மலச்சிக்கல் தீரும்.

***சவாசனம் :***

நாடிமண்டலங்கள் உறுதி பெறும். மனோசக்தி வளரும் தசைகள் தளர்ந்து புத்துணர்ச்சி பெறும்.

***பிராணாயாமம் :***

ஆயுள் நீடிக்கும். உடலுக்கு அதிக உயிர்க்கால் கிடைக்கிறது. மார்பு, புப்புசம் உறுதிபெறும்.

## ***இராச யோகம்***

சித்தர்கள் பேரின்பவீடு என்ற சிவபதியை இராசயோகம் செய்து பெற்றனர். இராசயோகம் செய்வதன் மூலம் உடல் கற்பமாகும்.

*''மகிமையென்று யோகசா தனையினாலே*
*மகாகாச நிருவகற்ப வாழ்க்கை யாச்சே''*

என்பதால் யோக சாதனைகளினால் குற்றமற்றதும் மாறுபாடற்றது மான வாழ்க்கையை அடைய முடியும் என்று புலனாகிறது. மாறுபாடு என்பது நரை, திரை, மூப்பு, பிணி இவற்றால் ஏற்படுவது.

உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம் மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்ற ஆறு ஆதாரங்கள் உண்டு. மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை வாசியால் எழுப்பி ஆதார வழியாக ஆக்கினைக்குக் கொண்டு செல்லப் பேரின்பம் உண்டாகும். இதுவே அமுது, மதியமுது, பூரணம், சிவபதி, வீடு என்று பல பெயர்களாலும் கூறப்பட்டது.

*''மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை*
*நாலுநாழி உம்முளே நாடியே யிருந்தபின்*
*பாலனாகி வாழலாம் பரப்பிரம்ம மாகலாம்*
*ஆலுமுண்ட கண்டராணை அம்மையானை உண்மையே''*

சிவவாக்கியார் யோகநிலை என்ற பாடலால் இதை அறியலாம் எனவே இந்த யோகமும் கற்பங்களுள் ஒன்று என்பது வெளிப்படை.

யோகம் செய்ய வாசி என்ற பிராணாயாமமும் உறுதுணையாகும் வாசியினாலேயே குண்டலினி சக்தியை எழுப்ப முடியும். அது மட்டுமன்றி மன ஒருமைப்பாடு, தக்க ஆசனம் இவையும் குண்டலினியை எழுப்பப் பெருமளவு துணையாகும்.

குண்டலினி பாம்பு போலச் சுருண்டுகிடக்கும் என்றும் இதை எழுப்புதலே இந்த யோகத்தில் முக்கியம் என்றும் எண்ணப் படுகிறது. குண்டலியை எழுப்ப ஆசனங்களோடு முத்திரையையும் செவ்வையாக அனுசரிக்க வேண்டும் என்பர். குண்டலினி சக்தியை

எவன் அறிகிறானோ அவன் யோக வித்துவான் என்றும் யோகிகள் தூங்கும் குண்டலினியை விழிக்கச் செய்கிறவர்கள் என்றும் அட்டயோக நூற்கள் கூறும்.

குதத்திற்கு இரண்டங்குலம் மேலும் குய்யத்துக்கு இரண்டங் குலம் கீழுமாக உடலின் மத்தியில் மூலாதாரத்தில் குண்டலினி இருக்கும்.

சித்தாசனமும் முத்திரையும் அனுட்டித்து மனதை ஒருமைப் படுத்தி இருந்து வாசியை சரியாகக் கடைப்பிடித்துப் பயிற்சி செய்ய வெப்ப முண்டாய் இதனால் தகிப்புண்டாகி குண்டலினி விழிப் படைந்து தண்டத்தால் அடிபட்ட சர்ப்பம்போல நிமிருகிறது. இச் சக்தியை ஆதாரங்கள் வழியாக அசைத்து மேலே ஏற்றிக்கொண்டு வர அமிர்த நிலையை அடையலாம்.

''மூல நெருப்பை விட்டு மூட்டிநிலா மண்டபத்தில்
பாலை இறக்கி உண்டு பசி ஒழிவது எக்காலம்''

''ஆறு ஆதாரம் கடந்த ஆனந்தப் பேரொளியை
பேறுகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம்''

*-பத்திரகிரியார்*

அமிர்த நிலையாவது சிகையின் மத்தியில் பரமாத்மா பொருந்தி இருப்பதால் சுழுமுனையின் மேற்பாகத்தில் சோமநீர் ஒழுகிக் கொண்டிருப்பது என்பர். இது சந்திர அமுது, மதியமுது என்றும் சொல்லப்படும்.

# இயம நியமம்

*மனத்தூய்மையும் செயற்றூய்மையும்*

*''மாவும் மாக்களும் ஐயறி வினவே*
*மக்கள் தாமே ஆறறி வுயிரே''*

என்கிறது தொல்காப்பியம். இதனால் ஏனைய உயிர்களை விட மக்கள் அறிவிற் கூடியவர்கள் என்று தெளிவாகிறது. எனினும் மனிதன் தனக்குள்ள அதிகப்படியான அறிவினால் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து ஒழுக்கத்துடன் வாழும் போதுதான் சிறப்படைகிறான். நம்முன்னோர்களால் ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டதாக எண்ணப்பட்டது. இதனைத் திருவள்ளுவர்,

*''ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்.''*

என்று திருக்குறளில் கூறுகிறார். இவ்வாறான சிறப்பான ஒழுக்க மாவது நல் மனம், நற்செயல் இவற்றால் ஏற்படுவது. இவையே இயம, நியமம் என்று நம் சித்தர் நூற்களில் கூறப்பட்டிருக்கின்றன. மனத்தூய்மை இயமமென்றும் செயல் தூய்மை நியமென்றும் பொருளாம். மனமும் செயலும் தூய்மையானால் மனிதன் கவலை, துன்பம் ஆகியவற்றால் தாக்கப்படமாட்டான். இதனால் அவன் நரை, திரை, மூப்பு, பிணி ஆகியவைகட்கு அப்பாற்பட்டு வாழ முடியும் என்பது சித்தர்கள் கருத்து. மனதின் தொழில் நினைத்தல். நினைத்தலால் செய்யப்படுவது செயல். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மிக்க தொடர்புடையன.

இயம நியமமாவது என்னெனக் கூறப்போந்த திருமூல நாயனார் தமது தமிழ் மூவாயிரத்தில்.

''கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்திடை யில்நின்றானே''
''தூய்மை அருளூண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றியவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே''

என்று கூறுகிறார்.

நல்ல செயல்களைச் செய்வதும் நல்ல மனத்தினைக் கொண்டிருத்தலும் கற்பமாகும். தீச் செயலைப்புரிந்து ஒருவன் தன் மனத்திலுண்டாகும் எண்ணங்களாலும் கவலைகளாலும் களைப் படைந்து சோர்வுற்றுத் துன்புறுவான். கொடிய செயல்களைப் புரிந்தால் மனம் அதை மறப்பதில்லை. இதைத் ''தன்நெஞ்சே தன்னைச்சுடும்'' என்று வழங்கும் முதுமொழியாலும்

''நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவும் மறையாவாம்
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாதலின்''

என்ற கலித்தொகை அடிகளாலும் அறியலாம். தீச் செயல் புரிவதால் மனப்போராட்டம் உண்டாய் மன வேதனையுண்டாகும். அது கவலையாகும். கவலையால் நரையுண்டாம்; நரையால் மூப்புண்டாம்; இதனால் பிணியுமுண்டாகி விரைவில் மரணத்தை உண்டாக்கும். நல்ல செயல்கள் செய்து வந்தால் அது ஒருவனைப் பன்னெடுங்காலம் நரை திரை, மூப்பு, பிணி இன்றி வாழச் செய்யும். அவனுடைய சாவைத் தடுக்கும் ஆற்றலும் அதற்குண்டு. இதை வள்ளுவ நாயனார்,

*''வீழ்நாள் படா அமை நன்றாற்றின் அஃதொருவன்*

*வாழ்நாள் வழியடைக்குங் கல்''*

*''நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்*

*(செய்யார்*

*நோயின்மை வேண்டு பவர்''*

என்றும் தமது தமிழ் மறையில் கூறுகிறார்.

நியமந் தவறித் தீச்செயல் செய்வதால் இருவகையான தீங்குகள் ஏற்படும். ஒன்று அச்செயலால் உடலுக்கு உண்டாம் கேடு; மற்றது மனதுக்கு உண்டாம் கேடு. மனதுக்கு உண்டாம் கேடு இயமத்துட்சாரும். உடலுக்கு உண்டாம் கேட்டினைக் கீழ்வருவன வற்றால் தெரிந்து கொள்ளலாம். ஆகார நியதிகளும் நாள் ஒழுக்கமும் தவறின் அது நோய்வாய்ப் படுத்தும். குறைவான உணவு, மிகுந்த உணவு, காலந்தப்பிய உணவு இவை மாறு பாடுள்ள உணவு எனப்படும். இவ்வாறு மாறுபாடுள்ள உணவு உட்கொண்டால் உடல் பல பிணிகளுக்கு உட்படும். இது போலவே பல் துலக்கல், குளித்தல், நாள் ஒழுக்கங்கள் தவறினும் பிணிகளுண் டாகும். கட்குடி போன்ற தீய பழக்கங்கள் உடலைக் கேடுறச் செய்யும். காமத்தால் பொருட் செலவும் கடும் நோய்களும் உண்டாகும். சண்டை முதலியவற்றால் உடல் நைந்து வருத்தமுறும். இவ்வாறானே நியமந் தவறிய எல்லாச் செயல்களும் பெரும் தீங்கை விளைவித்து வாழ் நாட்களைக் குறைக்கும். இவை உடலையும் மனதையும் பாதிக்கச் செய்யும் தன்மையுடையவை. இதனாலேயே ஒழுக்கம் நம் முன்னோர்களால் கற்பமாக எண்ணப்பட்டது. ஒழுக்கமான செயல்களைச் செய்து

வருபவனுக்கு உடலாலோ அன்றி மனத்தாலோ கேடு விளை வதில்லை. பன்னெடுங்காலம் வாழ்வான்.

இனி, இயமமான நன் மனது பற்றிக் கூறுமிடத்து மனம் என்றால் என்ன என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மனம் உள்ளம், அகம், நெஞ்சு என்ற வேறு சொற்களாலும் தமிழ் நூற்களில் கூறப்படுகிறது. தத்துவங்கள் தொண்ணூற்றாறில் கரணம் (அந்தக் கரணம்) நான்கு. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. கரணத்துக்குத் துணையாய் நிற்பவை அறிவு, பொறி, புலன், தொழிற்கருவிகள் ஆகியவையாம். இவை அறிதல் செய்தல் ஆகியவற்றுக்கு அடிப்படை மனத்திலே தான் எண்ணங்கள் அல்லது நினைப்புகள் தோன்றுகின்றன. புத்தி அவ்வெண்ணங் களை ஆராயும்; சித்தம் முடிவெடுக்கும்; அகங்காரம் அதை நிலைப்படுத்தும். இவ்வாறாகப் பிரித்துக் கூறப்பட்டாலும் இந்நான்கு கருவிகளும் எப்போதும் சேர்ந்தே தொழில் செய்கின்றன. எண்ணுகின்ற மனத்தினைக் குரங்கிற்கு ஒப்பிடுவர். எவ்வாறு குரங்கானது கிளை தோறும் தாவிக் கொண்டிருக்குமோ அவ்வாறே மனமும் ஒரு நிலையில் இருப்பதில்லை. மனக்குரங்கை அதன் போக்குப்படி விட்டால் அது நம்மை மிக்க இக்கட்டான நிலைக்கு ஆளாக்கிவிடும். இதை அடக்கி விட்டால் நன்மையாம். இதனாலே கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியான சாக்கிரடீசு, ''மனம் ஒரு நல்ல வேலைக்காரன்; ஆனால் மோசமான எசமான்'' என்று கூறியிருக்கிறார். மனத்தை ஒருமைப்படுத்தும் எண்ணத்துடனேயே நம் நாட்டில் இறை வழிபாடு, தவம் முதலானவை செய்யப்பட்டன.

ஒவ்வொரு உடலுறுப்புடனும் இணைக்கப் பட்டிருக்கும் நரம்பு உணர்ச்சிகளை மனம் சார்ந்து நிற்கிறது. அதனால் தான் அளவுக்கு மீறிய கோபம் ஏற்படும்போது கண் சிவந்து உடல்

சூடேறுகிறது. கோபம் தணிந்ததும் களைப்பும் சோர்வும் உண்டாகின்றன. மனத்தில் மாறுதல் உண்டாகிறபோது உடலிலும் மாறுதல் உண்டாகிறது. அவ்வாறே உடலில் உண்டாகும் மாறுதல் மனத்தையும் மாற்றியமைக்கிறது. உள்ளம் தளர்வுறும்போது உடலும் தளர்வுறுகிறது. ஒன்று வலிவுபெறும்போது மற்றதும் வலிவு பெறுகிறது. இதனால் உள்ளத்துக்கு உடலுக்கும் உள்ள நெருக்கமான பிணைப்பை நாம் தெரிந்து கொள்ளலாம்.

மனம் தூய்மையானால் அது உடலுக்குக் கேடுகளை விளைவிப்பதில்லை நன்மையுண்டாக்கும். உடலை நல்ல நிலையில் வைத்திருக்க மனத்தூய்மை வேண்டும்.

*''மன நலம் மன்னுயிர் காக்கம்''*

என்று வள்ளுவர் இயமத்தின் சிறப்பைக் கூறுகிறார். மேலும் மனத்தால் உண்டாகும் காமம், வெகுளி, மயக்கம், அவா, துன்பம், ஆகியவை நீங்கப் பெறின் உடலைப் பிணி சேராது. இதை,

*''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமங் கெடக்கெடும் நோய்''*

*''ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்''*

என்று வள்ளுவர் கூறுகிறார். மனம் தூய்மையானால் அது ஒன்றே போதுமானது. வேறு எதுவும் முக்கியமல்ல என்கிறார் அகத்தியர். இதனை,

*''மனமது செம்மை யானால் மந்திரஞ் செபிக்க வேண்டா*
*மனமது செம்மை யானால் வாயுவை உயர்த்த வேண்டா*

மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மை யானால் மந்திரஞ் செம்மை யாமே''

என்ற அவருடைய ஞானப் பாடலால் அறியலாம். மனத்தின் அழுக்கு நீங்கப் பெறாதவன் யோகியானாலும் அவன் தவத்திலே இருந்த போதும் பயனில்லை. மனத்தின் அழுக்கு அறுந்து விட்டால் அவன் எப்போதும் எந்தச் சூழலிலும் மாசற்றவனாயும் பிறப்பினை அறுத்து நரை, திரை, மூப்பு, பிணி இவற்றைக் கடந்தவனாயும் இருப்பான். இதை.

''மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகாள்
வனத்தகத்து இருக்கினும் மனத்தகத்து அழுக்கறார்
மனத்தகத்து அழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத்து இருக்கினும் பிறப்பறுத்து இருப்பரே''

என்று சிவவாக்கியர் பாடுகிறார். மனத்தின் அழுக்கு அகல வேண்டுமாயின் அதனோடு பிணைப்புண்ட பொறி புலனாதிகளும், தொழிற் கருவிகளும் அடக்கப்பட வேண்டும். இவை அடங்கக் காரணம் சுத்தியாம். மனத்தின் முடிவுக் கருவியான ஆங்காரத்தை அடக்கிப் புலன்களைச் நீக்கினால் வீட்டின்பம் நுகரலாம்.

''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து
தூங்காமல் தூங்கி சுகம் பெறுவ தெக்கலாம்''

என்று பத்திரகிரியார் புலம்புகிறார். இவையன்றி மனத்தைப் பற்றி நமது இலக்கியங்களும் சித்தர் நூற்களும் கூறுவன நிறைய உள்ளன.

இயம நியமங்களின் நன்மை குறித்துச் சுவாமி சிவானந்தர்,

"A man who has attained ethical perfection by the continued practice of Right conduct or Iyama and Niyama has got a magnetic personality" என்று தனது 'Lord Siva & His worship' என்ற நூலில் கூறியிருக்கிறார்.

## முப்பூ

தமிழ் மருத்துவத் துறையில் 'முப்பூ' என்பது பெரும் புரட்சியை உண்டாக்குவதொன்று. முப்பூ என்பதற்கு மூன்று பூதங்களின் கூட்டால் உண்டான பொருளென்றும், மூன்று உப்புக்களின் கூட்டுப் பொருள் என்றும், தீட்சை செய்த பூநீறு என்றும் பலவாறாகப் பொருள் சொல்வர். ஈதன்றி தான் முடித்ததுதான் முப்பூ என்றும் பிறர் சொல்வதையும், செய்வதையும் அல்ல என்றும் சாதிப்பார் பலருண்டு. எது எவ்வாறாயினும் நாம் சித்தர்களுடைய பல நூற்களையும் நோக்குமிடத்து முப்பூவைப் பற்றிக் கூறப்படும் இடங்கள் அனைத்தும் மறை மொழியில் இருத்தலையும், முப்பூ பெறுவதற்கு வெவ்வேறு முறைகள் கூறப்பட்டிருத்தலையும் காணலாம்.

முப்பூ என்ற பொருள் கற்பப் பொருட்களுள் ஒன்று. இதில் சிறிதளவு சேர்த்து முறைப்படி பக்குவம் பண்ண கீழ்வகுப்பு உலோகங்களான வங்கம், செம்பு போன்றவை தங்கமாகும் எனப்பட்டுள்ளது. மேலும் இது அதிக ஆற்றலும் வீரியமும் உடையது. மருத்துவத்தில் தாதுப் பொருட்களை எளிதிலும் விரைவிலும் செந்தூரம், பற்பம், சுண்ணம் இவைகளாக முடிக்க முப்பூவைப் பயன்படுத்தலாம். இவ்வாறு முப்பூவினால் முடித்த மருந்துகளையாவது, பிறமருந்துகளுடன் முப்பூ சேர்த்தாவது பிணியாளருக்குக் கொடுக்கப் பிணி விரைவில் நீங்கும். முப்பூவை

உண்டால் பிணியேதும் அணுகாதபடி உடலைப் பலப்படுத்தி வலுவாக்கும். மேலும் நரை, திரை, மூப்பு இவைகளை ஒழித்து என்றும் இளமையோடு இருக்கச் செய்யும். இவற்றைக் கீழே சொல்லப்படும் மேற்கோளால் தேறலாம்.

''வளமுடனே முப்பூவைக் கண்ட போது
வாகுடனே யேமத்துக் குறுதி யாச்சு
பளமையுடன் வயித்தியமும் வாத யோகம்
பலிக்குமடா மூப்பூவின் மார்க்கத்தாலே
இளமையுடன் முப்பகலு முப்பூ வாலே
எழிலுடனே நீயுமொரு சித்த னாவாய்
நளபதியும் முப்பூவை யுண்ட போது
நரைதிரையு மாற்றுமல்லோ இராச னாமே'

-போகர் ஏழாயிரம்

''தீய்ச்சலுடன் உப்புக்குத் தீட்சை செய்து
திறமுடனே காயத்துக் குறுதி பண்ணு
பாய்ச்சடலுன் முப்பூவுந் தின்றா யானால்
பாங்குடனே தேகமது இறுகுந் தானே

-போகர் ஏழாயிரம்

''ஆச்சடா உடம்பிலுள்ள வியாதி யெல்லாம்
அணுப்போல உண்டிடவே பறந்து போகும்
வாச்சடா தேகசித்தி அதிக மாச்சு
வத்துடனே கூடியுந்தான் வாழ லாச்சு''

- காக புசுண்டர்

''முப்பொருளைச் சுட்டு முழுதழுது நீறாக்கித்
தப்பாம லுண்டுநிலை சார்''

-காகபுசுண்டர் குறள்

''கூறு மமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக்க லாம்''

-ஔவை குறள்.

''நேரப்பா அணுப்போல சரக்குக் கெல்லாம்
நிச்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற் போடு
வீரப்பா நீறுமடா நவலோகந்தான்
வேதையென்ற வித்தையெல்லாங் கைக்குள் ளாச்சே''

- காகபுசுண்டர்

இவ்வாற்றானே கற்பமான முப்பூவைப் பொதுவாக 1. வாத முப்பூ, 2. வைத்திய முப்பூ, 3. யோக முப்பூ அல்லது ஞான முப்பூ என்று மூன்று பெரும் பிரிவுகளாக் கூறுவர். வாத முப்பூ என்பது வேதை என்றழைக்கப்படும். வாத முறைகட்குப் பயன்படுவது. இதனால் செம்பு போன்ற உலோகங்களை வேதித்துத் தங்கமாக்க லாம். இக்காரியம் செய்பவர்களை வாதிகள் என்று அழைத்தல் மரபு. வாத முப்பூ உலோகப் பொருட்களை வேதித்து உயர் வடையச் செய்வது போல உடலையும், அதன் கெட்ட குணங்களை மாற்றித் தூய்மையாக்கி நல்லுடலாக்கும். வைத்திய முப்பூ என்பது உலோகத் தாதுப்பொருட்களை எளிதில் செந்தூரம், பற்பம், சுண்ணம் போன்ற மருந்துகளாகச் செய்வதற்கும், பிற மருந்து களுடன் அணுவளவு கலந்து அவற்றின் ஆற்றலைப் பெருக்குவதற் கும் கட்டு, களங்கு, உருக்கு, குளிகை போன்ற உயர் வகுப்பு மருந்துகளை முடிப்பதற்கும் பயன்படுத்துவது. இவ்வாத, வைத்திய

முப்பூக்களுள் குறிக்கப்படும் சில முக்கிய பொருட்களாவன : பூநீறு, அமுரி, கல்லுப்பு, வெடியுப்பு போன்ற காரசார வகைகள், சுண்ணப் பொருட்கள், பனிக்குடத்தின் நீர், சில சரக்குகளால் முடிக்கப்பெற்ற பொருட்கள் முதலியன. சித்தர்கள் தங்கள் நூற்களில் வெவ்வேறு வகையான முப்பூவைக் குறிக்கின்றனர். போகர் தீட்சை செய்த பூநீற்றை முப்பூ என்றும், திருவள்ளுவர், சூரியானந்தர் போன்றோர் மலசலத்தை வாலையிலிட்டு வாங்கி தைலத்துடன் வீரம் முதலிய சேர்த்துப் பெறப்படுவது முப்பூ என்றும், வேறு சிலர் தலைச்சன் பிரசவத்தில் வெளியாகும் பனிக்குடத்தின் நீரினின்று பெறுவது என்றும், இன்னும் சிலர் கல்லுப்பு, வெடியுப்பு போன்றவை சேர்த்து முடிக்கப் பெறுவது என்றும் பலவாறு கூறுகின்றனர்.

மேலே கூறப்பட்ட எந்த வகைப் பெருளானாலும் முப்பூவில் மூன்று முக்கிய பூதச் சேர்க்கை உண்டு என்று கொள்ளலாம். முப்பூ மட்டுமன்றி ஏனைய எல்லாவற்றுக்கும் பஞ்ச பூதமே ஆதாரம் என்பதை

*''வாகத்தில் வெடியுப்பும் பஞ்ச பூதம்*
*வண்மையாஞ் சவுக்காரம் பஞ்ச பூதம்*
*தீதற்ற செயநீரும் பஞ்ச பூதம்*
*செயமான குருவுக்கும் பஞ்ச பூதம்*
*கோதற்ற சடத்துக்குப் பஞ்ச பூதம்*
*குறியாகப் பழுப்பதற்கும் பஞ்ச பூதம்*
*குறியாகப் பழுப்பதற்கும் பஞ்ச பூதம்*
*காரியமாம் வாதமெல்லாம் பஞ்ச பூதம்.*

என்ற போகர் முதலாயிரச் செய்யுளால் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு கூறுதலின் ஐந்து பூதியங்களான மண், நீர், தீ, வளி, வெளி ஆகிய ஐந்தும் முக்கியமானவை எனினும் ஆகாயம் எப்போதும்

எல்லாவற்றுக்கும் இடம் கொடுப்பதாலும், மண் எதையும் தாங்குவதாலும் இவ்விரண்டையும் விட்டு மீந்த வளி, தீ, நீர் ஆகிய மூன்று பூதங்களையுமே முப்பூவினுக்கு ஆதாரமாகக் கொண்டனர். மேலும் வளி, அழல் ஐயக்குற்றங்களான உயிர்த் தாதுக்களுக்கு ஆதாரங்களாய் இருக்கும் பூதங்களும் இம்மூன்றே என்பது முக்குற்றங்கள் மிகுதலாலோ அன்றி குறைதலாலோ உண்டாகிறது. இதனை,

*''மிகினுங் குறையினும் நோய்செயும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று''*

என்ற திருக்குறளால் அறியலாம். பிணி நீக்கமாவது மிகுந்த அல்லது குறைந்த குற்றத்திற்கேற்றவாறு பூதச் சேர்க்கையுள்ள மருந்து கொடுத்து விகற்பப்பட்ட குற்றங்களைத் தன்னிலைப் படுத்தலாம். எனவே வாத, பித்த கபங்களின் வேறுபாட்டை வளி, தீ, நீர் ஆகிய பூதப் பொருட்களைக் கொண்டு சரிப்படுத்தலாம். முப்பூ என்பது இம்மூன்று பூதியங்களையும் தன்னுட் கொண்டதால் எந்தக் குற்ற வேறுபாட்டினையும் தன்னிலைப் படுத்தும் தன்மையுள்ளது. அதனால் எந்த நோயானாலும் தீரும் ; தாதுக்கள் தன்னிலைப்படும். இதுவே முப்பூவின் தத்துவம் என்று உணரக் கிடக்கிறது.

வாத, வைத்திய முப்பூப்போலவே நமது உடம்பிலும் சில முப்பூப் பொருட்கள் இருக்கின்றன. இவை யோகம் செய்வதால் உடலிற் சுரக்கச் செய்யப்படுகின்றன. இவை சுரப்பிகளின் சத்துக் கள் என்று சொல்லப்படுகின்றன. இவற்றுள் மதி அமுது என்பது முக்கியமானது. இதனையே பூரணம், பால், சக்தி அமுது, அமிர்தம், தீர்த்தம், குடிலைநீர், சுடர், போன்ற பல பெயர்களால் கூறப் பட்டுள்ளது. வாசிப்பழக்கம் பண்ணி ஆதனம் செய்து யோகம்

செய்வதால் யோகமுப்பூவைச் சுரக்கச் செய்யலாம். இதுவும் கற்பமாகும். இதை

*ஊறு மமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்*
*கூறும் பிறப்பறுக்கலாம்.*

என்ற ஔவைக் குறளால் அறியலாம். மேலும் இதை

*''ஆறே அருவி அகங்குளம் ஒன்றுண்டு*
*நூறே சிகதி நுண்ணிது வண்ணமுங்*
*கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்*
*வேறே இருக்கும் விழுப்பொருள் தானே''*
*''ஊறு மருவி உயர்வதை உச்சிமேல்*
*ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு''*

என்ற திருமந்திரப் பகுதிகளாலும் இந்த யோகமுப்பூப்பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

மதியமுது உண்ணவேண்டி மூச்சுப்பயிற்சி செய்து பிராணனை வாசி செய்வது வாயுதாரணை எனப்படும். ஆதனங்களால் மூலக்கனலை எழுப்பி குண்டலினி சக்தியைத் தூண்டுவது அங்கிதாரணை எனப்படும். இவற்றால் முறைப்படி பயிற்சி செய்து யோக முப்பூவைப் பருகலாம். இதுவே பேரின்பமாகும்.

மதியமுது சுரக்குமிடம் சிகையின் மத்தியில் புருவ நடுவுக்கு நேர் உள்ளாக சுழுமுனையில் இருக்கிறது எனப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சோமநீர் கசியும். இச்சந்திராமிர்தத்தினுக்குக் கார்ப்பு, உவர்ப்புச் சுவைகள் உண்டென்றும் இது பால், தேன், நெய் போலிருக்குமென்றும் கூறப்படுகிறது. இது சுரந்தால் காயம் சித்தியடைகிறது. இதை உண்டவன் வியாதிவாய்ப்பட மாட்டான்.

''உண்டநீர் உனக்குள் பாய்ந்திடில்

''சண்டனில்லை சாக்காடெய்துவ தில்லைகாண்''

என்று ஞான வெட்டியான் கூறுகிறது. மேலும் மதியமுதுண்டவன் உடல் தாமரைத் தண்டுப்போல மிருதுவாயும் அழகாயும் இருப்ப தோடு அனேககாலம் உயிர் வாழ்வான்; பேரின்ப வீடான சிவ பதவியடைவான். இதை,

''மாறு மதியும் மதித்திடு மாறின்றித்

தாறு படாமல் தண்டோடே தலைப்படில்

ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்

பாறு படா இன்பம் பார்மிசைப் பொங்குமே''

என்ற திருமந்திரத்தாலும்,

'சூரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்

மரணம் பிறப்பில்லை வீடு''.

என்ற ஔவைக் குறளாலும் அறியலாம்.

மதியமுது தவிர உடலில் ஊறும் முப்பூக்களாவன அமுரி, மலம், பனிக்குடநீர் ஆகியவைகளாம். அமுரியைப் பற்றி பல சித்தர்களின் நூற்களின் கூறப்பட்டுள்ளது. அமுரியை சிவநீர் என்று திருமூலர் கூறுகிறார். இதை,

''உடலிற் கிடந்த உறுதிக் குடிநீர்

கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்

உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்

நடலைப் படாதுயிர் நாடாலு மாமே''

''தெளிதரு மிந்தச் சிவநீர் பருகில்
வளியுறு மெட்டின் மணமும் ஒடுங்கும்
களிதருங் காயங் கனகம தாமே''

''கரையரு கேநின்று கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்கள்
நரைதிரை நீக்கி நுகரவல்லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே''

என்ற திருமந்திரப் பாடல்களால் அறியவும். அமுரியைக் கற்ப மாகப் பயன்படுத்துவது அமுரிதாரணை என்று சொல்லப்படும்.

கற்பங்களுள் சொல்லப்பட்ட கற்ப அவிழ்தம், வாயு தாரணை, அமுரிதாரணை, முப்பூ அனைத்தும் சோதி மருந்தென்று திருமூலர் கூறுவர். இதனை,

''வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள் செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே''

என்று திருமந்திரத்தால் அறியலாம்.

கற்பம் முற்றும்.

# வெறிநோய்

தமிழ் மருத்துவத்தில் வெறிநோய் (உளப்பிணி) என்ற பொதுத் தலைப்பின் கீழ் உளம் என்ற மனத்தின் வேறுபாடு, கேடு-பிறழ்நிலை முதலியவற்றால் ஏற்படக்கூடிய நோய்கள் அடங்கும். கிறுக்கு (கிரிகை உன்மதம், பிரமை), மத அழிவு (மதாத்தியம்), மதநோய், மூர்ச்சை, மயக்கம் (அபஸ்மாரம்), குடிவெறி (அபினி, கஞ்சா, கள், சாராயம்), சூதிகாவாதம், வலிப்பு போன்ற நோய்கள் இதன் கீழ் அடங்கும். இந்நோய்களைப் பற்றிய குறிப்புகள் பல நூற்களிலும் சிதறிக் காணப்படுகின்றன. அவைகளில் பலவற்றை ஒருங்கு சேர்த்து விளக்கமாக இப்பகுதியில் கூறப்படுகிறது. மிகப் பழங்காலத்தில் உளப்பிணி ''துட்டகணபூதத்தாலும் எச்சியதைத் தொடர்பேயாலும்'' உண்டாகிறதென மருத்துவ நூலறிவில்லாததால் எண்ணிக் கொண்டிருந்தனர் என்றும் அவ்வாறான கூற்று தவறானது என்றும் அகத்தியரின் மானிடர் கிறுக்கு நூல் கூறுகின்றது. தமிழ் மருத்துவச் சித்தர்கள் இவ்வாறான நோய்களை மருத்துவத்தால் தீர்க்க முடியுமென எண்ணினர். ஆனால் மருத்துவ அறிவில்லா மக்கள் பூதம், கணம், பேய், தெய்வம் போன்றவற்றால் கிறுக்கு உண்டாகிறதென எண்ணியதால் உளப்பிணி கொண்டோரை கோயில்களுக்குக் கூட்டிச் செல்லுவதும், மந்திரம் செய்வதும், விலங்கிட்டு அடித்துத் துன்புறுத்துவதும் வழக்கில் இருந்ததாக அறிகிறோம். தமிழ் நாட்டில் சங்கரன்கோயில், திருவிடை மருதூர், சோளிங்கர் போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களுக்குக்

கிறுக்குற்றோரைக் கொண்டு செல்லுவது இன்றும் வழக்கிலுண்டு. இவ்வாறு கோயில்களுக்கு எடுத்துச் செல்லுவது பிணியாளி முற்றிலும் புதிதான ஒரு சூழ்நிலையில் தன் முந்திய சூழ்நிலை, நிகழ்வுகள் முதலியவற்றை மறந்துவிட ஏதுவானதால் பிணி குணப்படுகிறது. இதன்றி அக புற மருந்துகளால் வெறி நோயைத் தீர்க்கும் முறைகளும், சித்தர்கள் நூற்களில் காணப்படுகின்றன. அவை இப்பகுதியில் விளக்கப்படும்.

சித்தர் நூற்களில் கிரிகை நோய்களின் குறிகுணங்களும் நோய் வகைகளும் அவற்றிற்குரிய மருத்துவ முறைகளும் கூறப்பெற்றிருக்கின்றன. பொதுவாக உளப்பிறழ்வு நோய் தோன்றுவதற்கு தட்டம்மை, கபவாதசுரம், தீவிர சளி சுரம் போன்ற தீவிர தொற்று நோய்களும், மூளையைப் பற்றிய கிரந்தி, மகாவாத ரோகங்கள், மூளைச்சவ்வுகளாகிய பாலனி, சாலவம், கஞ்சுகி ஆகியவைகளின் தாபிதம், மயக்கப் பொருட்களாகிய கஞ்சா, அபினி, சாராயம் முதலியவைகளை அதிகமாக அருந்துதல், வங்கம், இரசம் போன்ற தாதுப்பொருட்கள் விடமிக்கும்படி உபயோகப்படுத்தல், காயங்கள், தமரகநோய்கள், உதரநோய்கள், இரத்த அழுத்தம், நாடிச்சுவர் இசிவுத்தன்மை குறைதல் போன்ற நாடியைப் பற்றிய நோய்கள், வயோதிகம், உணர்ச்சி விண்டநிலை, வீறுச்சோர்வு, சூதிகாவாதம், பீடிப்புகள், வலிப்பு நோய்கள், நரம்புத்தளர்ச்சி ஆகியவைகள் காரணங்களாக இருக்கின்றன.

## கிரிகை

சாஸ்திரங்களைப் படிக்காதவர்கள் மனிதர்களுக்கு கிரிகை நோய் துட்டகணம், பூதம், பேய் இவைகளால் பீடிக்கின்றன என்று அறியாது சொல்வார்கள். அதனுடைய குணங்களை அகத்தியர் மானிடர் கிறுக்குகள் பதினெட்டுக்குக் கூறப்பட்ட கிரிகை நூலிலும் கிரிகை நூல் வசனத்திலும் காணலாம். இந்நூல் 64 செய்யுட்களை யுடையது. மேற்படி கிரிகைகளின் குணங்களையும் அவற்றிற்குரிய மருத்துவத்தையும் கீழே காண்க.

### *1. அனற்கிரிகையின் குணம்*

இதில் கரடுடைய பொட்டலில் மானிடரைக் கும்பிட்டோடும், ஊரிலுள்ள எச்சில் எல்லாம் பொருக்கித் தின்னும். தலையசைக்கும், கும்பிடும், வாய் பொத்தும். நாம் சொல்வதைக் கேட்காது, கொடுத்ததெல்லாம் சாப்பிடும். நகத்தினால் நிலத்தைச் சுரண்டும், பற்கடிக்கும், உடுத்தியுள்ள ஆடையில் தன்னையறியாமல் மூத்திரம் பெய்யும். இரவு பகல் தூக்கமில்லாதிருக்கும்.

## மருந்து

நிலவாகை, நத்தைக்சூரி, மின்வெட்டுப் பூச்சி கூட்டி உச்சி முதல் பாதம் வரை நன்றாகத் துவாலை செய்து காய்ந்தவுடன் மாலையில் வெந்நீர் விடவும்.

உதயத்தில் கழுதைப்பாலில் மத்தன்சாறு முகனையளவு பிழிந்துத் தாக்கவும். 6 நாள் கொண்டால் கிரிகை நீங்கும். நல்ல புத்தி உண்டாம், நீண்ட ஒட்டம் தீரும். வியர்வை உண்டாம், குளிர்ந்து விடும், தேகம் சிவந்து சித்தி உண்டாம்.

## கிரிகை

சாஸ்திரங்களைப் படிக்காதவர்கள் மனிதர்களுக்கு கிரிகை நோய் துட்டகணம், பூதம், பேய் இவைகளால் பீடிக்கின்றன என்று அறியாது சொல்வார்கள். அதனுடைய குணங்களை அகத்தியர் மானிடர் கிறுக்குகள் பதினெட்டுக்குக் கூறப்பட்ட கிரிகை நூலிலும் கிரிகை நூல் வசனத்திலும் காணலாம். இந்நூல் 64 செய்யுட்களை யுடையது. மேற்படி கிரிகைகளின் குணங்களையும் அவற்றிற்குரிய மருத்துவத்தையும் கீழே காண்க.

### 1. அனற்கிரிகையின் குணம்

இதில் கரடுடைய பொட்டலில் மானிடரைக் கும்பிட்டோடும், ஊரிலுள்ள எச்சில் எல்லாம் பொருக்கித் தின்னும். தலையசைக் கும், கும்பிடும், வாய் பொத்தும். நாம் சொல்வதைக் கேட்காது, கொடுத்ததெல்லாம் சாப்பிடும். நகத்தினால் நிலத்தைச் சுரண்டும், பற்கடிக்கும், உடுத்தியுள்ள ஆடையில் தன்னையறியாமல் மூத்திரம் பெய்யும். இரவு பகல் தூக்கமில்லாதிருக்கும்.

## மருந்து

நிலவாகை, நத்தைக்சூரி, மின்வெட்டுப் பூச்சி கூட்டி உச்சி முதல் பாதம் வரை நன்றாகத் துவாலை செய்து காய்ந்தவுடன் மாலையில் வெந்நீர் விடவும்.

உதயத்தில் கழுதைப்பாலில் மத்தன்சாறு முகனையளவு பிழிந்துத் தாக்கவும். 6 நாள் கொண்டால் கிரிகை நீங்கும். நல்ல புத்தி உண்டாம், நீண்ட ஒட்டம் தீரும். வியர்வை உண்டாம், குளிர்ந்து விடும், தேகம் சிவந்து சித்தி உண்டாம்.

## *2. பித்த கிரிகையின் குணம்*

பித்தம் உறைந்து புற்றுப்போல் வளரும். சூட்டின் வேகத்தினால் புத்தி மயங்கி ஆடைகளைக் கிழித்துப்போடும். நிர்வாணமாக இருந்து நரகலை எடுக்கும், மேலே பூசிக் கொள்ளும். கீழே விழுந்து உருளும். எதிர் நின்ற பேர்களின் மேல் எச்சிலைத் துப்பும், தன் பேரிலும் எச்சிலைத் துப்பிக் கொள்ளும். தண்ணீரைக் கண்டால் பயப்படும்.

### *மருந்து*

உச்சியின் நடுவில் நெற்கொண்டு கீறி சாணாகம் (சாணி) வைத்து கட்ட வேண்டும், வேப்பெண்ணெய்யில் நாக்குப்பூச்சி போட்டுக் கருக்கி, கருகியவுடன் இறக்கி அந்த எண்ணெயைத் துவாலை செய்யவும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் அரிதாரம், துருசு இவற்றைப் பொடித்துப் போட்டு மூன்று நாள் கொடுக்கப் பித்த கிரிகை நீங்கும்.

## *3. எச்சில் கிரிகையின் குணம்*

இதில் நரகலைத் தின்னும். தரையில் முட்டிக் கொள்ளும். மகிழ்ச்சியுடன் நீரை வாரி எடுத்து சிரசில் தெளித்துக் கொள்ளும். சாம்பலைத் தின்னும். மழையில் நனைந்து நிற்கும். நாய்போல் குரைக்கும். வாய் புலம்பும். நாயைக் கண்டால் வணங்கும். எச்சிலைத்தின்னும். அடிக்கடி நாக்கை நீட்டிக் கொண்டிருக்கும்; கடிக்கும்.

### *மருந்து*

முதிர்ந்த வேப்பம்பட்டை பலம் 40 ஐ நறுக்கி, பாண்டத் திட்டு உப்புநீர் இட்டு மூழ்கும்படி செய்து அடுப்பேற்றி அரைப்

படியாய் இறுத்துக் கொண்டு சீயக்காய் 1 பலம் எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மேற்படி கஷாயம் கலந்து அக்குழம்பைத் துவாலை செய்து உதயத்தில் இருவேளை நீர் விட்டு நன்றாக முழுக்காட்டவும்.

பேரண்டப் பொடியை ஆமணக்கெண்ணையில் இட்டுக் குழப்பி மூன்று நாள் கொடுக்க எச்சில் கிரிகை போகும்.

### *4. வாத கிரிகையின் குணம்*

இதில் விழிகளை மூடிக்கொண்டு ஊமைபோல் இருக்கும். தப்பிக்கூட வாய் திறந்து பேசாது. எழும்; எழுந்து உடனே கீழே படுக்கும். சரீரம் முழுதும் நீர் போல வியர்வை கண்டு குளிர்ந்திருக்கும். பல்லைக் கடிக்கும். மண், குப்பை, சகதி எனப்பாராமல் படுக்கும். இருந்த இடம் விட்டு அடிக்கடி மாறி, மாறி நகர்ந்து உட்காரும். கண்களை மூடிக் கொள்ளும்.

### *மருந்து*

தாய்ப்பாலில் சம அளவு வேளைச்சாறு விட்டுக் குழப்பி வால்மிளகு பொடித்துப் போட்டு விழியில் தீட்டவும் (கலிக்கம்) காதுக்குள்ளும் இட்டு பஞ்சிட்டு அடைக்கவும். மூன்று நாழிகைக்குள் வாயைத்திறந்து அபயம் கேட்கும்.

வாயைத் திறந்தவுடன் வேப்பெண்ணெய் மாகாணிப்படியில் வெள்ளுள்ளி (பூண்டு) 3 எண்ணிக்கை சேர்த்துக்கருக்கி உள்ளுக்குக் கொடுத்தால் வாதத்தினால் உண்டாகின்ற மூன்று வகை கிரிகைகளும் ஆறு நாளில் தீரும்.

### 5. *சிலேத்பனக் கிரிகையின் குணம்*

கண் வெளுக்கும், கொட்டாவி உண்டாகும். கண்ணீர் வடியும். கையைத் தரையில் அடிக்கும்; வாய் புலம்பல் அதிகம் உண்டாகும். அங்கம் விரல்களினால் சேட்டை செய்யும். உறங்கியிருக்கும். மனிதரைக் கண்டால் மறையும். நெருங்கினால் பயப்படும். உடுத்திய ஆடையில் மூத்திரம் பெய்யும்..சரீரம் தடித்துக் காணும்.

#### *மருந்து*

கற்றாழைச் சாற்றில் ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் குழப்பி உவர்மண் கூட்டித் துவாலையிட்டு வெந்நீரில் மூழ்கச் செய்யவும். இலிங்கப் பொடியைத் தேனில் குழைத்து ஆறுநாள் கொடுக்கவும்.

### 6. *நாதவிந்து கிரிகையின் குணம்*

தெருவெல்லாம் ஓடும். பெண்களைக் கண்டால் கட்டும். ஆட்களைப் பிடிக்கும். மனிதர்களிடம் கோபம் கொள்ளும். முட்டிக்கொள்ளும். வெகுதூரம் ஓடும். முகத்தில் துப்பும். தனது பந்துக்களிடம் சிரிக்கும். அந்நியரிடம் விரோதிக்கும். எப்பொழுதும் துள்ளித்திரிந்து ஆடும். ஆடையை மேலும் கீழும் உடுத்தி அளவு பார்க்கும். அடிச்கடி எச்சில் துப்பும். அன்னம் அதிகமாகச் சாப்பிடும்.

#### *மருந்து*

முருங்கைப் பூவைப் பாண்டத்திலிட்டு, பழச்சாறு, வெற்றிலைச்சாறு, கடுக்காய்த்தூள், சேர்த்து அடுப்பேற்றி வேக வைத்து அதை இடித்து வாலையிலிட்டு தீநீர் எடுத்துக் கொடுத்தால் ஆறு நாளில் நீங்கும்.

### 9. மோகினிக் கிரிகையின் குணம்

வந்தவரை வையும், நாத விந்து பெருகும். பெண்களைக் கண்டால் சிரிக்கும். வாய்புலம்பும், அன்னம் அருந்தாது, அன்னத்தைக் கண்டாலும் எரிந்து விழும், வெற்றிலையை மிகப் பிரியமாகத் தின்னும், தன்னிடம் தானே பேசிக்கொள்ளும், சரீரம் வெளுத்துப் போயிருக்கும், மனிதரிடம் நெடுநாள் பழக்கம் போல் ரொம்பவும் இரக்கமாய்ப் பேசும். ஆடைகளைக் கிழிக்கும்.

#### மருந்து

கன்று ஈனாத எருமைச் சாணத்தில் நாயுருவி அரிசி கூட்டி அரைத்துக் குழப்பி துவாலை செய்தும் உள்ளுக்குக்காசெடை ஆறுநாள் கொடுத்து வெந்நீரில் மூழ்கச் செய்ய வேண்டும். பத்து நாட்களுக்கு இச்சா பத்தியம் இருக்க வேண்டும். இச்சா பத்தியம் காக்கா விட்டால் திரும்ப நோய் வரும். தீராது.

### 10. கல் எறிக் கிரிகையின் குணம்

வாய் புலம்பும்; கண்ணை மூடும், தானாகக் கல்லை எறிந்து அழும், நீரில் மூழ்கும். ஆடை போர்த்திக் கொள்ளாது. அடிக்கடி ஓடும். பொய்யே சொல்லும். சிசுக்களைக் கடிக்கும். அகப்பட்டவர் களைத் தழுவி முறையிடும். நிர்வாணமாயிருக்கும். வாயில் எச்சில் பெருகி வடிந்து கொண்டிருக்கும். கண்ணை உருட்டி முழிக்கும். கல்லெறியும். சிறு பிள்ளையைக் கண்டால் வாயைத் திறந்து கொண்டோடும்.

#### மருந்து

வேலிப் பருத்திச்சாறு, துளசி, முல்லைப்பூ, அகத்தி இலைகளின் சாறு, புளியந்தேன், கிராம்பு சேர்த்து 1/8 படி உள்ளுக்கு மூன்று நாள் கொள்ளவும்.

வெள்ளுள்ளி, இஞ்சிச்சாறு, இரண்டுங்கலந்து துவாலை செய்து நீரில் மூழ்கச் செய்ய வேண்டும். மூழ்கச் செய்ய கிரிகை நீங்கி காற்றுப் போலாகும். நல்லறிவும் புத்தியுமுண்டாகும்.

### *11. கும்பிடு கிரிகையின் குணம்*

மனிதர்களையும், சீவ சந்துக்களையும் கண்டவுடன் பணிந்து நிற்கும். அன்னம் அதிகமாகக் கொள்ளும்; ஏவப்பட்ட எத்தொழிலையும் விரைவாகச்செய்யும். பெண்களையும் குழந்தைகளையும் அடித்து உறுமும். தொட்ட தெல்லாம் எச்சில் என்று சொல்லும். நடக்கும் பொழுது கோணிக்கோணி நடக்கும் எப்பொழுதும் பல் தேய்த்துக் கொண்டிருக்கும். கண்ட பேர்களைக் கும்பிட்டு நிற்கும்.

### *மருந்து*

தலைப்பிள்ளைப் பேரண்டத்தை முத்தெண்ணெ யிலிட்டு துருசு சேர்த்துக் காய்ச்சிக் கருக்கிப் பொடித்து இஞ்சிச் சாற்றில் சுண்டையளவு 3 நாள் கொள்ள குணமாகும்.

பேய்ப்பீர்க்கு இலைச்சாறு, வெற்றிலைச்சாறு இவை யிரண்டையும் கூட்டி உச்சி முதல் பாதம் வரை துவாலையிட கிரிகை நீங்கும்.

### *12. முனங்கல் கிரிகையின் குணம்*

கைவிரலை மடக்கிக் கொள்ளும். விரித்திடாது. கண்டபடி வாயால் புலம்பும். நாழிகைக்கு ஒரு முறை அழுது கண்ணீர் விட்டு விம்மும். ஒரு இடத்தில் அரைக்கணமும் இருந்திடாது (தங்காது) தூங்காது. வீடுகளில் தீக் கொளுத்தும், சில நேரம் சிரிக்கும். முனங்கிக் கொண்டிருக்கும்.

சிவனார் வேம்பு மூலம், வெள்ளருகு, ஆமணக்கின் முத்து இவற்றைக் கழுதை நீரில் அரைத்து 3 நாள் கொடுத்து. கண் சிவக்கக் குளிர்ந்த நீரை வார்த்தால் தீரும்.

### 13. அனற்கிரிகையின் குணம்

கை கால்கள் அசையாதபடி கண்களை மூடிக்கொள்ளும். சத்தம்போட்டு ''வா'' ''போ'' என்னும். தன்னிச்சையாகக் கூப்பிட்டால் பலனாகும். தன்னைத் தானே கிள்ளிக் கொள்ளும்; உடுத்திய ஆடையை கிழித்துக் கொள்ளும். நாம் சொல்லுவதை யெல்லாம் திரும்பச் சொல்லும். ஆகாரம் அரிதாய்ச் சாப்பிடும். மஞ்சளைத் தின்னும்.

#### மருந்து

முருங்கை இலைச்சாறு, வீழிச்சாறு, கண்டங்கத்திரிச் சாறு, பூவரசு வித்துச்சாறு, இவைகளைக் கூட்டித் துவாலையிட்டால் ஒரு பொழுதில் தீரும்.

### 14. மருட்டுக் கிரிகையின் குணம்

விழிகளை மிரட்டிப் பார்க்கும்; மனிதர்களைக் கண்டால் வா வா என்று கை நீட்டிப் பாடும். பரிகாசங்கள் செய்யும். ஆடையை அவிழ்த்தெரிய நிர்வாணமாக இருக்கும். நீரைக் குடிக்கும்; அகப்பட்ட பேர்களை அடிக்கும். கண்டதெல்லாம் தின்னும். உடனே சிரிக்கும். அபயமிடும்.

#### மருந்து

கோரைக்கிழங்கு. பொற்கொன்றை வித்து, கரு ஊமத்தை வித்து இவற்றைச் சட்டியிலிட்டு ஆமணக்கெண்ணெய் மூழ்க வார்த்து அடுப்பேற்றி எரித்து, கருகி வரும் போது மத்தால் கடைந்து

இறக்கி ஆறவிட்டு மூன்று பங்காக்கி 3 நாள் உட்கொள்ளும்படிச் செய்து உச்சியிலும் இடவும்.

### *15. மூடு கிரிகையின் குணம்*

தேகம் சன்னி கண்டது போல சலம் ஊறிக் குளிர்ந்திருக்கும். மூச்சுவிடாமல் கிடந்த இடத்திலேயே கிடக்கும். கை கால்களை அசைத்திடாது. பேசமாட்டாது.

#### *மருந்து*

வேப்பெண்ணெய் 1படி சட்டியிலிட்டு சாரணை வேர், அமுக்கிராவேர். பூநீறு இவற்றைப் பொடித்துப் போட்டுக் கருக்க காய்ச்சித் துவாலை செய்து சீயக்காயை அரைத்துப் பூசி வெந்நீர் வார்க்கவும்.

கற்பூரத்தைப் பழத்தில் வைத்து உள்ளுக்குக் கொள்ள கிரிகை இரண்டு நாளில் தீரும்.

இச்சா பத்தியம் இருக்க வேண்டும். (போகம் நீக்க வேண்டும்)

### *16. வலிப்புக் கிரிகையின் குணம்*

வாய் புலம்பல், உடம்பு முழுதும் நடுக்குவலி, சத்தம் செய்து முழங்கும் போது தேகத்தில் நரம்பு படபடத்து சுருட்டிக் கொள்வதைக் காணலாம். தலையசைத்து ஆடும். எப்பொழுதும் அழுது கொண்டிருக்கும். விழி சிவந்திருக்கும். சொறிந்து கொண்டிருக்கும். வாயில் எச்சில் நீர் ஒழுகும்.

### மருந்து

கண்டங்கத்தரி மூலத்தைக் கண்டங்கண்டமாக வெட்டி பாண்டத்தின் உள்ளிட்டு ஊறவைத்து இதைக்கொண்டு 3நாள்தலை முழுகச் செய்யவேண்டும்.

பச்சை வெட்டு இலிங்கப் பொடி 1 கழஞ்சு எடுத்து, தேனில் கலந்து 3 பங்காக்கி 3 நாள் உண்ணச் செய்ய வேண்டும்.

## *17. நீர்குடிக் கிரிகையின் குணம்*

நீரை மிகக் குடிக்கும். வாயினால் குமு குமுவெனக் கக்கும். கண்குழி விழும். சோறு மிகுதியாக உண்ணாது. பாடி தலை சுற்றி ஆடும். தரையில் விரலைக் கொண்டு கீறி கோடுகள் போடும். சாப்பாட்டில் பிரியமிராது. தானே உருண்டு புறண்டு கொண்டிருக்கும்.

### மருந்து

கோழிமுட்டை-5 காக்கை மூட்டை-5 இவைகளை உடைத்துத் துவாலையிட்டு-3 நாள் தவறாமல் முத்தெண்ணெய் 1/8 படியில் மிளகு சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க கிரிகை தீரும். நல்ல புத்தி உண்டாகும்.

## *18. பேய்பிடிக் கிரிகையின் குணம்*

மயானத்தில் ஓடி அபயமிடும். அபயமிட்டு அடித்துக் கொண்டு பேய்களின் பெயர்கள் சொல்லி ஆடும். மயான சாம்பலில் சீலைகளைக் கிழித் தெறியும். மனிதர்களைக் குலைத்துக் கடித்து உதிரம் குடிக்கும். வாயில் வந்ததெல்லாம் சொல்லிக் கொண்டு ஓடும். சுடுகாட்டுச் சாம்பலில் புரளும். தானாக உட்கார்ந்து அழும்.

மருந்து

ஆடை யொட்டிச் சாம்பலைச் செம்மறி ஆட்டுப் பாலில் உள்ளுக்கு ஒரு நாளைக்கு ஒரு பொழுது கொடுத்துக் குளிர்ந்த நீரில் மூழகும்படிச் செய்யவும். கிரிகை, கோட்டி நீங்கும்.

## கிரிகை பதினெட்டுக்கும் சிகிச்சை விபரம்

### [துவாலை]

பருத்தியிலை, கருநொச்சியிலை, சிறுசுண்டையிலை, காட்டுமுல்லை, சமனெடையெடுத்து மோரிலரைத்து தேனில் குழப்பி சருவாங்கமும் துவாலை போடவும்.

### [புகை பிடிக்க]

குப்பைமேனியிலை, கிலுகிலுப்பையிலை, தும்பையிலை, சமன்கூட்டி சிரட்டை தணலிலே போட்டு வியர்வையோடும் மட்டும் புகைப்பிடிக்கவும்.

### [உள்ளுக்குக் கொடுக்க மருந்து]

மேற்படி மூன்று பச்சிலையையும், திப்பிலியையும் வகைக்கு ஒரு காசெடையாக சமன் கூட்டிப் பொடி செய்து தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும்.

### [நசியம்]

கருநொச்சியிலை, தும்பையிலை, வெள்ளைப்பூண்டு வகைக்கு ஒரு காசெடையை எடுத்து நல்லெண்ணெயிலரைத்துப் பொட்டணம் கட்டி வலது மூக்கில் நசியம் பண்ணவும்

## [கலிக்கம்]

வசம்பு, சந்தனம், மிளகு, மகிழம்பூ விதை, பூடு, மஞ்சள் வகைக்கு ஒரு காசெடை பசுவின் பாலிலரைத்து மிளகுப் பிரமாணம் குளிகை உருட்டி வெய்யிலில் உலர்த்தியபின் ஒரு குளிகை எடுத்து அமிர்தப் பாலிலுரைத்துக் கண்ணில் போடவும். 100 குடம் தண்ணீர் விடவும்.

## [மந்திரம்]

சத்தியவாயு வயிரவிநம: என்று உரு (51) செபித்து வெண்ணெய் வாழைப்பழம் இவைகளில் ஓதிக் கொடுத்து சாப்பிடச் சொல்லவும். விபூதியில் மந்திரித்து நெற்றியில் பூசவும்.

# இரண்டாவது முறை

## [உள்ளுக்கு மருந்து]

கடலாமணக்கு, கடுக்காய் இவை சமனெடுத்துச் சட்டியைக் காய வைத்து வறுத்துப் பொடித்து 1 கரண்டி சிற்றாமணக்கெண்ணெ யில் கலக்கிக் கொடுத்தால் பேதி காணும். 4 தடவை பேதிகண்டதின் மேல் கஞ்சி வைத்துக் கொடுக்கவும். பத்தியமில்லை.

## [துவாலை]

பாவையிலை, கையானிலை, ஆடாதோடையிலை, நொச்சி வேர், பாவட்டங்கொழுந்து சமனெடை கூட்டிப் பசுவின் பாலிலரைத்துச் சரு வாங்கமும் துவாலை போடவும்.

## [ஆவி பிடிக்க]

மயிலிறகு, கருங்கம்பளி, குப்பைமேனி, வெள்ளைப்பூடு, வெற்றிலை, கிடாய்க் கொம்பு, பச்சரிசித்தவிடு, சமனெடை கூட்டிப்

பானையில் போட்டுத் தண்ணீர் விட்டுக் கள்ளி விறகால் தீயெரித்து யிறக்கி வைத்து உடல் பொறுக்குமளவும் ஆவி பிடிக்கவும்.

### [நசியம்]

தும்பையிலைச்சாறு, இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சமன்கூட்டி ஒரு காசளவு நல்லெண்ணெயில் சேர்த்து வலது மூக்கில் நசியமிடவும்.

### [கலிக்கம்]

வெங்காயமும், சுக்கும் சமன் கூட்டி யரைத்துக் கண்ணில் கலிக்கம் போடவும். 100 குடம் தண்ணீர் விட்டுக் குளிப்பாட்டவும்.

### [மந்திரம்]

ஓம் காளி கொடுங்காளி மகாபயிரவி சோபிதகாளியே சுவாஹாவென்று உரு 51 வெண்ணெயில் செபித்துச் சாப்பிடக் கொடுக்கவும். திருநீற்றில் மந்திரித்து நெற்றியில் பூசவும்.

## மூன்றாவது முறை

### [மருந்து]

மஞ்சள், வெட்பாலையரிசி, கார்கோலரிசி, ஏலரிசி, வாய்விளங்கம், கொத்தமல்லி சமனெடை நல்லெண்ணெயில் வேகவைத்து மெழுகு பதத்திலெடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

### [துவாலை]

கூவைக்கிழங்குத் தண்டும் வேலிப்பருத்தி யிலையும் நிலவாகையிலையும் மஞ்சளும் சமனெடை எடுத்துத் தண்ணீரி லரைத்து உடம்பு எல்லாம் துவாலை போடவும்.

## [புகைபிடிக்க]

நாங்கூழ் பூச்சியும், மஞ்சளும் ரவியில் வைத்துப் பொடித்து நறுநெய்யில் குழைத்து, புளியம் விறகு நெருப்பில் போட்டு முகத்தில் பொறுக்குமளவு புகைப்பிடிக்கவும்.

## [நசியம்]

வெள்ளுள்ளிச்சாறும் புளியிலைச்சாறும் நாய்த்துளசிச் சாறும் சமனெடை கூட்டி வலது நாசியில் நசிய மிடவும்.

## [கலிக்கம்]

மிளகு, பூண்டு, முட்டை, குழியரனை சமனெடை கூட்டிப் பசுவின் பாலிலரைத்துக் கண்ணில் கலிக்கம் போடவும்.

## [மந்திரம்]

ஓம்காளி, பயிரவி, அட்டமாகாளி, சாமுண்டி, ரெத்த சாமுண்டி, சர்வலோகாயா சுவாஹாவென்று உரு (51) செபித்து விபூதி போடவும்.

## [18 கிரிகைக்ககும் சாந்தி மந்திரம்]

ஓம்காளி, சக்தி, சாமுண்டி, பத்திரகாளி, பத்திசண்டி சுவாஹாயென்று கிரிகைக்காரன் உச்சியை வகுந்து உரு 51 செபித்து ஐந்து வகைச்சோறு தூப தீபங் கொடுத்து சேவல் பலி கொடுத்து மேற்படியான் தலையைச் சுற்றி எறியவும் இப்படிச் செய்ய 18 விதமான கிரிகையுந்தீரும்.

## சமயோசிதம் போல் செய்து கொள்ளும் பொதுசிகிச்சைகள் [துவாலை]

கேசரிப்பால், வேலிப்பருத்திச்சாறு, கும்மட்டி யிலைச்சாறு, ஆடாதோடையிலைச்சாறு வகைக்கு அரைக்கால் படி பிழிந்து உச்சிமுதல் பாதம் மட்டும் துவாலை போடவும்.

### [துவாலை]

சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, தேவதாரம், சந்தனம், மஞ்சிட்டி அதிமதுரம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், இலவம் பட்டை, விஷ்ணுகிராந்தி, வெள்ளறுகுவேர், வசம்பு சமனெடை பசுவின் பாலிலரைத்துச் சர்வாங்கமும் துவாலை போடவும்.

### [மருந்து]

வசம்பு, பெருங்காயம், மிளகு சமன்கூட்டிப் பொடி செய்து கால் படி பசுவின் தயிரில் கலக்கிக் கொடுக்கவும்.

### [மருந்து]

கேசரிப்பால், எலுமிச்சம் பழச்சாறு, சீந்திற் கொடிச்சாறு, இம்மூன்றும் வகைக்கு அரைக்கால் படி எடுத்து அரைக்கால் வராகனெடை கோரோசனை சேர்த்துக் குழப்பி உள்ளுக்குக் கொடுத்து சருவாங்கமும் துவாலை போடவும், 18 கிரிகையும் தீரும்.

### [18 கிரிகைக்கும் மருந்து]

சவுக்காரம், வெடியுப்பு, நவச்சாரம், இரசம், சீந்தில் தண்டு, ஆடாதோடை வேர், மண்டை ஓடு, அதிமதுரம், கிராம்பு வகைக்கு

1 வராகனெடை இரவியில் உலர்த்திப்பொடி செய்து கும்மட்டிப் பழம் விதைபோக்கி மேற்படி பொடியை உள்ளே செலுத்தி ரவியில் வைக்க உருகிக் களிம்பாயிருக்கும் பதத்தில் எடுத்துக் குச்சியால் கிண்டிக் கிண்டிவிட்டுச் சுக்காய்க் காய்ந்த பின் கல்வத்தில் சகலமும் போட்டுப் பொடித்து கேசரிப்பால் தண்ணீர் படாமல் எடுத்து மேற்படி சூரணம் நெல்லிக்காயளவு பாலில் கலக்கிக் காலையில் கொடுக்கவும்.

## [உள்ளுக்கு மருந்து]

நாங்கூழ்ப் பூச்சி, நற்சீரகம் இரண்டையும் எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்துக் கலக்கி ஏழுநாள் கொடுக்க சர்வமும் தீரும்.

## [மந்திரம்]

ஓம் பத்திரகாளி சருவவினாயகமுனி சுவாஹா என்று உரு 51 செபித்து பழம், வெண்ணெயில் ஓதிச் சாப்பிடக் கொடுக்கவும்.

## [கலிக்கம்]

மகிழங்கொட்டைப்பருப்பு, பூடு, புளிச்சிச் செடிச்சாறு மூன்றும் சேர்த்தரைத்துக் கண்ணில் கலிக்கமிடவும்.

## [நசியம்]

மலை நாரத்தைச் சாறும் மகிழங்கொட்டையும் மிளகும் தேனும் சமனெடை கூட்டி அரைத்து வலது நாசியில் நசியமிடவும்.

## [புகைப்பிடிக்க]

அண்ட.ஓடு, நாய்க்கட்டம், வெள்ளுள்ளித்தோடு, ஆதளை வேர்,துளசி, தேவதாரம், இவைகளை எல்லாம் இடித்துப்பொடி செய்து நெருப்பில் போட்டுப் புகைப்பிடிக்க 18 கிரிகையும் தீரும்.

## [18 கிரிகைக்கும் குழம்பு]

சிறுகீரை வேர், கரிப்பான் சமூலம், அமுக்குரா வேர், சிறுபுள்ளடிவேர், நன்னாரி வேர், வில்வவேர், கண்டங்கத்திரி வேர், மேற்படி கற்கம் பிரமி,முசுமுசுக்கை, விஷ்ணு கிராந்தி, ஆவாரங் கொழுந்து, அத்திப்பட்டை, இத்திப்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், இவை வகை பத்தும் பச்சைமஞ்சளும் இடித்து ஒரு பானையிற் போட்டுப் பன்னிரெண்டு படி தண்ணீர் விட்டு எரித்து நாலுபடியாக வற்றியபின் இறுத்துக் கொண்டு அதில் கால் படி பூ நாகம் போட்டுக் காய்ச்சி இரண்டு படியாக வற்றவைத்து மேற்படி பூநாகத்தை எடுத்துவிட்டு கடுக் காய், சுக்கு, திப்பிலி, தான்றிக்காய், மிளகு, மஞ்சள், நெல்லிப் பருப்பு, சீரகம், வாய்விளங்கம், கார்கோலரிசி, சதகுப்பை, வசம்பு ஆக 12ம் வகைக்கு 2 வராகனெடை இடித்துச் சூரணித்து வஸ்திர காயஞ் செய்து மேற்படி கியாழத்தில் போட்டுக் குழம்பாகக் காய்ச்சித் தலையில் தேய்த்து உள்ளுக்கு ஒரு கரண்டி வீதம் காலை மாலை 3 நாள் கொடுக்கவும். குளத்துக்கரையில் வைத்துக்கொண்டு தாரை முறியாமல் 100 குடம்தண்ணீர் தலையில் விடவும். முழுகியவுடன் எருமைச் சாணியை உலர்த்திக் கள்ளி விறகின் நெருப்பில் போட்டுப் புகை பிடிக்கவும்.

## கிரிகைக்கு முழுக்குத் தைலம்

1. வில்வாதித்தைலம் : குணபாடம் மூலிகை வகுப்பில் காண்க.

2. இலகு சந்தனாதித்தைலம் : தைலவருக்கச் சுருக்கத்தில் காண்க.

3. அரைக்கீரை விதைத்தைலம் : குணபாடம் மூலிகை வகுப்பில் காண்க.

4. சிறு சந்தனாதித்தைலம் : தைலவருக்கச் சுறுக்கத்தினால் காண்க.

தலைக்குத் தப்பளம்-வல்லாரை, முசுமுசுக்கை இவைகளின் கற்கம் பயன்படும்.

கண்மை-நீரடி முத்து பருப்பு, அகத்திகட்டைக்கரி இவற்றைத் தேனில் இழைத்துத் தீட்டவும்.

***முக்கிய கவனிப்பு :***

வாதத்தால் வரும் கிரிகை 6, பித்தத்தால் வரும் கிரிகை 6, சிலேத்பனத்தால் வரும் கிரிகை 6 ஆக 18 கிரிகைகளானதால் சிகிச்சை செய்யுமுன்வாத பித்த சிலேத்துமம் இம்மூன்றில் எவ்வகையிலிருந்து ஏற்பட்ட கிரிகை என்பது தெரிந்து கொண்டு மேற்கண்ட மருந்துகளைச் சரீரத்திற்குத் தக்கவாறு உபயோகிக் கவும்.

# *பிரமை*

பிரமை என்று சொல்லப்படும் பைத்தியம் மூன்று வகையாம்.

1. வாத பிரமை 2. பித்த பிரமை 3. கப பிரமை இவை முறையே சாத்தியம், அசாத்தியம், மரணம் என்றும், உத்தமம், மத்திமம், அதமம் என்றும் வழங்கப்படும்.

### *வாத பிரமை*

வாதம் மிகுந்து மிகு சுரமும், உஷ்ண வாயுவும் சேர்ந்து துன்பத்தைக்கொடுக்கும், வாதபிரமை சாத்தியப்படும். இதில் மிகுந்த பயம் காட்டாது. பசியின்மை, அதிக தூக்கம் எங்கும் அலைகின்ற புத்தி, அசதி, தோரணையுடன் அதிக வார்த்தையாட வாயை எடுக்காமை, ஆயாச மின்மை, மெலிவின்மை, நடத்தை யின்மை, சிற்றுண்டியில் அதிக விருப்பமின்மை, உடல் பருத்து கருநிறமாதல், ஒலிகேட்க ஒட்டாமல் காதடைப்பு ஆகிய குறிகுணங்கள் காட்டும்.

### *[மருந்து ]*

இலவங்க ரசம், இஞ்சிச்சாறு, தேன் வகைக்கு காற்பலம் கூட்டி கெந்தக பற்பத்தை அனுபானித்துக் கொடுக்க வேண்டும். அந்த மருந்தையும் அனுபானத்தையும் சிரசில் முன் நெற்றிக்கு மேற் புறமாக தடவி வைத்து அனல் காட்டி வரலாம். இவ்விதம் ஒன்பது நாள் செய்து இச்சாபத்தியம் வைத்து சீக்கிரான் (உசிலம்) இலையை அரைப்பாக அரைத்து வெந்நீரில் முழுக்காட்டுவிக்க வேண்டும்.

(குணபாடம் - பகுதி 2. பக்கம் 168)

***பித்தப்பிரமை :***

விடங்களினால் உடல் எப்படி துன்பப்படுமோ அவ்வாறான துன்பம் உண்டாகும். பித்த வாந்தியில் பசுமை, வெண்மை, செம்மை, பொன்மை நிறம் கலந்து காணல், அதி ஏப்பம், விக்கல், அதிக பசி, எவ்வளவு புசித்துக் குடித்தாலும் பசி, தாகம் அடங் காமை, அதிக கோபம், ஆதிக்கம் பண்ணல் முரணான சொற்களைக் கூறல், அலட்சியத்துடன் கூடிய கோபம், முகம், கண், வாய், உடல் முழுதும் இளம் சூரியனைப்போல் சிவந்த வண்ணமாய் இருத்தல், அதிக வேறுபாடான கொடுமையான பார்வை, விடாமல் பேசுதல், பேய்போல திரிந்து கொண்டிருக்கும் நடை, வாய் நீர் பெருகல், சில வேளை வாய் வறட்சி போன்ற பல அசாத்திய குறி குணங் களைக்காட்டும். எனினும் பிரயாசைப்பட்டு மருத்துவம் செய்யத் தீரலாம்.

***மருத்துவம் :***

துளசிச்சாறு, சீரகம், பனங்கள் மூன்றையும் முன்போலவே கூட்டி அதில் கெந்தக பற்பத்தை அனுபானித்து பதினெட்டுநாள் ஆட்சி செய்து, உச்சந்தலையிலும் பூசிக்கொண்டு வரவேண்டும். இச்சா பத்தியம் காத்து முடிவில் பயற்றை அரைத்துத் தேய்த்து, தலைமுழுகி பத்திய உணவாக பயற்றைக் கறியாக புசிக்கவும்.

(மேற்கோள் - குணப்பாடம் 2-178)

***கப பிரமை :***

உடல் கருத்தல், வாய், நாக்கு, பல் இவைகளில் ஈரமில் லாமை, பசிதாகமின்மை, குறி உள்ளே இழுத்துக் கொள்ளல், ஆகிய துர்க்குணங்களை உண்டுபண்ணி மரணத்தை விளைவிக்கும்

*மருத்துவம் :*

பேரரத்தைச்சாறு, திப்பிலிச்சாறு, காய்ச்சின சாராயம் மூன்றையும் முன்போலவே கூட்டி, அதில் கெந்தக பற்பத்தை அனுபானித்து இருபத்தேழு நாள் ஆட்சி செய்து, உடல் முழுதும் பூசிக்கொண்டு வரவேண்டும். இலுப்பைப் புண்ணாக்கினால் இறுதியில் தேய்த்து மூழ்கச் செய்ய வேண்டும். பால், சர்க்கரை, நெய், மிளகாய், கள், பெண் இவற்றை நீக்கி கடும் பத்தியத்துடன் மருந்தை உண்ண வேண்டும்.

## உன்மாதம்

உயிர் தாதுக்களாகிய வளி, அழல், ஐயம் மூன்றும் அதனதன் வழி தப்பி நடக்கும் போது உள்ளத்தில் ஒருவிதமதம் பிடித்து மனக்கோளாறு உண்டாவதால் உன்மாதம் என்ற உளநோய் பிறக்கிறது. இது உளப்பிறழ்வு, அறிவழிவு, பலவாறாகப் பேசல், ஆடல் பாடல், அடாது செய்தல், அடித்தல் முதலிய இயற்கைக்கு மாறான செய்கைகளைக் கொண்டிருக்கும்.

*வளி உன்மாதம் :*

கைகளைச் சேர்த்துத் தட்டுதல், நகைத்தல், ஆடல், ஒருவனைப் பிடிக்க எழுதல் ஆகிய குணங்களைக் காட்டும்.

*அழல் உன்மாதம் :*

பிறரைப் பயமுறுத்தல், எழுந்து ஓடல், குளிர்ச்சியான பொருட்களில் விருப்பம் எனும் குணங்களுடையது.

*ஐய உன்மாதம் :*

தூக்கமின்மை, பிறரைப் பயமுறுத்தல், பெண்களிடம் மிகமிக விருப்பம், எல்லாப் பொருட்களும் தனக்கு வேண்டுமெனக் கேட்டல் ஆகிய குணங்களை உடையது.

*முக்குற்ற உன் மாதம் :*

வளி, அழல், ஐயமாகிய மூன்று உன் மாதங்களிலுமுள்ள குணங்கள் பல சேர்ந்து காணப்படும்.

*வியாகூல உன் மாதம் :*

மனைவி மக்கள் செல்வம் போன்றவற்றின் இழப்பால் ஏற்படுகிறது. சோகம், துணிவின்மை உடல் வெளிறல் ஏதின்றி கண்ணீர் விடல், தானே ஆச்சரியப்படல், தூக்கமின்மை ஆகிய குணங்கள் இதில் காணும்.

*நஞ்சு உன் மாதம் :*

மூளையைக் கெடுக்கும் நச்சுப் பொருட்களாலும் இடு மருந்துகளாலும் உண்டாகிறது. பொறி, புலன், சோர்வு, உடல் கருத்தல், பலம் குன்றல், திகைத்தல் ஆகிய குணங்கள் இதில் காணும்.

உன்மாத நோயில் கண் பிதுங்கல், வாயில் உமிழ் நீர் விழுதல், விரைந்து நடத்தல் அல்லது ஓடல், கை கால்கள் நடுக்கல் ஆகிய குறிகுணம் காணின் தீருவது கடினம்.

உன் மாத நோயில் அழல் குற்றம் கேடுற்று மிகுந்து உடற்கட்டுகள் தளர்ந்து மெலிவடையும். இதனால் உளப்பிறழ்வு ஏற்பட்டு இந்நோய் வலுவடையும்.

யோக நிலையில் தவறு ஏற்படினும் உன்மாதம் உண்டாகும் எனவும் கூறுவர். சில உன்மாதப் பிணிகள் பெற்றோர் வழி முறையில் தொடர்ந்தும் காணுகின்றன.

*மருத்துவம் :*

உள் மருந்துகள் இதில் தன்னிலை கெட்ட குற்றங்களை தன்னிலைப் படுத்தி உளப்பிறழ்வைச் சீராக்க வேண்டும் தலை முழுகச் செய்தல் நன்று.

முலைப்பாலை நாளொன்றுக்கு இருவேளை வீதம் ஐந்து முதல் ஏழு நாட்கள் வரை கொடுக்கலாம்.

செங்கரும்பின் சாற்றையும் இவ்வாறே வழங்கலாம்.

முந்திரிப்பழம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், தண்ணீர் விட்டான் கிழங்கு, சந்தனம் ஆகிய சரக்குகளை கியாழமிட்டு வழங்கி வரலாம்.

வெண்பூசனி நெய்யில் சீனாக்கற்கண்டு பொடி கூட்டி கொடுக்கலாம். இதனுடன் அப்பிரக பற்பம் கூட்டியும் தரலாம். இவை தவிர பேரண்ட பற்பம், எஃகு செந்தூரம், காந்தச் செந்தூரம், வல்லாரை நெய் இவைகளும் இந்நோயில் பயன்படும்.

*வெளி மருந்துகள் :*

வல்லாரை, அகத்திக்கீரை, வெட்டிவேர் இவற்றில் செய்த தைலம் தேய்த்து, குளிர்ந்த நீரில் மூழ்கச் செய்யலாம்.

பழச்சாற்றைத் தலையில் தேய்த்தும் குளிப்பாட்டலாம். முசுறு முட்டைப்பாலால் செய்கின்ற நசியம் இந்நோயில் பலன் தரும்.

இம்மருந்துகளின்றி உளநேர்மைப் படுத்துவதற்காக உள மருத்துவம் செய்வது நன்மையாகும். இதன் பொருட்டே நம் முன்னோர் இப்பிணியாளர்களை கோவில்கட்கு கொண்டு செல்வதும் அங்குள்ள தீர்த்தங்களில் முழுக்காட்டுவதுமான செய்கைகளைச் செய்தனர்.

## மத அழிவு [மதாத்தியம்]

விந்துநாதம், காமநீர், கொழுப்பு ஆகிய உடல் தாதுக்களை (மதங்களை) கெடுத்து அழிக்கும் நோய் மத அழிவு மதக்கேடு, மதாத்தியம் என்று சொல்லப்படும். இது வலி, அழல், ஐய, முக்குற்ற மத அழிவு என நான்கு வகையும் இவற்றுடன் வேறாக மத அழிவால் பிறக்கும் உடற்கேடு (தும்மிசகம்), வன்மைக்கேடு (விச்சயம்) எனுமிரு நோய்களையும் சேர்த்து ஆறாகக் கூறுவர்.

### முற்குறிகள்:

மத அழிவு நோயில் சோர்வு, மலநீர் நழுகல் கடுமையான நாவறட்சி, வெப்பசுரம், குளிர்சுரம், உணவில் வெறுப்பு, மார்பு, உச்சி, தோள், விலா, இனவுறுப்புகள் ஆகிய இடங்களில் அதிக நோவு, நடுக்கல், மார்படைப்பு, கண்களில் இருட்கம்மல், இருமல், இரைப்பு, தூக்கக்கேடு, வியர்வை, சில வேளைகளில் மலக்கட்டு, வீக்கம் முதலிய குறிகுணங்களுண்டாகி சித்தப்பிரமை (அறிவுக்கேடு) பிரலாபம், வாந்தி, மார்பில் சங்கடம், மயக்கம், கெட்ட கனவு ஆகியவை உண்டாகும்.

### வளி மத அழிவு:

(வாத மதாத்தியம்) தூக்கக் கெடுதி, இரைப்பு, நடுக்கல், தலைநோவு, கெட்ட கனவு கண்டு பிரமித்தல், திடீரென்று உடல் குலுங்குதல், பேய்களோடும் இறந்தவர்களோடும் தான் பேசுவது போலப்பேசல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

### அழல் மத அழிவு:

(பித்த மதாத்தியம்) : உடல் பச்சிலைகளின் சாற்றின் வண்ணமாகவும், மஞ்சளாகவும் தோன்றல், கன்னமும் கண்ணும்

சிவப்பாக இருத்தல், கண் எரிவு, சுரம், வியர்வை, சோர்வு, பேதி, தாகம், பிரமை எனும் குறிகுணங்கள் உண்டாகும்.

### *ஐய மத அழிவு :*

(கப மதாத்தியம்) வாந்தி, மார்பு அதிரல், அதிக உறக்கம், உடல் தடிப்புகளுடன் வீங்கல் முதலிய குணங்கள் காட்டும்.

### *முக்குற்ற மத அழிவு :*

(திரி தோட மதாத்தியம்) இதில் வாத முதலான மூன்று மத அழிவுகளினதும் குறிகள் பல கலந்து காணும்.

## *உடற்கேடு [தும்மிசகம்] வன்மைக்கேடு விச்சயம்]*

மேற்கண்ட இரு நோய்களும் முன்னைய மதக்கேட்டு நோயினாற் பிறப்பதுமன்றி வழக்கமாக உண்ணும் உணவுகளை விட்டு சாராயம் போன்ற போதைப் பொருட்களையும் இறைச்சிகளையும் அதிகம் உண்ணுகிறவர்களுக்கும் உண்டாகிறது. மத அழிவு நோயில் காணும் முற்குறிகளே இவற்றிலும் காணப்படுகின்றன.

### *உடற்கேடு :*

வாயினால் கோழை கக்கல், நெஞ்சு உலர்தல், அதிக துக்கம், சோம்பல் முதலிய குறிகுணங்களையுடையது. இந்நோய் உடலை விரைவில் அழியச் செய்வதால் இப்பெயர் பெற்றது.

### *வன்மைக்கேடு :*

உடல், உச்சி, மார்பு ஆகிய இடங்களில் அதிக நோவு, கண்டத்தை இறுக்கிப் பிடித்தது போலிருத்தல், சோர்வு, இருமல், தாகம், வாந்தி, சுரம் முதலிய குறிகுணங்களையுடையது. இந்நோய்

பலத்தையும் உடலையும் ஒடுக்கிக் குறைப்பதால் இப்பெயர் பெற்றது.

***தீராக்குறி :***

மத அழிவு நோய்களில் அதிக சீதளமுண்டாகி மிகுந்த வருத்தம் கொடுத்து, உடல் மிகக் கேடுற்று. முகத்தில் எண்ணெய் தடவினது போலக் குறிகண்டால் தீரா. இவ்வாறாயின் அது கடினமான நோயாகி சாவை உண்டாக்கும்.

***மருத்துவம் :***

உடலின் தாதுக்களையும் வன்மைகளையும் பெருக்கக்கூடிய உள் மருந்துகளைக் கொடுக்க வேண்டும். பூரணச் சந்திரோதயம் திரிகடுகாதி மண்டூரம், அயம், எஃகு, காந்தம், வெள்ளி, பொன் முதலியவற்றாலான பிற மருந்துகள், முத்து பற்பம், பவழபற்பம், அமுக்கராக்கிழங்காலான மருந்துகள். முதலியவை நன்றாம். அறிவுக்கேடு இடுப்பின் நரம்பையும் மூளையையும் வன்மையாக்கும் மருந்துகளையும், உளப்பிறழ்வு இருப்பின் பைத்தியத்திற்கான துவாலை போன்ற மருந்துவங்களையும் செய்யவேண்டும்.

## ***மதநோய்***

மதம் அல்லது செருக்கை உண்டாக்குவது மத நோய். இந்நோய் மனிதர்களுக்கு மட்டுமன்றி யானை, குதிரை, போன்ற விலங்குகட்கும் உண்டாவதுண்டு. மதநோய் வளி, அழல், ஐய முக்குற்ற மதநோய் என நான்கும், குருதி மதம், நச்சு மதம் என இரண்டும் மதப்பெருக்காலுண்டாகும். உடற்கேடு (மத்திய பானமதம்) என ஒன்றுமாக ஏழுவகையாகும். மத அழிவில் உடலில் தாதுக்கள் குறைவதால் நோய் உண்டாகிறது. மதநோயில் அவை

பெருகி மிகுவதால் நோய் உண்டாகிறது. மதநோயை செருக்கு மதப்பெருக்கு என்றும் வழங்கலாம்.

### முற்குறி :

மதப்பெருக்கால் செருக்கு ஏற்பட்டு தான் மிக வன்மையுடையவன் எனும் ஆங்காரம் ஏற்பட்டு கண்டவாறு பேசல், சினத்தல், காரணமின்றிக் களிப்படைதல், அறிவு குன்றல், வனமை கெடல், உடல் இளைத்தல், வாய் சுவை அறியாமை, நீர் வேட்கை, மார்பு துடித்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

### வளி மதம் :

குரல் கம்மல், இடைவிடாது பேசல், கெட்ட நடத்தை, உடல் கருமை அல்லது செம்மையாதல் எனும் குறிகுணங்கள் காணும்.

### அழல் மதம் :

கோபம், கலகம் செய்வதில் விருப்பம், உடல் மஞ்சள் அல்லது சிவப்பு நிறமாதல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

### ஐய மதம் :

சோம்பி இருத்தல், முரண்பாடான சொற்களை வேகமாக பேசல், உடல் வெளுப்பு ஆகிய குறி குணங்கள் காணும்.

### முக்குற்ற மதம் :

வளி முதலான மூன்று மதங்களினதும் குறிகுணங்கள் கலப்புற்றுக்காணும்.

### குருதி மதம் :

உடலும் கண்ணும் மரத்தலுடன் அழல் மதத்தில் காணும் குறிகுணங்கள் காணப்படும்.

***நச்சுமதம் :***

நடுக்கல், அதிக தூக்கம் எனும் குறிகுணங்களுடன் ஏனைய மதங்களிற்காணும் குறிகுணங்களும் தீவிரமாகக் காணப்படும்.

***மத உடற்கேடு :***

உடலில் பலவித கெடுதி, முகம் ஒளியிழத்தல், குரல் கெடுதல்,பிறரிடத்தில் விருப்பமின்மை எனும் குறிகுணங்கள் காணப்படும்.

மதப்பெருக்கு நோய்களில் மேற்கண்ட குறிகுணங்களோடு பெரும்பாலும் குருதி, அழல், (இரத்த பித்த) நோய்களின் குணங்களும் சேர்ந்திருக்கும்.

***மருத்துவம் :***

மதப்பெருக்கு நோயில் கழிச்சலுண்டாக்கி மருந்துகளைக் கொடுத்து மலத்தைப் போக்கி உடலின் கழிவுப் பொருட்களை வெளியேற்ற வேண்டும். பிறகு அழலைக் குறைக்கும் குளிர்ந்த தன்மையுள்ளதும் தூக்க முண்டாக்குவதுமான மருந்துகள் தரலாம்.

கார்ப்பாசம் (பருத்தி விதை) சூரணம், வில்வாதி இளகம், விலாமிச்சு, சந்தனம் முதலியவற்றாலான தைலம் ஆகியவைகள் உதவும். அறிவுக்கேடு மிகுந்திருந்தால் நரம்பையும் மூளையையும் சாந்தப்படுத்தும் அழலாற்றிகளைத் தரலாம். உளப்பிறழ்வு காணின் பைத்தியத்திற்கான மருந்துவ முறைகளைக் கையாளலாம்.

## ***வலிப்பு***

வலிப்பு நோயில் அறிவுகுன்றி பிறழ்நிலையடைந்து தன்னை அறியாமலே கையும் காலும் விதிர்த்து வலித்து இழுத்தல், வாயில்

நுரை தள்ளல்,வாய் கோணிக் கொள்ளுதல், கண் செருகுதல் ஆகிய இயல்புகள் காணும். இதை இசிவு, இழுப்பு, இசிப்பு, வலி என்று பல பெயர்களால் அழைப்பர். உடல், உள நிலைகளின் பிறழ்வால் வலிப்பு நோய் உண்டாகிறது. இது மூர்ச்சை நோய் போன்றது.

வலிப்பு நோயில் கபம் உடலெங்கும் சிறப்பாக மார்பிலும் மூச்சுக் குழலிலும் சேர்வதால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களும் கெட்டு ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பிறழ்நிலையடைந்து அறிவு கெடுகிறது.

***நோய் வரும் வழி :***

மேகச்சூடு, அதிக தொலைவு நடத்தல், கோபம், கெட்ட நடத்தை, அதிகமாக பாலின்பம் துய்த்தல், கால இயல்புக்கு மாறுதலாக நடத்தல், குளிர்ந்த தன்மையுள்ள பண்டங்களை உண்ணல் முதலான பல காரணங்களினால் இந்நோய் பிறக்கிறது.

***நோய் எண் :***

வலிப்பு நோய்களுள் அமரகண்டவலி, குமரகண்டவலி, பிரம கண்டவலி, காக்கைவலி, முயல்வலி, என ஐவகையே முக்கியமாக கூறப்படுகிறது. இவையன்றி திமிர்வலி, கோணுவலி, சண்டாள வலி, மரணவலி, மனோவலி, நஞ்சுவலி, சன்னிவலி, கபவலி, தனுர்வலி, சுரவலி, விக்கல்வலி, தலைவலி, கோழைவலி, ஓடுவலி, மார்புவலி, தமரக வலி என்பவைகளும் சேர்ந்து இருபத்தொரு வலிப்பு நோய்கள் உண்டு.

குழந்தைகட்கு மாந்தவலி, காக்கைவலி, அள்ளுவலி, புறஇசிவு எனும் நான்கு வலிகள் ஏற்படும். மாந்தவலி

பதினென்வகையாகும். இவையன்றி வேறு பல வலிப்புகளும் பால வாகடத்தில் கூறப்பெற்றுள்ளன. அவற்றை அந்நூலில் கற்றுணர்க.

### *முற்குறிகள் :*

வலிப்பு தோன்றுமுன் தலை சுற்றல், கைகால் தளர்வு, மயக்கம், விரல் நுனி திமிரடைதல் அல்லது துடித்தல், அறிவுக்கேடு, கண்ணிருளல், அசைவற்று இருத்தல், இமை துடித்தல், பேச்சின்மை, உடல் நோதல், நீர் வேட்கை, வியர்த்தல், வாய்நீர் வடிதல், தூக்கமின்மை ஆகிய முற்குறிகள் கண்டு வலிப்பு தோன்றும்.

### *அமரகண்ட வலிப்பு :*

உடலில் நோயுண்டாகி மூர்ச்சை காணல், உடலுறுப்புகள் அசைவற்றுக்கிடத்தல், குடைச்சல், பல் இளித்தல், கழுத்திலும் தலையிலும் வியர்த்தல், நெஞ்சு, தோல், முதுகு ஆகிய இடங்களில் குருதியினால் உண்டாகும் வருத்தங்கள், ஆகிய காணும் இதை குதிரை வலிப்பு என்றும் சொல்வர்.

### *குமரகண்ட வலிப்பு :*

வளிஐயக்குற்றத்தால் பிறந்து முன் கழுத்தையும் முகத்தையும் முறுக்கி தோள்பக்கம் கொண்டு போதல், தாடை, உதடு, செவி இவை கோணுதல், இவைகளில் அதிக வருத்தம், முக்குற்றக்குறிகுணங்கள் ஆகிய உண்டாகும். பெண்களுக்கு இவை கண்டால் கர்ப்ப வாயுவைப்போல வயிற்றில் குருதியை பிதுங்க வொட்டாமல் கட்டிக் கொண்டு கருப்பாசாயத்தில் அடங்கி இருந்து சன்னிபாதம் போலக் காணும், இதை முக்குற்ற வலிப்பு என்பர்.

*பிரமகண்ட வலி :*

உற்காய அதகாயங்கள் நீட்டியபடியே இருந்து துடித்தல், ஆகாயத்தை இமை கொட்டாமல் பார்த்தல், உடலில் அதிக துன்பம் ஆகிய குணங்களைக்காட்டும். இது ஐயக்குற்றத்தால் பிறக்கும். இதனை குரங்குவலி என்றும் சொல்வர். இது தீருவது கடினம்.

***காக்கை வலி :***

கண்களை மலர மலர விழித்தல், அவ்வேளை மலசலம் நழுவல், இருகால்களும் விறைப்படைதல், தொண்டையும், நாவும் உலரல், ஐயத்தினால் வாயினின்று கோழை விழுதல் ஆகியன காணும். இது வளி ஐயத்தால் உண்டாகிறது.

*முயல்வலி :*

உடலில் வாயு நிறைந்த காலத்தில், வயிற்றில் நோவு, வாயில் நுரைதள்ளல், கை கால்கள் இவைகள் விறைப்படைதல், ஆகியன காணும். இப்பிணி நீரைக் கண்டாலும், நீரைத் தலையில் தெளித்தாலும் அல்லது நெருப்பைக் கண்டாலும், நெருப்புச்சுடுகை பட்டாலும் ஆட்களின் கூட்டத்தைக் கண்டாலும் அடிக்கடி உண்டாகும். இது வாயுவினால் பிறக்கும்.

***இவை ஐந்தன்றி வேறு சில முக்கிய வலிப்புகள் :***

மனோவலி : வியாகூலத்தால் உண்டாவது.

நஞ்சுவலி : நச்சுப்பொருட்களை உட்கொண்டதால் வரும்.

வில்வலி : வில்போன்று உடலை வளைக்கும்.

சுரவலி : சுரத்தில் உண்டாகும்:

தமரக வலி : நெஞ்சில் கோழைகட்டி, வாயு மிஞ்சி வரும். நரம்புகளில் கபம் தங்கும்.

*பொதுக் குறிகுணம் :*

வலிப்பு நோய் பெரும்பாலும் குழந்தைப் பருவத்தே தொடங்கி சில வேளை நாற்பது வயது வரை நீடித்துக் காணுகிறது. சிலருக்கு திடீரென்று வலிப்பு நோய் உண்டாகும். வேறு சிலரில் வலிப்பு வருமுன் சினம்,மயக்கம் சோர்வு, வெருட்சி முதலிய குறிகள் ஏற்பட்டு நோயாளிக்கு வலிப்பு வருவதற்கான முன் உணர்வு ஏற்படும். இவற்றோடு தும்மல், கொட்டாவி, பேசிகள் துடிப்பு, மயக்கம், அறிவுக்கேடு முதலியனவும் காணலாம். சிறுநீர் தடையும் காணப்படும். வலிப்பு சில மணித்துளி நேரம் இருந்து மூர்ச்சையுண்டாகலாம் அல்லது தெளியலாம். ஒரு நாளில் பல முறை வருவதும் நாட்கணக்கின்றி எப்போதாவது வலிப்பு ஏற்படுவதும் உண்டு. வலிப்பு நோய், நெருப்பு, நீர் முதலானவற்றின் அருகாமையில் இருக்கும் போது ஏற்படின் உயிருக்கு கேடு விளைவிக்கும். அநேகமாக மூச்சடைப்பு, கண் சொருகல், வாயில் நுரைதள்ளல் சில வேளை இதில் குருதி காணல் ஆகியவும் காணும். சிலருக்கு வலிப்பின் போது மலம் நீர் தன்னை அறியாமலேயே கழியும். சிலர் பற்களைக் கடிப்பார். இவ்வாறு கடிக்கையில நாவும் கடிபடக்கூடும். வலியின் கொடுமையால் உடல் கருக்கும்.

வலிப்பு நின்று மூர்ச்சை தெளிந்த பின் சோர்வு, தலைவலி, அசதி இவையும் தூக்கமும் உண்டாகும். விழுவதினால் அடிபடல், என்பு முறிதல், குருதி, வாந்தி ஆகியவும் ஏற்படலாம். சிலருக்கு சுரமுண்டாகி வலிப்பு காணலாம்.

வலிப்பு நோய் கண்டபின் பக்கவாதம், பார்வைக்குறைவு ஆகிய நோய்கள் பிறப்பதுண்டு. வலிப்பு தொடர்ந்து இருப்பின் அறிவுக்கேடு மிகுந்து உளப்பிறழ்வு ஏற்பட்டு வெறி நோயும் உண்டாகலாம். மகளிருக்கு சூதக காலத்தில் பெரும்பாலும் வலிப்பு உண்டாகிறது.

துப்பு பிடித்த இரும்பினால் ஏற்படும் காயங்களினாலும் ஒரு வகை வலிப்பு (எற்பு நோய்) ஏற்படும். இவையன்றி சுரம், சூதிகாவாதம் போன்ற நோய்களிலும் வலிப்பு ஏற்படுவதுண்டு.

### *குற்ற வேறுபாடுகள் :*

உணவாதி தன்மைகளின் இயல்பு, பிறழ்வாலும் ஒவ்வாமையாலும் வளிக்குற்றம் மிகுந்து தனக்குத் துணையாக அழல், ஐயக் குற்றங்களைக் கெடுத்து அபான வாயு முதலான வாயுக்களும் நிலைகெட்டு வலிப்பு உண்டாகும்.

### *நாடி நிலை :*

வளி, ஐயம், வளியில் வாயு, ஐயத்தில் வாயு ஆகிய நாடி நிலைகள் காணப்படும்.

### *மருத்துவம் [பொது] :*

வலிப்பு நோயில் தன்னிலை பிறழ்ந்து மிகுந்த வளிக்குற்றத்தையும் கேடுற்ற வாயுக்களையும் தன்னிலைப் படுத்த கழிச்சல் உண்டாக்கி மற்றைய குற்றங்கள் இயல்பு பிறழ்ந்திருந்தால் அவற்றையும் தன்னிலைப் படுத்த வேண்டும். நசியம், ஆக்கிராணம், கலிக்கம், உடலில் தைலம் பூசுதல் ஆகியவைகள் வலிப்பு கண்ட நேரங்களில் உதவும்.

வலியுள்ளபோது கரித்துணியில் சிறிது சீரகம் வைத்து திரியாக்கிக் கொளுத்திப் புகையை மூக்கிற் காட்டலாம். அகத்தியர் குழம்பு மூன்று முதல் ஐந்து நெல் அளவை சீலையில் தடவி கொளுத்தி புகை காட்டலாம்.

நசியம், ஆக்கிராணம், கலிக்கம் இவைகள் செய்வதுடன் மெழுகுத் தைலம், முட்டைத்தைலம், சடாமாஞ்சில் தைலம்,

ஆலகால விடத்தைலம், விடமுட்டித்தைலம், அர்க்க க்ஷீராதி தைலம், ஐங்கூட்டுத்தைலம் இவைகளையும் வலியுள்ளபோது மேற்பூச்சாக வழங்கலாம்.

வலிப்பு, மயக்கம், மூர்ச்சை இவற்றில் உடல் குளிர்ந்தால் கர்ப்பூராதி நெய்யை உடலில் தடவி தேய்க்க சூடுண்டாகும்.

கழற்சி நெய், மெருகன் நெய், சித்தாதி நெய் போன்ற தைல வகைகள் அகத்தியர் குழம்பு, கும்மட்டி மெழுகு போன்றவைகள் ஆகிய வளியடக்கி மருந்துகளை கழிச்சலுண்டாக்கக் கொடுக்கலாம், சவுக்கார பீச்சு, பால், தேன், இந்துப்பு சேர்ந்தபீச்சு இவையும் செய்து மலத்தைக் கழிக்கலாம்.

சூதம், துருசு, வெள்ளி, நாகம், வங்கம் இவற்றாலான பற்பங்களும் கண்டரச பற்பம், சண்டமாருதச் செந்தூரம், அயவீரச் செந்தூரம், வான் மெழுகு, நந்திமை, சண்டமாருதக் குழம்பு, இரச கெந்தி மெழுகு, கந்தக சுடர் நெய், பச்சோந்தி நெய், வேப்பம்நெய், ஆகிய மருந்துகள் பயன்படுத்தலாம்.

## மூர்ச்சை

திடீரென கண் இருண்டு அறிவிழந்து மூடமாகி, மயக்கமடைந்து மூர்ச்சையுண்டாகும் நோயை மூர்ச்சை, மூச்சடைப்பு, மூடம், அறிவழிதல் என்று பலவகையாகக் கூறுவர்.

எளிதில் செரிக்காத உணவுகளை உண்ணல், உடல் வன்மை கெட்டு குருதி அளவில் குறைதல், தகாத நடத்தை, நாடி நரம்புகள் தளர்தல், உடலின் கழிவுப்பொருள் உடலில் தேங்குதல், ஆகியவற்றால் இந்நோய் உண்டாகும். சிலருக்கு மனதிற்கு ஒவ்வாப் பொருட்களைப் பார்த்தல், முகருதல் போன்ற

புலன்களாலும் அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்டல் இவற்றாலும் மூர்ச்சையுண்டாகும்.

***முற்குறி :***

மூர்ச்சையுண்டாகு முன் தலை சுற்றல், வாய் குமட்டல், வாய் நீர் ஊறல், கொட்டாவி விடல், உற்காய அதக்காயங்கள் சோர்வடைதல், அறிவுஅழிதல், தமரகம் படபடத்துத் துடித்தல் ஆகிய முற்குறிகள் கண்டு கீழே விழச்செய்யும். இது வளி, அழல், ஐய, முக்குற்ற மென நான்கு வகையாம். இவற்றுடன் குருதி, நச்சு என இரண்டையும் சேர்த்து ஆறாகவும் கூறுவர்.

***வளி மூர்ச்சை :***

இந்நோயில் மயக்கம், தலை சுற்றல், காணும் பொருட்கள் சிவப்பு, கருப்பு அல்லது நீலநிறமாகத் தோன்றல், கண் இருளல் எனும் குறிகுணங்கள் கண்டு வாய் நீருறல், குமட்டல், வாயில் நுரைதள்ளல், உடல் நடுக்கல், கை கால் விதிர்த்தல், தமரகம் படபடத்தல் ஆகிய குறிகள் உண்டாகி அறிவிழந்து கிடக்க செய்யும், இதில் உடல் கருக்கும். சிறிதுநேரத்தில் மயக்கம் தெளிந்து இயல்பான நிலையடையும்.

***அழல் மூர்ச்சை :***

இதில் காணும் பொருட்கள் சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாகத் தோன்றி, தலை சுற்றல் முதலிய குணங்களைக் காட்டி கண் இருண்டு மயக்கமுண்டாகும். உடல் முழுவதும் வியர்க்கும். வாயில் நுரை தள்ளும், சிறிது நேரங்கழித்து தெளிவடைந்து மிகுந்த நீர் வேட்கை காணும், மனம் சோர்வடையும், உடல் கரு நிறத்தோடு மஞ்சளித்துக் காணும்.

**ஐயமூர்ச்சை :**

இந் நோயில் அடிவயிற்றில் வெறுமையாகத் தோன்றி கண்கள் இருண்டு மயக்கமுண்டாய் அறிவிழந்து கிடக்கச் செய்யும். வாயில் நுரை தள்ளல், வாய் கோணுதல், பற்கடித்தல், உடல் வியர்த்தல் ஆகிய குறி குணங்களைக் காட்டி பல மணிநேரங் கழித்து தெளியும். தெளிந்த பின் உடல் நோவு, ஊதல் எனும் குறிகுணங் காணும்.

**முக்குற்ற மூர்ச்சை :**

வளி, அழல், ஐய மயக்கத்தில் உண்டாகும் குறிகுணங்கள் கலந்து காணும். வாயில் நுரை வடிதல் காணப்படாது. இது ஏனையவற்றை விடகடினமான நோயாக இருக்கும்.

**குருதி மூர்ச்சை :**

உயிரிகளின் குருதியின் மணத்தை முகருதல் அவற்றைக் காணுதல், அறுவை மருத்துவம் செய்கையில் பக்கத்தில் இருந்து அதைக் காணுதல் இவற்றால் அவ்விடத்திலேயே தலை சுற்றி, வாய்குமட்டி கண்ணிருண்டு மயக்கமடைந்து சாய்வர், மயக்கமடைந்த நிலையில் மிகுந்த வியர்வை கசிதல், உற்காய அதக்காயங்கள் செயலற்றுக் கிடத்தல், கண் செருகி பஞ்சடைந்தாற் போலிருத்தல் எனும் குறிகளைக் காட்டும்.

**நஞ்சு மூர்ச்சை :**

நெடுநாள் பூட்டிக் கிடந்த வீட்டிலாவது, நெருக்கடியான நிறைந்த அளவில் ஆட்களுள்ள இடத்திலாவது நுழையும் போது நச்சு தன்மையுள்ள மயக்கமூட்டும் அல்லது மூடப்படுத்தும் பொருட்களை முகருதல் அல்லது உட்கொள்ளலாலும் இது

பிறக்கும். மயக்கம் உண்டாகு முன் கை கால் நடுக்கம், வாய் குளறல், கண் இருளல் எனும் குறி குணம் காணும். இது நச்சு பொருட்களின் தன்மைக் கேற்றவாறு வேறுபட்ட பல குறிகுணங்களுடையது. மூச்சு மெலிந்து காணும். இவையன்றி நஞ்சுள்ள விலங்குகளின் கடியாலும், அபினி, கஞ்சா, எட்டி, ஊமத்தை முதலிய தாவரப் பொருட்களைக் கொள்வதாலும், போதை பொருட்களான சாராயம் போன்றவைகளைக் குடிப்பதாலும், மூடத் திரவத்தை முகருவதாலும், சில செயற்கை மருந்துகள் உடலில் புகுத்தப்படுவதாலும், மூர்ச்சையும் மூட்டும் உண்டாகும்.

சில வகை மூர்ச்சையில் பிணியாளியாவது பிணியாளியைச் சுற்றிலுமுள்ள பொருட்களாவது சுழன்று சுற்றுவது போன்ற பிரமை ஏற்பட்டு கால் இடறி மயக்கமுண்டாகும். வேகமாகத் தூக்கி எறியப் படுகையிலும் வேகமாகச் சுழன்று ஆடுவதிலும் இவ்வாறான மூர்ச்சையை தீரா மூர்ச்சை (சந்நியாச நோய்) என்று கூறுவர்.

அனேகமாக மூர்ச்சை நோய் சிறுவர்களுக்கு அதிகம் காணுகிறது. இது அநேகமாக இருபது வயதிற்குள் மறைந்து விடுகிறது. சிலரின் வாழ்நாள் முழுதும் இருப்பதுண்டு. கப மூர்ச்சை, முக்குற்ற மூர்ச்சை, கடுமையான விட முர்ச்சை மருத்துவத்திற்கு அடங்காத நாட்பட்ட மூர்ச்சை ஆகியவைகள் தீருவது கடினம்.

உடலில் குருதி வன்மை கெட்டு முக்குற்றங்களில் ஒன்றோ சிலவோ தத்தம் வன்மையில் உதான, அபான வாயுக்களை எழுச்சியுறச் செய்து அறிவைக் கெடுத்து இந்நோய் விளையும். மூர்ச்சையில் பித்தம், பித்தவாதம் ஆகிய நாடி நிலைகள் காணும்.

***மருத்துவம் :***

மூர்ச்சையில் அறிவு நிலையைத் தூண்டி மயக்கத்தைத் தெளிய வைப்பதற்கான உடனடி மருத்துவங்களைச் செய்ய வேண்டும். குளிர்ந்த நீரை மூர்ச்சையுற்றவரின் முகத்தில் தெளித்து துடைத்தல், ஈரத் துணியால் முகத்தையும் உடலையும் துடைத்தல் ஆகியவற்றால் மூர்ச்சை தெளியும்.

கரித்துணியைத் திரித்து கொளுத்தி அதினின்று வரும் புகையை நாசியிற் காட்ட மூர்ச்சை தெளியும். முசுறு முட்டைத் தைலத்தால் நசியம், அஞ்சனம், துவாலை செய்யலாம்.

***நவாச்சார ஆக்கிராணம் :***

நவாச்சாரத்துடன் கற்சுண்ணாம்பு கட்டி கலந்து குழைத்து மூக்கிற் காட்டலாம்.

இதற்கான கலிக்க வகைகளும், குடோரி மருத்துவமும் செய்யலாம். மகா விடமுட்டித்தைலம், வமன விரேசனம் ஆகியவையும் பயன்படும். நோய் தெளிந்த பின் உற்சாக மூட்டும் சாராயம் போன்ற போதைப் பொருட்களாவது காப்பியாவது தரலாம் நோய் மீண்டும் வராமல் இருக்கச் செய்ய உடலையும், நரம்புப் பகுதியையும் வன்மையாக்கும் மருந்துகளைக் கொடுத்து வருவது நன்மை பயக்கும்.

## *அபஸ்மாரம் [மயக்க நோய்]*

சிந்தனை, துக்கம், பயம் இவற்றால் மனது கேடுற்று, மனதிற்கு தெளிவைத் தருகின்ற நரம்புகள் உலர்ந்து, இருள் கம்மியது போலாகி புத்தியின் தெளிவு கெடும். இந்நோயை அறிவுக்கேடு, புத்தி மயக்கம், புத்தி தடுமாற்றம், அபஸ்மாரம் என்று பல

பெயர்களால் வழங்குவர். மூர்ச்சையைப் போல இதில் முழு மூடம் காண்பதில்லை. அறிவுக்கேடு அதைவிடக் குறைந்ததாய் இருக்கும். மூர்ச்சையை உண்டு பண்ணக் காரணமானவைகளே இதையும் உண்டு பண்ணலாம்.

பித்தாதிக்கம், குருதி அழுத்த மிகுதி, பிருக்க நோய்கள், மூச்சடைப்பு, தமரக நோய்கள், சில வகை வீக்க நோய்கள், குருதியின்மை, நச்சுக்கடி, நச்சுப் பொருட்கள், போதைப் பொருட்கள் இவற்றைக் கொள்ளல், குருதியைக் காணல், வெடி ஒலிக்கேட்டல் போன்ற ஒவ்வாப் புலன் அடிபடுதல், காயம், போன்ற பல பிற காரணங்களினாலும் இந்நோய் உண்டாகக் கூடும்.

***முற்குறி :***

புத்தி தெளிவின்மை, பிரமை, கண்களில் இருட்கம்மல், காது கேளாமை, பேச முடியாமை, செரியாமை, உணவில் வெறுப்பு வன்மைக் குறைவு, தூக்கக்கெடுதி போன்ற முற்குறிகள் மயக்க நோயிற் காணுகின்றன. பின்பு பல்லைக் கடித்தல், நுரை நுரையாக வாந்தியாதல், கை கால் உதறுதல், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், அறிவும், புலன்களும் செயலிழத்தல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

மயக்க நோய் வளி, அழல், ஐய, முக்குற்ற மயக்கம் என நான்கு வகைப்படும்.

***வளி மயக்கம் :***

அறிவு இழத்தல், நினைவு மறதி, நடுக்கல், பற்களைக் கடித்தல், உடல் கருநிறமடைதல், சில வேளை சிவத்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும். உடல் துடித்து ஒளி இழக்கும்.

*அழல் மயக்கம் :*

கண், தோல் ஆகியவை மஞ்சளித்தல், சில வேளை கண்வெளுத்தல் அல்லது சினம்கொண்டது போல் சிவத்தல், தரையை கையால் அறைதல் வெறித்த பார்வை, மறதி முதலிய குறிகுணங்கள் உண்டாகும். உடனே தெளியும்.

*ஐய மயக்கம் :*

மறதி, வாயில் உமிழ் நீர் வடிதல், கண், முகம், நகம் ஆகியவை வெளிறல், உடல் வெளுத்தல், வெறிச்சேட்டை அதிகரித்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும். வெகு நேரங்கழித்து தெளியும்.

*முக்குற்ற மயக்கம் :*

இதில் வாத முதலாகிய மூன்று குற்றங்களின் மயக்கக் குறி குணங்கள் கலந்து காணும்.

*மருத்துவம் :*

மயக்க நோயில் முதன் முதலில் மயக்கத்தைத் தெளிய வைத்து உளப்பிறழ்வைச் சீராக்க வேண்டும். வயிற்றைக் கழித்து வாந்தி செய்விக்கலாம்.

திரிகடுகு, திரிபலை, பூண்டு, புங்கம் பருப்பு, எட்டிப் பழத்தசை இவைகள் ஊறிய பச்சிலை சாற்றை நசியமிட மயக்கம் தெளியும்.

விலங்குகளின் பிச்சுக்களாலான ஆக்கிரான நசியங்களும், கோட்டான், வலியான் ஆகிய புட்களின் இறகுப் புகையும் கலிக்கங்களும் பயன்படும். ஆலகால விடத் தைலம்

பயன்படும். மயக்கம் தெளிந்த பின் உற்சாகமூட்டும் பொருட்கள் தரலாம்.

கருங்காக்கட்டான்பூ, பிரமிய வழுக்கை; நன்னாரி வேர், சதா வேர், அகத்தியிலை இவற்றின் கியாழம், வில்வாதி இளகம், வல்லாரை நெய் போன்ற மருந்துகள், மூர்ச்சை, உன்மாதம், இவற்றில் கூறப்படட மருந்துகள் ஆகியவை பயன்படும்.

பிற நோய்கட்கு துணையாக மயக்கம், மூர்ச்சை ஏற்படின் அந்நோய்கட்கான மருத்துவம் செய்ய வேண்டும். குருதி இருப்பின் அதை நீக்க வேண்டும். மூச்சடைப்பு இருந்தால் இசிவகற்றி மருந்துகளும், தமரகம் செயலற்றுக் கிடந்தால் பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ சேர்ந்த மருந்துகளும் தரலாம். நஞ்சுகளால் ஏற்பட்ட மயக்கம், மூர்ச்சையானால் தெளிய வைத்து நஞ்சுகட்கான் முறிவு செய்ய வேண்டும். நச்சுக் கடிகட்கும் இவ்வாறே மருத்துவம் செய்யலாம்.

## சூதிகா வாதம்

உளத்தின் வாயிலாக மனம் இயக்கச் செயல்களை இழத்தலாலான கன்மேந்திரியக் கேட்டையும், நினைவிழப்பு, உளச்சிதைவு ஆகியவற்றாலான ஞானேந்திரியக் கேட்டையும் கொண்ட உள வழியாக ஏற்படும் நரம்பு நோய். இதில் மனமும் நரம்பும் பிறழ் நிலையடைகின்றன.

பண்டைய நாள் முதல் இந்நோயை ‘சூதிகா வாதம்’ என்றழைத்தனர். அவர்கள் கருப்பைக்கும் இந்த நோய்க்கும் நெருங்கிய தொடர்புண்டு என்றும், இது பெண்களுக்கு மட்டுமே உண்டாகிறது என்றும் நம்பிக் கொண்டிருந்தனர். முதலாவது

பெரும் போரின் போது படைவீரர் பலரிடம் இந்நோயின் குறிகுணங்கள் பல தென்பட்டதைக் கண்ட பின்னரே இக்கொள்கைகள் கை விடப்பட்டன.

வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து தப்பிக்கவும் தீவிரமான உளப்போராட்டங்களினின்று விடுதலை பெறவும் வழி பயக்கும் ''செயல் திறமையின்மையினுள் ஓடி மறையும்'' முயற்சிகளே இந்நோய்க்கு அடிப்படை எனக் கண்டறியப் பட்டுள்ளது. இவை முன்னரே திட்டமிட்டு செய்யப்படுவன அல்ல; தாமே இயங்குபவையாகும். இதில் ஏற்படும் செயலிழப்பு உடலைப் பற்றியதாகவோ, உள்ளத்தைப் பற்றியதாகவோ அல்லது இரண்டும் கூடியதாகவோ இருக்கலாம். சூதிகாவாத நோயில் இரு நிலைகளைக் காண முடிகிறது. அவை ***1.தீவிர நோய்நிலை 2.நாட்பட்ட நோய்நிலை*** என்பன.

சூதிகாவாத நோயில் போலியான உடல் நோய்களும் ஞானேந்திரிய கன்மேந்திரிய செயல்கள் மறைதலும் காணப்படுகின்றன. ஞானேந்திரியக் கேடுகளில் புலனுணர் திறமின்மை, தோல் உணர்வு கெடுதல், பார்வை கேள்வி பழுதாகுதல் ஆகியவும் கன்மேந்திரியக் கேடுகளில் (இயக்கத் திறமின்மை) உடலுறுப்புகள் பொதுவாக உற்காய அதக்காயங்கள் செயலறுதன்மை, மிகையான இயக்க அசைவுகள், வாக்கு(பேச்சு) பழுதுபடல் ஆகியவும் போலி நோய்களில் உடல் வியர்த்தல், முகம் சிவத்தல், உள்ளுறுப்புகள் கோளாறடைதல், வாந்தி, உணவு வேண்டாமை, வயிறு கழிதல் முதலியவைகளும் காணப்படுகின்றன. ஆனால் இவைகள் உண்மையான நோயிற் காணப்படுவது போன்ற நரம்புப் பங்கீட்டுக் கோளாறுகளின் தொடர்புடையன அல்ல. சூதிகாவாத நோயின் குணங்களை நான்கு

பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை. 1. சூதிகாவாத வலிப்பு 2 உளப்பிறழ்வு 3. உடற் கோளாறுகள் 4. குணமாற்றங்கள் என்பன.

### *சூதிகாவாத வலிப்பு :*

இது அநேகமாக வெளித் தூண்டல்களுடன் பொதுவாக மனநிலையைப் பாதிக்கும் சூழலுடன் அல்லது பழைய நினைவுடன் அதிக தொடர்புடையதாக இருக்கும். காக்கை வலிப்பு போன்ற வலிப்பு நோய்களில் உண்டாவது போல இந்நோயில் திடீரென்று வலிப்பு தோன்றுவதில்லை; அதைப் போல காயப்படுத்தும் விழுகையும் இருப்பதில்லை. சூதிகாவாத வலிப்பின்போது பிணியாளி தன் வேகங்களை முழுதுமாக இழப்பதில்லை. அவர்களின் கண்பார்வை ஒளிக்கு மீண் செயல் காட்டும், அறிவு நிலை முழுதுமாக மறைவதில்லை. சூழ்நிலைக்கேற்ப பிணியாளனிடம் மாறுதல்களைக் காணமுடியும்.

சூதிகாவாத வலிப்பு சில மணித்துளி நேரத்திலிருந்து பல மணி நேரம் வரையில் இருக்கலாம். பிணியாளியைச் சுற்றிலும் ஆட்கள் இருந்தால் வலிப்பு நெடுநேரம் நீடிக்கும். இது பொதுவாக பகல் நேரத்தில் தான் உண்டாகிறது.

### *உளப்பிறழ்வு :*

சூதிகாவாத நோயாளியின் மனநிலை பிறழ்வுற்ற நிலையில் குறுகி இருக்குமேயன்றி முழுதும் நினைவற்ற செயலற்ற நிலையில் இராது. நோயாளி உண்மையான சூழ்நிலையை உணராமல் தன் எண்ணப்படியாவது தன்னுடைய முந்திய அனுபவங்களின் தன்மைப்படியாவது தன் மனப்போக்குப்படி அதை உணரக்கூடும். இவ்வுளப் பிறழ்நிலை சில மணித்துளிகள் முதல் பல மணி நேரங்கள் வரை இருக்கும். பிணியாளி கூத்தனைப் போலவோ, குழந்தையைப் போலவோ அல்லது வேறாகவோ தன்னை வடிவுப்படுத்தி எண்ணி அதற்குத் தக்க வார்த்தைகள் சொல்வதைக்

காணலாம். சில வேளை பிணியாளியின் பதில்கள் தொடர்பற்றவையாயும் மடமையானதாயும் இருக்கலாம். இவ்வாறான நடிப்பு நிலை பல திங்கள் வரையிலுங்கூட தொடர்ந்திருக்கும்.

***உடற்கோளாறுகள் :***

சூதிகாவாத நோயிற் காணப்படும் உடற் கோளாறுகள் பல்வேறு வகையினவாய் இருக்கும். இவை நோயாளியின் எண்ணங்களுக்கு ஏற்ப இருப்பதைக் காணலாம்.

கன்மேந்திரிய (செய்தற்கருவி, இயக்க) கோளாறுகளாக இதில் உற்காய அதக்காய முதலிய உறுப்புகளின் செயலின்மை (பக்கவாதம் போன்றவை) நடுக்கல் முதலியவை வெகுவாகக் காணப்படுகின்றன. (இவற்றில் பேசிகளின் தன்மைக்கேடு இருப்பதில்லை). தசைகளின் சுண்டு இயல்பான உடலில் காணப்படுவதைப் போலவே இருக்கும். நோயின் உண்மையான குறிகளும் பேசிச் சூம்பலும் இதில் காணப்படாது. சில வேளைகளில் சூதிகாவாதப் பிணியாளி நிற்கவும், நடக்கவும் முடியாதவனாக இருப்பதைக் காணலாம். ஆனால் பிணியாளியை படுக்கையில் வைத்து தேர்வு நடத்தும்பேரது அதக்காயங்கள் இயல்பான நிலையில் இருப்பதையும் அசைவுகளைக் காட்டுவதையும் அறிய முடியும், உடலுறுப்புகளின் நடுக்கல் சில வேளை கைகளைப் பற்றியதாகவோ கால்களைப் பற்றியதாகவோ அல்லது உடல் முழுவதையும் பற்றியதாகவோ பல்வேறு நிலையில் இருக்கும்.

ஞானேந்திரிய (அரிதற் கருவி, புலன்) கோளாறுகளாக சூதிகாவாத நோயில் மிகுதியாகக் காணப்படுவது தோலின் உணர்வுக் கேடுகளே, தொடுதல், வலி, வெப்ப உணர்வு ஆகியவைகட்கு தோல் உணர்ச்சியை இழந்தது போலிருக்கும்.

இவ்வாறான தோலின் உணர்வின்மை (மூடம்) பொதுவாக குறிப்பிட்ட எல்லைப் பகுதிகளுக்குள்ளேயே அடங்குகிறது. அவை உறைகளால் மூடப்பெற்ற கை, காற் பகுதிகளாகவோ, இடுப்புப் பகுதியாகவோ இருக்கலாம், நரம்புப் பங்கீட்டு அமைப்பிற்கும் இவை ஏற்படும் உடற்பகுதிகளுக்கும் எவ்வித தொடர்பும் (உண்மையான நோயிற் போல) இருப்பதில்லை.

இவையன்றி பேச்சுக்கோளாறுகள் (சிணுங்கல், திக்கல், குரல் இழப்பு) செவிக் கோளாறுகள் (காதுமந்தம், செவிடு), பார்வைக் கோளாறுகள் (மங்கல், பார்வைக்குறைவு, குருடு, கண்கூச்சம், வினோதக்காட்சி) உணவுப்பாதைக் கோளாறுகள் (விக்கல், வாந்தி, குடற்பிடிப்பு, கழிச்சல், உணவில் விருப்பமின்மை) ஆகியவையும் காணப்படுகின்றன.

### *சூதிகாவாத குணமாற்றங்கள்:*

சூதிகாவாத நோயாளிகளின் உணர்ச்சி, விண்நிலையில் இருக்கும். அவர்களுடைய எண்ணங்கள், ஒழுக்கம் முதலியவை இவ்வுணர்ச்சியைப் பொறுத்திருக்கும். வினோதமான எண்ணங்கள் இந்நோயில் முக்கியமானது. இவற்றை விவரிக்கும்போது நோயாளி அதனுடன் ஒன்றிவிடுவதைக் காணலாம். சில வேளை இல்லாதவற்றைக் கற்பனைசெய்தும் கூறுவர்.

சூதிகாவாத நோயாளர் பகட்டான நிறங்களை விரும்புவர். பலர் ஏனையோரைக் கவரும் வண்ணங்களில் உடைகளை அணிய விரும்புகின்றனர்.

***சூதிகாவாத நோயில் நோய்க்குண உடலியல் :***

சூதிகாவாத நோயாளியின் கோர்த்தத்தின் நரை பதார்த்தம் (மூளையின் புறணி) வன்மைக் குறைவானதாய் இருக்கக் கண்டுள்ளனர். இவர்கள் மனதில் எழும்பும் உள்ளுணர்வுகளை இதனால் ஆட்சிசெய்து கட்டுப்படுத்த முடிவதில்லை. இதனால் மூளைப்புறணி உள் நிலையங்கள் மாறுபாடு அடைகின்றன. இவற்றுள் பலகால செய்திகள் பொதிந்து கிடக்கும். இயல்பான நிலையில் இவற்றை மூளைப்புறணி (நரைபதார்த்தம்) கட்டுப்படுத்துகிறது. மூளைப்புறணி வன்மைக் குறைவாக இருப்பவர்களில் இக்கட்டுப்பாடு இருப்பதில்லை. இதனால் அங்கு அடைந்து கிடந்த உள்ளுணர்வுகள் வெளிப்படுகின்றன. இவை கன்மேந்திரியங்களை சில வேளை தூண்டச்செய்தாவது சில வேளை தடை பண்ணியாவது சூதிகாவாதத்தின் பல் குறிகுணங்களை உண்டாக்குகின்றன.

நரை பதார்த்த விலங்களில் ஏற்படும் உள்தாடைகளால் உடலுறுப்புகள் செயலின்மை, செவிடு, குருடு போன்ற பல உடற்கோளாறுகள் உண்டாகின்றன.

சூதிகாவாத நோயாளி பெரும்பாலும் குழந்தைத் தனத்தைக் கொண்டிருப்பதைக் காணலாம். குழந்தைகளில் மூளைப்புறணி நன்றாக வளர்ச்சியுறாததினால் மூளைப்புறணி உள் நிலையங்களே செயல்பட்டுக் கொண்டிருக்கும். இதே போன்ற நிலையையே இந்நோயிலும் காணமுடிகிறது. புறணி வன்மைக் குறைவானதாய் இருப்பதால் இதன் கட்டுப்பாடுகட்கு மூளைப்புறணி உள் நிலையங்கள் அடங்குவதில்லை. இதனாலேயே சூதிகாவாதப் பிணியாளி பகுத்தறிவினால் ஊக்குவிக்கப்படாமல் எண்ணங்களினால் செயல்படுத்தப் படுவதை அறிய முடிகிறது.

ஏதாவதொரு எண்ணத்துடன் ஒன்றிவிட்டால் சில வேளைகளில் இப்பிணியாளர்களின் அறிவுக்கு வெளித் தூண்டல்கள் எட்டுவதில்லை.

சூதிகாவாத நோய் ஆண்பெண் இரு பாலரையும் பீடிக்கிறது. பொதுவாக உளவன்மைக் குறைவான (நரம்புத் தளர்ச்சியுள்ள) வர்களை விரைவில் பற்றுகின்றது. மூளையை அதிர்வடையச் செய்யும் நிலைகளே இந்நோய் உண்டாகக் காரணமாக அமைகின்றன.

***மருத்துவம் :***

சூதிகாவாதப் பிணியுற்றவர்களை அன்புடனும் பரிவுடனும் கவனித்துக் கொள்ள வேண்டும். நோயை கூடுதலாக்கும் செயல்முறைகளையும் செய்திகளையும், சூழ்நிலையையும் கண்டு அவற்றை உடனடியாக விலக்க வேண்டும். அல்லது நோயாளியை முன்னிலும் மாறுபட்ட முற்றிலும் புதிதான ஒரு சூழ்நிலையில் வைத்து மருத்துவம் செய்வது நன்று. நோயாளியின் மனநிலையை ஒருமைப்படுத்தி உள்நோய் மருத்துவம் செய்யவேண்டும்; நோயாளியின் மூளையைப் பலப்படுத்தவும், நரம்புகளை அமைதிப்படுத்தவும் செய்வதற்கான மருந்துகளையும் உறக்க முண்டாக்கிகளையும் நோய்க்குத் தக்கவாறு கொடுக்கலாம். வல்லாரை நெய், பிரம்மிநெய், வாலுழுவை அரிசி சேர்ந்த மருந்துகள், அமுக்கராக் கிழங்கை முதன்மையாகச் சேர்த்த மருந்து கள், அபினி சேர்ந்த மருந்துகள் ஆகியவை பயன்படும். இவை யன்றி கிரிகைக்கான துவாலை, உள் மருந்துகள் ஆகியவற்றையும் வழங்கலாம்.

## காக்கை வலிப்பு

காக்கை வலிப்பு திடீரென்று முற்குறிகள் காட்டாமலோ அல்லது முற்குறிகள் காட்டியோ கண் செருகல், உற்காய அதக்காயங்கள் விறைப்படைந்து விதிர்த்தல், தொண்டையும் நாவும் உலறல் அல்லது நுரையோ கோழையோ வாயினின்று ஒழுகல், மலசலம் நழுகல் போன்ற குறிகளைக் கொண்டது. இவ்வேளை அறிவுக்கேடு, பேச்சின்மை, வியர்வை காணல், ஆகிய குறிகளும் காணப்படும்.

காக்கை வலிப்பு இரு வகைப்படும். அவை 1. பிறநோயின் தொடர்பாக ஒரு அறிகுறியாகக் காணும் தொடர்பு நோய், இது நரம்பைப் பற்றிய கொருக்குநோய், கோர்த்த நாடிச்சுவர் தடிப்பு, கோர்த்தின் கழலை அடிபடுதல், ஆகிய நோய்களில் காணுகிறது. 2. இதன்றி காக்கை வலிப்பு தனி நோயாகவும் காணப்படுகிறது. இவ்வாறு தனிநோயாக காக்கை வலிப்பு செரிமான கோளாறுகளால் உண்டாகிறது.

### அறிகுறி

காக்கை வலிப்பில் காணும் அறிகுறிகள் ஒவ்வொரு ஆளிலும் பல மாற்றங்களையுடையதாகக் காணப்படுகிறது. இக்குறிகுணங்கள் அனைத்தையும் நான்கு பகுதிகளாகப் பிரித்தறியலாம். அவை 1. வலிப்பு 2. அறிவுக்கேடு 3. குணக்கேடு 4. ஆளுடை மாறுபாடு என்பன.

### வலிப்பு

பொதுவாக காக்கை வலிப்பில் ஏற்படும் இசிப்பு திடீரென்று எந்த விதமான குறிப்பிட்ட காரணமுமின்றி உண்டாகிறது.

பிணியாளி அறிவுக்கேடுற்று மயக்க முண்டாகி கீழே விழுவதைக் காணலாம். இது உடலிலுள்ள பேசிகள் விறைப்படைவதால் ஏற்படுகிறது. இவ்விறைப்பு எல்லா பேசிகளிலும் சமமாக ஏற்படாத காரணத்தால் பிணியாளி முன் புறமாகவாவது பக்கங்களிலாவது சரிந்து விழலாம். பின்புறமாக விழுவது அரிது. சில வேளைகளில் பிணியாளி கீழே விழும்போது அலறுதல் அல்லது கூச்சலிடுதல் அல்லது வேறு ஒசை எழுப்பல் உண்டு. கால்கைகள் நீட்டியபடி விறைத்துக் கொள்ளும். உடற்பேசிகளும் இவ்வாறே விறைப்படையும் இருபது முதல் நாற்பது வினாடிகளில் இவ்வாறான அசைவற்ற விறைப்பு நீங்கி அலையலையான இசிவுகள் கை கால்களில் தோன்றும், முகம் வெளிறிப் பின் நீலம் பாரிக்கும். கண் பார்வை விரிவடைந்து ஒளிக்கு மீண் செயல் காட்டாது. தசைகளின் மீண் செயலைக் காண முடிவதில்லை. பலமான தூண்டல்களுக்கும் கூட பிணியாளி ஆளாவதில்லை. வாயினின்று நுரை வெளிப்படும். பல வேளைகளில் நா, கன்ன உட்கதுப்பு ஆகியவை கடிபடுவதால் நுரை குருதித் தோய்வுடன் இருக்கும். பல வேளைகளில் தன்னை அறியாமல் அமுரி கழிதலும், சில வேளை மலம் கழிதலும் உண்டு. பேசிகளின் அலையலையான இசிவுகள் நீங்கி பேசித் தளர்ச்சி உண்டாகும். பிணியாளியின் அறிவு மங்கிய நிலையில் இருக்கும். இவ்வலிப்பு 45 மணித்துளிகளுக்கு மேல் நீடிப்பதில்லை. வலிப்பின் பின் அநேகமாக தூக்கம் ஏற்படும்.

காக்கை வலிப்பில் தோன்றும் இசிவுகள் சிலரில் பகற்பொழுதிலும் வேறு சிலரில் இரவிலும் அடிக்கடி உண்டாகின்றன. வலிப்புகளின் இடைவேளை பலவாறாக மாறுபட்டுக்காணுகின்றன. சிலரில் ஒவ்வொரு நாளும், வேறு சிலரில் சில நாட்களுக்கு ஒரு முறையும் இன்னும் சிலரில் பல

நாட்களுக்கு ஒரு முறையும் வலிப்பு தோன்றலாம் ஒரு சிலரில் வலிப்புகள் ஒன்றையொன்று தொடர்ந்து பல மணி நேரம் வரை காணப்படுகிறது. வலிப்புகட்கு இடையிலுள்ள இடை நேரம் மிகக் குறுகியதானால் பிணியாளியின் அறிவு இயல்பான நிலையை அடைவதில்லை. இந்நிலையை தொடர்ந்து அல்லது நிலையான வலிப்பு என்கிறார்கள் இத்தகைய பிணியாளருக்கு உடனடியாக மருத்துவம் செய்யவேண்டும். இல்லையெனில் இவ்வகையான தொடர் வலிப்புகள் சாவை உண்டாக்கக்கூடும்.

சில பிணியாளர்கள் தங்களுக்கு வலிப்பு ஏற்படுமென்பதை ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னதாகக்கூட தெரிந்து கொள்வதுண்டு. பல பிணியாளர்களுக்கு வலிப்பு ஏற்படுமுன் சில உணர்வுகள் ஏற்படும். இது ஒரு சில வினாடிகளே இருக்கும். இவ்வகை முன் உணர்வுகள் பல திறப்படும். அவை 1. உடலுணர்வு, வியர்வை காணல், உடல் வெளிறல், சிவத்தல், வாய் உலர்தல் 2. புலனுணர்வு, வெறுப்புண்டாக்கத் தக்க புலனுணர்வுகள் உடலின் வெவ்வேறு பகுதிகளிலும் தோன்றுதல், இல் பொருட்காட்சி (அதிக ஒளி மின்னற் பொறி இவைகள் தோன்றுதல்) 3. இயக்க உணர்வு : வலிப்பு ஏற்படுமுன் ஓடுதல் கைகளை வீசுதல், உடலுறுப்புகளை பலவாறு அசைத்தல் 4. உள உணர்வு : பயம், வெறுமையாகத் தோற்றல், என்பன. பல வேளைகளில் முன்நிகழ்வுகள் மறந்து போகும். பிணியாளிக்கு எதுவும் நினைவிராது.

வலிப்பின் பின் சிறிது நேரம் வரை பிணியாளிக்குக் காணும் பொருட்களின் பயன் தெரிந்தாலும் கூட அவற்றின் பெயர் தெரிவதில்லை. முழங்கையின் மடக்கி பேசிப் பகுதிகளிலும், கண்ணின் கடிணையிலும் குருதியின் சிறு கசிவால் கரு நிறமாவது நீல நிறமாவது காணும். குருதியில் வெண் வில எண்ணிக்கை மிக

உயர்ந்திருக்கும். அமுரியில் புரதப் பொருள் காணப்படும். இக்குறிகுணங்கள் காக்கை வலிப்பை உறுதிப்படுத்தும். காக்கை வலிப்பு திடீரென்று ஏற்படுவதால் பலத்த காயங்களை உண்டாக்கும். நீர்நிலை, நெருப்பு ஆகியவற்றின் பக்கத்தில் இருக்கும் போது உண்டானால் மிகக் கேடுண்டாகும்.

வலிப்புகள் கடுமையானதாய் இருப்பது போல சில வேளை சிறு வலிப்புகளும் காணப்படுகிறது. பெரு வலிப்புகளில் ஏற்படுவது போன்ற கடுமையான அறிகுறிகள் சிறு வலிப்பில் உண்டாவதில்லை. சிறு வலிப்பில் பிணியாளி கீழே விழுதில்லை. இசிவுகளும் ஏற்படுவதில்லை. பேசிகளில் சிறு அளவு துடிப்புகளே காணப்படும். சில வேளை பிணியாளி தாறுமாறாக நடந்து கொள்ளக்கூடும்.

***அறிவுக்கேடு :***

காக்கை வலிப்பில் சில வினாடிகள் அறிவு மங்கி கேடுறும். வேலை செய்யும் போதோ பேசிக் கொண்டிருக்கும் போதோ நடுவில் தடங்கல் ஏற்பட்டு பின் எதுவுமே ஏற்படாதது போல வேலையோ பேச்சோ தொடரும். இது அநேகமாக பிணியாளிக்கோ அண்மையில் இருப்பவர்களுக்கோ தெரிவதில்லை.

சிலரில் அறிவுக்கேடு அதிக நேரம் (சில மணித்துளி முதல் பல மணிநேரம் வரை) காணப்படுகிறது. இச்சமயங்களில் இல்பொருட்காட்சி தோன்றுவதுண்டு. சிலவேளை பயங்கரமான காட்சிகளைக் கண்டு அவற்றுக்குத் தக்கவாறு நடந்து கொள்வதுண்டு. பயந்து ஒளிதல், பயந்தோடுதல், சுற்றிலும் இருப்பவர்களைத் தாக்குதல் முதலான நடத்தைகளைக் காணலாம்.

இந்நிலையில் பிணியாளர்கள் கொலை செய்தல், பொருட்களை உடைத்தல் ஆகிய கேடுகளைச் செய்யலாம். இவ்வகைப் பிணியாளர்களை உளவியல் வல்லுனர்களின் ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

அறிவுக்கேட்டின் நிலையில் செய்யும் செயல்கள் மிகக் கொடூரமானதாய் இருக்கும் எனினும் பிணியாளர்கள் அதினின்று தப்பிக்க முயல்வதில்லை. வலிப்பு நின்ற பின் அந்நிலையில்தான் செய்த செயல்களை முற்றிலுமாக மறந்துவிடுகின்றனர்.

அறிவுக்கேடு சிலரில் அரைத்தூக்க, அரை விழிப்பு நிலையில் காணப்படுகிறது. இதுவும் திடீரென்று ஏற்பட்டு பல நாட்கள் முதல் வாரக் கணக்கில் நிலைத்திருக்கிறது. இந்நிலையில் பிணியாளனிடம் எந்த வேறுபாடுகளையும் காண முடிவதில்லை. ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பிணியாளி போய்விடக் கூடும். பின்பு இந்நிலை மாறியதும் தான் வேறொரு இடத்திற்கு வந்துவிட்டதாக பிணியாளி உணரமுடிகிறது. அதோடு இந்நிலை -யுள்ளபோது தான் செய்த காரியங்கள் யாவும் மறந்துபோய் விடும். பொதுவாக இந்த நிலையிலுள்ள பிணியாளிகள் தமோ குணத்துடனும் கேள்விகட்கு பதில் அளிக்காமலும் இருப்பார்கள். கண்பார்வை ஒளி மீண் செயல் தசை நாண் மீண்செயல் ஆகியவும் சற்று பிறழ்நிலை அடைந்திருக்கும். வேலையில் ஈடுபட்டிருக்கும்போது இந்நிலை ஏற்பட்டால் அநேகமாக அவ்வேலையை முடிவுவரை செய்து முடித்து விடுவதுண்டு. ஆனால் தான் செய்த செயல் நினைவிலிருப்ப தில்லை.

**குணக்கேடு :**

காக்கை வலிப்பு பிணியாளிகள், துக்கம், கோபம், போன்ற குணக்கேடுகள் உடையவராய் இருப்பார். இக்குணக்கேடுகள்

திடீரென்று தோன்றி திடீரென்று மறையும். சிலவேளை சில மணிநேரங்கள் முதல் பல நாட்கள் வரை தொடர்ந்திருக்கும். மனக்குன்றலில் திடீர் திடீரென்று எரிந்து விழும் தன்மையை அதிகம் காணலாம். தன்னைச் சுற்றி நிற்பவரிடம் ஏதாவது இரந்து கேட்டல், புகார் பண்ணல் அல்லது கோபமுற்று சாடுதல் ஆகியவையும் காணப்படும். சிலவேளை அளவிட முடியாத பயங் கொண்டிருப்பதும் உண்டு.

## ஆளுமை மாறுபாடு :

காக்கை வலிப்பில் ஆளுமைத் தன்மையின் மாறுபாடு பொதுவாக மெதுவாக வளர்ச்சியடைகிறது. இசிவு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்தால் ஆளுமை மாறுபாடு வேகமாக வளர்ச்சியடையும் இது ஒவ்வொரு ஆளிலும் ஒவ்வொரு விதமாக இருக்கும்.

முற்றிலுமாக ஆளுமை மாறுபாடு ஏற்பட்ட பிணியாளிக்கு அவர்களுடைய எண்ணங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல முடிவதில்லை. தேவையற்ற செய்திகளை நீக்கிவிட்டு முக்கியமானவற்றை அவர்களால் பகுத்தறிய முடிவதில்லை. இவ்வகைப் பிணியாளரின் பேச்சைப் புரிந்து கொள்வதும் அவர்கள் கவனத்தை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் திருப்புவதும் மிகக் கடினம்; இவ்வகைப் பிணியாளிகள் தங்களைப் பெருமதிப்பிற்குரியவர்களாகப் பாவித்தும், இனிமையான பேச்சுக்களை உடையவராயும், எதற்கும் நன்றி கொள்பவர்களாயும், அடிக்கடி மன்னிப்புக் கேட்பவராயும் இருப்பர். இப்பிணியாளிகள் தங்களை வெகு சாதாரணமானவர்கள் என்று கொண்டாலும் கூட தனனலம், கொடூரச் செயல் தாக்கும்

இயல்பு ஆகிய எதிர் செயல்களைக் காட்டுவர். இவ்வாறான எதிரெதிர் தன்மைகள் காக்கை வலிப்பில் மிக முக்கியமான ஆளுமை மாறுபாடு என எண்ணப்படுகிறது. பொதுவாக இவர்கள் சீரான சில செய்கைகளைச் செய்வர். இவற்றை யாரேனும் கெடுத்தால் மிகக்கோபப்படுவர். பொறாமை, பழிவாங்கும் எண்ணம் ஆகியவை மிக அதிகமாய் இப்பிணியாளரிடம் காணப்படுகிறது.

பொதுவாக, காக்கை வலிப்பு நோயாளிகளின் ஞாபக ஆற்றல் கேடுற்றிருக்கும். புதிதாக எதையும் கற்றுக்கொள்வது இவர்களுக்கு மிகக் கடினம். இப்பிணியாளி தனக்கு எழுதப்பட்ட மருந்தை வாங்குவதில் மிக உன்னிப்பாக இருப்பதையும் எந்தச் செயலிலும் ஒரு ஒழுங்கைக் கைக்கொள்ளுவதையும் காணலாம். தானே நேர்மையானவன் என்ற எண்ணமும் பிறர் தவறுகளைச் சுட்டிக் காட்டும் செயலும் இவர்களிடம் இருக்கும். இவர்களின் நடை மெதுவாயும், சற்று சரிந்தும் காணப்படும்.

சில காக்கை வலிப்புப் பிணியாளரிடம் இதுவரை கூறப்பெற்ற அநேக குறிகுணங்கள் காணப்படும். வேறு சிலரில் சில மட்டும் இருக்கும். சிலரில் வலிப்பும், வேறு சிலரில் அறிவுக் கேடும், இன்னும் சிலரில் குணக்கேடும் மற்றும் சிலரில் ஆளுமை மாறுபாடும் தீவிரமாக இருக்கலாம். முதன் முதலில் வலிப்பு ஏற்பட்டு பின் மறைந்துவிட மற்றைய குறிகுணங்கள் படிப்படியாக வளர்ச்சியடைவதுமுண்டு.

வலிப்புகள் கோர்த்தகக் கிரந்தி, கோர்த்தக நாடிச்சுவர் தடிப்பு, தலைகாயம், தலையில் அடிபடுதல், கோர்த்தகக் கழலை

போன்ற வேறு நிலைகளிலும் உண்டாகலாம். இவற்றினின்று காக்கை வலிப்பை வேறுபடுத்திக் கணிக்க வேண்டும்.

வலிப்புகள் குழந்தைகளில் வெகுவாகக் காணப் படுகின்றன. சிலவேளை தீவிர நோய்களிலும் மிதமிஞ்சிய குடிவெறியிலும் வலிப்பு ஏற்படுவதுண்டு. குடற் புழுக்களினாலும் இவை ஏற்படலாம். இவைகட்கான மருத்துவம் செய்ய வலிப்பு நின்றுவிடும். சில காக்கை வலிப்பு நோயாளிகள் தூங்கும்போதே நடக்கும் துயில் நடத்தலை உடையவராய் இருப்பதுமுண்டு.

சூதிகாவாத நோயில் உண்டாகும் வலிப்பிற்கும் காக்கை வலிப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் சூதிகாவாதம் என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. காக்கை வலிப்பில் இசிவு பெரும்பாலும் ஐந்து மணித்துளிக்கு மேல் நீடிப்பதில்லை. சூதிகாவாத இசிவு மணிக் கணக்கில் நீடிக்கும். காக்கை வலிப்பில் கண்பாவை ஒளிக்கு மீண் செயல் காட்டுவதில்லை. சூதிகா வாதநோயில் கண்பாவை ஒளி மீண் செயல் இருக்கும். சூதிகாவாத வலிப்பில் காக்கை வலிப்பில் ஏற்படுவது போன்ற பெரிய காயங்கள் உண்டாவதில்லை. இவை தவிர வலிப்பின் பின் ஏற்படும் வேறு குறிகுணங்களும் மாறுபடுகின்றன.

***நோய்க்குண உடலியல் :***

காக்கை வலிப்பு அதன் வேறு அறிகுறிகளும் எதனால் எவ்வாறு ஏற்படுகின்றன என்பது இன்னும் திட்டமாகக் கூற முடிவதில்லை. எனினும் செரிமனக் கோளாறுகள் இதற்கு முக்கியமானதொரு காரணம் என எண்ணப்படுகிறது. செரிமன கோளாறுகளால் உடலில் தேங்கிய நச்சுப்பொருட்கள் மூளையை நஞ்சாக்குகின்றன. நரம்புமண்டலம் இதற்கு எதிர் வினையாக

வலிப்புகளைக் காட்டுகிறது. மூளையின் ஏதாவதொரு நிலையில் உண்டாகும் நச்சுநிலை மெதுவாக மூளையின் பிற நிலைகட்கும் பரவுகிறது. மூளையின் கன்மேந்திரிய நிலையங்களை நச்சுநிலை தாக்கும் போது வலிப்பு, இசிவு ஏற்படுகிறது. இவ்வாறு மூளையில் நச்சு தாக்கப்படும் நிலைகளுக்கேற்ப இல் பொருட்காட்சி, முன் உணர்குறிகள், எச்சரிக்கை அறிகுறிகள் என்பன உண்டாகின்றன.

***நோய்க்குண உடற் கூறு :***

காக்கை வலிப்பில் குறைந்த அளவு குருதிச் சுற்றோட்டமுள்ள மூளையின் பகுதிகள் சுருக்கமடைகின்றன. சிறுமூளையிலும் சில மாற்றங்கள் உண்டாகின்றன. கோர்த்த ஊதல், முழங்கை மடக்கிப் பேசிகளின் பகுதியில் குருதிச் சிறுகசிவு ஆகிய அறிகுறிகள் காக்கை வலிப்பால் இறந்த ஆளின் சவத்தில் காணலாம்.

***மருத்துவம் :***

காக்கை வலிப்பில் உடனடியாக மூர்ச்சை தெளிவிப்பதற்கான மருத்துவங்களைச் செய்வித்து பீச்சு, கழிச்சல் மருந்துகளைக் கொடுத்து உடலில் தங்கியுள்ள நஞ்சை வெளியாக்க வேண்டும். அறிவுக்கேடும் அதிகமாக அலட்டிக்கொள்ளும் செயலும் காணப்பட்டால் தூக்கமுண்டாக்கி மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பலப்படுத்தும் மருந்துகளைக் கொடுத்து வர வேண்டும். தமரகத் துடிப்பு, மூச்சு, நாடிநிலை இவற்றைக் கவனித்து அவற்றுக்குத் தக்கபடி மருத்துவம் செய்ய வேண்டும். தமரகம் சோர்வுற்றிருந்தால் சிருங்கி, பச்சைக் கர்ப்பூரம் சேர்த்து மருந்துகளைத் தரலாம்.

காக்கை வலிப்புப் பிணியாளர்களைப் பால், பாற்பொருள், மரக்கறி உணவு கொள்ளச் செய்யவேண்டும். உப்பு நீக்க

வேண்டும். நீர்த்துவ உணவுகளை வெகுவாகக் குறைத்துக் கொடுக்கவேண்டும். போதைப் பொருள்கள் நீக்கவேண்டும்.

காக்கை வலிப்புப் பிணியாளரை மிக உயரமான இடத்திலும், நீர், நிலை, நெருப்பு இவற்றின் அருகிலும், ஓடிக்கொண்டிருக்கும் இயந்திரங்களின் பக்கத்தில் வேலை செய்யவோ அனுமதிக்கக் கூடாது.

வலிப்பு தோன்றும்போது பிணியாளியை காயம் ஏற்படா வண்ணம் மிக எச்சரிக்கையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். தலைக்கு கீழே ஒரு தலையணையை வைக்கலாம். கை கால்களைச் சற்று உயரத்துக்குத் தாங்கிக் கொள்வது நல்லது. ஆனால் கை கால்களை மிகவும் அழுத்தி ஒரு நிலைப்படுத்தி வைக்கக் கூடாது. உடைகள், இடுப்புக் கச்சை இருக்கமாக இருந்தால் அவற்றைத் தளர்த்தி விட வேண்டும். பிணியாளி நாவைக் கடித்துக் கொள்ளாதபடி ஒரு கட்டையையாவது ஒரு கம்பில் துணியைச் சுற்றியாவது, அல்லது ஒரு துண்டில் முடிச்சிட்டு அம்முடிச்சையாவது பிணியாளியின் வாயில் ஒரு புறம் பற்களுக்கிடையில் திணித்து வைத்திருக்க வேண்டும். வாயில் உள்ள நுரை தடங்கலின்றிக் கீழே வடியவும், நா அடைத்து மூச்சுத் திணராமல் இருக்கும்படியும் பிணியாளியின் தலையை ஒரு புறமாகச் சாய்த்து வைக்க வேண்டும்.

அரைத்தூக்க அரைவிழிப்பு நிலையிலுள்ள பிணியாளியை மிக எச்சரிக்கையோடு கவனித்துக்கொள்ள வேண்டும், அலட்டலுள்ள பிணியாளியை சில வேளை பலர் உதவி கொண்டு கூட அடக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

காக்கை வலிப்புப் பிணியாளர்களைத் தொடர்ந்து கண்காணித்துப் பிறருடன் சண்டை சச்சரவு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். வலிப்பு நோயின் கீழ்க் கூறப்பட்ட மருத்துவத்தை இதில் கையாளலாம்.

## *உடலுள்ளூறுப்பு நோய்களிலும் தீவிர நுண்ம சஞ்சார நோய்களிலும் காணும் உளப் பிறழ்வுகள்*

சில நோய்களில், பெரும்பாலும் தீவிர நுண்ம சஞ்சார நோய்களில் உளப்பிறழ்வு ஏற்படுகிறது. இவை உளநோய்களை ஒத்த குறிகுணங்களைக் காட்டுகின்றன. வெறியுண்டாக்கும் பொருட்களான சாராயம், கள், காடி, அபினி, கஞ்சா போன்றவைகளாலும் மருந்து நஞ்சு முதலிய வேறு, பொருட்களாலும் உள நரம்புக்கேடுகள் உண்டாகின்றன.

தமரக நோய் கொண்டவரிடம் உற்சாகமின்மை கவலை, பயம், போன்ற உளப்பிறழ்வு நிலை ஏற்படும். இன்னும் நோய் முற்றிய நிலையில் இவர்களுக்கு இல்பொருட்காட்சி ஏற்படுவதும் அறிவுக்கேடு உண்டாவதும் உண்டு. உடலின் பொது நிலையும் குருதிச் சுற்றோட்டமும் இயல்பான நிலையடையும்போது உளப்பிறழ்நிலை மறைந்துவிடும்.

கீல்வாயு, தமரக பிணிகளில் பிணியாளி சிடுசிடுப்பாக, எரிந்துவிழும் தன்மையுடன் இருப்பதையும் பொறுமையின்மை அலறுதல், தூக்கக்குறைவு முதலிய குறிகளைக் கொண்டிருத்தலையும் காணலாம். சிலவேளை இவர்களுக்குத் திரிபுக்காட்சி (ஒன்றை மற்றொன்றாய்க் காணல்) தோன்றும். இது பெரும்பாலும் அந்தி வேளையில் தூக்கம் வருமுன் காணப்படுகிறது. மிகச் சில வாத நோயாளிகளிடம் உள

கன்மேந்திரிய தூண்டல், இல்பொருட்காட்சி, அறிவுக்கேடு என்பன காணுகின்றன.

புற்று நோய்க்கழலை யுள்ளவர்கள் மடமை, பிதற்றல் ஆகிய குறிகுணம் உடையவராய் இருப்பர், இவை மிக முற்றிய நோய்நிலையுள்ளவர்களிடமும், உடல் நச்சுநிலை அடைந்து மெலிந்தவரிடமும் அதிகம் ஏற்படும். பொதுவாக இக்குறிகுணங்கள் அந்தி வேளையில் தோன்றும். அதிக நேரம் இருப்பதில்லை.

உடலை இளைக்கச் செய்யும் குக்கி, குடல் நோய்களில் மந்த குணம், தளர்வு, சோம்பல், தூக்கம், எரிந்துவிழும் தன்மை ஆகியவை உண்டாவதுண்டு. சிறுவர்களில் குடற்கிருமிகளால் காக்கை வலிப்பு போன்ற இசிவுகளும், அறிவுக்கேடும் உண்டாவதுண்டு.

தீவிர நுண்ம சஞ்சார நோய்களான முக்குற்ற சுரம் குளிர் சுரம், புப்புச சுரம் ஆகியவைகளிலும் உளக்கேடுகள் காணும். முக்கியமாக இவற்றில் பிதற்றல் உண்டாகிறது. இதில் அறிவுக்கேடு, இடம், காலம் முதலிய மாறுபட்டுத் தெரிதல் ஆகிய உண்டாகலாம். ஆனால் ஆளுமை மாறுபடுவதில்லை. இல் பொருட்காட்சி, திரிபுக்காட்சி, திரிபுணர்ச்சி தூண்டல்கட்கு வசப்படுதல் ஆகியவும் இதில் முக்கியமானவை. மிக உன்னிப்பாக இப்பிணியாளிகளைக் கவனித்தால் அவர்கள் பயப்படும் படியான உணர்வுகளைக் கொண்டுள்ளதைக் காணலாம். அநேக வேளைகளில் பிணியாளி தன்னை விலங்குகளும், இராக்கத பூதகணங்களும் தாக்குவதாகவும், தன்னைச் சுற்றிலுமுள்ள அனைத்தும் குலைவுற்று அழிவதாகவும் நினைப்பதுண்டு. சிலர் தன்னைக் கெடுக்க

நினைப்பதாகவும், அடிப்பதாகவும், வெட்டுவதாகவும் நினைப்பதுண்டு. பிணியாளியின் முகத்தில பயம் தோன்றும். ஒளிந்துக்கொள்ள முயல்வதும் தப்பிக்க ஓடுவதும் உண்டு. சஞ்சார நோய்களில் காணும் திரிபுணர்ச்சி நிலையானதல்ல. பொதுவாக இவை சுரத்தின் வேகம் அதிகமாய் இருக்கும் போது உண்டாகி சுரம் தணிந்ததும் மறைந்து விடுகின்றன. ஒரு சிலரில் சுரம் ஏற்படுமுன் தோன்றி சுரம் தணிந்த பின்னும் நிலைத்திருக்கும், சில நாட்களில் இந்நிலைகள் மாறி முழுக்குணம் காண்பது இயல்பு. சில வேளை பொதுவான மனத்தளர்ச்சி, சிறு திரிபுணர்ச்சி ஆகிய எஞ்சுவதுண்டு. இவ்வகை எஞ்சலும் சில நாட்களில் மறைந்துவிடும். நோய் குணமான பின் தான் உணர்ந்த உணர்வுகளையும் பிணியாளனால் கூற முடியும்.

சஞ்சார நோய்களில் அறிவுக்கேடு அதிக அளவு காணப்பட்டால் அவர்களிடம் மடமை அல்லது அதிக குழப்பநிலை காணப்படுகிறது. பிதற்றலில் போலவே இதிலும் இல்பொருட்காட்சி, திரிபுக்காட்சி, சிறிதளவு திரிபுணர்ச்சி என்பவை தோன்றும், சூழ்நிலையோடு பிணியாளி தொடர்பு படுவதில்லை தன்னுடைய பெயரைக்கூட சொல்லவும் முடிவதில்லை.

சில நோயாளிகளை அவர்கள் பிதற்றல் நிலையில் உள்ளார்களா அல்லது மடமை நிலையில் உள்ளார்களா என்று வேறுபடுத்திக் கணிப்பது எளிதானதாய் இராது. இவர்கள் இரண்டும் கலந்த நிலையில் இருப்பார்கள். ஆனால் முழுதுமாக ஒரே பொருளாக அதைக் காண்பதில்லை. பிதற்றலில் போலவே மடமை நிலையிலும் கன்மேந்திரிய உணர்ச்சி தூண்டப் பட்டிருக்கும். நோயாளி அலறுதலும் மருத்துவத்துறை

கூடத்திலிருந்து ஓடிவிட முயற்சிப்பதும், தாறுமாறான நடத்தையுடையவனாய் இருப்பதும் உண்டு. மடமை நிலையின் முடிவில் கடந்த கால நினைவுகள் இருப்பதில்லை. இது பல வாரங்கள் தொடர்ந்து காணப்படலாம். தீவிர சஞ்சார நோய்களால் உண்டான உளப்பிறழ்வின் பின் அல்லது நோயின் பின் பல பிணியாளிகள் மனத்தளர்வு அடைவதுண்டு மந்தம், சோம்பல் எரிந்துவிழும் தன்மை, சிடுசிடுப்பு, தலைவலி ஆகியவையும் காணப்படலாம், சிறிது பேசினாலும், சிறு வேலை செய்தாலும் கூட இவர்கள் அதிக களைப்படைவர். மனதை ஒருமைப்படுத்த இவர்களால் முடிவதில்லை. உடல் இளைத்திருப்பர். எடுத்ததற்கெல்லாம் அலறுவர். அதிக ஒலி, ஒளி என்பன இவர்களை களைப்படையச் செய்யும்; மறதி அதிகமிருக்கும். உடல் வன்மைக் குறைவு மறையும் போது இவைகளும் மறைந்துவிடுகின்றன.

***மருத்துவம் :***

பிதற்றல் அல்லது மடமை நிலை ஏற்பட்டாலும் கூட முதல் நோய்க்கான மருத்துவங்களை விடாது செய்யவேண்டும். இவ்வகைப் பிணியாளர்களை உளப்பிறழ்வு மருத்துவமனைக்கு அனுப்பிவிடக்கூடாது. உடலில் தேங்கி யுள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்ற பீச்சு, கழிச்சலைச் செய்யலாம். உறக்கமுண்டாக்கும் மருந்துகளை உளத்தை அமைதிப்படுத்துவதற்காக கொடுக்க வேண்டும். தமரகம், மூச்சு இவைகளைக் கவனித்து அவற்றிற்கு தக்க மருந்து கொடுக்க வேண்டும். ஒரு நாளின் முழு நேரமும் இப்பிணியாளரை உன்னிப்பாக கவனித்துக் கொள்ள வேண்டும். மற்றும் பிரமி வழுக்கையைக் கொண்டு செய்யப்படுகின்ற நெய்யை வேளைக்கு 8 முதல் 15 மி.லி வீதம் கொடுத்துவர காக்கைவலி

முதலிய வலிப்பு நோய்கள், சூதக சன்னி, மறதி, பித்தாதிக்க உளப்பிறழ்வு நோய்கள் (Lunacy) நீங்கும்.

காக்கை வலிப்பு நோயிலும், கர்ப்பிணிக்கும் வல்லாரை சம்பந்தப்பட்ட மருந்துகளை அறவே வழங்கக் கூடாது. வழங்கினால் வலிப்புமிகும், கர்ப்பம் அழியும் என்று பல ஆய்வுகளின் மூலம் அறிகின்றோம்.

## Treatment for Abasmaram

## (Epilepsy-Ayur)

Ref : Ayur College annual - "68"- 69

### Trade Name ""Eptol "

### Tantu Pashana Compound (Kalnar)

(Sagar Pharmaceuticals, Gandhi mansion
II Floor, Opp Kalbadevi Post Office,
Bombay - 2)

Composition :

No. 1. Asbestos (Tantu pashana) Bhasma, Pepper Chavya, pearl Bhasma.

No. 2. Asbestos Bhasma pepper, Ajwan, Shankha Pushpi, Vacha, Mamsi, Kushta, Saindhva and Aswagandha Action of the drug; Tantu Pashana dries up the extra water content in the brain and nerve cells (Kapha) Clears the obstruction in them regulates the excretion of waste products corrects functional disturbances (brings the vitiated Dosha back to normal function) increase the resistive power, against further

irritation and excitability and progressively controls epileptic seizures. It has Vata Kapha bara property.

This drug is non toxic and can be used in all types of Epilepsies, mental retardation, Involuntary walking and speaking during sleep mental exhaustion Schizophrenia and allied brain and mental disorders.

1983 ஆண்டு பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய மனநோய் நிபுணர்களின் மாநாட்டுக் கருத்தரங்கில் ''சித்தமருத்துவத்தில் மன நோய்கள்'' பற்றி டாக்டர் பி. ஜெயராம கிருஷ்ணன் ஒரு கட்டுரையை வெளியிட்டார்கள். அக்கட்டுரையின் ஒரு பகுதியில் கிரிகை, வலி, சூதிகாவாதம் முதலிய நோய்களின் குறிகுணங்களை ஆங்கில மருத்துவத்துடன் ஒப்பிட்டு நோய்களின் பாகுபாட்டை அருமையாக கூறியிருக்கின்றார்கள். அது கீழ்வருமாறு ஆங்கிலத்திலேயே கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு கொள்க.

# Psychiatry in Siddha (Tamil) System of Medicine

Dr. **T. Jayaramakrishnan,** M.B.B.S., D.P.M.,
Tutor in Psychiatry, Institute of Mental Health, Madras-10.

Dr. **O. Somasundaram,** M.B.B.S., D.P.M, FRC (PSY).,
Professor, Dept. of Psychiatry, Madras Medical College & Superintendent, Institute of Mental Health, Madras - 10.

## Kirigai Maruthuvam

Kirigai Maruthuvam, the psychiatry in Siddha System of Medicine is profounded by several Siddhars of whom the most important ones are Agasthiyar, Yoogi and Theraiyar. Their descriptions are phenomenological. The unifying factor in Siddha psychiatry is the importance laid on the imbalance of three humours, especially are predominance of Azhal humour over the other two.

## General Etiology of Mental Diseases :

The Siddhars approved of the possible predisposition to mental illness due to constitutional make up, seasonal variation and other variables like dietary habits, age and sex of individuals. They discarded the theory of demonology with which the west was plagued for several centuries. Siddhars approach is more scientific and could be seen from the etiology enumerated by them

just to highlight one of them. We enumerate the etiological descriptions of mental illness as given by Agasthiyar in his work-Agasthiya Kanagamani Nooru. The description encompasses hereditary environmental, socio-cultural, physiological, toxic and psycological spheres.

Etiological cluster is classified for the sake of convenience under known spheres. A beautiful etiology of mental illness has been given in Agasthiyar Kanagamani-100.

The following are the causes described. Excessive anger, sexual perversion, impounding guilt, offensive smell and fumes of cremation, sleeplessness. conflict, agitation and worry. Sudden loss of wealth due to robbery, fear of enemy, exhaustion due to wandering, excessive sailing, toxic substances, loathing or experience at the sight of impure and disgusting object or scene, constant suffering due to antisocial element bereavement excessive desire and improper practice of Raja Yoga, drug dependence like ganja and abini. Curse due to godman, or ascetic blame worthy activity, fear of higher authority, exposure of ones fraudulant deceitful, cruel, malicious and cunning activities, forceful retention of urine and motion, deceiving and ruining a refuge, off-shoots of karma of previous incarnation and seasonal changes.

## Clinical Varieties :

Siddha system of medicine as already discussed, classified the clinical variety of mental illness based on the symptomatology. A closer scrutiny reveals a very good scope of correlation with modern clinical variety of mental illness like schizophrenia, mania, depression, convulsive disorders, neurotic illness. drug dependence, toxic psychosis etc., In Siddha system of medicine many treatises are available on clinical varieties. Among them

Agasthiyar Manidar Kirigai Nool - 64 and Yoogi Chinthamani - 800 are noteworthy.

## Kirigai Nool - 64

The authorship of this book is ascribed to Sage Agasthiyar the Father of Tamil Siddha Medicine. This book exclusively deals about 18 varieties of functional psychosis. It is mainly of phenomenological description of mental illness. A close scrutiny of this book reveals the description of schizophrenias and maniac excitement.

## Schizophrenia :

1. **Catatonic Withdrawal State** Among the 18 varieties mentioned, the 4th VADHAKIRIGAI the 5th SLETPANA KIRIGAI the 13th ALARKIRIGAI and 15th MOODU KIRIGAI describe the clinical symptoms of catatonic withdrawal state.

# Catatonic Withdrawal

### 1. Vaada Kirigai :

Eyes shall be shut
Mute shall be remain
Shall rise up to lie again
His teeth shall he grind
Cold remains his body be.

### 2. Sletpana Kirigai :

Shall roll his eyes up
Shall yawn and shed tears

Shall mutter and bang floor
Shall make signs with fingers and limbs.

**3. Alar Kirigai :**

With eyes shut inert he be
Without purpose shall be yell.

**4. Moodu Kirigai :**

Body benumbed in cold
Be mute & hold the breath.

The symptoms described are :

**Mutism :**

lying on the floor, chillness of the body, wandering grinding the teeth. beating on the floor, weeping and muttering at times, mannerism, sleeplessness, bewildered look frequent removal of clothes, and standing naked.

**Catatonic Excitement**

The 12th variety MUNANGAL KIRIAGAI the 16th variety VALIPPU KIRIGAI and the 18th one PEIPIDI KIRIGAI describe the clinical symptoms like talking to himself shouting at others, mannerism, restlessness, running here and there, wandering, tearing of clothes, abusing and biting others, rolling on the floor etc.,

## Catatonic Excitement

### Munangal Kirigai

Clench would he his fingers,
and meaningless his talk be
often he cries, tears he sheds
restless would he remain
sleepless on the main.

### Valippu Kirigai

Uncontrolled his body shall move,
Meaningless his talk shall be
with veins pounding shall he yell
moving his head dance shall he

### Peipidi Kirigai

Shall aimless in sepulchre run
Shout for help, on own face slap.
shall over ashes roll and clothes tear
shall devils name call,
bite and suck the blood of all.

### Chronic schizophrenia :

The following varieties 1. ANAL KIRIGAI 2. PITTHA KIRIGAI 3. ECHIL KIRIGAI 7. BOODHA KIRIGAI 8. JALA KIRIGAI 10. KALLERI KIRIGAI and 11. KUMBIDU KIRIGAI describe the features of chronic schizophrenia like saluting other men and even animals collecting and eating rubbish, tearing the clothes and becoming

naked, smearing the motion and urine over the body rolling on the rubbish, banging on the wall, pouring water on his head, drenching in the rain, obeying the commands of others blindly, neglecting food and hygiene, biting others, pelting stones, weeping, abusing and assaulting others etc.,

## Chronic Schizophrenia

### 1. Anal Kirigai

Runs amack in wilderness
in salute to any - bends all over
and shall eat the left over.

### 2. Pitha Kirigai

He with reasoning devoid
shall tear all his dresses
on his nakedness smear faeces
and almless shall he roll in mud.

### 3. Echil Kirigai

Faeces shall he eat
Knock his head on floor
drench himself in rain
would eat also ashes
and,
on his head water he splashes.

### 4. Boodha Kirigai

Grumble and other 's he bite
roll shall he on ashes,
on his head he flings waste
froths in mouth in gashes
and dances in poor taste.

### 5. Jala Kirigai

To water shall he flee
swim & roll in total glee.

### 6. Kalleri Kirigai

Shall shut eyes & grumble
shall cry and stones pelt
in water shall he drench
run and nude remain
shall ever lie and children bite.

### 7. Kumbidu Kirigai

Salutes all and gluts food
commands he obeys blind
roads and hits woman and child.

### Mania :

The 6th variety NADHAVINDHU KIRIGAI, the 9th variety MOHINI KIRIGAI, 14th variety MARUTTU KIRIGAI and the 17th one NEERKUDI KIRIGAI describes the symptoms of maniac excitement like embracing others, angry with the crowd, running,

jumping and wandering tendencies, spitting on others, abusing, sexual aggression, laughing on seeing females, excessive talking, neglecting food, exhilaration, making fun of others, dancing and singing etc.

## Manic Excitement

### 1. Nadavindu Kirigai

Shall he embrace the rest
his anger theyy would incur
at others shall he knock
like fugitive would he run
on the face would he spit.

### 2. Mohini Kirigai

Abuse would he at others
also his Nadavindu increase
at woman shall he laugh
would he grumble profuse
To eat shall he refuse.

### 3. Maruttu Kirigai

Shall wink eyes in acceptance
and call strangers as if known
shall sing, Make fun, undress
gulp water in excess.

### 4. Neerkudi Kirigai

Water he gulps in excess and vomits
with eyes sunken he fails to eat
nods his head-hums, sings and dances.

## Yoogi Chinthamani - 800

The book yoogi chinthamani - 800, Written by YOOGI siddhar elaborately "deals with both physical and mental illness. It describes functional psychosis, neurosis, somatoform disorders toxic psychosis etc.

The catatonic withdrawal symptoms are described under the heading Veri Azhal Noi and Thamandha Azhal Noy. The symptoms of catatonic excitement are described in Peru Iyya Noy. Chronic schizophrenia is described in Moodu Pitham. Maniac Excitement is described in stanzas under the heading Azhal Pitham, Odu pitham, Markkapitham and VeriIyyam. The symptoms of maniac excitement like dancing jumping, singing, making fun of others. gradiocity, excessive sexual play, wandering tendencies aggression, abusing others, dryness of mouth. discolouration of skin and exhaustion are described in these stanzas.

## Depressive Psychosis

The symptoms of psychotic depression is described vividly under the heading Vihara Pitham. The symptoms described are : sitting alone, not talking with anybody, dehydration, loss of energy, loss of courage, loss of appetite, wandering at times,

sleeplessness, frequent loss of memory and hypochondriacal symptoms.

## Toxic Psychosis :

Under Nanju vali toxic psychosis due to extraneous poison is described, Symptoms like perceptual distrubances, fear, restlessness, beweilderment and symptoms of other delusional features are described.

## Vihara Pitham (Depressive Psychosis)

Sleepless he remains, dejected
speech and food rejected
eyes bloody, anxiety ridden
body painful so pale and dry
he vomits and is giddy
saliv drools in plenty
loaded is he with sadness
so manifest vihara pitham.

## Nanju Vali (Toxic Psychosis)

Substnaces toxic when taken in
causes swooning with sense five lost
his intellect shall blur
in panic he shall wander
nerves stiffen and emptily stare
so shall manifest nanjuvali.

## Neurosis :

Neurotic condition like hysteria and depression are described under Thimir vali and Manovali.

## Hysteria :

Under Thimirvali and lucid description of hysteria can be seen. Symptoms like standing with folded upperlimbs restlessness, bleching, laughing, dancing and singing frequent change of posture, embracing others, sleeplessness etc described.

## Neurotic depression :

Under Manovali the causes for Neurotic depression with symptoms have been described.

## Thimir vali (Hysterical reaction)

With folded hands, yawn-ceaseless
she smiles so haughty, dances careless
Restless she stands, walks in circles
Nervousness thus afflicts the lady
Causes her to be awake day and night
And hold on to people with all her might
So shall manifest thimirvali.

## Mano vali (Reactive Depression)

Death of one's spouse loved
And loss of material unbound

Shall cause him to lose his head,
Shed tears and at time roll
His words shall confused
Like sage calm remain
And shall laugh and cry.
So shall manifest monovali.

In addition to these Neurotic conditions mixed Neurotic state with anxiety-Hypochondriacal features are also described : Symptoms like uneasy feeling, pain in the lower abdomen, epigastric region an dhypochondrium headache. pain in the joints, dryness of mouth, shivering of the body tremors of hands, palpitation, sweating, diarrhoeas, choking sensation in the chest and inability to do anything have been described. This book describes chronic mental illness also under the heading Theera pitham.

## Convulsive Disorders :

A classical description of convulsive disorder is available in Siddha Medical Literature different varieties of convulsive disorders have been described with a note of general etiological factors for them. Among them, certain important convulsive disorders are highlighted here.

### 1. Grandmal Epilepsy

Under Kakki vali, the following symptoms are described : staring look, dryness of mouth, irrelevant talk, increased pharyngeal secretion, rolling of eyeball upwards, tonicity of limbs, generalised convulsion with frothing in the mouth and incontinence of urine and motion.

## 2. Partial adversive seizure :

Under the heading "Muppini vali' the description of symptoms like pulling of tongue inside and facial muscles to one side, rotation of the neck to lateral side etc., have been described.

### Kakkai vali (Grandmal Epilepsy)

Empty stare with eyes rolled up
Talk slurs when tongue dries up
Throat filled with phlegm in excess
Limbs go stiff, consciousness lost
Like gale follows convulsions fast
Motion and urine unaware passed
Drenched in sweat remains he
Who suffers from kakkai vali.

### Muppini vali (Partial and adversive seizure)

When vali, Azhal and Iyyam befour
His eyes rollup and chin deviates
Shoulder raises to merge with face
Neck stiffened with pulling nerves
Causing pain and Giddiness-Known.
Tongue twists and gets pulled in
Mouth, eyes and ears lateral drawn
Thus Manifests Muppini vali.

## 3. Reflex Epilepsy :

Under the heading "Muyal vali 'a nice description of Reflext Epilepsy precipitated by hot water is given. According to the

verse, this type of eplipsy starts by the contact of hot water either by look or pouring the hot water on the head. Convulsion first starts on the facial muscles, with frothing in the mouth. Later develops into a generalised one.

## 4. Febrile fits :

Under "Sura vali 'and "Iyya Vali' the description of Febrile fits is seen The former refers the state of fever with convulsion and the later refers the state of convulsion with upper respiratory infection

In addition to the above said convulsive disorders, the Siddha describe under "Marana Vali 'the state of terminal anoxic fits.

# வர்மம்

*முன்னுரை:*

உயிரினங்களின் உடலில் பேசிகள், தசிரங்கள் நரம்புகள், என்புகள், பொருத்துகள், விசிகள் ஆகியன எவ்வெவ்விடத்தில் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கின்றனவோ அவ்வவ்விடங்களில் பிராணன் அடங்கிக் கிடக்கும். இது அமிர்தநிலைகள் என்றும் மர்ம நிலைகள் என்றும் கூறப்படும். இவ்விடங்களில் தாக்கு, காயம், குத்து, வெட்டு, தட்டு, இடி, உதைபடும்போது வலி, விதனம், வீக்கம், இரத்தம் வெளிப்படுதல், மரத்துப்போதல், உறுப்புகள் செயலிழத்தலோடு மரணமும் சம்பவிக்கும். இதனைக் காயம் பட்டிருக்கிறது அல்லது வர்மம் கொண்டிருக்கிறது என்று கூறலாம். இத்துன்பத்தை நீக்கும் மருத்துவ முறைகளுக்கு **வர்ம பரிகாரம்** அல்லது ***'வர்மாணி'*** என்று வழங்கப்படுகிறது. ***'வர்மம்'*** இதுவே காலம். இச்சொல் மர்மத்திலிருந்து வந்தது. மர்மம் என்பது மறை பொருள் அல்லது இரகசியம். இவ்வர்மக் கலை மர்மக்கலைச் சொற்களையுடையது. இக்கலை ஜப்பானியர்களின் ஜூடோ முறைகளை ஓரளவுக்கு ஒக்கும். ஜூடோ முறை தற்காப்பிற்கும் பிறரைத் தாக்கவும் தான் பயன்படுகிறது. வர்மக்கலை கூடுதலாக மிஞ்சி காயப்பட்டு, அதனால் ஏற்படுகின்ற துன்பங்களையும் கேடுகளையும் சிறந்த பரிகாரமுறைகளின் உதவி கொண்டு நிவாரணம் அளிக்கப் பயன்படுகின்றது. இக்கலையைக் கையாள்பவர்களால்தான் முழுதும் புரிந்து கொள்ள முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே சிறப்பாகக் கையாண்டு வரப்படுகின்ற இவ்வருமை வாய்ந்த கலை பிற இடங்களுக்குப்

பரவாத காரணங்கள் பல உண்டு. இக்கலை அறிந்தவர்கள் இரகசியமாக வைத்திருப்பதும் தங்களிடமுள்ள சுவடிகளை அச்சேற்றி வெளியிடாததும் தான். இக்கலை பயின்றவர்களில் பலர் சீவராசிகளிடம் பேர் இரக்கமும், அன்பும் கொண்டவர்கள். இவர்கள் குருவையும் தெய்வத்தையும் பணிந்து அடக்கம், அமைதி, நல்லொழுக்கம் கொண்டும் வர்மத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் செய்து வர்மத்தால் நேரிடும் துயரத்தைத் தீர்ப்பர். முரண்பட்டவர்கள் வர்மவித்தை கற்றிருக்கிறோம் என்று ஆணவமடைந்து சண்டாள கோபம் கொண்டு முன், பின் முறை பாராது மனதில் ஆங்காரம் கொண்டு நல்லவர்கள், பெரியவர்கள் ஏழைகளுக்கு ஈடுசெய்து இன்னலை விளைவிப்பர். அதனால் வித்தைக்கும் தனக்கும் இழிவைத் தேடிடுவர் அதனால் நம் முன்னோர் இக்கலையை பரம்பரையாக தங்கள் குடும்பங்களிலேயே பிறருக்குச் சொல்லிக் கொடுக்காமல் கையாண்ட காரணத்தினாலும் பரவவில்லை எனலாம்.

## *வர்மாணிக்கலை சார்ந்த மூல நூல்கள்*

இக்கலையைப் பற்றிய பல சிறந்த நூல்கள் இன்னும் ஏட்டுப் பிரதியாய் அச்சாகாமல் அழிவெய்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக திரு. ஜா. மரிய மைக்கேல் ஆசான், பராசக்தி வைத்தியசாலை, 53, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி 6 அவர்களிடம் கீழ்கண்ட வர்மத்தைப் பற்றிய 72 நூற்கள் இருப்பதாக ஒரு பட்டியலை டாக்டர் திரு. மு. இரமணன் அவர்கள் தயாரித்துக் கொடுத்துள்ளார்கள். அவர்கள் தந்துள்ள நூற்பட்டியல் வருமாறு .

1. வர்ம குருநூல் சூத்திரம் . . . . . . . . . . . . . . . . 101
2. வர்ம சிந்தாமணிச் சூத்திரம் . . . . . . . . . . . . . . 101

3. வர்ம ஊசி சூத்திரம் . . . . . . . . . . 140

4. வர்ம அளவு சூத்திரம்

5. வர்ம விரற்கடை சூத்திரம்

6. வர்ம சூட்சம் . . . . . . . . . . 170

7. வர்ம கண்டி . . . . . . . . . . 60

8. வர்ம அமுதநிலை சூத்திரம் . . . . . . . . . . 8

9. வர்ம கலசச் சூத்திரம் . . . . . . . . . . 1

10. வர்ம பீரங்கிச் சூத்திரம் . . . . . . . . . . 101

11. வர்ம ஏணிச் சூத்திரம் . . . . . . . . . . 12

12. வர்மக் கண்ணாடிச் சூத்திரம் . . . . . . . . . . 500

13. வர்மக் கண்ணாடிச் சுருக்கம் . . . . . . . . . . 70

14. அமுத வர்ம சூத்திரம்

15. வர்ம ஆணிச் சூத்திரம் . . . . . . . . . . 101

16. வர்ம ஆணி அடிச் சுருக்கம் . . . . . . . . . . 12

17. வர்ம கருப்பிணி இளக்கு . . . . . . . . . . 6

18. வர்ம அரம் . . . . . . . . . . 6

19. பாதாள வர்மாணி . . . . . . . . . . 102

20. வர்ம விரல் அளவு . . . . . . . . . . 101

21. வர்ம சர்வாங்க அளவு . . . . . . . . . . 101

22. வர்ம உரை நூல் . . . . . . . . . . 101

| | | |
|---|---|---|
| 23. | வர்மக் கைவல்லியம் | 51 |
| 24. | வர்ம நிதானம் | 32 |
| 25. | கும்பமுனி நாலு மாத்திரை | |
| 26. | போகர் நாலு மாத்திரை | |
| 27. | கலாங்கி நாலு மாத்திரை | |
| 28. | அனுபோக நாலு மாத்திரை | |
| 29. | வர்ம நேர் நூல் | 51 |
| 30. | வர்ம வைத்தியம் | 50 |
| 31. | வர்ம வைத்தியம் | 40 |
| 32. | வர்மத்தடவு | 16 |
| 33. | வர்மத் தட்டு | 8 |
| 34. | வர்மத் திறவுகோல் | 32 |
| 35. | வர்மத்திறவு கோல் | 16 |
| 36. | வர்மத்திறவு கோல் | 12 |
| 37. | வர்ம அடங்கல் | 56 |
| 38. | வர்ம அடங்கல் | 51 |
| 39. | வர்மப் பொன்னூசித் திறவுகோல் | 16 |
| 40. | வர்ம வில்விசை | 108 |
| 41. | வர்ம சூத்திர நிகண்டகராதி | |
| 42. | வர்ம அணுப்பிரமாணம் | |

43. ஒடிவு முறிவு ஞானநூல்

44. படுவர்மநூல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 12

45. படுவர்ம நூல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 16

46. படுவர்ம நூல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18

47. உள் வர்ம சூத்திரம் . . . . . . . . . . . . . . . . . . . . . 6

48. உள் வர்ம குறி சூத்திரம் . . . . . . . . . . . . . . . . . 12

49. வர்ம குரு நாடி சூத்திரம் . . . . . . . . . . . . . . . . 32

50 வர்ம குரு நாடிசூத்திரம் . . . . . . . . . . . . . . . . . 20

51. வர்ம சோதனைச் சூத்திரம் . . . . . . . . . . . . . . . . 12

52. வர்ம விடைச் சூத்திரம் . . . . . . . . . . . . . . . . . . 12

53. வர்ம சாத்திய சூத்திரம் . . . . . . . . . . . . . . . . . . 1

54. வர்ம அசாத்திய சூத்திரம் . . . . . . . . . . . . . . . . . 1

55. வர்ம வைத்திய பல திரட்டு உரை நடைநூல் . . . . . . 100

56. வர்மச் சுவடு நூல் . . . . . . . . . . . . . . . . . . . . . . 12

57. வர்மக் கைபாகச் சூத்திரம் . . . . . . . . . . . . . . . . 6

58. வர்மச் செய்பாகச் சூத்திரம் . . . . . . . . . . . . . . . 9

59. வர்மத்தைலச் சூத்திரம் . . . . . . . . . . . . . . . . . . 100

60. வர்ம ஊண்மாத்திரை . . . . . . . . . . . . . . . . . . . . 8

61. வர்ம சர்வாங்க நூல் . . . . . . . . . . . . . . . . . . . . 1

62. வர்ம சாச்சை செவுடு நூல் . . . . . . . . . . . . . . . . 1

63. வர்மத்தட்டுச் செவுடு நூல் . . . . . . . . . . . . . . . 1

64. வர்ம குறுந்தடிச் சாத்திரம் . . . . . . . . . . . . . . . 12

65. வர்ம நெடுத்தடிமுறை நூல் . . . . . . . . . . . . . . . 32

66. வர்மப் பிடிமுறை நூல் . . . . . . . . . . . . . . . 21

67. வர்ம நாடி இரகசியம் . . . . . . . . . . . . . . . 1

68. வர்ம சவுட்டு முறை . . . . . . . . . . . . . . . 5

69. வர்ம வாழைமரச் சோதனை

70. வர்ம அடங்கல் இரசியம் . . . . . . . . . . . . . . . 1

71. வர்ம ஊற்று முறை

72. வர்ம அஞ்செழுத்து ஊதல்.

சித்த மகுடபிரசுரகர்த்தர் திரு. ***எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை*** பி.ஏ.பி.காம்., எம்.எல்.பி., எம்.ஐ.பி.எஸ்., (லண்டன்) அவர்கள் அச்சிட்டு வெளியிட்டிருக்கிற நூல்கள் கீழ்வருமாறு:

1. வர்ம நூட்சம்
2. வர்மாணித்திறவு கோல்
3. படுவர் மத்திரட்டு
4. தொடுவர்மத்திறவு கோல்
5. வர்மத் தீர்ப்பு
6. வர்மக் கைமுறை ஏடு

மற்றும் அவர்களிடமிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள பிறவர்ம நூல்கள் கீழ்வருமாறு:

1. எலும்புமுறிவுசாரி
2. சிற்றின்பவர்மம் (குடோரிவர் நூல்)
3. படுவர்ம நிதானம் (சண்டாபதி நூல்)
4. உயிருபாதி
5. உடலுபாதி
6. உயிருடலுபாதி நிலையங்கள்
7. வர்ம விமானம்
8. ஈட்டு நிதானம்
9. இலக்கு நூல்
10. வர்மசாத்திர மாத்திரை நூல்
11. பீரங்கில் (மருந்துகள் தயாரிக்கும் முறைகள்)
12. அடங்கல்
13. வர்மரெத்தினம் போன்ற பல நூல்கள்வர்மாணியின் முழுமையான மருத்துவத்தை விளக்குகின்றன என்று கூறியிருக்கின்றார்கள்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் யாழ்பாணத்தில் அந்நூல்கள் கிடைத்தன, வடமொழி நூல்களாகிய சரகத்திலும் சுசுருதத்திலும் வர்மத்தைப் பற்றிக் காணப்படினும் தமிழ் நூல்களிலே காணப்படும் அளவு விரிவாகவும் நுட்பமாகவும் வழக்கில் உள்ளதாகவும் இல்லை என்று தெரிய வருகின்றது.

1. போகர் வர்மசூத்திரம் 131 என்ற நூலும், 2 வர்ம விதி என்ற மற்றொரு நூலும் என்னால் வெளிவந்துள்ளன.

## வர்மாணிக் கலையின் அருமை பெருமைகள்

இக்கலையின் அருமை பெருமைகளை எளிதில் அறிய மிக உபயோகமாயிருக்கும் பொருட்டு வர்மாணிக்கலை நிபுணர்களின் மூன்று உரைநடைக் கட்டுரைகள் இங்கு இணைக்கப் பெற்றிருக்கின்றன.

1. சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது வெளியிடப் பெற்ற சிறப்பு மலரில் வெளி வந்த வர்ம வைத்தியர் காட்டுக்கடைத் தேவசகாயம் ஆசானால் எழுதப் பெற்றது.

2. டாக்டர். எம். மரிய லாரன்ஸ் B.I.M. அவர்களால் பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி ஆண்டு மலரில் வெளியிடப் பெற்றது.

3. வைத்திய ரத்தினம் டாக்டர் P. கேசவப் பிள்ளை R.I.M.P. திருநெல்வேலி அவர்களால் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சித்த மருத்துவக் கருத்தரங்கில் வெளியிடப்பெற்றது.

### சித்த வைத்தியத்தில் வர்ம பரிகாரம்

வர்மவைத்தியர் திரு. தேவசகாயம் ஆசான், காட்டுக்கடை.

சித்த வைத்தியம் தமிழ் வைத்தியமாகும். தொன்மையுள் தொன்மையான இந்தியப் பெருநாட்டில் அண்மை காலம் வரை வெகுவாக வழங்கிவந்த இம்மருத்துவ முறை நம் நாட்டிற்கே உரிய

தனிச்சிறப்பு வாய்ந்தது. தமிழ் நாட்டுப் பண்டைச் சித்தர்கள் இதனைத் தமிழ் மொழியில் உருவாக்கித் தந்துள்ளனர் உண்மைத் தவநெறியில் பிறழாது உன்னத நிலையில் வாழ்ந்த சித்தர்கள் தங்கள் அருள் ஞான அறிவால் அதனை நன்கு உணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அவர்கள் கூற்றுக்கள் அனுமானங்கள் அல்ல, மறக்கமுடியாத அனுபவ உண்மைகள். நாளுக்கு நாள் மாறக்கூடியவை அல்ல, நாள் எல்லைக்குள்ளும் நாழிகை வரையறைக்குள்ளும் தீர்க்கக்கூடியவை.

இம்மருத்துவ இயல் தமிழ் மண்ணிற்கேற்பவும் இங்குள்ள தட்ப வெட்ப நிலைக்கு ஏற்பவும் பல்வேறுபட்ட இயற்கைப் பொருட்களைக் கொண்டு பிணிகளை நீக்குவதற்கென்று உருவாக்கப்பட்டுள்ளதாகும். ஆயின் எல்லோரும் இதனால் கிடைக்கும் குணத்தினை சுலபமாகப் பெற்றுக்கொள்ள இயலும். உலகெங்கும் எடுத்துச் செல்லவும் இயலும். உஷ்ணத்தினால், மேகவேட்கையால், கவலையால், யூகமது பல நினைவினால், உணவின்மையால், மனக்கவலையால் இவை போன்ற பல்வேறுபட்ட காரணங்களால் ஏற்படுகின்ற நோய்களுக்கு இவ்வியல் பரிகாரம் காணுகின்றது. இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, பிசின், காய், பழம், வித்து முதலியவைகளைக் கொண்டும் நவரெத்தின, நவலோகங்களைக் கொண்டும், இரசம், கந்தகம், காந்தம், கற்பூரம், தாரம், அயம், கிட்டம், பவழம், அன்னபேதி, துருசு, முதலியவைகளைக் கொண்டும், திரிகடுகு, திரிசாதி, திரிபலை அரிசி வகை ஆறு போன்ற பல அங்காடி மருந்து வகைகளைக் கொண்டும், பற்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குழித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு

வகைகளாக வியாதிகளுக்கு ஏற்றவாறு செய்பவைகளைக் கொண்டும், நல்ல தண்ணீர், கடல் தண்ணீர், காடித்தண்ணீர், கடுக்குத்தண்ணீர், கதம்பைச்சாறு முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும். பால், தேன், சீனி, நெய் முதலியவைகளைக் கொண்டும் தெங்கு, புங்கு, புன்னை, வேம்பு, எள் முதலிய பல தாவர எண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற மருத்துவ முறையாகும்.

சித்தர்கள் வியாதிகளின் மூலகாரணங்களில் கவனம் செலுத்தி அவைகளைப் பல பகுதிகளாகப் பிரித்து அவைகளுக்குரிய பரிகாரத்தையும தெளிவாகக் கூறியிருக்கின்றனர். அவைகளில் வர்ம பரிகாரம் என்பது ஒன்றாகும், குமரி மாவட்டத்தில் வாழ்வு பெற்று விளங்கும் இப்பரிகாரம் சித்த வைத்தியத்தில் ஒரு பெரும் பிரிவினைச்சாரும். அதனைப் பற்றி இங்கு காண்போம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வந்து பழகியவர்களுக்கு ஆசான், வர்மாணி என்ற சொற்கள் புதியவை அல்ல. ஆசான் என்ற உடன் அவர்களுக்கு எழுத்தறிவிக்கும் ஆசரியர் தான் நினைவிற்கு வர முடியும். வர்மாணி என்றால் ஒரு வகை ஆணி என்று கூடத் தோன்றும். சிறிது பழகிய பின் தான் இரண்டு சொற்களும் வர்ம பரிகாரம் செய்யும் மருத்துவரைக் குறிக்கும் என்று உணர்வார்கள்.

வர்ம பரிகாரம் என்றால் என்ன? அது வந்த வரலாறு யாது? அவற்றைப் பற்றி அறிய நமக்கு ஆர்வம் உண்டாவது இயற்கையே, வர்மம் என்றால் என்ன என்பதற்கு ''முறிவுசாரி'' என்ற நூல் இவ்வாறு விடையளிக்கிறது.

*''கேளப்பா தடியடிகள் படுதலாலும்*

*கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்*

*வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்,*

*மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்,*

*மேலப்பா ஆகாசமதிலே நின்று*

*மெய் மறந்து கைமறந்து விழுதலாலும்,*

*தாளப்பா பற்பலவாம் விதத்திலே*

*சங்கை யில்லாக் காலமது சாருந்தானே''*

காலம் என்பது தான் வர்மம், அதாவது நரம்புகளில் தட்டுதலுற்று உணர்விழப்பதுதான். ஆனால் எல்லா நரம்புகளிலும் தட்டுப்பட்டால் வர்மம் கொள்ளுவதில்லை. குறிப்பிட்ட நரம்பின் எல்லா இடங்களிலும், தட்டுப்பட்டாலும் வர்மங் கொள்வதில்லை. தட்டுதல் எப்படிப்பட்டதாயிருந்தாலும் வர்மம் இல்லை. சுருக்கமாகச் சொன்னால், குறிப்பிட்ட சில நரம்புகளில் குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட அளவில் தட்டுப்பட்டால்தான் ஒருவர் உணர்விழப்பார். அவருக்கு வர்மம் அல்லது காயம் கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

வர்மம் என்ற சொல் மர்மத்திலிருந்து வந்தது என்று சொல்லுகிறார்கள். மர்மம் என்பது இரகசியம் அல்லது மறை பொருள். இந்த வர்ம வித்தையை அறிந்தவர்கள், இதை மிகவும் இரகசியமாகவே போற்றி வந்திருக்கிறார்கள். காரணம் என்ன? ஒரு வர்ம நூல் பின்வருமாறு கூறுகிறது.

*''முடுகுவது சண்டாள கோபத்தாலே*

*முன்பாரான் பின் பாரான் முறைகள் பாரான்*

*கடுகுவது ஆங்காரம் மனத்தில் கொண்டு,*

*கற்ற வித்தை மனத்தினால் காலம் எண்ணி,*

*நடுகுவது நல்லோரை பெரியோர் தம்மை*

*நானிலத்தில் ஏழைகளை நடுங்கச் செய்து*

*கொடுகவே ஈடு செய்து கொல்வானப்பா*

*கொடும்பாவம் அவனை வந்து குறுகுந்தானே''*

இங்கே ஈடு என்றது ''வர்மத்தை''. வர்மநூல் வித்தையைக் கையாள்வது எவ்வளவு ஆபத்து நிறைந்தது என்பதை இந்தப்பாட்டு விளக்குகிறது. இந்த வித்தையை கற்ற ''ஆங்காரத்தால் ஒருவன் கோபம் வரும் போது நல்லோரையும் பெரியோரையும். ஏழைகளையும் வர்மம் கொள்ளச் செய்து கொல்வான் அதனால் இதனை இரகசியமாக வை'' என்று எச்சரிக்கிறார் ஆசிரியர் இதிலிருந்து மர்மம் தான் வர்மம் ஆயிற்று என்று விளங்குகிறதல்லவா?

வர்ம வித்தை வந்த வரலாறு யாது? வர்ம பீரங்கி, வர்ம ஆணி, வர்ம சூத்திரம், வர்மக் கண்ணாடி என்று இது பற்றிக் கூறும் பல நூல்கள் இருக்கின்றன. அகஸ்தியர், போகர் முதலிய முனிவர்கள் இந்த நூல்களை எழுதினார்கள் என்பது மரபு. பீரங்கி போன்ற பிற்காலச் சொற்கள் வழங்குவதிலிருந்து இந்நூல்களை அகஸ்தியரோ போகரோ எழுதியிருக்க முடியாது என்பது திண்ணம். ஆனால் ஒன்று மட்டும் கூறலாம். முனிவர்களும் சித்தர்களும் தங்கள் உள்ளொளியாலும் அனுபவத்தாலும் கண்ட உண்மைகள் உபதேசமாக உரைக்கப்பட்டு வழிவழியாக வந்து பின் ஏட்டு ரூபம் அடைந்திருக்க வேண்டும். இதனால் தானோ தமிழ்

வைத்தியத்தை நாம் சித்த வைத்தியம் என்று எண்ணுகிறோம். இந்த வித்தையை இன்று கையாளும் மக்களின் முன்னோர் போர் வீரர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவர்கள் தானே வர்மம் கொள்வார்கள். அவர்களுக்குத்தானே வர்ம பரிகாரமும் தேவை? ஆனால் கன்னியாகுமரி மக்களுக்கு மாத்திரம் இந்த வரம் கிடைக்கக் காரணம் என்ன? இது இன்னும் புரியாத மர்மமாகவே இருக்கிறது இதற்குரிய விடையை பொதியமலை குகைகளில்தான் காணவேண்டும்.

படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம், என்று வர்மத்தை மூன்று வகையாகக் கூறுகிறார்கள். இவை தவிர வேறு வகைகள் உண்டு என்று சொல்வதும் உண்டு. படுவர்மம் என்பது குறிப்பிட்ட சில ஸ்தானங்களில் அடிபட்டு முறிவுண்டு சாதல், முறிவில்லையானால் உணர்விழத்தல் ஆகும். இதற்கு உதாரணமாக திலர்த்தக் காலம் அல்லது திலர் வர்மத்தைக் கூறலாம்.

*''ஓமென்ற திலர்த்தவர்மம் கொண்டதினால்*

*உத்தமனே செய்குணத்தை உரைக்கக்கேளு*

*ஆமென்று வாய்பிளந் தண்ணாந்திருக்கும்*

*அறிவிழந்து உடல் குழைந்து மயங்கிப்போகும்,*

*வாமென்று முறிந்ததென்றால் மீளாதப்பா*

*மாத்திரைக்குள் அடங்குமெனில் மூன்றே முக்கால்*

*தேமென்ற கடிகையதற் குள்ளாகத்*

*திறமையுடன் இளக்குமுறை செப்புவேன்.''*

திலர்த ஸ்தானத்தில் அடிபட்டு முறிந்தால் அசாத்தியம், முறிவில்லாமல் மயங்கினால் சாத்தியம். மூன்றே முக்கால்

நாழிகைக்குள் இளக்கிவிடலாம் அல்லது பரிகாரம் செய்யலாம். சாத்தியமும் அசாத்தியமுமான வர்மம் இது.

பொதுவாக சாத்தியமான வர்மங்களைத்தொடு வர்மம் என்று கூறுவார்கள் ''மணிபந்தகம்'' என்ற வர்மம் இதிலடங்கும். இதன் குறிகள் பின்வருமாறு.

*''உடன் களைப்பும் காய்ச்சலுமே குளிருமுண்டாம்*

*பையவே மேவிவரும் சொறியும் வீக்கம்*

*பலவாகப் பெலந்தனையும் செய்விக்காது''*

*இது சாத்தியமானது. சுகம் கிடைக்கக்கூடியது.*

தட்டு வர்மம் எப்போதுமே அசாத்திய்மானது. ''இடுப்பில் முண்டெலும்பிற்கு கீழே முறிந்தால் சாகும்'' இது தட்டு வர்மத்திற்கு உதாரணம்.

என்ன வர்மம் கொண்டதென்று அறிவதற்கு குறிகளும், நாடியும் துணை செய்கின்றன. மேலே எடுத்துக்காட்டிய பாடல்களில் சில வர்மங்களில் குறிகளைக் காணலாம். ஒவ்வொரு வர்மத்திற்கும் குறிகள் வேறுபடும். குறிகள் மாறுந்தோறும் நாடியும் வேறுபடும்.

இனி வர்மத்திற்குப் பரிகாரம் யாதெனப் பார்ப்போம் ஒவ்வொரு வர்மத்திற்கும் ஒவ்வொரு வகையான பரிகாரம் உண்டு. பல வர்மங்களுக்கும் பொதுவான ''அடங்கல்'' என்னும் பரிகாரமும் உண்டு. பரிகாரத்தில் முக்கியமானது ''தடவுதல்'' அல்லது ''இளக்குமுறை'' தான். வர்மங் கொண்டவரை தரையில் கால் மடக்கி நிமிர்த்தி இருக்கச்செய்து, பதமாக உச்சியில் மூன்று

தட்டுத்தட்டி சிரசினை முன் பின் அசைத்துத் திருப்பி, நரம்பெல்லாம் தடவிபின்னி மார்போடணைத்துத் தூக்கி உதறிவிட உணர்வு பெற்று விடுவார். இது பொது விதி. இரண்டாவது பரிகாரம் மருந்து, எண்ணெய், நெய், தயிலம், பொடி, மாத்திரை, நசியம் என்று பல வகைப்படும். சில வேளைகளில் தண்ணீரே மருந்தாவதும் உண்டு.

எத்தனை நூல்கள்தான் கற்றாலும், எவ்வளவு குறிகளை மனதில் பதித்து வைத்தாலும், எவ்வளவு பரிகாரத் திறமையிருந்தாலும் ஒரு பயனும் இல்லை. மருத்துவனுக்கு கைபலிதம் அல்லது கைராசி தான் முக்கியம் என்கிறார் ஒரு ஆசிரியர்,

*''நகையாமல் பல நூல்கள் கற்றாலென்ன*

*நன்றான கைப்பாகம் தெரிந்தாலென்ன,*

*பகையான முறை கட்டி அறிந்தாலென்ன,*

*பண்பான குறி குணங்கள் பதிந்தாலென்ன,*

*வகையான சூத்திரங்கள் தெரிந்தாலென்ன,*

*மைந்தனே கைப்பலிதம் இல்லாவிட்டால்*

*மிகையான கற்றகற்ற வித்தையெல்லாம்,*

*விருதாவாகும் ஒன்றுமில்லை விழலாய்ப்போச்சே''*

கைராசி என்பது என்ன? கடவுளின் கிருபைதானே, கல்வியும் கரணமும் பயனும் கடவுள் என்று கண்டவர்களல்லவோ நமது முன்னோர்கள்.

வர்ம சாஸ்திரம் குப்பையில் குன்று மணி போல இன்று கிடக்கிறது. அதன் பெருமையை தமிழர்களே உணரவில்லையே. பிறகல்லவா மற்றவர்கள் உணர்வார்கள். தமிழர்களின் ஆதரவும் குறிப்பாக அரசாங்கத்தின் ஆதரவும் அறிஞர்களின் ஊக்குதலும் இருந்தால் இந்த வித்தைக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு. நமது முன்னோர் விட்டுச்சென்ற இந்த செல்வத்தைப் பெட்டகத்தில் பூட்டிவைத்து செல்லரிக்க விடாமல் காப்பது நமது கடன். தமிழ் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் என்றும் தமிழ் வைத்தியம் தன்னிடத்தை அடையும் என்றும் நம்புவோமாக.

## *வர்மம்*

*டாக்டர் எம். மரியலாரன்ஸ், பி.ஐ.எம்.*
*அரசினர் இந்தியமுறை வைத்தியக் கல்லூரி,*
*பாளையங்கோட்டை.*

மனித உடலில் மர்மமாக அடங்கியிருக்கும் அதாவது மறைந்திருக்கும் வாசி நிலைகளின் தன் நிலை வேறுபாட்டால் ஏற்படும் மாற்றங்களையே வர்மம் என்பார்கள். வாசிநிலை தன்நிலை வேறுபடுவதாகிய காரியத்தையும், அதற்குக் காரணமான காரணத்தையும் வர்மமென்றே பொதுவாகக் கருதுவர். இதைப்பற்றித் தெரியாதார் அனேகமாக இருக்க மாட்டார்கள். என்றுதான் சொல்ல வேண்டும். முக்கியமாக கன்னியாகுமரி ஜில்லாவில் இதைக் கையாளுபவரை அதாவது வர்மத்தைப்பற்றி தெரிந்து பின் அதற்குப் பரிகாரம் செய்யும் மருத்துவரை

''வர்மாணி'' என்றும் ''ஆசான்'' என்றும் அழைக்கப்படுவது மரபு. இத்தகைய வர்மத்தைப் பற்றி சிறிது அறிந்து கொள்வது மிகவும் அவசியமன்றோ!

வர்மம் என்பது நரம்புகளில் தட்டுப்பட்டு உணர்விழப்பது தான். ஆனால் எல்லா நரம்புகளிலும் தட்டுப்பட்டால் வர்மம் கொள்வதில்லை. குறிப்பிட்ட நரம்பில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட அளவில் தட்டுப்பட்டால் தான் ஒருவர் உணர்விழப்பர். அவருக்கு அப்போது காயம் அல்லது வர்மம் கொண்டிருக்கிற தென்று கூறலாம். இந்நிலையில் அதாவது முன்கூறிய அளவில் தட்டுப்பட்டால் உடனே சரம் மாறி, வியர்வை தோன்றி அனல்மீறி, கபம் விருத்தியடைந்து அதன் பயனாக ஜன்னி ஏற்பட்டும், ஜன்னி ஏற்படாமலும் உணர்விழக்க நேரிடுகிறது.

வர்மம் அல்லது காலம் என்றால் என்ன? எவ்வாறு உண்டாகிறது? போன்ற வினாக்களுக்குப் பல நூல்கள் விடையளிக்கின்றன. ''முறிவுசாரி'' என்ற நூல் வர்மம் எவ்விதங்களிலெல்லாம் உண்டாகிறதென்பதற்கு கீழ்கண்டவாறு விடையளிக்கிறது.

*''கேளப்பா தடியடிகள் படுதலாலும்*

*கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்*

*வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்*

*மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்*

*மேலப்பா ஆகாசமதிலே நின்று*

*மெய்மறந்து கைமறந்து விழுதலாலும்*

*தாளப்பா பற்பலவாம் விதத்தினாலே*

*சங்கையில்லாக் காலமது சாருந்தானே''*

இதே கருத்தை ''ஒடிவு முறிவு சரசூத்திரம்'' என்ற நூல் கீழ்க் கண்டவாறு வலியுறுத்துகிறது

*''அண்ணலே உலகத்தில் வாழும் மாந்தர்க் கடி*

*காயம் முறிவிழுதல் தல்லலாலும்*

*விண்ணடியில் பிணையற்று விழுகையாலும்*

*விழுந்தங்கம் சிதறுண்டு மற்றவையினாலும்*

*மண்ணிலே வெகுநாளாய் துக்கமுற்று மாளவே*

*வதைகாயம் கொள்கையாலும்*

*நிண்ணமுடனிவைகளிலே பலதுக்காக*

*நிகழத்துகிறேன்..........................''*

இதிலிருந்து வர்மம் எவ்விதங்களிலெல்லாம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்பதை உணரமுடியும்.

வர்மம் என்ற சொல் மர்மத்திலிருந்து வந்தது என்று சொல்லுகிறார்கள். மர்மம் என்பது இரகசியம் அல்லது மறைபொருள். இந்த வர்ம வித்தையை அறிந்தவர்கள் இதை மிகவும் இரகசியமாகவே போற்றி வந்திருக்கிறார்கள். அதற்குக்காரணம் பிறர் அறியக்கூடாது அல்லது பிறருக்கு அறிவிக்கக்கூடாது என்ற நோக்கமாக இருப்பதற்கு நியாயமில்லை. எப்போதுமே அரிய சாதனை செய்பவர்கள் அல்லது அரிய

வித்தையைக் கையாளுபவர்கள் மிகவும் பொறுமையும், தாழ்ச்சி குணமும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் அவ்வித்தையினால் ஆணவம் பெற்று அவ்வித்தைக்கும் இழிவைத் தேடி தானும் பழி பாவத்துக்கு உள்ளாக நேரிடும். இக் கருத்தையே,

*''முடுகுவது சண்டாள கோபத்தாலே*

*முன் பாரான் பின்பாரான் முறைகள் பாரான்*

*கடுகுவது ஆங்காரம் மனத்தில் கொண்டு*

*கற்ற வித்தை மனத்தினால் காலம் எண்ணி*

*நடுகுவது நல்லோரைப் பெரியோர் தம்மை*

*நானிலத்தில் ஏழைகளை நடுங்கச் செய்து*

*கொடுகவே ஈடு செய்து கொல்வானப்பா*

*கொடும் பாவம் அவனை வந்து குறுகுந்தானே''*

என்று ஒரு வர்மநூல் கூறுகிறது. இந்த வர்ம வித்தையை உடையவன் ஆங்காரத்தினாலே கோபம் கொண்டு, அவசரப்பட்டு பிறரை வர்மம் அல்லது ஈடுகொள்ளச் செய்து அவர்களை துன்புறுத்துவதோடு இல்லாமல் சில வேளை உயிரையே பறித்துக் கொள்கிறான். இதனாலேயே எல்லோருக்கும் வர்மத்தைச் சொல்லாமல் மர்மமாக வைத்திருக்கிறார்கள் என்று விளங்குகிறது.

மேலும் இதை மர்மமாகவே வைத்திருக்க வேண்டுமென்பதையும், யார் யாருக்கு அறிவிக்கலாம், யார் யாருக்கு அறிவிக்கக் கூடாது என்பதையும்,

*''ஈவதுதான் யாருக்கு சிவயோகிக்கு*

*இகத்திலுள்ள வன்பருக்கு ஈய்ந்தாயானால்*

*சாவதுபோல் கடநரகில் வீழ்வாய் சொன்னேன்*

*சண்டாளர்க்கீயாதே தரணிமீதில்.....*

என்ற பாடல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம், உள்வர்மம், நோக்கு வர்மம் அல்லது மெய்தீண்டாக்காலம், சர்வாங்கவர்மம் என்று வர்மம் பல வகைப்படினும், படுவர்மம் 12 என்றும், தொடுவர்மம் 96 என்றும் ஆக 108 வர்மத்தையே முக்கியமாக கருதுகிறார்கள். முக்கியமான வர்மத் தொகையைப் பற்றி ''ஒடிவு முறிவு சரசூத்திரம்'' என்ற நூல் கீழ்கண்டவாறு கூறுகிறது.

*''எட்டான கலையுடனே பிராணன் நாலு*

*ஏகினதால் ஈராறு கலையாமென்ன*

*கட்டான ஈராறும் வழியெட்டாகி*

*கருதினதால் தொடுவர்மம் தொண்ணூ ற்றாறு*

*நெட்டுறவே இதுகளெல்லாம் நூற்றெட்டாகி*

*நிறைந்ததினால் நூற்றெட்டு வர்மமாச்சு.........''*

ஆனால் இந்த வர்மம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொகையில் வித்தியாசப்படுகிறது. பெண்களுக்கு ஆண்களைவிட ஒன்று குறைவாக அதாவது பீசக்காலம் (விரை) நீங்கலாக 107 வர்மங்களே உண்டு என்பதை,

*''வந்தவகை விபரம் இப்படியே கண்டாய்*

*மங்கையர்க்கு குறைந்த வர்மம் பீசக்காலம்*

*சொந்தமென்ற யிந்த வர்மமொன்று நீக்கி*

*தொகைபாரு ஒருநூ ற்றியேழாமென்ன....''*

என்ற பாடலிலிருந்து அறியலாம்.

படுவர்மம் குறிப்பிட்ட சில இடங்களில் அடிபட்டு அதாவது மாத்திரைக்கு அதிகப்பட்ட வதைகாயத்தால் முறிவுண்டு சாதல், முறிவில்லையானால் உணர்விழத்தல். இது அசாத்தியமும் சாத்தியமுமான வர்மம் இதற்கு உதாரணமாக மூக்கின் நடுப்பாகத்தில் ஏற்படும் வர்மத்தைக் கூறலாம்.

*''குருவருளால் இன்னுமொன்று நாசி தன்னில்*

*குணக்கேடாய் நடுவதிலே முறியுமாகில்*

*பெருகவே மயக்கம் வரும் வியர்வை தோன்றும்*

*பிறகெழுந்து முன்போல போவான் கண்டாய்*

*மருகவே மச்சையிலே சிணுங்கல் தோன்றும்*

*வன்சுரங்கள் அஞ்சில்வரும் வியர்வை காணும்*

*இருமலொடு சன்னிவரும் வாந்தியுண்டாம்*

*இவை ஏழில் மரணமென்று அறியலாமே''*

இதிலிருந்து மூக்கின் நடுப்பாகம் அடிபட்டு முறிந்தால் மரணம் ஏற்படும் என்று தெரிகிறது. முறிவின்றி மயங்கினால் இளக்குப் பரிகாரம் அல்லது அடங்கல் செய்து சிகிச்சிக்கலாம்.

தொடுவர்மம் அடுத்தவர்களின் கை நம் உடம்பில் படுதலால் அதாவது பிறரின் இரகசிய, பரசிய தாக்குதலினால் ஏற்படுவது. இது

சாத்தியமான வர்மம். ஆனால் இதிலும் அசாத்தியமான வர்மங்களுமுண்டு. படுவர்மத்தையும், தொடுவர்மத்தையும் வேற்றுமைபடுத்திக் கூற வேண்டுமானால் படுவர்மம் ஏதாவது அசம்பாவித விபத்து முதலியவற்றால் ஏற்படுவதென்றும், தொடுவர்மம் நமக்குத் தெரியாமலே பிறரால் ஏற்படுவது என்றும் கொள்ளலாம். ஆனால் இரண்டுமே ஒன்று போல ஏற்படுவதுமுண்டு. ஒவ்வொரு வர்மத்துக்கும் அறிகுறிகளும் நாடி நிலைகளும் வேறுபடும்.

மேலும் வர்மம் என்பது முன் கூறியது போலல்லாமல் உடம்பில் எவ்விடமாகிலும், எவ்வுறுப்பாகினும், உள்ளுறுப்பாகினும், வெளியுறுப்பாகினும், ஒடிவு முறிவு முதலியன ஏற்படுதலாலும், அவயவங்கள் தன் இருப்பிடத்தை விட்டு நகருவதாலும் ஏற்படுகிறது. உதாரணமாக நெஞ்சறைக் குள்ளிருக்கும் உள்ளுறுப்புகளாகிய புப்புசம், தமரகம் போன்றவைகளில் ஏதாவது தாக்குதல் ஏற்பட்டால் அதனால் விளையும் விபரீதத்தை,

*'பஞ்சவர்ண குகைநெருங்கி ஈரலென்ற*
*குகையற்று இசங்கிப் போனால்*
*நன்றெனவே எழுந்திருப்பான் தஞ்சாரத்தால்*
*நடுநடுங்கி பித்தம் போல் பெருமை பேசும்*
*கண்டிடவே வர்மமில்லை என்றும்*
*சொல்வார் காசினியிலுள்ளோர்கள்*
*கருத்தாக பதினெட்டு நாழிகைக்குள்*
*மரணமென்று பிரித்துச் சொல்லே''*

என்ற பாடலிலிருந்து நன்கு உணரலாம். இந்த வர்மம் ஏற்பட்டால் வெளிப்பார்வைக்குத் தெரியாது. ஆனால் ஏற்பட்ட விதம், அதன் அறிகுறிகள், நாடிநிலை இவைகளைக் கணிக்காமல் சாத்திய அசாத்திய நிலைகளைக் கூறமுடியாது. ஏற்பட்ட விதம் மாத்திரைக்கு அதிகப்பட்டு அதாவது வதைகாயமாக இருந்தால் பதினெட்டு நாழிகைக்குள் மரணமுண்டாம் என்று தெரிகிறது.

இதுபோல வெளியுறுப்பில் ஏற்படும் முறிவு, பொருத்து விலகல், நெரிசல் முதலியவற்றால் விளையும் விபரீதத்தையும அதை நிவர்த்தி செய்யும் முறைகளையும் வர்மநூல்கள் எடுத்துரைக்கின்றன.

இனி வர்மங்களில் உடன் ஏற்படும் ஒடிவு, முறிவு, உணர்விழத்தல் போன்றவைகளுக்கு தக்க பரிகாரம் செய்ய வேண்டும். ஏதாவது ஒடிவு முறிவானால் அவற்றுக்கு நூல் விதிப்படி முறிவைக்கட்டி பரிகாரம் செய்யவேண்டும் உணர்விழந்து இருந்தால் அறிகுறிகளையும் நாடி நிலையையும் ஆராய்ந்து எந்த இடத்தில் வர்மம் கொண்டிருக்கிறது என்று கணித்து இளக்குப்பரிகாரம் அல்லது அடங்கல் செய்து நோயாளியை நினைவுபெறச்செய்ய வேண்டும் இவை பொதுவிதி. இரண்டாவது பரிகாரம் மருந்து, எண்ணெய், நெய், தைலம், சூரணம், மாத்திரை, நசியம் முதலியன.

இளக்குப்பரிகாரம் செய்ய பொதுவாக பல முறைகள் இருக்கின்றன. அதாவது எவ்விதம் அடிபட்டு மயங்கியதோ அதே போல் மீண்டும் நரம்புகளையே இயக்கி எழுப்பவேண்டும். இதிலிருந்து குறிப்பிட்ட நரம்புகளில் அடிபட்டால் மயங்கும்

என்றும் குறிப்பிட்ட நரம்புகளில் மீண்டும் அடிபட்டால் மயக்கம் தெளியும் என்றும அறியமுடிகிறது. இதனை,

''உள்ளபடி நூற்றெட்டு தலம் சாவாகும்

உணர்வாகி அத்தலங்கள் உயிருமாகும்

கள்ளமுற்ற அத்தலங்கள் பிணியுமாகும்

கலங்கமற்றால் அத்தலங்கள்சுகமே காணும்

உள்ளுணர்வாய் அத்தல்ங்கள் வாசியேற

உற்றதனால் அத்தலங்கள் உறுதிசேரும்...

என்ற பாடலிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம் இளக்குப்பரிகாரம் செய்வதற்கும் சில விதிகள் நோயாளிகளின் தலைமையைப்பொருத்து வேறுபடுகின்றது. அதாவது குழந்தைகள், கர்ப்பிணிகள் முதலியவர்களுக்கு அவர்களது உடல் தன்மையைப் பொருத்து பரிகாரம் செய்ய வேண்டும் என்பதை,

''போக்கான கைகாலால் செய்யும் போக்கும்

பெட்டி முறிவின் பிசகைத்தீர்க்கும் போக்கும்

வாக்குடன் கைகொடுத்திளக்கி விடுக்கும் போக்கும்

மைந்தர்களை கைதொடாமலிளக்கும் போக்கும்

ஆக்கைமற்ற கெற்பிணியை சரத்தினாலே அடுத்தாதி

யிளக்குகின்ற தலத்தின் போக்கும்..............''

என்னும் பாடலிலிருந்து அவரவர் தன்மையைப் பொறுத்து புத்தி, கூர்மையாய் குருவினை நினைத்துப்பரிகாரம் செய்யவேண்டும் என்று தெளிவாகிறது.

மேலும் ஒருவர் வர்மம் கொண்டதினால் உணர்விழந்த நிலையில் இருக்கும் போது குறிப்பிட்ட நாழிகைக்குள் அதாவது குறிப்பிட்ட நேரத்துக்கு முன் பரிகாரம் செய்து திரும்ப உணர்வு பெறச் செய்ய வேண்டும். இல்லையேல் கொண்ட வர்மம் மாத்திரைக்கு மிஞ்சிய அளவிலிருக்குமானால் நேரம் கடந்து செல்லச் செல்ல அசாத்தியமான நிலையைப் படிப்படியாக அடைந்து இறுதியில் மரணத்தை விளைவிக்கும்.

உதாரணமாக,

*''பாரு காந்தாரிவர்மம் பாரினில் மானிடர்க்கு*

*சீருடன் கொண்டாலத்தி சிக்கியே நீர்முளைக்கும்*

*பேருடன் மூக்கில் வாயில் பேதமாம் கறுத்தசோரை*

*போருடன் மூன்றேமுக்கால் போகுமுன் அடங்கல் செய்யே''*

என்ற பாடலிலிருந்து காந்தாரிவர்மம் என்ற வர்மம் கொண்டால் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் இளக்குப்பரிகாரம் அல்லது அடங்கல் செய்து திரும்ப உணர்வு பெற செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்ள முடிகிறது.

வர்மம் கொண்டால் உடனே பரிகர்ரம் செய்து நிவர்த்தி செய்தாலும், ஏற்பட்ட வர்மம் மாத்திரைக்கு மிஞ்சிய அளவில் இருக்குமானால் பிற்காலத்தில் அவனைப் பாதித்து

மீளாநோய்களுக்கு உள்ளாக்குவதுடன் கண், காது போன்ற அவயவங்களை பாதிப்பதும் உண்டு. இவைகளை,

*''கேளே நீவர்மமது கொண்டுதானே*

*கெடி தப்பி காலமது சென்று போனால்*

*ஆனதுவே நிறமாறி கறுத்துப்போகும்*

*அன்னமது சிறுத்துவிடும் குன்னிக்கொள்ளும்*

*நாளதிலே நீர்மலமும் பிடித்துக் கொள்ளும்*

*நாயகமே தாதுகெடும் தீர்க்கமாக*

*பாழானசயம் இளகி கொல்லும் கொல்லும்*

*பண்டிதத்தை அறிந்து நீ செய்யில் மீளும்.*

என்னும் பாடலிலிருந்தும், இன்னும் வேறு நூற்களிலிருந்தும் கொடிய வர்மம் கொண்டு காலம் சென்றால் அன்னம் ஏற்காமை, உடல் கூனுதல், உடற்கட்டுகள் கேடடைதல், சயம், பீனிசம், காசநோய்கள், (ஆஸ்த்மா நோய்கள்) கண்மயக்கம், காதுமந்தம், அஸ்திசுரம், எலும்புருக்கி போன்ற கொடியநோய்கள் உண்டாக ஏதுவாகிறது என்றும் தெரிய வருகிறது.

ஒடிவு முறிவு சரசூத்திரம், வர்மசூத்திரம், லாடசூத்திரம், உள்சூத்திரம், வர்மபீரங்கி, வர்மஆணி, வர்மக்கண்ணுடி, முறிவுசாரி, நாலுமாத்திரை, பீரங்கித் திறவுகோல், சூடா மணித் திறவுகோல், வில்விசை போன்ற பெருமை வாய்ந்த வர்ம நூல்கள், வர்மத்தினால் ஏற்படும் நோய்களின், அறிகுறிகளையும், அவைகளின் சாத்திய அசாத்திய நிலைகளையும், அதன் பரிகார முறைகளையும் தனித்தனியாக

தெள்ளத் தெளிவாகக் கூற பரிகாரம் செய்தும் அசாத்திய நிலையிலேயே இருக்குமானால் அந்நோய்தீராது என்று அறுதியிட்டுக் கூறி பரிகாரம் செய்பவரை ''விலகிநில்'' என்று கட்டளையிடும் தோரணையில் கீழ்க்கண்ட பாடல் அமைந்திருப்பதிலிருந்து வர்ம நூற்களின் பெருமை நன்கு விளங்குகிறது.

*''ஆகவே இதுமுதலாம் குறிகுணங்கள்*

*அறிந்துநீ கூடியது மட்டும் பாரு*

*பாகமுடன் செய்தாலும் பலிக்காதென்றால்*

*பண்பாக விலகிநீ அகல நில்லு*

*தோகையரே நீவதைகள் செய்தாயென்று*

*சொல்லுவாரென்று கண்டால் அகன்று நில்லு*

*வேகமறிந்தென்னாலே செயிக்காதென்று*

*விரும்பி வேறாள் பார்க்க அறிந்துசொல்லே.*

## வர்மம்

வர்மம் நம் உடலில் இருக்கின்ற உயிர்நிலை இடங்களாக இருக்கும் குறிப்பிட்ட இடங்களுக்கு மர்மம் அல்லது வர்மம் எனப்பெயர் சூட்டினார். இவ்விடங்கள் மர்மமாகவே ரகசியமாகவே வைக்க வேண்டிய இடங்கள் ஆதலால் இதற்கு மர்மம் எனப் பெயர் சூட்டினர்.

நம் முன்னோர்கள் ஏன் மர்மமாக வைத்தார்கள் என்றால் வர்மம் படித்த சில பேர்கள் அனேக தவறுதல்கள் செய்துவிடுவார்கள். அதனைக் கீழ் வரும் செய்யுளால் அறியலாம்.

*''முடுகுவது சண்டாள கோபத்தாலே*

*முன்பாரான் பின்பாரான் முறைகள் பாரான்*

*கடுகுவது ஆங்காரம் மனதில் கொண்டு*

*கற்ற வித்தையதை மனத்தில் எண்ணி*

*நடுகுவது நல்லோர் பெரியோர் தம்மை*

*நானிலத்தில் ஏழைகளை நடுங்கச் செய்து*

*கெடுக்கவே ஈடுசெய்து கொல்வானப்பா*

*கொடும்பாவம் அவனை வந்து குறுகுந்தானே''*

ஈடு என்பது வர்மத்தின் மறுபெயர். வர்ம நூல் வித்தையைக் கையாளுவது மிகவும் ஆபத்தான விஷயம்.

இத்தொழிலைக் கற்ற ஒருவன் ஆங்காரத்தால் கோபம் வரும் போது, நல்லோர்களையும், பெரியோர்களையும், ஏழைகளையும், வர்மம் கொள்ளச் செய்து கொல்லுவான். ஆகவேதான் இவ்வர்ம வைத்தியத்தை ரகசியமாகவே வைத்துத்தான் ஆகவேண்டி இருக்கிறது என்று நூலாசிரியர் எச்சரிக்கைச் செய்கிறார். வர்ம வைத்தியம் படிக்கும் மாணவர்கள் தன்னடக்கமுடையோரும் இறைவனிடத்தில் நம்பிக்கையுடை யோரும், ஜீவகாருண்ய முடையோருமாக இருக்கவேண்டும். துஷ்டர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது.

இப்படி நம் உடம்பில் நூல்களில் கூறப்படும் வர்மம் படுவர்மம் 12ம் தொடுவர்மம் 96ம் ஆக 108 வர்மங்கள் கூறப்படுகின்றன. இதில் படுவர்மம் 12ல் குறிப்பிட்ட அளவு (மாத்திரை) அடி, இடிகள், குத்து கொள்ளுமாகில் உடனே மூர்ச்சை அடையும். அடி குத்து மாத்திரை அளவு கூடுதலாக கொண்டாலும் மரணம் ஏற்படும். காயம்பட்டு முறிவேற்பட்டால் மரணம் ஏற்படும் (அபாயம்).

### *படுவர்மம் 12*

முறைப்படி அடி, இடி, குத்துகள் கொண்டதென்றால் மூர்ச்சையடைந்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குறி குணங்களைக் காட்டும். அடி பலமாகக் கொண்டால் மரணம் என்பதில் சந்தேகமில்லை.

உதாரணமாக எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம். சிரசின் நடுவில் கொண்டைக் கொல்லி என்னும் வர்மம். இவ்விடத்தில் சரியான அளவு முறிவு ஏற்பட்டாலும் பலமான அடிபட்டாலும், கழுத்து குழைந்து விடும். நரம்புகள் பூராவும் தளர்ந்து விடும் விந்து சாடும். கை கால் கடுமையாக குளிர்ச்சியடையும், சன்னிவரும். உயிர் பிரியும். இந்த வர்மம் சரியாக கொண்டவர்கள் உயிர் மீள்வதில்லை என்று வர்மக் கண்ணாடி என்னும் நூலில் 172வது செய்யுளில் கூறி இருக்கிறார்கள்.

### *சீறுங்கொல்லி :*

சிரசின் பின்பக்கம் உச்சியிலிருந்து ஒரு சாண் பின்பக்கமாக சீறுங்கொல்லி என்ற வர்மம் இருக்கிறது. கண்பார்வை இழந்து வாயில் நுரை தள்ளும்; முதுகு வளைந்துவிடும்; நாக்கு

உள்ளிழுக்கும். இந்த வர்மத்திலும் அடிபலமாகக் கொள்ளவோ முறிவு ஏற்படவோ செய்யுமாகில் மரணம் ஏற்படும்.

***பிடரி வர்மம் :***

சீறுங் கொல்லிக்கு 4 அங்குலம் கீழ் பிடரி வர்மம், இவ்வர்மத்தில் பலமாக அடி, இடி, முறிவு, கொண்டால் அபாயம், லேசான அடி இடி கொண்டதென்றால், கண்சீறும், நாக்கு வெளியே தள்ளி இருப்பத்தைந்து நாழிகைக்குள் முறையாக அடங்கல்களில் பிடித்து தடவு முறை செய்து வந்தால் மூர்ச்சை தெளியும்; நாக்கும் சரியாக வந்துவிடும். நாழிகை இருபத்தைந்து கழிந்தால் அசாத்தியம்.

***அடங்கல் :***

அடங்கல் என்பது வர்மங்களில் அடிபட்டு உயிர் உடல்பூரா வும் சலிக்காமல் உள்ளடங்கி நிற்கின்றபோது அடங்கி நிற்கின்ற அவ்வுயிரை சலிக்கச் செய்யும் குறிப்பிட்ட இடங்களுக்கு அடங்கல் என்று பெயர். இவ்வடங்கல் நூல் வாயிலாக 16 இடங்களைக் குறிப்பிட்டு சொன்னபோதிலும் கர்ண பரம்பரையாக கையடக்கமாக நூலிலில்லாத அடங்கல்களும் அனேகம் இருக்கின்றன.

பொதுவாக வர்மத்தில் அடிபட்டு மூர்ச்சையானவர்களுக்கு (பல குறி குணங்கள்) ஒவ்வொரு இடத்திற்கு இடம் மாறுபட்ட குணங்கள் தெரியும் அதற்கு முதலில் செய்யவேண்டியது அபாயக்குறிகள் இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும் (சாத்தியக் குறி, அசாத்திக்குறி) அசாத்தியக் குறியைத்தான் அபாயக்குறி என்பது. அடிபட்டு மூர்ச்சையடைந்த

நோயாளியைப் பார்க்கும் போது குறிப்பாகக் கண் நட்டு வைத்ததுபோல அசையாமல் இருக்கும். விந்து கழிந்திருக்கும். மலம் கழிந்திருக்கும்.

நாடி பார்க்கும் பொழுது துரித நடையில் இருக்கும். அல்லது மெதுவாகவே இருக்கும். நாடி பார்க்கும்போது நாடி துடிப்பில்லாமலும் இருக்கும். இவ்வளவு குறிகுணங்களும் ஒத்திருக்குமாயின் அந்த நோயாளியைத் தொடக்கூடாது.

இனியும் சிலபேருக்குப்பேச சத்தம் குன்றியும், துணிகளைக் கிழிக்கவும், அசாத்தியமான அலறலும் முகம் அதிகமான பிரகாசமடைந்தாலும், முகம் கறுத்து இருண்டிருந்தாலும் அதி விரைவில் உயிர் பிரியும் என்பது உறுதி.

இது போன்ற குறிகுணங்கள் எல்லாம் இல்லாமல் சிற்சில வேற்றுமைகள் மட்டும் இருக்குமானால் நோயாளிகளின் கூட வந்தவர்களிடத்தில் இதன் குறிகுணங்கள் மோசமாகத்தான் தெரிகிறது. அதனால் பூரண சுகம் ஆகும் என்று சொல்லுவதற்கில்லை. இறைவனருளால் சுகம் கிடைக்க என்னால் ஆவதைச் செய்கிறேன் என்று அந்த நோயாளிக்குத் தட்டவோ தடவுதலோ செய்யவேண்டும். இல்லையெனில் சும்மா இருந்தவனை இவன் வர்மத்தில தட்டிக் கொன்றுவிட்டான் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

வர்மம் ஏற்பட்டு மூர்ச்சை அடைந்தவர்களுக்குச் செய்யும் பொதுவான வைத்தியமுறை: வர்மத்தில் அடிப்பட்டவரை நன்றாக கால் நீட்டி மல்லாந்து படுக்கவைத்து இரண்டுகால் பெருவிரல்களையும் நாம் வலது கையால் பிடித்துச் சற்று தூக்கி வலதுகால் படத்தினால் உள்ளங்காலில் மூன்று தட்டு தட்டவும். பின்

நோயாளியைக் கால் நீட்டி உட்கார வைத்து நடு முதுகில் நம்கால் மூட்டில் படும்படியாக உட்காரச் செய்து சிரசின் நடுவில் (உச்சியில்) இடது கையை வைத்து வலது கையால் மூன்று தட்டு பலமாகத்தட்ட வேண்டும். பின் சிரசிலிருந்து இரண்டு கையும் வைத்துத் தடவி இரண்டு காதின் பக்கமும் முதுகு, அலகு பக்கமும் கழுத்துப் பக்கமும் சேர்த்துத் தடவி நெஞ்சிலும் முதுகிலும் தடவிய பின் இரண்டு விலாவிலும், விலாவெலும்பின் கீழ் இருக்கும் பள்ளத்தில் இரண்டு கை விரல்களால் பிடித்து சற்று கோரி (தூக்கி விடவும்) இதில் அநேகமாக உள்ளதெல்லாம் சரியாக வந்துவிடும். காரணம் கால் உள்ளங்காலில் அடிக்குங் கால் வெள்ளையடங்கல்; (2) சிரசில் அடிப்பது அமத்தடங்கல்; தடவும்போது அனேக அடங்கல்களில் கைப்பட்டபின் விலாவில் பிடித்து தூக்கக் கூடியது கோரியடங்கல் அல்லது விலாவடங்கல்.

இப்படி முறைப்படி செய்யும் தடவு முறைகளில் அனேக அடங்கல்களில் தொடவேண்டி வருகிறது. இதுபோக குறிப்பாகவும் அதிபயங்கரமாக உள்ள விஷயங்கள் உண்டு. ஆண்குறி உள்ளே இழுத்துக் கொள்ளுதல்

ஆண் குறி வெளியே நீண்டு விடுதல் விரைமேலே ஏறி விடுதல், நாக்கு உள்ளிழுத்துக் கொள்ளுதல், நாக்கு வெளியே தள்ளி நீண்டு இருத்தல். கண் கருவிழி மலர்ந்தோ கமழ்ந்தோ ஆகிவிடுதல். இதற்கெல்லாம் முறைப்படி அடங்கல்களில் மாத்திரை (அளவுப்படி) அந்த அந்த இடத்திற்கு ஏற்றவாறு பிடித்துச் சரி செய்து கொள்ளவேண்டும். மேலும் சில நோயாளிகள் வர்மம் ஏற்று மூர்ச்சையடைந்து மூர்ச்சை தெளிந்தபின் கண்பார்வை நன்றாக இருக்கும். உணவு எல்லாம் உட்கொள்வார். மலம் சிறுநீர் எல்லாம்போகும். வாய் திறப்பான் ஆனால் பேச்சு மட்டும் வராது.

நாக்கும் வேலை செய்யாது. அது பிரமாதமான தொன்றுமில்லை. அதற்குண்டான அமிர்த அடங்கலில் பிடித்து மாத்திரைப்படி அழுத்தினதும் உடனே பேச்சு வந்து விடும். பார்ப்பவர்களுக்கு கண்கட்டி வித்தை போன்று ஆச்சரியப்படுவார்கள். சிறுநீர் சரியாகக் கழியவில்லை (போகவில்லை என்றால்) மூத்திரக் காலம் என்னும் வர்மத்தில முறைப்படி பிடித்தால் சிறுநீர் நன்றாகக் கழியும்.

குறிப்பு : வர்மத்தில் அடிபட்டு மூர்ச்சையுற்றவர்களுக்கு நசியம் செய்ய நூல் வாயிலாக ஒரு அனுபவமுறை.

*''மண்ணிலே வெகுவென் தானும்*

*மலையிலே முனியன் தானும்*

*உண்ணும் சோற்றுக் கினியானும்*

*உகந்து நீ மூன்று பேரை*

*நண்ணியே கசக்கிச் சாற்றை*

*நலமுடன் நசியம் செய்தால்*

*உன்னிய வர்ம சன்னி*

*உடலை விட்டகன்றே ஒடும்''*

வெகுவன் - வெற்றிலை; முனின் - மிளகு; சோற்றுகினியவன்-உப்பு

அடுத்ததாக குறிப்பாக வர்மத்தில் அடித்து (தட்டி) ஒருவரைக் கீழே விழச் செய்ய வேண்டுமானால் அதன் முறை ஒன்று இரண்டு கீழே விவரிக்கிறேன்.

***திலர்தக் காலம் :***

நெற்றியில் இரண்டு புருவத்தின் மத்திபாகம் இவ்விடத்தில் பன்னிரெண்டு விரல் அகலம் வாங்கி ஆயம்கொண்டு பெருவிரலால் குத்துக என்றால் உடன்வர்மம் ஏற்று மயக்கமுற்று கீழே விழும்.

இதன் தனிக்குணம் : விழுந்தால் ஆள் நிமிர்ந்து அண்ணாந்திருக்கும். இதற்கு நாழிகை மூன்றேமுக்கால், அந்த நேரத்துக்குள் அதன் முறைப்படி இளக்கவேண்டும். இல்லையேல் அசாத்தியம். இளக்குமுறை திலர்தக்கால வர்மத்துக்கு நேர்மறுபுறத்தில் பிடரிக்கு மேலே கைவெள்ளை கொண்டு நன்றாய் திருமி (அரக்கி) உச்சியில் அமைந்த அடங்கலில் முறைப்படி தடவி கால் வெள்ளையடங்கலிலும் தட்டி சுக்குத்தூள் நாசியிலும் செவியிலும், வைத்துப் பலமாக ஊதவும். சுக்குத்தூள் தயாராக இல்லாவிட்டால் நம்வாயில் சுக்கைப்போட்டு மென்று ஊதினால் சரி. (ஓம் சக்தி ஜீவன் பலப்படுக சுவாக) என்று ஓதிகுளிர்ந்த தண்ணீர் முகத்தில் எறிய வேண்டும். அதிமதுரம், சீரகம், குறுந்தொட்டிவேர், இத்தனையும் கஷாயம் இட்டு இறுத்து அக்கஷாயத்தில் அரிசி போட்டு கஞ்சியாகச் செய்து கொடுக்கவும்.

வர்மத்தில் தட்டும்போது மாத்திரை கூடிப்போனால் அசாத்தியமாகும்.

***நட்சத்திரக் காலம் :***

கடைக் கண்ணுக்குக் கீழே நட்சத்திரக் காலம் அதில் தட்டி மூர்ச்சையடையக் (கீழே விழும்படி) செய்ய ஒரு சாண் அகலம் வாங்கி நின்று பெருவிரல் கொண்டு இடிக்கவும் என்றால் வர்மம்

ஏற்றுவிழும். விழுந்தால் கண் இரண்டும் சிவந்து போகும், முகம் கோணும். இதற்கு நாழிகை பதினெட்டு.

### *இளக்குமுறை :*

இதற்குநேர் மறுபுறத்தில் கை விரித்து இடித்து உச்சியில் கை மேல் கை வைத்து அடித்து நாடியைப் பிடித்து வலம் இடம் திருப்பி நாசிக்குச் சுக்குப்பொடி கொண்டு ஊதவும். இதற்கு முன் சொன்ன மந்திரம் ஜெபித்து தண்ணீர் ஓதி முகத்தில் தெளிக்கவும்.

நற் சீரகம், ஏலம் கோரைக்கிழங்கு இவைகள் கியாழம் வைத்து, அந்த கியாழத்தில் கஞ்சி வைத்துக் கொடுக்கவும் அல்லது மூன்று மருந்தையும்பொடி செய்து துணியில் இளக்கமாகக் கிழிகட்டி கஞ்சியோடு சேர்த்துக் கஞ்சி வைத்துப்பின் அந்தத் துணிப் பொட்டலத்தை எடுத்து அழுத்திப் பிழிந்து கொள்ளவும். அந்தக் கஞ்சியைக் கொடுக்கவும். பின் வெந்நீரில் முழுகலாம்.

### *கண்ணாடிக் காலம் :*

மூக்கின் நடு மையம் கண்ணாடிக் காலம் அதில் தட்டி வீழ்த்த வேண்டுமானால் ஒரு சாண் அகலம் வாங்கி கை விரித்து சரித்து வெட்டவும். வர்மம் ஏற்று விழும். விழுந்தால் அதன் குணம் முகம் சீறும், மூக்கில் ரத்தம் ஒழுகும், கண், தலைசுற்றி மயக்கம் வரும்.

### *இளக்கு முறை :*

உச்சியில் கை மேல் கை வைத்து மூன்று தட்டுத்தட்டி முகம் நாடியைப்பிடித்து இடம் வலம் திரித்து, நாசியில் நசியம் செய்யவும்.

நசியம் செய்வதற்கு உதிரமடக்கி என்ற பச்சிலையை எடுத்துத்தண்ணீரில் கழுவி அதை நன்றாகச் சிதைத்துப் பிழிந்த சாற்றை மூக்கில் நசியம் விடவும். உடனே ரத்தம் நின்று விடும்.

குறிப்பு : சிரசிலுள்ள வர்மங்கள் எல்லாம் தட்டி விழவைக்க வேண்டுமானால் ஒரு முழம் அகலம் தூக்கி கைவிரித்து இடத்திற்கு ஏற்றாற் போல் வெட்டவோ அல்லது கை மடக்கி பெருவிரல் நிமிர்த்துக் குத்தவோ செய்தால் முகத்திலுள்ள வர்மங்கள் ஏற்று விழும். இதைப் பரிட்சிப்பதில் அடி கூடுதல் பலமாக ஏற்றால் அபாயத்திற்கு ஆளாக நேரிடும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

### *பிடரிக்காலம் :*

புறங்கழுத்தின் நடுவில் பிடரிக்காலம், இதில தட்டி விழுந்த மாத்திரை மூன்று சாண் அகலம் வாங்கி கைவிரித்து வெட்டு உடன் வர்மம் ஏற்று விழும்.

### *அதன் குணம் :*

கழுத்து நீண்டு சரியும், வாய் பிளக்கும், நாக்கு தள்ளும், கண் துடிக்கும், தேகம் பட பட என துடிக்கும்.

### *இதற்கு இளக்குமுறை :*

முக நாடியைப் பிடித்து ஏந்தி கண்டத்தைக் கீழ்நோக்கித் தடவி, உச்சியில் மூன்று தட்டு தட்டி நெஞ்சிலும் தடவி முறைப்படி கால் மடக்கி இருக்கச் செய்து கை மடக்கி வைக்கச் சொல்லி பின் புறத்திலிருந்து இரண்டு கையின் இடைவெளியே நம் கையைவிட்டுப் பிணியாளியின் முழங்கையில் பிடித்துத் தூக்கி உதறிவிட்டு இடம் வலம் திரியச் செய்து விடவும்.

குறிப்பு : நாக்கு வெளியே நீண்டு இருக்கும்போது உச்சியில் தட்டக் கூடாது நாக்கு உள்ளே சரியாக வந்தபின் தான் உச்சியில் தட்ட வேண்டும்.

**உறக்க காலம் :**

நாடி அருகு பற்றி உறக்க காலம் ஒன்றரை சாண் அகலம் வாங்கி கை முறுக்கிப் பெருவிரல் நீட்டிப் பிடித்துக் குத்தவும். வர்மம் ஏற்று விழும்.

**அதன் குணம் :**

கண் மூடி வாய் பூட்டிக் கொண்டு குறட்டை விட்டு தூங்கும்.

**இதன் இளக்குமுறை :**

எடுத்து உட்காரவைத்து உச்சியில் தட்டி, கண்டம் தடவி நாடியை வலம் இடம் திருப்பிக் கால் இரண்டையும் (வலித்து) இழுத்து உதறி விடவும்.

மனித உடல் அவரவர் கையினால் 8 சாண் நீள அளவில் தான் அமைந்திருக்கிறது. மனித உடம்பின் முக்கியமான உறுப்பு சிரசு. அதனால்தான் சிரசிலிருந்து வர்மம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| 1. கண்டத்தின் (கழுத்தின்) மேலே சிரசில் வர்மம் | 25 |
| 2. கண்டத்திலிருந்து (உந்தி) வரை வர்மம் | 45 |
| 3. நாபி (உந்தி) அல்லது தொப்புள் முதல் மூலம் மட்டும் வர்மம் | 9 |
| 4. கைகளில் வர்மம் | 14 |
| 5. கால்களில் வர்மம் | 15 |
| | 108 |

## வர்மத்தின் பெயர்த்தொகுப்பு

(வர்மக் கண்ணாடி நூல்)

''பகர்ந்தபடி படு காலம் தொடுகாலங்கள்
பண்பாகவேகலப்பாய் கண்டமஞ்சாய்
உகந்து வெவ்வேறே பிரித்துச் சொல்ல
உச்சியொடு கழுத்தில் மேல் உரைக்கக்கேளு
புகழ்ந்த உச்சி கொண்டைக் கொல்லி சீறுங் கொல்லி
புகழான பிடரி வர்மம் சருதி வர்மம்
புகழ்ந்தபடி பொற்சை வர்மம் குற்றிக்காலம்
பூண்ட செவிக்குற்றி பொய்கையாமே
காலமாம் நட்சத்திர வர்மம் காம்பூரிக் காலம்
கனமான மூர்த்தி வர்மம் திலர்தக் காலம்
காலமாம் மின்வெட்டி மந்திரக் காலம்
கூடுவது கையிரண்டினமும் சொல்வார்
மூலமாம் பட்சிவர்மம் கண்ணாடிக்காலம்
முளையான பால வர்மம் குண்டிகைக் காலம்
மூலமாம் கொண்ட வர்மம் உதிரக்காலம்
முன்வெட்டு வர்மமொட்டு உறக்க மாமே
உறக்கமொடு சங்கு திரிசும வர்மந்தான்
உறுந்தொகை கழுத்தின் மேலே இருபத்தைந்தும்.

வர்மம் என்பதும் காலம் என்பதும் வர்மத்தைக் குறிக்கும். காலம் (வர்மம்)

| | |
|---|---|
| 1. கொண்டைக் கொல்லி | 1 |
| 2. சீறுங்கொல்லி | 1 |
| 3. பிடரி வர்மம் | 1 |
| 4. சருதி வர்மம் | 2 |
| 5. பொற்சைக்காலம் | 2 |
| 6. குற்றிக் காலம் | 2 |
| 7. செவிக் குற்றிக் காலம் | 2 |
| 8. பொய்கைக் காலம் | 2 |
| 9. நட்சத்திரக் காலம் | 2 |
| 10.காம்பூரிக் காலம் | 2 |
| 11. மூர்த்தி வர்மம் | 2 |
| 12. திலர்தக் காலம் | 1 |
| 13. மின்வெட்டிக் காலம் | 2 |
| 14. மந்திரக் காலம் | 2 |
| 15. பக்ஷி வர்மம் | 2 |
| 16. கண்ணுடிக்காலம் | 1 |
| 17. பாலவர்மம் | 1 |
| 18. குண்டிகைக்காலம் | 1 |
| 19. கொண்ட வர்மம் | 1 |
| 20. உதிரக் காலம் | 2 |
| 21. ஒட்டு வர்மம் | 1 |

22. உறக்கக்காலம் 1

23. சங்குதிரிக் காலம் 1

24. கொம்புக் குற்றிக் காலம் 1

25. தலைப்பாக் காலம் 1

மேலே கூறப்பட்டிருக்கும் செய்யுளில் இருபத்து மூன்று இடம் தான் கூறப்பட்டிருந்தன. சிரசில் வர்மம் 25 உள்ளதில் இரண்டு இடம் விடப்பட்டிருந்தது அதைத் தொகுத்து எழுதியுள்ளேன்.

இப்படியே சிரசு முதல் பாதம் வரை 108 வர்மத்தின் பெயரும் அதன் குறிப்பிட்ட இடமும் அதன் குணங்களும் அதற்கு நிவர்த்தியும் விளக்கமாகக் கூறுகின்றன.

***மருந்துகள் :***

வர்மத்தால் பின் ஏற்படும் விளைவுகளை சுகமாக்கக் கியாழங்கள், மாத்திரைகள், சூரணங்கள், பற்பச் செந்தூரங்கள், நெய் வகைகள், லேகிய வகைகள், தைல வகைகள் இப்படி வேண்டிய மருந்துகளும் கூறப்பட்டிருக்கின்றன.

வர்ம நூல்களில் குறிப்பிட்ட நூல்கள் : 1. வர்ம பீரங்கி நூல் 2. பீரங்கித் திறவுகோல் 3. வர்ம ஆணி நூல் 4. வர்மக் கண்ணாடி நூல் 5. வர்ம சூத்திரம் இதில் இரண்டு நூல்கள் இருக்கின்றன. 6.படு வர்மத்திரட்டு நூல் 7.தொடு வர்மத்திறவுகோல் 8.வர்மாணித்திறவு கோல் 9. வர்மத் தீர்ப்பு 10. வர்மாணி கைமுறை ஏடு 11. வர்ம முத்திரை 12. வர்ம நீட்டுநிதானம் 13. வர்ம சூட்சம் 14. வர்ம சாரி 15. ஒடிவு முரிவு சாரி 16. நாலு மாத்திரைத் திறவு கோல் 17. வில்லு விசை நூல் 18. வர்மாதி நூல் முதலியன இன்னும் சிற்சில நூல்களும் இருக்கின்றன.

## அறுவை மருத்துவத்தில் வர்மத்தின் முக்கியத்துவம்

இந்திய மருத்துவத்தில் வர்மம் என்ற சொல் அடிக்கடி பயன் படுத்தப்படுகிறது. மருத்துவத்திலும், அறுவையிலும் வர்மத்திற்கு முக்கியத்துவம் உண்டு. ஏனெனில் அமுத நிலைகளை வர்மம் குறிக்கும். இந்த வர்மத்தைப் பற்றிய ஞானமில்லாமல் இரணவைத்தியர்கள் அறுவை சிகிச்சை செய்வது நல்லதல்ல வர்மத்திற்குப் பல நூலாசிரியர்களாலும், வெவ்வேறு விதமாக விளக்கம் கூறப்பட்டாலும் முடிவில் எல்லாம் ஒன்றையே குறிக்கும்.

1. சிலர் வர்ம ஸ்தானத்தில் காயம்பட்டால் உடல் நிலைக்காது என்பர்.

2. வேறு சிலர் வர்மஸ்தானத்தில் அடிபட்டால் வலியின் வேகம் மிக அதிகமாய் இருப்பதனால் காயம்பட்டவன் உயிரிழந்தவன் போல் தோற்றமளிப்பான் என்பர்.

3. இன்னும் சிலர் வர்மஸ்தானத்தில் காயம்பட்டவன் வாழ்நாளின் பிற்காலத்தில் குறுகிய காலத்தில் உயிரிழக்கக் கூடும் என்றும் கூறுவர்.

## வர்மஸ்தானங்கள் அல்லது வர்ம நிலைகள்

பேசி, தசிரங்கள், நரம்புகள், என்புகள், பொருத்துகள், விசிகள் ஆகியன எவ்வெவ்விடத்தில் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றனவோ அவ்விடங்கள் வர்மஸ்தானமாகும். சில பேராசிரியர்கள் இந்த இடங்களே பிராணன் தங்குமிடங்கள் என்று கருத்து தெரிவிக்கின்றனர். வர்மஸ்தானத்தில் உண்டாகும். சேதத்தினாலும் (காயப்படுதலாலும்) மிக்க துன்பம் உண்டாகும்.

மொத்த வர்மம் 108 என்பர். அதில் படுவர்மம் 12 என்றும், தொடுவர்மம் 96 என்றும், தட்டுவர்மம் 8 என்றும் கூறுவர். உற்காய

அதகாயங்களில் வரும் வர்மம் 44 என்றும், கூம்பு, உரம், மார்பு) வயிற்றில் ஏற்படும் வர்மம் 12 என்றும், முதுகில் 14, கழுத்து, சிரசு 37. (This is the classification according to Charaka and Susurtha).

மற்றொருவகை : 1. அடிப்பட்டவுடன் மரணத்தை விளைவிக்கக் கூடிய வர்மங்கள் (Injury which cause immediate death)

2. அடிபட்ட சில நாழிகை கழித்து மரணத்தை விளைவிக்கக் கூடிய வர்மங்கள்.

3. வர்மம் ஏற்படுவதற்கு காரணமான புறப்பொருள் வர்ம ஸ்தானத்திலிருந்து நீக்கப்படும் பொழுது மரணம் சம்பவித்தல்.

4. வர்மங்களில் அடிபட்ட காயங்களினால் செயலற்றுப் போதல் (கண் மேந்திரியங்களின் இயக்கம் குன்றல்).

5. தாங்க முடியாத வலியைக் கொடுக்கக் கூடிய வர்மங்கள்.

உற்காய அதகாயங்களில் ஏற்படும் காயங்களை விட தலை, கழுத்து, கூம்பு, வயிற்றில் ஏற்படும் வர்மங்கள் ஆபத்தானவை.

108. வர்மங்களுள் மிக முக்கியமாய் 3. வர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவை 1. இதயம் 2. வஸ்தி (சலப்பை மூத்திரப்பை) 3. கோர்த்தம்.

### *1. இதயத்தில் நேராக அடிபட்டால் இதய வர்மம் :*

In case the heart is injured there is cough or consumption, cardiac asthma, loss of strength dryness of the throat, pain in the trachea as if it is being drawn, protrusion of the tongue dryness of the mouth and of the palate, epilepsy (Convulsions due to injury). insanity, delirium, loss of consciousness and death.

2. *கோர்த்தத்தில் அடிபட்டால் :*

In case the head that is cerebrum if injured there is wry neck, paralysis of the muscles on one side of the face and the neck. Swimming of the eyes, swooning, bending in a circle, loss of motor effort, cough or consumption, Asthma, locked jaw, dumbness, slowness of speech, closer of eyes. tremour of the cheek, yawning, discharge of saliva, loss of voice, distortion of the face.

3. *நீர்ப்பையில் அடிபட்டால் மூத்திரக் காலம் :*

In case of bladder being injured there is suppression of wind, urine and stools, pain in the pubic and iliac regions, in the genital organs and in the bladder itself.

*படுவர்ம நிலையங்கள் 19 அவையாவன :*

திலர்த வர்மம் 1. நட்சத்திரக்காலம் 2. உறக்க காலம் 2, பிடரிவர்மம் 1, திவளைவர்மம் செவிக்குற்றிவர்மம் 2, அடப்பக்காலம் 2, சிறிய அத்தி சுருக்கி 2, வலி அத்திசுருக்கி 2, உருமிக்காலம் 1, மூத்திரக் காலம் 1, கல்லிடைக்காலம் 2. இந்நிலையங்கள் உடலின் முன் பின் பக்கங்களிலும் இடது வலது பக்கங்களிலும் இருக்கின்றன.

படுவர்மம் -12

## திலர்த வர்மம் :

இருப்பிடம் : நெற்றி புருவத்திற்கு ஒரு நெல் அளவிற்கு கீழ் (இரண்டு புருவங்களுக்கும் இடையேயுள்ளது)

Nasal arch of the frontal veins situated between the two eyebrows. Extraction of any pointed foreign body lodged to this marma results in the death of the patient who on the contrary lives as long as the foreign body is allowed to remain inside of the foreign body comes out side out itself after purification.

(ஸ்தபனி வர்மம் என்று ஆயுள் வேதத்தில் கூறுவர்)

**குறிகுணங்கள் :**

ஆள்நிமிர்ந்து அண்ணாந்திருப்பான் அடிபட்ட 3 3/4 நாழிகைக்குள் (1 1/2 மணி நேரம்) இதற்கு மருந்துவம் செய்தால் பிழைப்பான்.

**மருத்துவம் :**

இதற்கு நேரே மறுபுறத்தில் பிடரியில் தட்டி ஆளைத்தூக்கி, அசைத்து, உச்சியில் தட்டி, மாத்திரை நாடியை கணக்காய் ஏந்தி, தூக்கி, உதறி, மூக்கிலும், செவியிலும் சுக்குத்தூள் ஊதவும். ஆனால் அங்குல ஆழத்தில் இரத்தம் கட்டி முறிந்தால் அசாத்தியம் இதில் உள்ளுக்கு இரத்தம் கட்டுப்பட்டு ஆழமாய் முறிந்தால் 3 அல்லது 7 நாளில் (இது திடீரென்று ஏற்பட்டால்) 3 3/4 நாழிகையில் மரணம்.

## 2. நட்சத்திரக்காலம்

They are two in numbers situated tuned border of each eye and below the end of the eye brow.

**இருப்பிடம் :**

கடைக்கண்ணின் கீழ் ஒரு நெல் எடை குறியில் வர்மம்.

***குறிகுணங்கள் :***

கண் உருளும். மஞ்சள் போன்று சிவந்திருக்கும். மூக்கில் இரத்தம் காணும். வேர்வை உண்டாம். செவி கேளாது. முதுகு விலா இருபுறமும் குளிர்ச்சி காணும்.

***கெடு :***

27 நாழிகை.

Injury causes Impairment or defective vision or blindness due to injury to the Intra orbital artery. (கீழ் குவளைநாடி)

***இளக்குமுறை :***

நேரே மறுபுறத்தில் உச்சியில் தட்டித் தடவிக் கொண்டு, கீழ் நோக்கி நெஞ்சிலும் முதுகு வரியிலும், தடவி இளக்கவும்.

பின்பு வெந்நீரில் குளிக்கச் செய்து கஞ்சி சாப்பிடவும். பொதுவாக வர்மத்திற்கு அன்னப்பால் சாகாமூலி (சீந்தில்) சேர்த்துக் கொடுப்பது வழக்கம்.

## 3. செவிகுத்துக் காலம்

***இருப்பிடம் :***

காதின் சிறுதண்டின் அருகில் கீழ்க்குழியில் செவிக்குத்துக் காலம்.

A hurt to any of the marmas attached to the lower end of an ear (posterior extrinsic ligament) result in lose of hearing.

***குறிகுணங்கள் :***

விழி இரண்டும் தள்ளி, சுண்டு (lips)கோணிப் போகும். வாயிலும், மூக்கிலும் இரத்தமும், நுரையும் (பதை) தள்ளும்.

**கெடு :**

23 நாழிகை.

**இளக்குமுறை :**

மறுபுறத்தில் விரல் கொண்டு குத்தி கை கொண்டு தூக்கி பின்பு நெற்றிக்கு நேரே, உச்சியில் தடவி, பிடரியும், உச்சியும் தடவிவிட இளகும். மாத்திரை அதிகமானால் தலை சுற்று உண்டாகும்.

**உணவு :**

அன்னப்பால் கொடுக்கவும்.

## 4. பிடரிக்காலம்

**இருப்பிடம் :**

பிடரிக் குழியில் தலைமுடிந்திருக்கும் தலத்தில் நேர் வரியில் பிடரிக்காலம்.

An injury to any of the two marmas lying at the junction of the head and neck. (கிரீவம் - Transverse process of the arch of the atlas. results in tremor of the head)

**குறிகுணங்கள் :**

நாக்குத் தள்ளும், கண்துடிக்கும், மூடும்; பெருமூச்சு நடுக்கம் உண்டாகும். சுளுக்கு குலைய முறிந்தால் மரணம்.

**கெடு :**

24 நாழிகை.

### இளக்குமுறை :

நாடியைத் தாங்கித் தூக்கி எடுத்து இருத்தி கை இரண்டையும் பிணைத்து உச்சியில் நிச்சயமாய் அடித்துத் திருப்பித் தடவிவிட்டால் இளகும்.

### உணவு :

அன்னப் பால் கொடுக்கவும் 3-நாள் வெந்நீரில் குளிக்கவும்.

## 5. உறக்க காலம்

### இருப்பிடம் :

கழுத்தின் கீழ்நாடியின் கீழே அலகுபற்றி இருப்பது உறக்கக் காலம்.

### குறிகுணங்கள் :

கண்ணும் பல்லும் வாயும் மூடும். வாய் பிளந்து நாக்குத் தள்ளும். உடல் வெதும்பி உணர்ச்சி மாறும். குறட்டையிட்டு உறங்கும்.

### கெடு :

90 நாழிகை. (ஆயுர்வேதத்தில் மாத்ரகாஸ் are 8 in number. These are Sira marmas. In the neck 4 on each side injury causes sudden death. These are probably external and internal jugular veins, vagus nerve and phrenic nerve. Some are of the opinion that hallucination, delirium, stupor, coma & death are the results of injuries to these marmas.

### இளக்குமுறை :

கை புனைந்து உச்சியில் அடித்து கழுத்தை இருபக்கமும் திருப்பி செவி இரண்டிலும் சுக்குத்தூள் ஊதி அடங்கலில் தட்டி இளக்கவும்.

**உணவு :**

அன்னப்பால்.

## 6. தும்மிக்காலம் அல்லது திவளைக் காலம்

**இருப்பிடம் :**

கழுத்து, தொண்டையின் கீழ் வில்லில் வர்மம்.

**குறிகுணங்கள் :**

வாயில் பதையும், (நுரையும்) தள்ளும். நாசியில் நீர் ஒழுகும். முகம் கறுக்கும். வியர்வை உண்டாகும். உடம்பு துடிக்கும், கண், மூக்கில் நீர் ஒழுகும்.

One Nila and Manya are situated on other side. i.e. Anterior and posterior side of the larynx. An injury to any of them produces dumbness and change of voice. Hoarseness (குரல் கம்மல்) and also loss of sense of taste. These are probably due to injuries in the Superior laryngial and glossopharyngeal nerves.

**கெடு :**

18 நாழிகை ஒரு நூலில், மற்றொரு நூலில் 25 நாழிகை.

**இளக்குமுறை :**

இதன் மறுபுறத்தில் பிடரிக் குழிக்கு 8 விரல் கீழ் ஒரு மாத்திரை (தடவை) குத்தி, உச்சியில் ஓர் அடி அடித்து இளக்கிக் கொள்ளவும்.

**உணவு :**

அன்னப்பால் கொடுக்கவும். வில்வவேர் இட்டு கஞ்சி செய்து தேன் சேர்த்துக் கொடுக்கவும் நாசி, செவியில் சுக்கால் ஊதிக்கொள்ளவும்.

## 7. நேர் வர்மம் அல்லது கூம்பு வர்மம்

**இருப்பிடம் :**

நெஞ்சுக் கூம்பின் எலும்பிற்கு 2 விரற்கடை கீழே குழியில் நேர் வர்மம்.

**குறிகுணங்கள் :**

உடல் குளிரும். வேர்வை காணும். இருமும் போது இரத்தம் வெளிப்படும்.

A hurt in the Hiruthaya Marma. which is situated in the thorax, between the two breasts and above the pit of the amasaya proves fatal within a day. Injury causes instant death also.

**கெடு :**

18 நாழிகை என்றும், 20 நாழிகை என்றும் கூறுவர்.

**இளக்குமுறை :**

இதற்கு நேரே முதுகு வரியில் பின் புறத்தில் புறங்கால் கொண்டு 1/2 முழம் தூக்கி நிச்சயமாயத்தட்டி மேல் கைவைத்து உச்சியில் ஓர் அடியும் அடித்து, இளக்கிக் கொள்ளவும். சரீரத்தைத் தடவி தூக்கி, தண்ணீர் கொடுக்க தளர்ச்சி போகும்.

பரிகாரம்:- வில்வவேரும் வெங்காயமும் இட்டு கஞ்சி வைத்துக் கொடுக்கவும்.

## 8. அடப்பக் காலம்

### இருப்பிடம் :

விலாவில் முண்டு எலும்பிற்கு 4 விரலுக்கு மேல் அடப்பக்காலம்.

### குறிகுணம் :

1/2 நாழிகையில் கை கால் குளிர்ந்து போகும். தளர்ச்சி உண்டாம், செவி கேளாது.

### கெடு :

25 நாழிகை.

### இளக்குமுறை :

மறுபுறத்தில் 1/2 முழ அகலத்தில் புறங்கால் கொண்டு ஒரு தட்டுத் தட்டி விலாப்புறமும், குறுக்கும் தடவி அமர்த்தி இளக்கிக் கொள்ளவும். தூக்கி உதறி உச்சியும் பிடரியும் தடவி விடவும்

### உணவு :

உளுவா அரிசியும் (வெந்தயம்) அமிர்தவல்லியும் இட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

## 9. சுருக்கிக் காலம்

### இருப்பிடம் :

விலாவில் முண்டெலும்பிற்கு இரு விரல் கீழ் அத்திசுருக்கிக் காலம்.

**குறிகுணம் :**

40 நாட்களுக்குள் ஆள் ஒரு முழம் குறுகிப்போவான்.

Nithamba Marmas or Asthi Marmas lie on the back of the Hip bones on each side of the sacral bone and forms a covering for Asayas. Injury causes emaciation atrophy of the lower parts and ultimately death Probably these marmas are greater sciatic and lesser sciatic notches.

**இளக்குமுறை :**

நேரே மறுபுறத்தில் 1/2 முழம் தூக்கி புறங்கால் கொண்டு ஒரு தட்டு தட்டி, உச்சியில் ஓர் அடி அடித்து பிடரியும் தடவி இளக்கித் தூக்கி விடவும். மாத்திரை மீறினால் மீளாது. மரணம் நிச்சயம். இளக்கினாலும் 40 நாட்களுள் ஆள் ஒரு முழம் குறுகிப் போகும். ஒரு காலும், கையும் வெட்டி சுண்டி சுண்டி இழுக்கும். தண்ணீர் தாகம் உண்டாகும்.

***பத்திய பரிகாரம்***

இதற்கு ஐந்தெண்ணெய் தைலம் வைத்துச் கொடுக்கவும். சாதாரணமாக சுகம் வரும் எனினும், இந்த வர்மம் செய்யக் கூடாது.

உணவு : அடப்பக்காலத்தில் கஞ்சி கொடுப்பது போல கொடுக்கவும்.

*10.* ***உறுமிக்காலம் :***

**இருப்பிடம் :**

தொப்புளுக்கு 4 விரலுக்கு மேல் உறுமிக் காலம்

**குறிகுணம் :**

பன்றி போல் உறுமுவான். கண் விழிப்பான் செவி கேளாது. மேல் மூச்சு உண்டாகும். Internal bleeding and death.

**கெடு :**

24 நாழிகை.

**இளக்கு முறை :**

அணைத்து இருத்தி, மறுபுறத்தில் புறங்கால் கொண்டு ஒரு தட்டு தட்டி கை புணைந்து உச்சியிலிருந்து குத்தினால் இளகும். கழுத்தெலும்பையும், குறுக்கு வரியையும் தடவி இளக்கவும். நத்தைச் சூரி வேரிட்டு அன்னப்பால் கொடுக்க வேண்டும்.

11. **அத்திசுருக்கிக் காலம்**

**இருப்பிடம் :**

தொப்புளுக்கு 4 விரல் கீழ்.

**குறிகுணங்கள் :**

வயிறு ஊதும். மூத்திரம் சிறுத்துப் பாயும்

**கெடு :**

17 நாழிகை.

**இளக்குமுறை :**

நேரே மறுபுறத்தில் கால்படம் கொண்டு நிச்சயமாய் உதைத்து மார்புப் பொருத்தில் உப்புக் குத்தி மிதித்தால் இளகும்.

## [வேறு]

நேரே மறுபுறத்தில் புறங்காலால் ஓர் தட்டுத் தட்டி கை மேல் கை பிணைத்து உச்சியில் ஓர் அடியும் அடித்து இளக்கிக் கொள்ளவும்.

***பரிகாரம் :***

கஞ்சியில் வெங்காயமும், வில்வ வேரும் இட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## 12. கல்லிடைக் காலம்

***குறிகுணங்கள் :***

விதை இரண்டும் காணாது. சத்தம் மூச்சுக் காணாது. நீர் கட்டும், வயிறு ஊதும்; மூச்சு விடாது; உறங்கும். இரத்தம் வந்து கட்டிக் கொள்ளும், சதை வளர்ந்து மூடும்.

***கல்லிடைக் கால வர்மத்திற்கு மருந்து :***

வர்மம் எழுப்பின உடனே அரிசி படி அரைக்காலும் உப்பு படி அரைக்காலும் போட்டுக் கஞ்சி வைத்துக் கொடுக்கவும், உடனே மலங்கழியும்; நீர்பிரியும்; இந்த வர்மம் நாழிகை மூன்றரையே, விதனம் நிற்கும் நீர் பிரியும்.

இந்த வர்மம் கொண்டவர்க்குப் புளியிலையை அவித்துச் சீலையில் பொட்டணம் கட்டி விளக்கெண்ணெய் தாரையில் போட்டு ஒற்றிடமிடவும்.

## மூத்திரக் காலம்

### இருப்பிடம் :

தொப்புளுக்கு 4 விரல் கீழ்.

### குறிகுணங்கள் :

அற்று அற்று மோலும், துள்ளிப்போடும். நற்சீரகம், வெங்காயம் கஞ்சியிட்டுக் கொடுக்கவும்.

### அண்டத்தில் வர்மம் :

விதையிரண்டும் உயரே ஏறும்.

### குறிகுணங்கள் :

உடம்பெல்லாம் குளிர்ந்து போகும், வயிறு ஊதிப் போகும்.

### இளக்குமுறை :

இரண்டு அண்டை கட்டி வர்மம் கொண்டவனை அதில் உட்காரவைத்து நன்றாகப் பிடித்துக் கொண்டு உச்சியில் கை பிணைந்து உரக்க அடிக்கவும், உடனே தூக்கி விடவும். இதனால் விதை கீழே இறங்கும், உடனே இடக்கையைக் கொண்டு பிடித்த பிடியை விடாமல் 3 விரல் அகலத்திற்கு துணியைக் கிழித்துப் பச்சை வெள்ளத்தில் (தண்ணீரில்) நனைந்து அதனடிபற்றிச் சுற்றி விடவும் அதற்கு உடனே பச்சை வெள்ளம் உள்ளுக்குக் கொடுக்கவும், ஏலம், நற்சீரகம், விஷ்ணுகிரந்தியிட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

### தொடுவர்மம் - 96

1. நகக்கண்ணில் - நகக்கண் வர்மம்
2. படத்தில் - பட்முறித்தான் வர்மம்
3. சிறுவிரல் இடையில் - கடிவிழி காலம்

4. உள்ளங்காலில் - வெள்ளை வர்மம்

5. பூமிக்காலம் - உள்ளங்கால் வர்மம்

6. உப்புக்குத்திக் காலி - உப்புக்குத்தி வர்மம்

7. குதிகால் நரம்பு ஸ்தலத்தில் - குதிகால் வர்மம்

8. கரண்டையில் - கரண்டை வர்மம் (பரடு)

9. கரண்டைக் கண்ணில் - கரண்டைக்கண் வர்மம்

10. முழங்காலில் - குதிரை வர்மம்

11. தவளை ஸ்தலத்தில் - தவள வர்மம் (சரளி)

12. முட்டிச் சிரட்டையில் - சிரட்டை வர்மம்

13. நடுத்தொடையில் - ஆமைக்காலம்

14. ஆமைக்காலத்திற்கு 4 விரலுக்கு மேல் - துண்டு வர்மம்

15. அரைப்பு ஸ்தலத்தில் - அத்திச்சுருக்கி வர்மம்

16. லிங்கத்தில் - லிங்க வர்மம்

17. விதை முனையில் - வித்து வர்மம்

18. அதன் இரண்டு விரலுக்குத்தானே - கல்லிடை வர்மம்

***வர்ம அடிபட்டு கிடப்பவருக்குறிய இளக்கு முறை :***

வர்மத்தில் அடிபட்டு கிடப்பவரைத் தூக்கி இருத்தி, இரு கால்களையும் நீட்டி, தொடையோடு தொடையாக நெருக்கிப் பிடிக்கச் செய்து இடது கையை நெஞ்சோடு சேர்த்து வைத்து இறுத்திக் கொண்டு, வலது கையை பிடரியிலிருந்து நேரே கீழ்நோக்கி இறக்கி பிட்டி (பிருஷ்டம்) வரையிலும் மும்முறை தடவி, அடிபட்டவர் நடுமுதுகில் நான்கு விரலுக்கு மேலிருந்து நாங்கணத்தின் பொருத்து **(Sacro iliac joint)** என்ற மூலம்

வரையிலும், கால் முட்டு கொண்டு மும்முறை தடவி இறக்கிக்கொள்ளவும். அங்ஙனம் தடவுகையில் அடிபட்டவரது இருதோள்களையும் பிடித்துக் கொண்டு இறக்க வேண்டும். மேலும் அப்போதே நாங்கணத்தின் பொருத்தில் கால் பெருவிரலால் மெதுவாக ஒரு முறை இருத்தி விடவும்.

*மற்றொரு தடவுமுறை :*

அடிபட்டவரது பின்புறம் இருந்துகொண்டு இருகைகளாலும் முதுகை மும்முறை தடவி இளக்கி மார்புக்கு நேர் மறு புறத்தில் இருபக்கமும் பெருவிரலால் ஒரு இருத்து விட்டு, முதுகை மேலும் மும்முறை தடவி இளக்கிக் கொண்டு மெதுவாக ஒரு முறை தட்டி பிடரியிலிருந்து மூலம் வரை இறக்கித் தடவிக் கொள்ளவும், அதன்பின் தொடையின் மேல் பாகத்தில் பிடரியிலிருந்து முட்டுவரையிலும், கைபெருவிரலைவைத்து இறுத்தி நான்கைந்து முறை தேய்த்து விட்டு நடுத்தொடையில் பெருவிரலால் ஒரு முறை இறுத்தி உள்ளங்கை மேற்பாகத்தைக் கொண்டு மேலே இருந்து முட்டுவரையிலும் இறுத்தி இருமுறை தேய்த்து விடவும் இங்ஙனம் இருதொடையிலும் செய்யவும், அதன் பிறகு முட்டியிலிருந்து கரண்டை வரையிலும், முழங்காலில் 2,3 முறை உருவி விடவும் பின்னர் கரண்டையைத் தடவி விட்டுப் படத்தைப் பிடித்து அசைத்து, உப்புக்குத்தியும், பெருவிரலையும், மற்ற விரல்களையும் இழுத்துவிட்டு உள்ளங்காலில், உள்ளங்கையை வைத்துப் படத்திற்கு மூன்று தட்டு தட்டவும். பிறகு உச்சியில் இருமுறை தட்டி பிடரியிலிருந்து மூலம் வரை தடவி இடுப்பைப் பிடித்து அசைத்து, குலுக்கி விட்டுத் தோளைப்பிடித்து அசைத்து விடவும், உடன் இளகும்.

குறிப்பு : வர்மம் அடிபட்டவனது கண், வட்டம் பாய்ந்தாலோ, நீர், மலம், விந்து இவை வெளியேறினாலோ, கண்பாவை ஒளிக்கு மீண்செயல் காட்டாதிருந்தாலோ, அவனைத் தொடுதல் கூடாது.

***வர்ம நோய்க்கு மருந்துகள் :***

குடல்நீக்கிய கருங் கோழியின் வயிற்றினுள் ஆடாதோடை வேர், தூதுளை வேர், சுக்கு, ஏலம் ஆகியவற்றைத் தூளாக்கி, அரைத்து, நிரப்பித் தைத்து, அக்கோழியை குறுந்தொட்டிக் குடிநீரில் இட்டு நீர் 4-ல் ஒன்றாய் சுண்டுமளவு வேக வைத்து, பின் கோழியை உரித்து, உள் இருப்பனவற்றைக் கொடுக்க வர்மம், இருமல் நீங்கும்.

இங்ஙனமே குடல்நீக்கிய கோழிக் குஞ்சுடன் தேங்காய் சேர்த்திடித்து, உடன் சம அளவு மஞ்சள் கூட்டி விரவி கிழி கட்டி, வேப்பெண்ணெயில் காய்ச்சி அதனைக் கழுத்தின் கீழ் வைத்து வேதுகொடுக்க வர்ம அடியினாலான முறிவும், சன்னியும் நீங்கும்.

மேலும் இவைகளுக்கு கோட்டம், ஏலம், சீரகம், உளுவா, அதிமதுரம், வெள்ளைப்பூண்டு, பருத்திவிதை, தேங்காய் ஆகியன சமன் கலந்து தட்டி, கிழிகட்டி, அதனை வெந்து கொண்டு இருக்கும் அரிசிக்கஞ்சியில் போட்டு வேகவைத்தும் அருந்தலாம்.

***மேற் பூச்சுகளுக்கு :***

இலிங்கம், மஞ்சள் மெழுகு, துருசு, துத்தம், வேம்பாடம், கருஞ்சீரகம், கார்கோலரிசி இவை வகைக்கு ஒரு கழஞ்சு, பொடித்து, அதனை தேங்காய் எண்ணெய், புங்கம் பால் வகைக்கு உழக்களவு ஆகியவற்றில் போட்டு மணல் பதத்தில் காய்ச்சி இறக்கவும்.

(அல்லது) நல்லெண்ணெய், மாதுளை இலைச்சாறு ஆகியவற்றில் கற்றாழைச்சோறும், மஞ்சள் மெழுகும் கலந்து மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கவும். இந்த தைலங்களை முறைப்படி மேற்பூச்சாக பூசுவதாலோ, மற்றும் அகில்கட்டை, மூங்கிலிலை, அமுக்கரா ஆகியவற்றைக் காடி விட்டரைத்துப் பூசியோ,

(அல்லது) வெள்ளுள்ளி, கடுகு, மஞ்சள், சுக்கு, கருப்பட்டி, நீர்முள்ளி, வசம்பு இவை சமன் கலந்து உடன் திருகு கள்ளிச்சாறும், ஊமத்தன் இலைச்சாறும் கலந்து அரைத்து மேற்பூச்சாக பயன்படுத்துவதால் வர்ம சம்பந்தமான வலி, குத்து, மூட்டுவாதம், முடக்கு, உளைச்சல் முதலியன நீங்கும்.

***வர்ம பரிபாஷை :***

மெய்யென்ற உடலைத் தொடாமல் வர்மம் எடுப்பதற்கு மெய் தீண்டாக் காலம் என்றும், மெய் தீண்டா மூலிகை வெற்றி என்ற பச்சிலை, திருமேனி மூலிகை என்பவைகள் முறையே வெள்ளைப் பூவுடைய கொழுஞ்சி (குன்றி தாங்கிய மூலிகை) வேலிப்பருத்தி, வல்லாரை என அறிந்து கொள்ளவும்.

***வர்மத்திற்குக் கஷாயம் எண்ணெய் இவைகளின் பெயர் :***

1. சிரசுவர்மத்திற்கு இளக்கிய பிறகு குரோசானி இட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

2. திலர்த வர்மத்திற்கு அதிமதுரம் இட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

3. உறக்க காலத்திற்கு கிராம்பும், குறுந்தொட்டியுமிட்டுக் கஞ்சி வைத்துக்கொடுக்கவும்.

4. நக்ஷத்திர வர்மத்திற்கு நற்சீரகம் இட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

5. சுழி ஆடி வர்மத்திற்கு இது போலவே கொடுக்கவும்.

6. வயிற்று வர்மத்திற்கு தேனும் வில்வ வேருமிட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

7. அடப்ப வர்மத்திற்கு வெந்தயம், அமிர்தவல்லி இட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

8. சிறிய அத்திச்சுருக்கி வர்மத்திற்கு இதுபோலவே கொடுக்கவும்.

9. அலரி வர்மத்திற்கு வெங்காயமும், வில்வ வேரும் இட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

10. மூத்திரக் காலத்திற்கு நற்சீரகமும், இஞ்சியும், உள்ளிச் சாறிட்டுக் கஞ்சி கொடுக்கவும்.

***ஸ்தலம் :***

1. திலர்தக் காலம்.

2. நக்ஷத்திரக் காலம் - திலர்தக் காலத்திலிருந்து 6 விரல் வலத்தும்: இடத்தும்.

3. செவிக்குத்துக் காலம் - நக்ஷத்திரக் காலத்திற்கு கீழ் 4 விரலுக்கு வலத்தும், இடத்தும்.

4. பிடரிக்காலம் .

5. தும்மிக் காலம் - செவிக்குத்துக் காலத்திற்கு 4 விரலுக்குக் கீழ் வலத்தும் இடத்தும்.

6. உறக்க காலம் - தும்மிக் காலத்திற்கு 3 விரலுக்கு கீழ்.

7. உறுமிக் காலம் - தொப்புளுக்கு 2 விரலுக்கு மேல்.

8. நேர் வர்மம் - உறுமிக்கு 6 விரலுக்கு மேல்.

9. நெஞ்சுக்குழி - நேர் வர்மத்திற்கு 4 விரலுக்கு மேல்.

10. அடப்பக் காலம் - நேர்வர்மத்திற்கு 4 விரலுக்கு வலத்தும் இடத்தும்.

11. பெரிய அத்திச்சுருக்கி - அடப்பக் காலத்திற்கு 4 விரலுக்கு மார்பிலிருந்தும் 4 விரலுக்குக்கீழ் வலம் இடம்.

12. சிறிய அத்திச்சுருக்கி - பெரிய அத்திச்சுருக்கிக்கு 2 விரலுக்கு கீழ் வலத்தும் இடத்தும்.

13. மூத்திரக் காலம் - தொப்புளுக்கு 4 விரலுக்குக் கீழ்.

***வசவெண்ணெய் :***

1. கற்றாழைச்சாறு, நல்லெண்ணெய் சம எடை, நல்லெண்ணெய்க்கு 40ல் 1 பங்கு அல்லது 20-ல் ஒரு பங்கு வெள்ளைக் குங்கிலியப் பொடி போட்டு வெயிலில் வைத்து, கையாலேயே அடித்துப் பிசைந்து கடைவதுபோல் கடைந்துகொண்டு வர வெண்ணை போன்று ஆகும். வர்மத்தையும் பிடிப்புகளையும், முறிவு ஒடிவு சரியாகி விட்ட பிறகு free movements இல்லாத காலத்தில் இதைத் தடவ குணம் தரும்.

2. கற்றாழைச்சாறு 1/4 படி, நல்லநெய், தேங்காய் நெய், ஆமணக்கு எண்ணெய், எலுமிச்சம் பழச்சாறு வகைக்கு 1/4 படி. வெந்தயம் 1/2 பலத்தை கற்றாழைச் சாற்றால் அரைத்து, மற்றவற்றுடன் கலந்து காய்ச்சி எடுத்துக்கொள்ள வேண்டும். வெளிப் பிரயோகமாக நரம்பில் தடவ வேண்டும்.

3. கரியபோளம் (கரிய பகழம், கட்டிச்சென்னாரம்) களிப்பாக்கு, முட்டை வெண்கரு விட்டரைத்து, சூடுபண்ணி சிறிது சாராயம் விட்டு களப்பவும் (கலக்கவும்).

***வர்மநெய் :***

கோஷ்டம், நன்னாரி, தாளிசபத்திரி, அரத்தை, வெள்ளைப்பூண்டு, அரிசிவகை 6 (ஏலரிசி, கார்போக அரிசி, வெட்பாலை அரிசி, அரிசித்திப்பிலி, வாலுளுவை அரிசி, மூங்கிலரிசி,) குறுந்தொட்டி வில்வவேர் வகைக்கு 2. நெய் 1/4 படி, தேன் 1/4 படி கடைச்சரக்குகளை 4 படி நீரிலிட்டு 1/4 கஷாயமாக குறுக்கி வடிகட்டி அத்துடன் நெய்யை சேர்த்துக் காய்ச்சி, தெளிபருவத்தில் வடித்து அத்துடன் தேன்விட்டு அடுப்பில் ஏற்றி இளந்தீயில் வைத்து, மெழுகு பருவத்தில் வடித்தெடுக்கவும்.

இதை நாட்பட்ட, தீவிர வர்மத்தில், எல்லா வர்மத்திலும் உள்ளுக்கு பயன்படுத்தலாம். கடும்பத்தியம்.

***எலும்பு முறிவிற்கு :***

ஆலம்பால் 1/4 படி, ஊச்சிச்சாறு 1/4 படி (நத்தைச்சாரு) குறுந்தொட்டிவேர் 1 பலம், நன்னாரி (நறுங்கட்டிலதங்கு) சிவதை 1 பலம், வெண்பிசின் (குங்குலியம்) 1 பலம். இவற்றையெல்லாம் நன்றாக இடித்து, நல்லெண்ணெய் 1 படியுடன் கலந்து அடுப்பில்வைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மனிதர்களுக்கு மட்டுமின்றி மிருகங்களான கோழி, மாடு, ஆடு, நாய், யானை, பூனை இவைகளுக்கும் வர்மம் ஏற்படுவதுண்டு. கோழிக்கு ஏற்படும் வர்மம் 4 வகைப்படும். அவற்றை இளக்கும் முறைகளும் நூற்களில் கூறப்பட்டுள்ளன.

***சின்னத் திருமேனி எண்ணெய் :***

சுக்கு, நல்ல மிளகு, செவ்வள்ளி, மஞ்சிட்டி, வகைக்கு 1/2 பலம், குப்பைமேனிச்சாறு, வேலிப்பருத்திச்சாறு வகைக்கு 1/4 படி, நல்லெண்ணெய் உழக்கு இவைகளை முறைப்படி தைலம் காய்ச்சி வெளிப்பிரயோகமாக வர்மத்திற்கு பயன்படுத்தலாம்.

***அடங்கல் :***

1. கூட்டடங்கல் - அக்குளில் கைவைத்து கீழே விழுந்தவனை தூக்குதல்.

2. குவட்டடங்கல் - கீழ்த்தாடைக்கோணத்தில் கைவைத்துத் தூக்குதல் (நாடி அந்தம்).

3. வாரடங்கல் - விலாவில் கைவைத்துத் தூக்குதல்.

4. கோரடங்கல் - (வாரடங்கலுக்குக் கீழ் அழுத்துவது) அடி வயிற்றில் கீழ் நோக்கி.

5. சன்னி அடங்கல் - கையிலும், காலிலும், பெருவிரல் தர்சனி விரலுக்கு (முதல் கரப, இரண்டாம் கரப) இடைவெளியில் கைவைத்து தூக்குதல்.

6. செவி அடங்கல் - சூசக விக பள்ளத்தில் காதின் கீழ் கையைவைத்து தூக்குதல்.

7. பொறுப்படங்கல் - பேராசன அண்ணில் கை வைத்து தூக்குதல்.

8. சர்வாங்க அடங்கல் - Stimulation of the male genital and clitoris in female.

9. உள் சர்வாங்கம் - நாக்கின் கீழ் உள்ள நடு நரம்பை தூண்டித் தூக்கல்.

இந்த அடங்கலில் எந்த இடத்திலாவது பார்த்து தூக்கிவிட எழுந்திருப்பான்.

## அனுபவ விளக்கக் குறிப்புகள் வர்மம் பட்டவர்களை பார்க்கும் குறிப்புகள்

வர்மம் பட்டபிறகு வாதநாடி பம்மிப் போகும் செத்தவன் போல் கிடப்பான் உருண்டு புரண்டு வந்தால் பிழைக்க மாட்டான். கண் கறுப்புப் படலத்துள் கை வைத்து ஆட்டம் பார்க்கவும். விரலாட்டம் கண்ணொளியில் தெரிந்தால் சீவனிருக்கிறதென்றறியவும். ஆட்டமில்லாமலும், ஆண்குறி உள் சுருங்கிஇருந்தாலும் சீவனில்லை என்றறியவும். சீவனிருந்தால் வீமனொளியிலும் மெய் தீண்டாக் காலத்திலும் உள்ளங்காலிலும் பெருவிரல்களிலும் அடங்கி நிற்கும்.

மேற் சொல்லிய இடங்களில் கை வைத்துப் பார்த்தால் சுடும். துடிக்கும் எதில் சூடும் துடிப்புமிருக்கிறதோ அதில் சீவனிருக்கிறதென்றறிந்து எழுப்பவும் மெய் தீண்டாக்காலத்தில் சீவன் அடங்கியிருந்தால் தூக்கி நிலத்திலிருத்தி அடக்கத்தில் சொல்லியபடி எழுப்பினால் சீவனுண்டாகும்.

## சோதனைக்காலம்

கை கால் பெருவிரல் நகக்கண்ணில் கை கொண்டு பலமாய் நசுக்கினால் சுணை உண்டாகும். வீமனொளியில் கை கொண்டு பிடித்து குலுக்கினால் சத்தம் கொடுக்கும், கண்விழிக்கும் வாலி ஒளியில் கை பெருவிரல் கொண்டு ஊன்றி இருத்தித் தூக்கினால் கண்விழிக்கும்; சத்தங்கொடுக்கும்; உணர்வுண்டாகும் இதமறிந்து அடக்கத்தில் சொல்லியபடி எழுப்பவும்.

## *வாலிஒளி, வீமனொளி, மெய்தீண்டாக் காலம் இருக்கிற இடங்கள்*

*வாலி ஒளி :*

காது பொன்தண்டருகிலும்,

*வீமனொளி :*

விலாக்கடை வயிற்றெலும்பு கடைசிக் கொழுந்தருகிலும்.

*மெய்தீண்டாக்காலம் :*

பவன வாய்க்கும் விதைக் கொட்டைக்கும் மத்திய தாரையிலும் இருக்கிறது; அறிந்தெழுப்பவும்.

## *பிடரி நெஞ்சு விலாப்புறம் இவைகளில் வர்மம் பட்டால் அறிகிற குறிப்பு*

பிடரி, விதைக்கொட்டையில் பட்டால் கவிழ்ந்து கிடக்கும், நெஞ்சில் பட்டால் மல்லாந்து கிடக்கும். விலாப்புறங்களில் பட்டால் வர்மம் கொண்டபுறங் கீழே கிடக்கும் குலையிலும், ஐயநோய் வர்மங்கொண்டால் வாயால் குருக்காணும் கல்லீரலில் வர்மங் கொண்டால் விலகாத சன்னியின் குணங்காட்டும். கொப்பூழுக்கு மேற்பட்டால் உருமும் உன்னும்; கண்தட்டிவிழிக்கும்; விழி தெரியாது.

*படுவர்மம்*

எந்த வர்மத்தை இளக்கினாலும் உடனே சுக்கு, மிளகு, வெற்றிலை மூன்றையும் சுவைத்து நாசி செவிகளிலூதவும் கண்மயக்கந்தீரும்.

## சகலவர்மத்திற்கும் எழுப்புகிற அடங்கல் முறையின் விவரங்கள்

ஒரு மனிதனுக்கு எந்த வர்மத்தில் பட்டாலும் குடுமியைப் பிடித்துத் தூக்கியிருத்தி வைத்து முன் நின்று இரு உள்ளங்கையிலும் மும்மூன்று குத்துக் குத்தி கைகளைப் பின்னிக் கட்டு கட்டி வைத்து இருகால் பெருவிரலையும் இருகை கொண்டு பிடித்து கீழ் மடக்கி அசைத்து இருத்தக் குலுக்கி, இருகாலையுஞ்சேர்த்தடித்து இரு உள்ளங்காலிலும் மூன்று குத்துப்பலமாய்க்குத்தி உடனே காலை மடக்கிச் சம்மணங்கூட்டி வைத்துப் பின் நின்று இரு செவிகளையும் கீழ் நோக்கி வலுவாய் மூன்று தடவை உருவி நாடியைத் திருப்பிக் குலுக்கி நாடியை இடதுகை கொண்டு தாங்கி, நெஞ்சில் கைகொண்டு கீழ் நோக்கி வலுவாய் மூன்றுமுறை உருவி இரு விலாவையும் கீழ் நோக்கி மூன்று முறை உருவி இரு கைகொண்டு வீமனொளியைக் கூட்டிப்பிடித்துக் குலுக்கி முட்டுகொண்டு முதுகுத்தரையில் கீழ் நோக்கி மூன்று தடவை பலமாக உருவி பின்நின்று இருகால் மூட்டையும் பின்னிக்கூட்டி பிடித்துத் தூக்கி நிலத்தில் மூன்று முறை குத்தி உடனே உச்சியில் மூன்றடி அடித்து முதுகுத்தாரையில் புறங்கால் கொண்டு மூன்று அடி அடித்துக் கோத்துப் பிடித்து இருகை கொண்டு இருவிலாவையும் உடைத்துக் கோத்துப் பிடித்து இருகை கொண்டு இருவிலாவையும் உடைத்துத் தூக்கி உதறிவிட்டு உடனே சுக்குக்குடிநீர் கொடுக்கவும். வெந்நீர்விட்டுக் குளித்து வர்மக் கஞ்சிவைத்து மூன்றுநாள் கொடுக்கவும். உப்புப்புளி நீக்கிப் பத்தியங்காக்கவும். சகல வர்மப்பிடிகளும் விட்டுப்போகும் இப்படி எழுப்பியும் இளக்கக் கடிதாயிருந்தால் வெற்றிப்பச்சிலை, அடக்கப் பச்சிலைச் சாறுகளை உள்ளுக்குக் கொடுக்கவும்.

### சிலவருமங்கள் பட்டால் முதிர்ந்து வலித்துப் போகும் அவற்றை இளக்கும் முறை

மின்னிப்பச்சிலையும், கொழிஞ்சிவேரும் சுக்கும், ஈருள்ளியும் வாயில்போட்டுச் சுவைத்து நாசி செவிகளில் சிறக்க ஊதி அடக்க காலத்தில் சொல்லியபடி இளக்கினால் எந்த வர்மமும் இளகும். மயக்கந்தீரும்.

### கண்மயக்கம் வாய்ப்பூட்டு இருந்தால் கண்ணில் விட கலிக்கம்

வேலிப்பருத்தி இலையும், கல்மூங்கில் இலையும், நல்லமிளகு இரண்டு ஆக மூன்றையும் நன்றாக இடித்துத் துணியில்கட்டி இருகண்ணிலும் கலிக்கம் இடவும்.

வெற்றிப்பச்சிலை, அடக்கப்பச்சிலை இரண்டுக்கும் ஏகமூலி, மாயமூலி, மெய்தீண்டாக்காலம் என்ற பெயர்.

வெற்றி என்ற வல்லாரையிலை ஒருகுத்தும் அடக்கமென்ற வேலிப்பருத்தியிலை ஒருகுத்துமாக இரண்டு இலையும் ஒன்றாயிடித்து அரைக்கால்படி சாறெடுத்து வர்மங்கொண்டவனுக்கு உள்ளுக்கு மூன்றுமுறை கொடுக்கவும். மூன்று நாள் உப்பு புளி நீக்கி பத்தியங்காக்கவும், சகல வர்மப்பிடிகளும் இளகிப்போகும்.

### வர்மம் உழுப்பிய உடனே கொடுக்கக் கஞ்சி

சுக்கு, மிளகு, திப்பிலி மூலம் (முடிச்சு மூலம், திப்பிலி மூலம்) உழிஞ்சை (சிறுபீளைத்தோல்) சிற்றாமுட்டி இவைகளைத் துணியில் கிழிகட்டி பச்சரிசிபோட்டு கஞ்சிகாய்ச்சி பத்துவேளை கொடுக்க வர்மம் போகும்.

### எய்ப்பிளைப்பு நலமாகக் கஞ்சி

திரிகடுகு அதிமதுரம் திப்பிலிமூலம்
பொருந்திய நற்சீரகமும் ஈருள்ளியுந்தான்
வாமப்பாகுன்றி வேரோடு அருகம்வேரும்
மகத்தான உழிஞ்சியொடு கடலாடியுந்தான்
நாமப்பா இதுவெல்லாம் சத்துவாங்கி
நலமான அரிசிவாரி அதின்மேல் போடு
வாமப்பா மருந்தெல்லாம் கிழியாய்க்கட்டி
நன்மையுள்ள கஞ்சிவைத்துக் கொடுத்தாயானால்
போமப்பா புளியுப்பு நீக்கல்செய்நீ
புத்தியடா பத்துநாட்கள் கொடுத்தாயானால்
ஏதுவான ஈளையொடு இருமல் தோடம்
எய்ப்பிளைப்புப் பிடவலிப்பு இருமல்தீரும்
சாதுவான காலமெல்லாம் தீர்ந்துபோகும்
சத்தியமாயிந்த மொழி சாற்றினேனே.

### வர்மாணிக் குளிகை

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், ஏலம், வெந்தயம், கர்ப்பூரம், கற்கடகசிங்கி, கோட்டம், புனுகு, தென்னம்பூ, இசங்கு, தூதுவளைப் பூ, பூநாகம், அத்திப்பால், மாதுளம்பூ இவை வகைக்கு ஒரு கழஞ்சு, குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு கழஞ்சு 2. இவற்றைத் தூள்செய்து கல்வத்திலிட்டு கொம்பரக்குக் குடிநீர், பசுவின்பால், பொன்னாவிரைச்சாறு இவற்றால் ஒவ்வொரு சாமமரைத்து பயறளவு மாத்திரை செய்துலர்த்திக் கொள்ளவும்

தக்கக்குடிநீரில் உரைத்துக் கொடுக்க வர்மம் எல்லாம் நீங்கும். ஈளை, மந்தாரகாசம், அத்திசுரம், சுவாசகாசம், உள்வர்மம், ஈடு, முதலியநோய்கள் வர்மாணிக்குளிகையினால் நீங்கும்.

### காயத்திற்கு ஒற்றிடம்

எலுமிச்சம்பழத்தை நறுக்கிச்சீவி துணியில் முடிந்து கொண்டு காய்ச்சிய நல்லெண்ணெயில் கிழியை அமுக்கி ஒற்றவும். சுழியாடி வர்மசன்னி, ஒடிவுமுறிவு ரத்தம் மாறும், வேதனை நீங்கும்.

### வர்மசன்னிக்குத் தீத்தயிலம்

*கேளடா வெள்ளுள்ளி தேவதாரம்*

*கெடியான வேப்பம்வித்து வேருதானும்*

*நாளடா வகை வகைக்குப் பலம் ரெண்டாக*

*நலமாகத் தயில மதைத் தானேவாங்கு.*

சன்னிவந்தவர்களுக்கு ஒரு சிப்பி உள்ளுக்குக் கொடுத்து மேலும் துவாலை போடவும். இப்படி மூன்றுநாள் செய்யவும். உப்பு புளி நீக்கி பத்தியம் காக்கவும், சன்னி நீங்கிப்போகும்.

### சன்னிக்கு ஒற்றிடம்

தேவதாரிக்கட்டைத்தூள் 2 பலம் கோழிக்காரம் கலந்து ஓட்டிலிட்டு வறுத்து மெல்லிய சிலையில் பொட்டணங்கட்டி நெஞ்சில் ஒற்றிடமிடவும்.

*நாளடா மேலிலிட வரும்சன்னி*

*நலமான கபம்தீரும் வலியும்தீரும்.*

### கிரிசாத்துக் கியாழம்

நிலவேம்பு, குறுந்தொட்டி, திரிகடுகு, தேவதாரம், முந்திரிகைப்பழம் வகைக்கு 2 கழஞ்சு வாங்கி ஒன்றிரண்டாய் இடித்து ஒருபடி தண்ணீரில் இட்டு 1 குத்து வேலிப்பருத்தியிலையும் ஒருகுத்து வல்லாரையிலையும் இடித்து தண்ணீரில்போட்டு அவித்து சேருக்கு 1/4 படி கியாழம் வடித்து மூன்றுநாள் ஆறுபொழுது கொடுக்கவும் சுழியாடி வர்மம் விடும்.

### தொடுவர்மப்பிடிக்குக் கொடுக்கும் மருந்து

ஒருபிடி வேலிப்பருத்தியிலையும் ஒரு வெள்ளைப்பூடும் கூடவைத்து இடித்து ஆழாக்குச்சாறு எடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும்; வெந்நீர் கொடுக்கவும் உடனே சத்திப்பு எடுக்கும். அரைக்கு மேற்பட்ட பிடிகளெல்லாம் விட்டுப்போகும். அன்றுமட்டும் உப்பு நீக்கி அன்னப்பால் கொடுக்கவும்.

### கண்ணிலிடு கலிக்கம்

தும்பையிலையும் வெற்றிலையும் ஒன்றாயிடித்துச் சாறுபிழிந்து அதில் நல் மிளகும் துவரம்பருப்பும் உரசிக் கண்ணிலிடவும்.

#### வேறு

வேலிப்பருத்தியிலையும் கல்மூங்கில் இலையும் ஒன்றாயிடித்து மெல்லிய சீலையில் பொட்டணங்கட்டிப் பிழிந்து கண்ணுக்கிடவும்.

### அடி, விதனம், இரத்தக்கட்டு, நரம்புப்பிடிக்கு ஒத்தடம்

புழுங்கல் அரிசி 1/4 படி, பச்சரிசி 1/4 படி நீரிலிட்டு வேகவைத்து வெந்துவரும்போது, கருந்தேங்காய்ப்பூ 1/4 பலம்,

மஞ்சள் தூளை தேங்காய்ப்பூவுடன் குழப்பி வெந்த சாதத்தில் போட்டுக் கிண்டி இறக்கி வெதும்பலாயிருக்கும் போது வெள்ளைச் சீலையில் பொட்டணங்கட்டி அடி, விதனம், இரத்தக்கட்டு, நரம்புப்பிடி இருக்கிற இடத்தில் ஒத்தவும். மூன்றுநாள் ஒத்தினால் மேற்கண்ட வலிகள் விட்டுப்போகும்.

### *வர்மஸ்தானத்தில் முறிவுண்டாகி இரத்தப் பெருக்காகியிருந்தால்*

உதிரமடக்கி என்று சொல்லப்படுகிற சந்தனப்புள்ளடி இலையில் சாறுவாங்கி உள்ளுக்கும் மேலுக்கும் பயன்படுத்த இரத்தம் நிற்கும்.

### *வர்மத்தில் வயிற்றூற்றம் இருந்தால் கொடுக்கும் கஞ்சி*

மாகாணிப்படி அரிசியும் மாகாணிப்படி உப்பும் போட்டுக் குழையக் கஞ்சி வைத்து மாகாணிப்படி தண்ணீர் உள்ளுக்குக் கொடுக்க மலசுத்தியாகும்.

### *மலசுத்திக்கு இளக்கப் பச்சிலை*

சுரைஇலை ஒருகுத்து அரைதுட்டு சுக்கும் ஒன்றாய் நீர்விட்டரைத்து மூன்றுநேரம் கொடுக்க மலசுத்தியாகும். வர்மம் இளகிவிடும். சுக்கு அரைத்துச் சாறுவிட்டுக் கொடுக்கவும். புளிநீக்கி கறி வைத்துக் கொடுக்கவும்.

### *வாய்வுக்கு மலமும் நீரும் பிரிய சூரணம்*

இதற்கு நிலவாகைச் சூரணம் கொடுக்கவேண்டும். (முறை அகத்தியர் வைத்திய இரத்தினச் கருக்கம்)

### வர்மப் பிடிப்புக்குக் கஷாயம்

திரிகடுகு, முடிச்சுமூலம், சிறுபீளை, குறுந்தொட்டிவேர், முடக்கொற்றான் வகைக்கு கழஞ்சு ஒன்றுவீதம் இடித்து அவித்து குடிநீர் செய்து காலை மாலை 1/8 படிவீதம் 5 நாள் பத்து வேளை சாப்பிடவும். பத்தியம் உப்பு வறுத்து புளிநீக்கிச் சாப்பிடவும். வர்மப் பிடிப்புகள் விட்டுப்போகும்.

### வர்மம் கொண்டு சுரம் இருந்தால் கொடுக்கும் கஷாயம்

சுக்கு, அதிமதுரம், சிறுதேக்கு, அக்கறா, சித்தரத்தை, சதகுப்பை, மல்லி வகைக்குக் கழஞ்சு மூன்று வாங்கி யிடித்துக் காலை மாலை பகல் மூன்றுநேரம் கஷாயம் கொடுக்கவும். சுரம் விட்டு விடும். உப்பு நீக்கிக் கஞ்சி கொடுக்கவும்.

### இளக்கப்பச்சிலை கொடுக்கும் விபரம்

சுக்குக் கஷாயம் போட்டு வெற்றிப் பச்சிலையிடித்துச் சாறெடுத்து கஷாயத்தில் விட்டு மூன்றுநேரம் கொடுக்கவும். அல்லது அடக்கப் பச்சிலையையிடித்துச் சாறெடுத்துக் கஷாயத்தில் கொடுக்கவும். வர்மம் இளகிவிடும்.

### தொண்டைப் புகைச்சல் துரத்தலுக்கு

வெற்றிப்பச்சிலையை இடித்துச் சாறெடுத்துப் பசுவின் பாலில் விட்டு மூன்றுநேரம் கொடுக்கவும். அல்லது அடக்கப்பச்சிலைச் சாற்றை பாலில் விட்டுக் கொடுக்கவும். வர்மம் இளகி துரத்தல் பிடி விட்டுவிடும்.

### வர்மம் இளக்கும் பச்சிலை

பசுவின் பாலில் மின்னிப்பச்சிலைச்சாற்றைக் கலந்து மூன்று நேரம் கொடுக்கவும், உப்பு நீக்கிக் கஞ்சி கொடுக்கவும்,

## திருமேனித் தைலம்

குறுந்தொட்டி, வில்வவேர், மணியறுகு, வெட்டிவேர், குத்துக் கற்றாழை, சங்கங்குப்பி வகைக்குப் பலம் 10 எடுத்திடித்து தூணி நீர் விட்டு அவித்து ஒரு படியாக்கி நல்லெண்ணெய் படி ஒன்று வாங்கி இரண்டும் ஒன்றாய்விட்டு வல்லாரையிலைச்சாறு, வேலிப்பருத்தியிலைச்சாறு, குப்பைமேனிச்சாறு, நீர்த்தாளியிலைச் சாறு, மின்னிப்பச்சிலைச்சாறு, வகைக்குப் படி 1/4 சாறெடுத்து எண்ணெய்க்குள் விட்டு திரிகடுகு, மூலம், மதுரம், ஏலம், வெந்தயம், ஓமம், சிங்கி, கோட்டம், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, கடுக்காய், சாதிக்காய், மாசிக்காய், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, கிராம்பு, அக்கிராகாரம், சீரகம், குங்குமப்பூ வகைக்கு கழஞ்சு 2 வாங்கி அரைத்து எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றிக் காய்ந்து வரும்போது பச்சைக்கற்பூரம், கோரோசனை, புனுகு, கஸ்தூரி வகைக்கு கழஞ்சு 1 வாங்கி எண்ணெயில்போட்டு ஒரு தேங்காய்ப் பிரமாணம் ஆவின் வெண்ணெய் போட்டுக் காய்ச்சி வடிக்கவும். வர்மம் கொண்டவர்களுக்கு ஒரு தேக்கரண்டி அளவு காலை மாலை பத்துநாள் உள்ளுக்குக் கொடுத்து புளி நீக்கி கறி வைத்துச் சாப்பிடவும் மேற்படி தைலம் தேய்த்து வெந்நீர்விடவும். பிடிப்பு, துர்த்தல் ஏய்ப்பு நீங்கிப்போகும்.

## வர்மப்பிடிப்புக்குப் பூச்சு மருந்து

வேலிப்பருத்தி வேர்த்தோல் எடுத்து தாய்ப்பால் விட்டு அரைத்து தீயில் வெதுப்பி மூன்றுநாள் பூசவும். வெந்நீர் வைத்துக் குளிக்கவும். பிடிப்பு விட்டுவிடும்.

### பனைமரங்களிலிருந்து விழுந்தது மூலம் அடிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் பச்சிலை

கவிழ்த்தும்பை இலை ஒரு குத்து, படி பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி மாகாணிப் படி நல்லெண்ணெய் அதில்விட்டு மூன்று முட்டைகளை உடைத்து வெள்ளைக்கரு விட்டு அடித்துக் கலக்கி மூன்றுநாள் மூன்று நேரம் உள்ளுக்குக் கொடுத்து புளிநீக்கி உணவு கொடுக்கவும்.

### இருமலுக்கு மருந்து

ஒருபலம் பசுவின் வெண்ணெயைச் சட்டியில் போட்டு உருக்கி ஒருபலம் மிளகும் ஒருபலம் சீனாக்கற்கண்டையும் பொடிசெய்து சட்டியில் போட்டுக்கிண்டி லேகியமாக்கிக் கொடுக்கவும். புளி நீக்கி கறி வைத்துச் சாப்பிடவும்.

### விதனத்துக்குப் பூச்சு மருந்து

குத்துக்கத்தாழைச் சோற்றுடன் உவர்ப்பு சேர்த்து அரைத்து தீயில் கொதிக்கவைத்து விதனம் இருக்கும் இடத்தில் மூன்றுநாள் பூசவும் விதனம் விட்டுவிடும்.

### மூலவாயுவுக்கு வயிற்று ஓட்டத்திற்கு மருந்து

அரைக்கால் படி ஓமத்தைத் துவைத்து உமி கழற்றி தண்ணீரில் நனையவைத்து மறுநாள் ஓமத்தைப் பசுவின் பால் விட்டரைத்து கால்படி பசுவின் பாலில் கலக்கி கால்பலம் கருப்புக்கட்டி நுணுக்கி அதில் கூடப்போட்டுக் கிண்டித் தின்னவும்.

### மூலத்தில் குத்துரத்தமாய் மலம் போகிறதற்கு மருந்து

அரைக்கால்படி ஓமத்தை ஏழுதரம் வறுத்து உமிகழற்றி மாவாக்கி வசம்பைச் சுட்டு அதோடு சேர்த்து அரைத்துத் தேன்

விட்டரைத்து லேகியமாக்கித் தின்னவும். குத்துரத்தம் நீங்கிப்போகும். புளி நீக்கி கறி வைத்து சாப்பிடவும்.

## மேகத்துக்கும் வர்மங்கொண்டு உளைச்சல் குத்தலுக்கும் மருந்து

குத்துக்கற்றாழையைத் தீயில் சுட்டு கால்படி சாறு எடுத்து ஒரு பலம் சீரகத்தை வறுத்துப் பொடிசெய்து சாற்றுக்குள் போட்டு 3 நாள் 6 பொழுது உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியம் மேற்கண்ட சாற்றுக்குள் சீனி ஒருபலம் போட்டுக் கொடுக்கவும்.

## நீர்க்கடுப்பு இரத்தம் காண்கிறதுக்கு மருந்து

ஒரு குத்து ஆனைநெருஞ்சில் இலையை அரைத்து அரைக்கால் படி பசுவின் பாலில் 3 நாள் 3 பொழுது கொடுக்கவும். பத்தியம் உப்பு நீக்கி கஞ்சி கொடுக்கவ்ும். இரத்தத்தடுப்பு நின்றுபோகும்.

## துரத்தலுக்கு மருந்து

சுக்கு 1/4 பலம் கண்டங்கத்திரி வேரும் கால்பலம் கற்கண்டும் ஒன்றாய் போட்டவித்து அரைக்கால்படி தண்ணீர் இறுத்து 3 நாள் 6 பொழுது கொடுக்கவும். புளி நீக்கிச்சாப்பிடவும்.

## மூக்கிலிருந்து குருதி வடிந்தால்

ஆடாதொடை இலைச்சாற்றுடன் தேன்கலந்து உள்ளுக்குக் கொடுக்க நிற்கும்.

### மதாந்திரம்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்

பெற்றுள்ள **வர்மவிதி** என்ற நூலில் வர்மம் 107 கூறப்பெற்றிருக்கின்றது. அவை ஒவ்வொரு காலிலும் கையிலும் தனித்தனி 11 ஆக 44; வயிற்றில் 3; மார்பில் 9; முதுகில் 14; கழுத்தில் 37; ஆக 107 வர்மங்களை விவரமாகக் கூறி கீழ்க்கண்டவாறு வர்மத்தின் இயல்புகள் கூறப்பட்டிருக்கின்றன.

*''இப்படிச் சொல்லு கின்ற விவ்வகை வன்மந் தானும்*
*மெய்ப்படி அமுக்கிப் பார்த்தால் மிகவுநொந் திருக்கில் வன்மம்*
*செப்புறு தசைக ளென்பு சிறுபெரு நரம்பு சந்து*
*தப்பறு நாடி யாறுந் தங்கிடு வன்ம மாமே''*

*''அறிந்திடு மாறு வன்மை மதனுளஞ் சேழ தென்னப்*
*பிறங்கிடு வன்ம மெல்லாம் பிராணனுக் கிருப்பா மென்னும்*
*குறைந்திடு மிதினி லிங்குக் குறித்தசத் திரங்கள் பட்டால்*
*திறம் பெற வறிந்து நன்றாய்த் தெளிவுறச் செய்க வென்றூர்''.*

மேற்கூறிய ஆறுவகையில் 1. தசையில் வர்மம் 10, 2. எலும்பில் வர்மம் 8, 3. நாடியில் வர்மம் 21, 4. பெருநரம்பில் வர்மம் 9, 5. நரம்பில் வர்மம் -36, 6. சந்து வர்மம் -20.

இவற்றில் சத்திரங்கள் பட்டால் குணம் : மரணத்தை விளைவிக்கும். வர்மங்கள் ஒருமாதம் அரைமாதத்தில் கொல்லும். வர்மங்கள் சதை முதலியன அழுகக்கூடிய வர்மங்கள், ஊறுபடின் நிலைத்து நிற்கும் வர்மங்கள், நீண்ட நாளைக்கு வேதனை மாறாதிருக்கும் வர்மங்கள், வர்மங்களின் அளவு முதலியன வற்றைக் காணலாம்.

சமீப காலத்தில் அதாவது செப்டம்பர் 1984-ம் ஆண்டு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னையில் வர்ம

சூத்திரத்தை திரு **செ. ஜான் செல்வராஜ்** அவர்கள் பதிப்பித்திருக்கின்றார்கள். நூலின் மிக விரிவான பதிப்புரை, வாக்பட்டர் கூறியிருக்கும் வர்மாணியச் செய்திகள், வர்மாணிய மருந்து சம்பந்தமான விளக்கங்கள் முதலிய பகுதிகளை மிக விரிவாகவும் தெளிவாகவும் 180 பக்க அளவில் எழுதியிருக்கின்றார்கள். வர்ம அறிவினை மேலும் வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்கு இந்நூல் பயனுள்ளதாக இருக்கும்.

# தோற்பிணிகள்

## [குட்டம்]

தோலைப் பற்றி வருகின்ற பிணிகள் பதினெட்டு. இவை குட்டம், தோல் நோய், தோற்பிணி, சருமநோய் என்ற வேறு பெயர்களாலும் வழங்கப்பெறுகின்றன. படர்தாமரை, வெண் குட்டம், தொழுநோய். முதலிய பிணிகள் யாவும் இப்பகுப்பினுள் அடங்கும். எனவே குட்டம் என்ற சொல் தற்போது வழக்கில் பெருநோயைக் குறிப்பது போலன்றி பல தோற்பிணிகளையும் கூட்டமாகக் குறிக்கும் பொதுப்பெயர் ஆகும்.

***நோய் இயல் :***

தோற்பிணிகள், பளபளப்படைதல் நிறம் மாற்றமடைதல், தடித்தல், தினவு, நோவு, எரிச்சல் ஆகியவை காணப்படுதல், வெள்ளை, சிவப்பு, கருப்பு அல்லது பல நிறங்களை உடைய படைகளுண்டாதல், வியர்வை இன்றியோ அதிகரித்தோ இருத்தல், சிறு காயம் பட்டாலும் பெரும்புண்ணாதல், அதில் கரிய குருதி வடிதல், கழலைகள் காணுதல், கை கால் விரல்கள் குறைதல், குழிப்புண்கள் உண்டாதல் ஆகிய இயல்புகளை உடையன.

***நோய்க்காரணம் :***

பொதுவாக தோற்பிணிகள், பிணியுற்றோரிடம் மிகவும் நெருங்கிப்பழகுதல், அவர்களுடன் உடலுறவு கொள்ளல், அவர்கள் பயன்படுத்தும் பொருட்களைத் தானும் பயன்படுத்துதல் ஆகியவற்றால் தொற்றும். அழுகிய நீர்வாழும் உயிர்களான மீன்,

நத்தை, நண்டு, இப்பி ஆகியவைகளை மிகுதியாக உண்ணல், உணவு உண்ட பின் யோகப்பயிற்சி செய்தல், தன்வினை, பழவினை, இவற்றால் இந்நோய் பிறக்கும். இவற்றுடன் மிகுந்த வெப்பம், மிகுந்த சீதளம், அழற்சி, மாந்தம், வாந்தி, போகம் மனத்துயர், அதிதூக்கம், சோற்றுடன் மயிர், உகிர், தவிடு, மண், ஆகிய உட்கொளல் முதலியவற்றாலும் இந்நோய் பிறக்குமென யூகி 800ல் கூறப்பட்டுள்ளது. மேலும் திருமூலர் ''கிரந்தி சுழன்மேகத்தாலும் பயாதி மண் உளப் பல வண்டினாலும்'' இதுவரலாமென்பர்.

***பொதுக்குறிகுணம் :***

பொதுவாக தோற்பிணிகள் வருமுன்னர் மூக்குத்தண்டு, காது, முகம், கால், தொடை, மார்பு, ஆகிய இடங்கள் மினுமினுத்தல், தோல் கடினமாதல், மிகுந்த வியர் வையுண்டாதல்; உடல்பருத்தல், கொப்புளங்கள் காணல் போன்ற முற்குறிகள் காணும். நாட்செல்லச் செல்ல இவ்விடங்களில் தோல் கறுத்தேனும், வெளுத்தேனும் சிவந்தேனும் படைகள் உண்டாகும். படைகளில் தினவு, திமிர் அல்லது மூடம் ஏற்படும். இவ்விடங்களில் புண்ணுண்டானால் அவை எளிதில் ஆறா.

***நோய் எண் பகுப்பு :***

தோற்பிணிகளின் எண் பதினெட்டு என்று முன்னரே அறிந்தோம் யூகி முனிவர் பகுப்பின் படி அவை.

| | |
|---|---|
| 1. புண்டரீகம் | 10. அபரிசம் |
| 2. விற்போடகம் | 11. விசர்ச்சிகம் |
| 3. பாமம் | 12. விபாதிகம் |
| 4. கஜ சர்மம் | 13. கிடீபம் |
| 5. கரணம் | 14. சர்மதலம் |
| 6. சிகுரம் | 15. தத்துரு |
| 7. கிருட்டிணம் | 16. சித்துமா |
| 8. அவுதும்பரம் | 17. சதாரு |
| 9. மண்டலம் | 18. சுவேதம் என்பன. |

ஆயுள்வேதியர் மேற்சொல்லப்பெற்ற கரணம், கிருட்டிணம், அவரிசம், சுவேதம் என்ற நான்கினுக்கும் வேறாய் கபாலம் உருசிய சிம்மிகம், காகசம், அலசம் என்ற நான்கினைக் கூறுவர்.

### *நோய் வரும் வழியால் பகுப்பு :*

*''வியாதியுண் மூவாறு விளங்கிய குட்டங்கேள்*

*சுயாதிக் கிரந்தி சுழன் மேகத்தாலாறும்*

*பயாதி மண்ணுளப் பலவண்டினா லெட்டும்*

*நியாதிப் புழுநாலாய் நின்றதிக் குட்டமே''*

என்று திருமூலர் கூறுவதால் இப்பதினென் தோற்பிணிகளில் கிரந்தி, மேகம், ஆகிய பிணிகளினால் தோல் கேடுற்று வருகின்றவை ஆறு என்றும், நீர் முதல் மண் ஈறாய் வாழுகின்ற வண்டு போன்ற உயிரினங்களினால் ஏற்படுகின்றவை எட்டு என்றும் புழுப்போன்ற கிருமிகள், நுண்கிருமிகள் இவற்றால் உண்டாகின்றவை. நான்கு என்றும் தெரிகிறது. இதில் கிருமிகளாலும் தோற்பிணிகள் ஏற்படுகிறது என்று குறிக்கும் கருத்து பல நூல்களிலும் பரக்கக் காணப்படுகிறது. குருநாடியில் வரும் கீழ்க்கண்ட பாடற் பகுதிகளும் அதை வலியுறுத்துவதைக் காணலாம்.

1. *புயில் மொழியீர் திரேகத்தில் கிருமி தானே*

*பரந்துதிரி குட்டம்போல் புள்ளி காணும்*

*மயலதுவும் கிருமியுந்தா நடந்து புக்கில்*

*மேனியது சரசரென வெடித்துப் புண்ணாம்-------92.*

2. *''புழுக்கடிப் போல் காணுமது கிருமி யாலே -----93*

3. *திரேகமதில் சொரிக்குட்டம் கிருமி யாலே''------93*

4. *குட்டமுடன் திரேகமெல்லாம் பறக்கும்போது*
*குழிகுழியாய் கிருமியினாற் கெள்ளும் புள்ளி----96*

## குற்றம் முதலிய வேறுபாடுகள்

''உடலின் ஏழு தாதுக்களும் மெலிவடைந்தாலும் மெலிவடையாவிட்டாலும் பித்தப் பொருட்களின் உணவாதி சேர்க்கையால் அதிகரித்து பித்தமானது சமானத்தை அடைந்து, பித்தம், பித்தவாதம், பித்தகபம், முக்குற்றம், இவைகளில் தனித்தனியும் கூட்டுறவுமாகிய சம்பந்தங்களைக் கொண்டு இரத்த, இரச தாதுக்களைக் கொதிக்கச் செய்து, அச்சமான வாயு பிரகோபித்து பித்த கபங்களை ஆங்காங்கு மார்க்கங்களில் செல்லாது தடுத்து, அதிக சித்த பித்தம் ஆமத்துடன் கூடி அவ்வாமைத்தை விர்த்திக்கச் செய்தும் க்ஷீணிக்கச் செய்தும், இரத்த கப, மல, சல, கெடுதிகளைக் கொண்டும் குட்ட ரோகம் வருகின்றது'' ---சீவரட்சாமிர்தம்

வாத, பித்த, கபங்களில், வாதம் காரணமாக ஏற்படும் குட்ட இலட்சணம், சொற சொறப்பாகவும், வெம்பிய கறுமை நிறமாகவும்,

அல்லது கடும் சிகப்பாகவும், கடினமான வேதனையுடன் காணப்படும். பித்தம் காரணமாயின் ஊசியால் குத்துவது போன்ற வலி, சூடு இவைகளுடன் இரத்தம், நீர், சீழ் இவைகளை ஒதுக்கிக் கொண்டு இளகும் தன்மையுடன் தடிப்பாகவும் , பள பளப்பாயும், அரிப்புடனும் காணப்படும். சீதளம், கடினம் ஆகிய தன்மைகளையுங் காட்டும்.

இருவகைக் காரணங்கள் கலந்திருக்கும் குட்டங்கள் தொந்தமெனவும், குற்றங்கள் மூன்றின் காரணமாக ஏற்படும் குட்டங்களுக்கு மூன்றுவித இலட்சணங்களும் காணும்

இனி தோல் முதலிய ஏழு உடல் தாதுக்கள் பற்றிய இலட்சணங்கள்.

குட்டம் இரச தாதுவில் (தோலில்) மட்டும் இருப்பின், நிறத்தில் மாறுதல், புல்லரித்தல், திடீரெனக் குத்துதல் போன்ற வலி ஊசியினால் குத்துவதால் உண்டாகும் (தோற்றம்) உணர்ச்சிக்குறைவு. தடிப்பு அதிகமான வியர்வை இலட்சணங்கள் காணலாம். குட்டம் இரத்த தாதுவில் சென்றிருப்பின், அரிப்புடன் சீழ்ப்பிடிக்கச் செய்யும்.

குட்டம் மாமிச தாதுவில் சென்றிருப்பின் வறட்சி சொற சொறப்பு ஆகியவற்றுடன் பிளக்கும் வலி குறையாத்தன்மை வாய்ந்த கட்டிகள் தோற்றமளிக்கும்.

குட்டம் கொழுப்பு என்ற தாதுவில் சென்றிருப்பின் கை, கால் முடக்கம், குறுகல் அவயவங்கள் பிளப்பது போன்ற வலியும், புண்களும் ஏற்படும், முன் கூறிய மூன்று தாதுக்களுள் குட்டம் நின்ற இலட்சணங்களும் ஒரு சேரத் தோற்றமளிக்கும்.

எலும்பு, மச்சை, ஆகிய தாதுக்களில் குட்டம் சென்றிருப்பின், கண்கள் சிவக்கும்; புண்களில் கிருமிகளுண்டாகி (புழுக்களுண்டாகும்) அத்துடன் தொண்டையும் கட்டி விடும்.

சுக்கில சோணித தாதுக்களில் குட்டம் சென்றிருப்பின் (ஆண் பெண் பாலருக்கு குட்டம் காரணமாக சுக்கில சோணிதம் பீடிக்கப்படின்) அவர்களுக்குத் தோன்றும். குழந்தைகளுக்கும் குட்டநோய் தொற்றிக் கொள்ளும்.

இரத்த தாது மிகுவதால் குட்டம், பெருநோய், விப்புருதிக்கட்டி, சிவந்த குருதித் தடிப்பு, சருமச்சிவப்பு ஆகிய நோய்கள் வருமெனக் கூறப்பட்டிருத்தலுங் காண்க.

இனி தோற்பிணிகள் பதினெட்டையும் யூகி 800-ல் உள்ளபடி கூறப்படுகிறது.

### புண்டரீகம்

கூடுமே தாமரையின் பூவி தழ்ப்போல்

குவிந்துமே கறுப்போடு வெளுப்பு மாகும்

தேடுமே சிவப்பு பலவர்ணமாகும்

தினவுமிக வாராது சொனையிற் பன்னீர்

வாடுமே அய்யிணுற் பத்தி யாகி

வருத்த மிகவுண்டாகி நோவு மாகும்

போடுமே சரீரங்கள் முகங்கள் காது

புண்டரீகக் குட்டத்தின் புதுமைதானே.

தாமரையின் பூவிதழ் போலக் காணப்படும் பகுதிகள் தோலில் தோன்றும். இவை கறுப்பு அல்லது வெளுப்பு நிறத்துடன் இருக்கும். சில வேளை சிவப்பாகவோ பல நிறங்களுடனோ இருக்கும். இப்பகுதிகளில் தினவு அதிகம் கண்டு பன்னீர் போன்ற நீர் வடியும். கபத்தினால் உண்டாகும் இந்நோய் மிக்க வருத்தத்தைக் கொடுத்து நோவும் உண்டாக்கும். இது உடல் முழுதுமாவது முகம், காதுகளிலாவது உண்டாகும்.

**விற்போடகம்**

*புதுமையாய்ச் சரீரமெங்குந் தினவுண் டாகும்*

*பொருவெடியாய்த் திக் கெனத்தீக் கொழுந்து போல*

*மெதுமையாய் விட்டெரியும் நல்லபாம்பின்*

*விஷப்படம் போலே தடித்து வெளுப்பு மாகும்*

*சுதுமையாய்மிகச் சொரியுஞ்சிவப்புமாகும்*

*தூக்கமொடு சஞ்சலமும் மிக வுண் டாகும்*

*கதுமையாய் தோலெல்லாந் தடிப்புண்டாகும்*

*கனத்தவிற்போடகமான குட்டந்தானே.*

விற்போடகக்குட்டம் உண்டாயின் உடம்பு முழுவதும் தினவு உண்டாகும். தோலில் பொருமி வெடிப்புண்டாகி அவ்விடம் தீக்கொழுந்துபட்டது போல விட்டு விட்டு எரிச்சலைக் கொடுக்கும் நல்லபாம்பின் படம் போன்று தடித்திருக்கும். இவ்விடங்கள் வெளுப்பாய் இருக்கும். பின் சொரியுண்டாகி சிவப்பாகும். தூக்கமும் சஞ்சலமும் உண்டாகும் தோல் தடிப்புண்டாகும்.

## பாமம்

தானானதினவுண்டாய் வெளுத்திருக்கும்
தங்கியேசீப்பாயுந் தேகங்குன்றும்.
கானான சரீரமெல்லா மெரி வுண்டாகும்
கனமான தாமரையின் குடைபோலுண்டாம்
பானானசொரியோடு தினவுண்டாகும்
பாம்பினிடத் தோல் போல வுருஞ்சி விங்கும்
கானான கால்கையுங் குறைந்து காணும்
கனமான பாமகுட்ட மாகுந் தானே.

தினவு, வெளுப்பு நிறம், சீழ்வடிதல், தேகம் குன்றல், உடம்பு முழுதும் எரிவு, தாமரையின் குடைபோல் தோல் மாறுதல், சொரியும், தினவும், உண்டாதல், பாம்பின் தோல் போல உரிந்து வீக்கமுண்டாதல் ஆகிய குறிகுணம் ஏற்பட்டு கைகால் குறைவு உண்டாகும்.

## கசசர்மம்

தானாகச்சடந்தானு மிகக் கறுப்பாம்
சடமெங்குந் தோலுரியுஞ் சிவப்பாகும்
வேனான வேறவெறனத் தானிழுக்கும்
வெடிக்குமேசொரிச்சலாய்த் தினவுண்டாகும்
கானாகச் சர்மகுட்ட மிதிலுண்டாகும்
கடினமாய்க்கால் விரல்கள் கனப்புண்டாகும்
கூனாகத்தேகமெங்கும் வலியெடுக்கும்
குறியான கசசர்ம குட்டந்தானே

உடல் கறுத்தல், தோலுரிதல், சிவத்தல், தோல்வறண்டு வெற வெறன இழுத்தல் ஆகிய உண்டாகி வெடிப்பு ஏற்பட்டு சொரியும் தினவும் உண்டாகும். கால் விரல்கள் கனப்புண்டாகும் தேகமெங்கும் வலியெடுக்கும்.

### கரணம்

*சர்மந்தான் மிக வெடிக்கும் போரிற் றானும்*

*சடமெல்லாம் வேதனை பச்சென் றிருக்கும்*

*தொ்மந்தான்றிரிதோஷ குணமுண்டாகும்*

*தேமமெங்கும் பாரிக்குந் திமிருண் டாகும்*

*கர்மந்தான் காக்கணம்பூ நிறம தாகும்*

*கண்டிப்பு வீக்கமாய்த் தானிருக்கும்*

*வர்மந்தான் மனக்கிலேச மிகவுண் டாகும்*

*மாகரணகுட்டத்தின் மார்க்கந்தானே*

தோலில் அதிக வெடிப்புகள் ஏற்படும். உடம்பு வலியுடன் பச்சென்று இருக்கும். முக்குற்றத்தினதும் குணமுண்டாகும். உடலெங்கும் பாரித்து திமிருண்டாகும். உடலில் காக்கணம்பூவின் நிறத்தைக் காட்டும். கண்டிப்பு வீக்கமாய் இருக்கும் மனக்கிலேச முண்டாக்கும்.

### சிகுரம்

*மார்க்கந்தான் பசுமையாய் வெளுப்புண் டாகும்*

*மாசிவப்புக்கறுப்புமாய்த் தினவுண்டாகும்*

*தார்க்கமாய்த்தடிப்புச் சீப்பாச்சலாகும்*

*தசைவயிறுகடினாகத் தீட் சொரியு மாகும்*

தேர்க்கமாய்த் திமிரோடு தசையும்யாவும்

தேக்கான எரிச்சலாய் உஷ்ண மாகும்,

சீர்த்தமாய் வயிறு தனிற் கண்டிப்பாகும்

சிகுரகுட்டந் தன்னுடைய சேதி கேளே.

பசுமையாய் வெளுப்புண்டாகி சிவப்பு கறுப்பாகி தினவெடுக்கும்; தடிப்புகளில் சீழ்வடியும்; தசை, வயிறு, கடிதடம் இவைகளின் கீழ் சொரியும், திமிருமுண்டாகும். தசையும் யாவும் எரிச்சலுடன் உஷ்ணமுண்டாகும், வயிற்றில் வீக்கமுண்டாகும்.

## கிருட்டினம்

சேதியாய்த்தேக மெங்குந் தான் கக்கும்

சிவப்புடனே சேட்டு மத்திலுற்பவித்துக்

காதியாய்த்தோல் திமிர்த்தே கதித்துநாறும்

கனமானதாது விலு முஷ்ணந் தாக்கும்

நூதியா யுடம் பெங்கும் நோவுண்டாகும்

நுட்பமாம்புறங் காலிலரையிற் காணும்

தாதியாய்த்தலைதன்னில் மிகுதியாகும்

சஞ்சரிக்குங் கிருட்டினகுட்டத் தாண்மைதானே.

உடல் முழுவதும் கறுக்கும், சிவப்பு நிறமுடன் தோல் திமிர்க்கும், கதித்துநாறும் தாதுக்களில் உஷ்ணம் தாக்கும், உடம்பெங்கும் நோவுண்டாகும். இந்நோய் புறங்கால், அரை இவ்விடங்களில் கண்டு பின்பு தலையில் மிகுதியாய்க் காணும். கடைசியில் சஞ்சரிக்கும் தன்மையாய் இருக்கும் இது கபத்தினால் உண்டாகும்.

## அவுதும்பரம்

ஆண்மையாயத்திக் காய்ப் போலரும்பி
அடுக்கடுக்காய் முளைத்துமே பெருத்துமெத்தக்
காண்மையாய்க் காய்ந்துமே உடம்பெங்குந்தான்
கருகியே உடம்பு தோல் திரைந்து தொங்கும்
தோண்மையாய்த் தேகமெங்குந் திமிருண்டாகும்
கொறியுமே சரீ ரத்திற் செந்நீர் பாயும்
வாண்மையாய் மயக்கந்தான் மிகவுண் டாகும்
வகுத்த தோ ரவுதும்பர குட்டந் தானே.

அத்திக்காய் போல் அரும்பி அடுக்கடுக்காய் முளைக்கும். இவை பெருத்து, காய்ந்து கருகி உடம்பெங்கும் பரவும், உடம்பின் தோல் திறைந்து தொங்கும். தேகத்தில் திமிரும் சொரியும் உண்டாகும். சாரத்தில் செந்நீர் பாயும், மயக்க மிக உண்டாகும்.

## மண்டலம்

வகுத்ததோர் பச்சைவண்ண மிரத்தவண்ண
மாயிருக்கு முடம் பெல்லாஞ் சிரசெல் லாந்தான்
விகுத்ததோர் தலையிலே வெளுப்புமாகும்
மேனியெல்லா மிகத்தடித்துக் கறுப்புண் டாகும்
திருத்ததோர் நினவாகுஞ் சொறியுமாகும்
சிகப்பான சலம் வீழுஞ் சடமெங் குந்தான்
வருத்ததோர் மண்டலகுட்டத்தின் செய்தி
மார்க்கமெல்லாம் பார்த்துணர்ந்துமருவுவீரே.

பச்சை, சிவப்பு நிறமாய் இருக்கும். இது உடம்பு முழுவதிலும் சிரசிலும் உண்டாகும். தலையில் வெளுப்பாக இருக்கும். உடம்பு தடித்து கறுப்புநிறமாகும். தினவும், சொரியும் உண்டாகும். உடம்பு முழுதும் சிவப்பு நிற நீர் கசியும்.

## அபரிசம்

மருவுமே தேகமெல்லா மிகவே நொந்து
மாசற்றரத்தமெல்லா மிக்க கறுக்கும்
செருவவே சிந்தையெல்லா நோவுண்டாகும்
தேகமெங்குந் துடி படா நோவுண்டாகும்
அருவவே வாய்வுமிஞ்சிய திக நோவாம்
அதிர்த்து வேதனையாகுமிக நீர்கொட்டல்
பருவவே வீங்கியே வெடிப்புண் டாகும்
பரந்தவ பரிச குட்டப் பண்புமாமே.

தேகம் மிக நொந்து குருதி மிகக் கறுக்கும், சிந்தையெல்லாம் நோவுண்டாகும். தேகமெங்கும் நோவுண்டாகும். வாய்வு மிஞ்சி நோவு அதிகரிக்கும். தொட்டால் அதிர்ந்து வேதனையாகி மிக்க நீர் கசியும், வீங்கி வெடிப்பு உண்டாகும்.

## விசர்ச்சிகம்

பரிசமாய் வாதபித்தத் துற்பவித்துப்
பரிந்து தொட்டர லெண்ணெய் தனை வெளுப்புமாகும்
விரிசமாய்த் தினவெரிப்பு வேதனையுமாகும்
மிகச் சிவப்புத் தண்டிப்புத் தோலுறப்பு

மரிசமாய் காலெரிப்புஞ் சலிப்பு மாகும்

மகத்தான வெட்கிப்பு வயிற்றிசிப்பு

துரிசமாய் கோபிப்புச் சுரசுரப்பு

சுறுசுறுப்பு விசர்ச்சிகக் குட்டமாமே.

இது வாதபித்தத்தால் உண்டாகும். தொட்டால் எண்ணெய் போல் இருக்கும். தோல் வெளுப்பாகும். தினவு, எரிவு, வேதனை, மிகச்சிவப்பு, தடிப்பு, தோல் உறப்பு, சலிப்பு, வெட்கிப்பு, வயிற்றிசிவு, கோபிப்பு, சுரசுரப்பு ஆகிய குணங்களைக் காட்டும்.

## விபாதிகள்

கறுப்பாகச் சேட்டும பித்தந்தன்னிற்றான்

துனித்துடம்பிலே வெடித்தாங் காற்ற வொண்ணா

அறுப்பாக அண்டவொண்ணாத்தணலாகி

அழன்றுகைகால் கண்காதுகண்டந்தானும்

வெறுப்பாக வெடித்துமே வீங்கிப் புண்ணாம்

மேனியெல்லா நற்பாம்பு மின்னலாகும்

கறுப்பாகச் சந்தெல்லாம் பரவிநிற்கும்

காரணமாம்விபாதிகா குஷ்டமாமே.

கபபித்தத்தால் உண்டாகும் தோல் வெடிப்பு ஏற்பட்டு ஆறாத அறுத்த புண்ணாகும். தணல் போல் எரிவு, அழற்சி, கை கால், கண், காது, கண்டம் வெடித்து வீங்கிப் புண்ணாம், உடம்பு நல்ல பாம்பு போல மினுமினுப்பாகும். சந்துகளில் கறுப்பாய் பரவும்.

## கிடிபம்

காரணமாஞ்சரீரமெங்கும் பச்சையாகும்

கனத்துயானைத் தோல் கதுப்புமாகும்

மாரணமாய் ம்காதினவு சொரியுமாகும்

மகத்தானமூத்திரந் தானடிக்கடிக்கு

நாரணமாய் நன்னீரதாகு மேனி

நலக்கமாய் நாற்றந்தான் மிகவுண் டாகும்

சீரணமாய்ச் சிவப்பட்சி வாத மாகும்

செடந்தானு மூது மே கிடிப குஷ்டம்.

உடம்பு பச்சையாகும். தோல் கனத்து யானைத் தோல் போன்ற கதுப்புகளைக் காட்டும். அதிக தினவு சொரியுண்டாம், அடிக்கடி சிறுநீர் கசியும், உடல் முழுதும் வியர்த்து நாற்றமுண்டாகும்; சிணுக்கு வாதம் (சிவல்பட்சி வாதம்) உண்டாகும்; உடம்பு ஊதும்.

## சர்மதலம்

கிடீபமா யுடம்பு வலி யதிகமாகும்

கீற்ருகவெடித்து வேதனையுமாகும்

தடிபமாய்த் தடிப்பாகிச் செம்மையாகுந்

தனைத்தொட்டால் நோக்கமாய்த் தினவெழுப்பும்

வடீபமாய் மயக்கோடு அசதிகாணும்

மாறாத நோக்காடு மிகவேயுண்டாம்

*திடீபமாயுதரத்தில் வலியுமாகும்*

*செப்புகின்ற சர்மதலகஷ்டமாமே.*

கிடீப குட்டம் போலவே கண்டு உடம்பு வலி அதிகமாகும். கீற்று கீற்றாக வெடிப்புகள் உண்டாய் வேதனையுண்டாகி தடிப்பும் செம்மையுமாகும். இவ்விடங்களைத் தொட்டால் நோவுண்டாகும்; தினவெடுக்கும். மயக்கோடு அசதியுமுண்டாகும், வயிற்றில் வலி ஆகிய குறிகுணங்கள் காணும்.

## தேத்துரு

*சர்மந்தான் சிவப்பாக வட்டதணிதுச்*

*சலவைபோல் வெளுக்குமே தினவுண் டாகும்*

*கூர்மந்தான் ரோகமது மிகவுண்டாகும்*

*மயிரெல்லாஞ் சுருண்டுமே உண்டையாகும்*

*கர்மந்தான் பித்த சே டுமமி குக்கும்*

*காயந்தான் கதித்துமே திமிருண்டாகும்*

*தர்மந்தான் சடமெல்லா மூதலாகும்*

*தாக்கான தேத்திருக் குஷ்டந்தானே.*

சருமத்தில் சிவப்பு நிற வட்டங்கள் தோன்றி அவை பின் சலவை செய்தது போல வெளுத்தும், தினவுண்டாகி நோய் அதிகரிக்கும் மயிர் சுருண்டு உருண்டையாகும். இதில் பித்தகபம் மிகும். உடலில் அதிகமாக திமிருண்டாகும். உடம்பு ஊதும்.

## சித்துமா

தாக்கான வாதபித்த துற்பவித்துத்

தளிரான சுரைப்பூவின் வண்ணமாகி

வாக்கான வடிவ மெல்லாந் திமிருண் டாகி

வட்டணித்துப் பசுமஞ்சள் வர்ணமாகும்

தேக்கான திமிரோடு செந்நீ ருண்டாய்

தேகமெங்கு மசைக் கொணாச் செழுமை யாகும்

நீக்கான நினைவோடு மறதி யாகும்

நிலவரமாஞ்சித்துமா குஷ்டந்தானே

வாத பித்தத்தினால் உற்பவிக்கும், சுரைப்பூவின் வண்ணமாக நோய் கண்டு திமிருண்டாகும் பின்பு வட்டணித்துப் பசுமஞ்சள் நிறமாகும். திமிரும், செந்நீருமுண்டாய்'' தேகமெங்கும் அசைக் கொணாது செழுமையாகும்'' மறதி அதிகமுண்டாகும்.

## சதாரு

சித்தானதண்டிப்பாய் ரத்தவர்ணம்

செழும்பச்சை வெள்ளையாய்ச் சிவப்புமாகும்

எத்தான வெரிப்போடு தினவுமாகும்

எளிதான சேட்டுமவாதத் துற்பத்தி

பத்தான கரடுகட்டிப் புண்ணுமாகும்

பாம்பு தோல் போற்றிரைந்து பருத்துக்காணும்

வித்தான மூக்கோடு காது கன்னம்

மிகத்துடிப்பாஞ் சதாரு குஷ்டந் தானே

தண்டிப்பாய், இரத்தநிறம் செழும்பச்சை, வெள்ளை, சிவப்பு நிறங்களாகும். எரிவு தினவு காணும். கபவாதத்தால் உற்பத்தியாகி, கரடு கட்டி புண்ணுண்டாகும். பாம்பின். தோல் போல திரைந்து பருக்கும், மூக்கு, காது, கன்னம் மிகத்தடிப்பாகும்.

## சுவேதம்

*தடிப்பாகத் தவளநிறம் போல்வெளுத்துச்*
*சர்வாங்கமும் வெளுத்தாற்றான் றிரும்பும்*
*மடிப்பாக மயிர்வெளுத்தா லசாத்ய மாகும்*
*வரிவுதடுவுள் ளங்கைக்குத ங்குய்யந்தான்*
*நெடிப்பாக நெருப்புப்பட்டது போற்புண்ணாய்*
*நிறமிருந்தா லசாத்தியமென்றே யுரைக்கலாகும்*
*வெடிப்பாக மேனியெல்லாம் வெளுத்து வீங்கில்*
*வெண்சுவேத குட்டமென்றே விளம்ப லாமே.*

தோல் தடிப்புண்டாகி உடம்பு முழுதும் தவளம் போல வெளுப்பாகும். இதில் மயிர் வெளுப்பானால் அசாத்தியமாம். உதடு, உள்ளங்கை, குதம், குய்யம். நெருப்பூட்டது புண் போல், நிறமிருந்தால் அசாத்தியம், மேனிவெடிப்பாகி வெளுத்து வீங்கும். (யூகிசிந்தாமணி 497-514)

## *நோய் முடிவு*

மேற்சொல்லப்பட்ட பதினெட்டு நோய்களுள், விற்போடகம், பாமம், கசசருமம், கிருட்டினம், அவுதும்பரம், தத்துரு, சித்துமா, கிடிபம், சதாரு, சருமம், ஆகிய பத்தும் சாத்தியம் என்றும் மீதி எட்டும் அசாத்தியம் என்றும் யூகி-800-ல் கூறப்பட்டுள்ளது.

## தொழு நோய்

**நோய் இயல் :**

தொழுநோய் என்பது மனித இனத்துக்கு மட்டுமே உண்டாகின்ற கொடுமையானதொரு நோயாகும். இது உடலின் முழுப் பகுதியையும் பற்றி வந்து தோலிலும் சளிச்சவ்விலும் நரம்புகளிலும் பிறழ்நிலை மாறுபாடுகளை உண்டாக்கும் நாட்பட்ட நோய்.

**பொதுக்குறிகுணங்கள் :**

இந்நோயில் தோல் பளபளத்தல், நிறம் மாறல், தடித்தல், மூடம் (உணர்வின்மை) உடலில் படைகளுண்டாதல், தொட்ட இடத்தில் தினவு, சில வேளை வியர்வை இல்லாமலிருத்தல், நோவு, எரிச்சல், மயிர் சிலிர்த்தல், கழலைகள் காணுதல், சிறுகாயம் பட்டாலும் பெரும்புண்ணாதல், அதில் கறுத்த குருதி வடிதல், பேசும் போது தொண்டை வறளல், அதிக தூக்கம் என்னும் குறிகுணங்கள் கண்டு சீக்கிரத்தில் தோன்றி நெடு நாட்கழித்தும் ஆறாமல் குழிவிழுந்து கெட்டிப்பட்டு குத்தலைத் தருகின்ற புண்களுண்டாய், கைகால்கள் அழுகுதல் அல்லது அங்குலிகள் கரைந்து குறைதல் ஆகிய இயல்புகள் காணப்படுகின்றன.

உலகில் ஏறக்குறைய எழுபது நாடுகளில் இந்நோய் காணப்பட்டாலும், ஆப்பிரிக்கா, இந்தியா, சீனா, கொரியா, எகிப்து, தென் அமெரிக்கா, மலேசியாத்தீவுகள், உருசியா, நார்வே, பால்கன், முதலிய இடங்களில் மிகப் பெருவாரியாக

உள்ளதென்பர். இந்நோய்க்கு குறைநோய், பெருநோய், குட்டநோய் என்ற வேறு பெயர்களும் உண்டு.

### *நோய் முதல் : (Micobacteriam Leprae)*

பெருநோய் என்ற நுண் கிருமியால் உண்டாகின்ற நோயென்று Hanson என்பவர் 1874ல் கண்டு பிடித்தார். மேலும் இது பரம்பரை நோயல்ல, எந்த வகுப்பாரையும் எந்த வயதிலும் பற்றக்கூடியது. சிறுவர்களை விரைவிற் பிடிக்கும் பெண்களை விட ஆண்களை விரைவிற் தொற்றும், நோய் கொண்டவரிடம் மிக நெருக்கமாக பழகுகின்றவர்களை இந்நோய் பீடிக்கும் எனினும் நோயாளிகளுடன் பழகும் பேர்களில் மூன்று விழுக்காட்டினருக்கே இது தொற்றுவதாக புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது. தொழு நோய். நுண்கிருமிகள் தோலில் சோடணதாரைகளின் வழியாயும் வெளிவிருதிகளினூடாயும் சென்று சோடாண கிரந்திகள் நாசியினதும் வாயினதும் சளிசவ்வு, கண்ணின் உறுப்புகள், கிருகம். ஈரல், புப்புசங்கள், விரைகள் ஆகிய உள்ளுறுப்புகளிலும் பரவுவதாகக் கூறப்படுகிறது. இந்நோயால் பீடிக்கப்பட்டால் நரம்புகள் தாபிதமடைந்து வீங்குதலும், அழுகிக்குறைதலும் உண்டு. உறுப்புகளின் செயலின்மை தசைச்சூம்பல், முடம் ஆகியனவும் தொடரும், நோய் தொற்றி ஒன்று முதல் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளான பின்னருங் கூட நோயின் குறிகுணங்கள் தென்படலாம்.

### *நோய்ப்பகுப்பு :*

மேற்சொன்னபடி நோய் தோலைப் பற்றினால் சுரம், நடுக்கல், அதிவியர்வை, நாசிச்சளிசவ்வு வறட்சியும் அதிநீர் சுரத்தலும் மாறிமாறிக் காணல், நாசிக் குருதிக்கசிவு முதலிய முற்குறிகள்

காணும். முகம், குண்டி, கை, கால் ஆகிய இடங்களில் சிவந்த குருக்கள் தோன்றி வியர்வையின்மை, சுரணையின்மை ஆகியன உண்டாகி செம்படைகளை ஏற்படுத்தி குருக்கள் மறைந்துவிடும். பின்னர் மீண்டும் சுரம் தோன்றி புதிய குருக்கள் உண்டாகிப் படைகள் ஏற்படும். இவ்வாறு ஒன்றிரண்டு தடவை சுரம் மீண்டும் வந்தபின் படைகள் உடல் முழுமையும் பரவலாய் காணப்படுகிறது. ஆனால் கை, கால்களின் புறப்பகுதியில் மட்டுமே இவை காணும். மூக்குத்தண்டு, காதின் சோணை ஆகிய தடித்தாலும், கன்னச்சதை தடித்துத் தொங்கலாலும் பிணியாளனின் முகம் சிங்கம் போலத் தோற்றமளிக்கும். புருவப் புறப்பகுதியில் மயிர் .உதிரலும், நகிற்காம்பு, நகில்விலங்கள் பருத்தலால் நகில் பெரிதாதலும் மூக்கு, தொண்டை, கிருகம் இவற்றின் சளிசவ்வு பாதிக்கப்படுதலும் காணும் கண்ணின் சிருங்கையையும் திரையையும் பல வேளைகளில் இந்நோயினால் ஏற்படும் தடிப்புகள் பாதிக்கும். இத்தடிப்புகள் பின்னர் அவ்வாறே நிரந்தரமாக இருத்தல் அல்லது உடைந்து சீழ்கொள்ளல் உண்டு. இதனால் கண்ணில் புண்கள் ஏற்பட்டு குருடாகும். தொண்டை, கிருகம் இவையும் சிலவேளை அழிவதுண்டு.

தொழுநோய் நரம்பைப் பற்றினால் நரம்பு விலங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. இதில் மனம் குன்றல், இரத்தினி, முன் நளக, முக நரம்புகளில் வலி, உணர்வு மிகுதியாய் எரிச்சல், குத்தல், ஊறல் போன்ற முற்குறிகள் தோன்றும். பின்பு கை கால்கள் மரத்துப் போய், உணர்வின்றி காணல், இரத்தினி நரம்பு பரவும் பகுதித் தோலும் தசையும் மூடமாதல் ஆகிய ஏற்பட்டு தட்டையான படை போன்ற மூடத்தடிப்புகள் காணும், இம்மூடத்தடிப்புகள் முதலில் செம்படையாகவோ, நிறம்மாறியோ

தோன்றி இறுதியில் உலர்ந்து அவ்விடத்தின் மயிர் உதிர்ந்துவிடும் இதன் பின்பு சில காலம் இவ்வாறே இருந்து பின் நரம்புகள் பாதிக்கப்படுவதினால் ஏற்படும் குறிகுணங்கள் தோன்றத் தொடங்கும். இரத்தினி நரம்பு. செவி நரம்புப் பகுதிகளில் தடிப்புண்டாகி அங்கை அகப்பேசிகள் வற்றிபோகும். மூன்றும் நான்காம் விரல்கள் மடங்கிப் போவது உண்டு. தசை, தோல், நகம், எலும்பு, இவைகளில் மாறுபாடுகள் உண்டாதல் குழிப்புண்கள் ஏற்படல், சூம்புதல், விரல்கள், முன்வளைதல் ஆகிய ஏற்படும். சிறு என்புகள் கரைந்து போதலும், கை கால் விரல்கள் குறைதலும் காணும். சில வேளைகளில் மும்முகி, முக நரம்புகளான கபால ஐந்தாம், ஏழாம் நரம்புகள் பாதிக்கப்படலாம். கீழ் உதடு வெளிப்பிதுங்கல், சிறுங்கை புண்ணுதல் ஆகியவையும் ஏற்படும்.

தொழு நோயில் பலருக்கு இறுதியாக நரம்பு, தோல் இரண்டுமே பாதிக்கப்படுகின்றன. இவை இரண்டும் நோயினுல் பீடிக்கப்பட்டால் முதலில் தோல் அல்லது நரம்பைப் பற்றிய குணங்களைக் காண்பித்து மற்றது பின்னர் தோன்றவோ அல்லது இவை இரண்டும் ஒரே சமயத்தில் தோன்றவோ கூடும்.

***நோய் முடிவு :***

தொழு நோய் நாட்பட்டுக் கடினமானதானால் அதைக் குணப்படுத்துவது கடினம், நோயின் முற்பகுதியில் மருத்துவம் செய்தால் நோயை மேலும் தீவிரமடையாமற் செய்யலாம், சில வேளை குணப்படுத்தவும் முடியும். தோலைப் பற்றிய தொழுநோய் நாளடைவில் இளைப்பு, பிருக்க நோய்கள் புப்புச சுரம், ஆகிய பிற நோய்களை உண்டாக்கக்கூடும். கிருதம அகமென் உறுப்புகள் ஆகியவை நோயால் பீடிக்கப்பட்டால் குணம் காணுவது கடினம்.

## மருத்துவம்

1. சிவன்வேம்பு, வெள்ளெருக்கு, சங்கு, கூவிளாத்தி தழுதாழை, புங்கு, குமிழ், மாவிலிங்கு, காட்டாமணக்கு, கழற்சி, விளா, கிளா, ஆவாரை, மிளகரணை, இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப் பலம் 4 புங்கு, ஆல், புன்னை, வேம்பு, அழிஞ்சி, எட்டி இவைகளின் விதை வகைக்குப் பலம் 5 இவைகளைக் குழித்தயில மிறக்கிப் பத்துப்பலம் எட்டிவிதையைச் சிறு துண்டுகளாய் நறுக்கி அமுரியில் மூன்று நாளூறவைத்து சிறு தீயாயெரித்து வற்ற வைத்து உலர்த்தியிடித்த சூரணத்தையும் ஒரு பாண்டத்தில் குறுணி வெள்ளாட்டுப்பால், விட்டுச் சீலையால் வேடுகட்டி அதின் மேல் ஐந்து பலம் ஆடுதீண்டாப்பாளை வேர் சூரணத்தை வைத்துப் பிட்ட வித்துலர்த்தினதையும் வாலுளுவையரி, சிதான்றிக்காய் கடுக்காய், கரிய சீரகம், சுக்கு, கார்கோலரிசி, வகைக்கு 4 விராகனெடை நிலவாகை வேர் அவுரி வேர் வகைக்குபலம் 5 இவைகளையிடித்து வடிகட்டின சூரணத்தையும் ஒன்றாய்க் கலந்து வேளையொன்றுக்கு ஒரு கழஞ்செடுத்து அதில் ஒரு பணவெடை தயிலம் வைத்து ஒரு மண்டலங்கொண்டு தயிலத்தை உடம்பிற் பூசிவரக் குட்டம் விஷநீர் வண்டுகடியுந்தீரும் இச்சாப்பத்தியம்.

2. நிலவாகை, சிவன்வேம்பு, வெள்ளறுகு, நிலவேம்பு, நொச்சி, கொடிவேலி வேர், பூவரசம்பட்டை வகைக்குப் பலம் 10 வீதம் இடித்துக் குழித்தயிலமிறக்கி அரிதாரம், ரசம், லிங்கம், கெந்தி, பொரிகாரம் வகைக்கிரண்டு கழஞ்சு பொடித்துப் போட்டு வேளையொன்றுக்கு ஒரு காசெடை வீதம் தேனில் மத்தித்து ஒரு மண்டலங் கொள்ள குட்டம், சொரி தீரும். இச்சாபத்தியம்.

3. எட்டி விதை, புங்கம் விதை வகைக்குப் படி 4 வில்வப்பழம் 100 இவைகளைச் சிதைத்துக் குழித்தயிலமிறக்கி ஒரு காசெடை வீதம் உட்கொள்ள குட்டந்தீரும். சிரசிற்பூசப்பித்தச் சூட்டினால் தலை மயிர் உதிர்தல் மாறும். உடம்பிற் பூசச்சொரி, ரணம் தீரும். இச்சாபத்தியம்.

4. புங்கம் வித்து படி 8, அழிஞ்சில் வித்துப்படி 1, முல்லைவேர் வீசை 2, குமரிக்கிழங்கு வீசை கால் இவைகளை குழித்தயிலமிறக்கி ஒரு காசெடை வீதம் சாப்பிட்டு உடம்பிற் பூசிவர மேற்படி வியாதிகள் தீரும். இச்சாபத்தியம்

5. அழிஞ்சி, புங்கு, தோன்றி, புன்னை இவைகளின் வித்து கடுக்காய், கார்கோலரிசி மிளகு இவைகளையோர் நிரை அமுரியில் இருபது நாள் ஊறவைத்துலர்த்திக் குழித்தயிலமிறக்கி ஒரு காசெடை வீதம் வெற்றிலையில் வைத்து ஒரு மண்டலஞ்சாப்பிட்டு உடம்பிலும் பூசிவர மேகச் சொரி, புற்று, ரணம், கண்டமாலை, வெடி சூலை, குறைநோய், குட்டம், தலைப்புழுவெட்டு, விஷக்கடிகள் தீரும். நரைமயிரிற்றடவக் கறுக்கும் இச்சாப்பத்தியம்.

6. பறங்கிப்பட்டைச் சூரணம் பலம் ஐந்து, கொடிவேலி, சிறு குறிஞ்சான், கருஞ்சீரகம், சுத்தி செய்த கெந்தகம், நீரடி முத்து இவைகளின் சூரணம் வகைக்குப்பலம் 1 சுத்தி செய்த சேங்கொட்டை 100, காட்டெள்ளுபடி 1 இவையெல்லாம் மயனமாயிடித்து, வேளையொன்றுக்குத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வெந்நீர் கொள்ள மண்டலத்தில் குட்டம், கிரந்தி தீரும். பத்தியம் கரப்பான் பதார்த்தம் நீக்கவும். இச்சாபத்தியம்.

7. கெந்தக வடகம், ஏலம் 2, சண்பகப்பூ விதை, திரிகடுகு, வாய் விளங்கம், சேங்கொட்டை, லவங்கபத்திரி, சித்திரமூலம், வகைக்குப் பலம் 2 இடித்துச்சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் வாழைப்பழத்திலாவது, சீனியிலாவது கொள்ளக் குட்டம் குறைநோய் மூலம் தீரும். இச்சாபாத்தியம்.

8. பசுமஞ்சட்சாறு குறுணியில் 50 பலம் சீனியைக் கரைத்து பாகு செய்து அதில் நெல்லி முள்ளி, மல்லி, மரமஞ்சள், வெங்காயம் அதிமதுரம், கோஷ்டம், லவங்கம், ஏலம், சதகுப்பை, இருவேலி கோரைக்கிழங்கு, தான்றிக்காய், சீரகம், கருஞ்சீரகம் வகைக்கும் பலம் 2 சூரணித்துத் தூவிக் கிண்டி ஒரு கலசத்திற் போட்டு ஒரு மண்டலம் நெல்லுக்குட்புதைத்தெடுத்து நாளொன்றுக்குப் பாக் களவு கெந்தக பற்பம் வைத்து 20 நாளுண்ணப்பிரமேகங்கள் தீரும்.

9. சுத்தி செய்த ரசம் பலம் 1, அரிதாரம் பலம் 2, பறங்கிப் பட்டைபலம் 1, கொடிவேலிவேர்ப்பட்டை பலம் 1, எட்டி விதை பலம் 1, சுத்தி செய்து வறுத்த சேங்கோட்டை பலம் ஐந்து இடித்து பணவிடை வேளையொன்றுக்கு ஒரு கழஞ்சில் மேற்படி தயிலம் பணவிடை அளவு வைத்துண்ண கருங்குட்டம் செங்குட்டம், வெங்குட்டம், சூலை, கிரந்தி, தண்டுப்பிளவை, ஆண்கள் அரையாப்பு, மூலந்தீரும். கடுகு நல்லெண்ணெய் தகாது. புளி சுட்டுக் கூட்டவும்.

10. அழிஞ்சில், குன்றி, வெள்ளெருக்கு, சித்திர மூலம், வெண்புரசு, காஞ்சிரை, பூவரசு, வெண்ணொச்சி, வில்வம், கருஞ்சூரை, புங்கு, மருதோன்றி, சங்கு, வேம்பு, சதுரக்கள்ளி, தேற்றான் இவைகளின் வேர், சிவன் வேம்பு சமூலம், அகில், தேவதாரம், சந்தனம், வசம்பு இவைகளைத் தனியே

குழித்தயிலமிறக்கி வகைக்குப்படி அரை வீதம் ஒன்றாய்க் கலந்து அதில் ரசகர்ப்பூரம் பலம் 1 பொடித்துப் போட்டு நீர்வற்றக் காய்ச்சி உடம்பிற் பூச குட்டம், வாதம், வலிப்பு தீரும்.

11. சேங்கொட்டை, எட்டிக்கொட்டை, நேர்வாளக் கொட்டை, நீரடி முத்துபடி 1, வாலுளுவையரிசி கருஞ்சீரகம், மஞ்சள், மிளகு, கொடிவேலிவேர்ப்பட்டை வகைக்குப்படி 1, கெந்தகம் வகைக்குப்பலம் கால் இவைகளைக் குன்றிமணிச்சாறு விட்டு இடித்து வில்லை தட்டியுலர்த்திக் குழித்தயிலமிறக்கி அதில் சூதம், அரிதாரம், லிங்கம், சவுக்காரம், பொரிகாரம் வகைக்குக் கழஞ்சு 1, பொடித்துப் போட்டு வேளைக்கு ஒரு காசெடை வீதம் தேனில் மத்தித்து கொடுத்து தயிலத்தை உடம்பிற் பூசிவர குட்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு, சொரி, வண்டுகடி, விஷக்கடி தீரும்.

12. இரண்டு படி எட்டிக்கொட்டையை ஊறவைத்திடித்து வடிகட்டின சூரணத்தினிடை வெள்ளுள்ளி சேர்த்திடித்துத் திருகு கள்ளிச் சாற்றாலாட்டி வில்லைதட்டிக் குழித்தயிலமிறக்கி அதில் இரச கற்பூரம் பலம் 1/4, பூநீர் சுண்ணம் விராகனெடை 1 பொடித்துப் போட்டுச் சிவன்வேம்பு, வெள்ளறுகு சமூலம், சங்கம் வேர் இவைகளை ஓர் நிறையாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணத்தில் காசெடை தயிலம் வைத்துண்ணக் குட்டம், வாதக் கிரந்தி, மேகம், சூலை, மேகக்கடுப்புப் பிளவை தீரும்.

13. செவ்வலரி வேரையுலர்த்திக் குழித்தயிலமிறக்கி நாளொன்றுக்கு ஒரு துளி வீதம் தண்ணீரிற் கலந்து மூன்று நாள் கொடுக்க ரணங்கள் தோறும் குருதி வடிந்து தீரும். உப்புப்புளி நீக்கிப் பத்தியமிருந்து ஏழாம்நாள் தலைக்குத் தண்ணீர் வார்க்கவும். கடும்பத்தியம்.

14. வேப்பம்பட்டையை மேற்புறணி தள்ளியிடித்து தூள் 40 பலம் பாண்டத்திற் போட்டுப் பதினாறு படிகாடியில் இருபதுநாள் ஊற வைத்துச் சீலையால் வேடுகட்டி கருங்கோழி வயிற்றில் 2 பலம் அமுக்கறாங்கிழங்குச் சூரணத்தை வைத்துத் தைத்து, வேட்டின் மேற்கோழியை வைத்து மூடி, வேப்பம் விறகினாலெரித்து நீர்வற்றின பின்பு கோழியையுலர்த்தி இடித்து சூரணத்தையும், பத்துப்பலம் பறங்கிப்பட்டைச் சூரணத்தையும், கடுகு, சுக்கு கருஞ்சீரகம், திப்பிலி, ஓமம், கார்கோலரிசி, மிளகு வகைக்குப்பலம் வீதம் வறுத்து இடித்து வடிகட்டின சூரணத்தையும் ஒன்றாய்க் கலந்து திரிகடிப் பிரமாணத்தில் மேற்படி தயிலம் ஒருவிராகனெடை வைத்து மண்டலங் கொள்ள குட்டம், சூலை, கிரந்தி, வாதவாயு, அண்டவாதம், கிருச்சனவாயு தீரும். புளி, புகை, கரப்பான் பதார்த்தம் நீக்கிப்பத்தியங் கொள்ளவும்.

15. பறங்கிப்பட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி மூலம், கிராம்பு வகைக்குக் கழஞ்சு 1, ஈருள்ளி பலம் .5, நிலப்பனைக்கிழங்கு, புளியமடற்கிழங்கு, சத்திச்சாரணைக் கிழங்கு, மெருகங்கிழங்கு, சங்கம், நன்னாரி வேர், கருணைக்கிழங்கு, கஞ்சாவேர், வெள்ளறுகு, அமுக்காறாக்கிழங்கு, கருஞ்சூரைபட்டை கால், சுக்குப் பலம் இரண்டரை இவைகளை அரைத்து ஒரு நாழி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி, நாளொன்றிற்கு கரண்டி விகிதம் சாப்பிட்டு வர செங்கிரந்தி, அரிகிரந்தி, பொரிகிரந்தி, செவ்வாப்பு தீரும்.

16. ரசகர்ப்பூரம், கெந்தி, கருஞ்சீரகம், பறங்கிப்பட்டை இவை ஓர் நிறையாய்க் கையாந்தகரைச் சாற்றாலாட்டி தான்றிக்காயளவு உண்டைசெய்து நாளொன்றுக்கு ஓர் உருண்டை

வீதம் சர்க்கரையில் பத்து நாள் சாப்பிட்டுப் பத்தியம் உப்பு புளிதள்ளி ஆவில் பால்நெய் கூட்டிவரத்தீரும்.

17. பூவரசம் பட்டை, ஈருள்ளி, சிறுசெருப்படை, இவைகள் சாறு வகைக்கு நாழி, விளக்கெண்ணெய் நாழி முக்கால், ஒன்றாய்க் கலந்து அதில் இரசம், ரசகர்ப்பூரம், வீரம், கெந்தகம், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு விராகனெடை 5, சாரம், துருசு வகைக்கு விராகனெடை இவையரைத்துப் போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து நாளொன்றிற்கொரு கரண்டி விகிதம் புளி, புகை, கரப்பான் பதார்த்தம் நீக்கி பத்து நாள் கொள்ளத் தீரும்.

18. சங்கங்குப்பியிலைச்சாறு, நுணாயிலைச்சாறு கொடிக்கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு, ஆவின்பால், நல்லெண்ணெய் இவையோரளவாய்க் கலந்து நாளொன்றிற்கு கால் நாழி, சாற்றில் அரைக்கால் விராகனெடை கற்பூரத்தை உரைத்து 5 நாள் பத்து வேளை சாப்பிட்டு ஆவின்பால், வெள்ளாட்டுப்பால், வெந்நீர் கலந்து கொண்டு ஏழாம் நாள் உப்பை வறுத்துக் கூட்ட கிரந்திகளும், ரணங்களும், கை கால் பிடிப்புந் தீரும்.

19. பறங்கிப்பட்டை பலம் ஆறு, கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு விடையம், திரிபலை, சதகுப்பி, திப்பிலி, மிளகு, சமுத்திராப்பழம் வகைக்குப் பலம் அரை, வெள்ளறுகு அமுக்கராக்கிழங்கு நில ஆவரை வேர், கொடிவேலி வேர் வகைக்குப்பலம் அரை இவைகளை இடித்துக் திரிகடியளவு பத்தியமாய் மண்டலங்கொள்ளத் தீரும்.

20. ஒரு பாண்டத்தில் ஒரு படி தண்ணீர் விட்டு அதன் வாயில் சீலையால் வேடுகட்டி அதின் வாயிற் கள்ளிக்கொழுந்தை வைத்துப் பிட்டவித்து ஒரு சிரங்கைச் சாறு பிழிந்து அதில் ஒரு துட்டெடை நல்லெண்ணெய் கலந்து, மூன்று நாள் கொடுத்து, ஆறுநாள் பத்தியமாயிருக்கச் செங்கிரந்தி, கருங்கிரந்தி, தடிப்பு மாறும்.

21. பூசணிக்காய்ச்சாறு படி 2, தாழைவிழுது, கற்றாழை, குமிழ், நெல்லிக்காய், கையாந்தகரை, வல்லாரை, வில்வம், கொடுப்பை, வீழி, ஆதண்டையிலை, அப்பைக்கிழங்கு, சங்கு, நீர்ப்பூலா தென்னம்பாளை, தக்காளியிலை, ஆனைநெருஞ்சில், ஆல்விழுது, அறுகம்வேர் இவைகள் சாறு வகைக்குப்படி கள்ளியை வாட்டி பிழிந்தசாறு, இளநீர், ஆவின்பால், காடித்தண்ணீர், கோசலம், ஆனைநீர் வகைக்குப்படி சிற்றாமணக்கு முத்தைக் காடியில் ஊற வைத்து உலரப்போட்டு, ஆவின்பால் விட்டு அவித்து இடித்து இளநீரிற் போட்டு வேக வைத்து ஊற்றின எண்ணெய் படி ஐந்து ஒன்றாய்க் கலந்து, அசுவ கெந்தி, நிலப்பனைக்கிழங்கு, நிலக்குமிழ், சித்திரமூலம், தாமரை, சர்க்கரை, துத்தி, நீர்மேல் நெருப்பு இவைகள் வகைக்குப் பலமாக சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், அதிமதுரம், சடாமாஞ்சில், சோம்பு, ஏலம், திரிகடுகு, திரிபலாதி, வெந்தயம், சீரகம், கஸ்தூரி மஞ்சள், கோரோசனை, பூரம், வால்மிளகு, கசகசா வகைக்குக் கழஞ்சு முப்பது இவையெல்லாம் அரைத்துப் போட்டுப் பதமாகக் காய்ச்சி நாளொன்றுக்கொரு கரண்டி வீதம் பத்தியமில்லாமல் மண்டலங்கொள்ள கருங்கிரந்தி, செங்கிரந்தி, கிரந்திப்புண், சிறுசிரங்கு, பெருஞ்சிரங்கு, பிரமியம் முதலான மேகம் இருபத்தொன்றும் தீரும்.

22. சிற்றாமணக்கெண்ணெய், பொடுதலைச்சாறு வகைக்கு நாழி 2, கரிசாலை, சங்கங்குப்பி, ஈருள்ளி, எலுமிச்சம்பழம் இவைகள் சாறு வகைக்கு நாழி 1 ஒன்றாய்க் கலந்து அதில் சங்கு, சிறுகாஞ்சோரி, சித்திரமூலம், செம்முள்ளி, அமுக்கரா, செங்கத்தாரி, பூதகரப்பன், குமரி, சாரனை, வேம்பு, குறட்டை, நெருஞ்சி, நிலவாகை, நெல்லி, விளா, பங்கம்பாளை, கருஞ்சூரை, நாகதாளிக்காய், இவைகள் மூலப்பட்டை, திரிபலை, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், ஏலம், கார்கோலரிசி, நேர்வாளம், கெந்தகம், தகரவிரை, அரிசித்திப்பிலி, திப்பிலி மூலம், வலம்புரிக்காய், கற்கடகசிங்கி, சிறுநாகப்பூ, அதிமதுரம், இந்துப்பு, ஓமம், நிலப்பனைக்கிழங்கு, வெட்பாலையரிசி, செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், கழற்சிப்பருப்பு, சத்திச்சாரணை வகைக்குப்பலம் 1 இடித்து கொடிக்கள்ளிச்சாற்றிலும், புங்கம்பாலிலும், வெள்ளாட்டுப்பாலிலும் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் ரசகர்ப்பூரம் கழஞ்சு ஒன்று, அரிதாரபற்பம் இரண்டு போட்டு தானியபுடம் வைத்து நாளொன்றுக்கொரு கரண்டி வீதம் மூன்று நாள் சாப்பிட்டு ஒன்பது நாள் வரை உப்பு, புளி நீக்கி பத்தியமாயிருந்து ஏழாம்நாள் ஸ்நானஞ் செய்ய அரையாப்பு, மேகவெட்டை, ஊறல், குட்டம், குறைநோய், படர்தாமரை, புற்று, பிளவை, சொரி, கரப்பன், தீரும்.

பெரு நோயைத் தீர்ப்பது மிகக்கடினம், ஏனெனில் இது கன்ம நோயென்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும் கன்ம நோய்களும் சாந்தியாற்றீரு மெனச் சித்தர் நூற்கள் கூறும்.

இந்நோய் நீங்க வேண்டுமாயின் நீண்டநாள் மருந்தருந்தல் வேண்டும். பிணி தொடங்கின உடனேயே மருத்துவம் செய்யத் தொடங்கின் விரைவில் குணமேற்படும். இல்லையேல் உடலிலிருக்கும் உடற் கட்டுகளெல்லாம் கெட்டு விடும்: ஆதலின், துவக்கத்தில் வாந்தியையும், பேதியையும் உண்டாக்கக் கூடிய பரிகாரங்களையும், இரத்தம் வாங்குதலையும் செய்ய வேண்டும். வெளிப்பூச்சு மருந்துகளையும் மேலே பூச வேண்டும்.

### *பேதி மருந்து*

1. இரசத் தைலம் 1/2 முதல் 1 அவுன்ஸ் காலையில் 3 நாட்களுக்குக் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்க வேண்டும்.

2. கருடன் கிழங்கெண்ணெயையும் மேற்படியாகவே வழங்க வேண்டும். இவ்விரண்டு மருந்துகளும் பேதியை உண்டாக்குவதுமன்றிக் குட்டத்திற்கு நேர்மருந்துகளுமாகும். பொதுவாகப் பேதி மருந்துகளைத் திங்கட்கொருமுறை கொடுக்கலாம். ஆனால், மலக்கட்டிருப்பின் அவ்வப்போது கொடுப்பதில் குற்றமில்லை.

3. குருதி வாங்கல், அழற் கலப்புள்ள குட்டங்களில் நன்மை பயக்கும். குட்டம் உடலெங்கும் பரவியிராது சில இடங்களில் மாத்திரமேயிருக்குமாயின் அவ்வவ் விடங்களில் குடுவை வைத்துக் குருதிய்ய யெடுத்து விடலாம். உடலெங்கும் குட்டமிருப்பின், நெற்றி, கை, கால் இவ்விடங்களில் கீறிக்குருதியை வெளியாக்கலாம். செந்நீரை ஆறு திங்கட்கொரு முறையே வெளிவாங்க வேண்டும்.

## குட்டந்தீர்க்கும் தாதுப்பொருட்கள்

கெந்தகம், தாமிரம், வங்கம், தாளகம் இரசம், துருசு, அயம் பலகறை இவற்றால் ஆன மருந்துகள் கொடுக்கலாம்.

## குட்டந்தீர்க்கும் மூலிகைகள்

சேங்கெட்டை, நீரடிமுத்து, வாய்விடங்கம், பேயத்தி, கருங்காலி, கலியாணமுருக்கு, கோட்டம், தகரை, சரக்கொன்றையிலை, கார்போகி, சீமையகத்தி அல்லது வண்டுக்கொல்லி, வேம்பு, நிலவேம்பு, சிவனார்வேம்பு, ஆகாசக்கருடன் கிழங்கு, பூவரசு, மஞ்சள், வெட்பாலை, ஆடு தீண்டாப்பாளை, அகில், பரங்கிச்சக்கை, ஏறழிஞ்சில், மருதோன்றி, புங்கு, சந்தனம், நன்னாரி ஆகியவைகளன்றிக் கைப்புச் சுவையுடைய மூலிகைகளும் நன்றாம். இவற்றுள் சேங்கொட்டை, நீரடிமுத்து சேர்த்துச் செய்யக்கூடிய இளகங்கள் பல ''அகத்தியர் வல்லாதி 600'' என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

## ஊழலாற்றித் தைலம்

## [தேரர் தைலவர்க்கம்]

*''முதிரூழலாற்றிமண்ணரசு மாலுகமென்னு மூவதளும் வீசை*

*முளரி முரணாந்தண்டு நந்தீசர் தோற்கந்த மூந்திரந்திரமி வைத்துள்*

*சிதருதிடித் தெண்ணிரண்டு கடனீர் பெய்து தீயிலாந் தொகையி லொன்றுத்*

*தீர்த்தகுடி நீரிலிது மணிநெய்யிதுவே சரித்தெண்ணீரம்மல வழுது பாற்*

*புதிதாங் கடத்தட்டி மிருகொடியருந்தி முப்போதாறு நட்பின் படுப்*

*போட்டுண்டதற்பினோ மாப்பலினுடிடு புகன்ற பஞ்சாங்குல நெயை*

*மிதிலாய் கனற்கிரவிறுட் டிடையணம் முறையளெணெய்யட்டி முன் பிணுடுள்*

*ளிரணமேகப் புணமை குட்டுமறு மெம்மாணை யிஃகாமலாற்றி நெய்யே.*

நாட்சென்ற ஊழலாற்றி, பூவரசு, வேம்பு என்னும் இவை மூன்றின் வேர்ப்பட்டைகளும் வகைக்கு வீசை 1, பனற்றண்டு, பிரப்பன் கிழங்கு வகைக்கு வீசை 1 இவற்றை தறித்து இடித்து 19 மரக்கால் நீர்விட்டு 1மரக்காலாகச் சுருக்கி வடித்து அவ்வளவே சிற்றாமணக்கு நெய்யும் கழுதை மூத்திரத் தெளிவும், கழுதை லத்திப்பால் மரக்கால் சேர்த்து புதிதாகப் பழக்கிய தைல பாத்திரத்தில் ஊற்றி எரித்து குடித் தைலமாக வடிக்கவும்.

அளவு : பலம் 2 காலையில் 3 நாள்; உப்பில்லாப் பத்தியம் மறுபத்தியம் 3 நாள், 7 ஆம் நாள் உப்பு வறுத்துக் கூட்டி 8ஆம் நாள் ஓமப்பால் தேய்த்துத் தலை முழுகச் செய்யவும்.

*''அடவிவதி ஊழ லாற்றி எனுமூலி*
*படர்விரணம் புண்கொருக்கு பாமை - கடிதடத்தால்*
*வந்த அரை யாப்புவெள்ளை வாதப் பிடிப்புகுட்டம்*
*இந்தவகை நோயகலு மென் -(அகு)*

இம்மருந்தால் உடலில் சூடேற்படின் பாவன பஞ்சாங்குல தைலத்தை இரவில் படுக்கைக்குப் போகுமுன் போதுமான நாளுண்ணச் சூடு தணியும்.

இதே தைலத்தை ஆமணக்கு நெய்க்குப் பிரதியாக எண்ணெய் சேர்த்து முடித் தைலமாகக் காய்ச்சி மூழ்கலாம். இத்தைலத்தால் உடற்கட்டுகளில் பரவிய புண்களும், வெட்டை முதலிய மேகமும், மேகப்புண்களும், தினவுகளும், குட்ட நோய்களும் ஒழிந்துவிடும்.

## சிவனார் வேம்புக் குழித்தைலம்

(பிரமமுனி-700)

வாயுவொடு சரும நோ யெல்லாந்தீர மைந்தனே சிவன்வேம்புத்
தயிலங்கேளு
வாயுவொடு சிவன்வேம்பு சமூலங் கொண்டு வளமாக நிழலுலர்த்
திச் சூரணித்து
வாயுவென்ற சூரணத்தோ டின்னமொன்று வாலுழுவை யரிசி
சமன் கொண்ட நீதான்
வாயுவென்ற கருடனுட கிழங்குச்சாற்றால், வளமாக வாட்டிமிக
வில்லை கட்டே
கட்டியேபூபுடத்திற் றைலம்வாங்கு கருப்பூரம் காற்பலந்தான்
பொடித்துப் போட்டு
கெட்டியாய்க் காசெடைதான் மண்டலங்கொள் கெணித முடன்
மேற்பூசத் தீரும் நோய்கேள்
குட்டமொடு குறைநோயும் பெருவியாதி கோளரிய மேக வெடி
சூலை புண்கள்
கட்டியுடன் வண்டுகடி யுளைச்சல்குத்து கரப்பனொடு சில்
விஷங்கள் காணாதென்னே.

## சிவன் வேம்புச் சூரணம்

காணாத சிவன்வேம்புச் சூரணங்கேள்கருதியே சிவன் வேம்பு
சமுலங் கொண்டு

கோணாத நிழலுலர்த்திப் பலம்தான் பத்துக் குறிப்பாகச் சங்கம்
வேர் பலந்தானி ரண்டு

தோணாத வெள்ளைச்சா ரணையின்வேரும் தூதுவளை
மிளகரணை யமுக்க ராவேர்

கோணாது வகைவகைக்கும் பலன்தா னிரண்டு கொடிவேலி
நொச்சி கருஞ்சூரைவேம்பே

வேம்புடனே திரிகடுகு திரிபலாதி விதமான கார்போகி கரிய சீரம்

சேம்பான கடனுரையும் வசம்பிந்துப்பு செப்பரிய கருங்காலிப்
பட்டையோடு

கோம்பான மூலமொடு பரங்கிப்பட்டை கோப்பிரண்டை கருவா
கையூறற் பட்டை

சோம்பாக வகைக்கிரண்டு பலமாய்ச் சொன்னோம் சொற் பெரிய
சிவனார்தன் வேம்புகேளே

கேளேநீ யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்துத் திரமமுட னிழலு
லர்த்திச் சூரணித்துத்

தேளேநற் பாண்டத்திலிட்டு மைந்தா திருகு கள்ளிச் சாறும்
வெள்ளாட்டு நீரும்

வேளேநீ பேய்க்கும்மட்டிச் சாற்றி னோடும் விதமான தேசிச்சாறு
வகை வகைக்கு

கேளேதான் வகைக்கு ஒரு படிதான் வார்த்து குமுறவே விரவி
நன்றாய் மூடிப்போடே

மூடியே நாள் மூன்று புதைத்து வைத்து முசியாம லெடுத்திரவி
யுலர்த்தி நன்றாய்

நாடியே சட்டிதனி லிட்டுமூடி நணுகி யந்தி சந்திவெரு
கடிதுர் ளப்பா
மூடியே தூளதனை யெடுத்து நீயும் முன்சொன்ன சிவன்வேம்பு
தயிலந் தன்னைப்
பாடியே காசெடைதான் சேர்த்துக் கொள்ளப்பதி னெட்டு சூலை,
குட்டங் குறைநோய் போமே.

சிவனார் வேம்புக்குழித்தைலம் 10 முதல் 20 துளி, சிவனார் வேம்புச் சூரணத்தில் கலந்து தர வேண்டும்.

## *சில உள் மருந்துகள்*

1. சண்ட ரசபற்பம்
2. வீர மெழுகு
3. இரசமெழுகு
4. இரசத் தைலம்
5. கந்தக ரசாயணம்
6. பலகறை பற்பம்

இவைகளை அதற்குச் சொன்ன அளவு, துணை மருந்து நாளளவாக உண்ணப் பெருநோய் குணப்படும். கடைசியில் சொன்ன கந்தக ரசாயனத்தை நீடித்த நாள் உண்ணக் குணந்தரும்

### *7. கந்தகச் சுடர்த்தைலம் :*

5 முதல் 10 துளி சர்க்கரையில் கடும் பத்தியத்துடன் 5 நாளைக்குக் கொடுத்து மறு பத்தியம் வைக்கவேண்டும். இப்படியே மாற்றித் தரவேண்டும்.

### *8. கந்தகமெழுகு :*

2 குன்றி அளவு, 2 வேளை, இது சர்மதல குட்டத்தில் நன்றாக வேலை செய்யும்.

*9. துருசு செந்தூரம் :*

1 முதல் 3 கடுகளவு வெண்ணெய் அல்லது நெய்யில் இரு வேளை ஒரு வாரம் தரலாம். புளியில்லாப் பத்தியம். ஒரு வாரம் சென்ற பின் மறு பத்தியம் கொள்க.

## 10. செம்பு பற்பம் அல்லது செந்தூரம்:

குட்ட நோய்க்குச் சிறந்த மருந்தாகும். அளவு 1/2 முதல் 1 அரிசி, வெண்ணெய், நெய் இவைகளில் கலந்து இருவேளை ஒரு வாரம் தந்து மறு பத்தியம் வைத்து, இவ்வாறு ஒரு மண்டலங் கொடுக்கலாம் பத்தியம்-புளியில்லா பத்தியம்.

*11. குஷ்ட கஜ கேசரி :*

அப்பிரக பற்பம், காந்தச் செந்தூரம், அயச் செந்தூரம். இரச பற்பம் இவை ஓரளவு சவுரிப் பழச்சாற்றில் அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து, சர்க்கரை, தேன் முதலிய துணை மருந்துடன் நோய் வன்மைக்குப் பொருந்த, அளவு படுத்திக் கொடுக்க, குட்டம், மேகம் முதலிய கொடிய பிணிகள் நீங்கும் (சித்த வைத்தியத் திரட்டு).

***வெளிப் பூச்சுகள் :***

முன் உள்ளுக்கு வழங்கலாமெனக் கூறிய மூலிகை களுடன், அலரி, புங்கு, எருக்கு, கடுகு ஆகியவைகளையும் பயன்படுத்த லாம். பலாசு உப்பு ஈதன்றி அன்னபேதி, மனோசிலை, தாளகம் ஆகியவையும் பலாசு உப்பும் இந்துப்பும் ஆகும்.

வெளி மருந்துகளைப் பூசுமுன், பூசுமிடத்தைத் தகுந்தவாறு சுரண்டிக் கைப்புச் சுவையும், புழுக்கொல்லிச் செய்கையுமுள்ள மருந்துகள் சேர்த்துக் காய்ச்சிய குடிநீரால் கழுவ வேண்டும்.

***கீழ்க் கூறப்படும் சில முறைகள் வழங்குவதற்குரியன:***

1. வாய்விடங்கம், சுக்கு சேர்த்தரைத்த பூச்சு

2. மிளகு, திப்பிலி, திரிபலை, வசம்பு, நாபி, கொடிவேலி, கோரைக் கிழங்கு ஆகிய இவைகளைச் சேர்த்தரைத்த பூச்சைக் கபாலக் குட்டத்தில் மேற்பூச்சாக வழங்கலாம்.

3. மஞ்சள், மரமஞ்சள், வெண்கடுகு, முள்ளங்கி விதை தகரை விதை, திரிகடுகு, தேவதாரு, வாய்விடங்கம் இவைகள் சேர்ந்த பூச்சும் மேற்படி குட்டத்திற்கு வெளிப் பூச்சாம்.

4. கொடிவேலி வேர்ப்பட்டையை யுரைத்து மண்டல குட்டத்தில் பூசலாம்.

5. தகரை விதை, ஆவிரை விதை, கார்போகி, மஞ்சள், இந்துப்பு ஆகியவற்றை காடிவிட்டு ஆட்டி விசர்ச்சிகக் குட்டத்தில் பூசலாம்.

6. இரசம், கார்போகி, தகரைவிதை, வாய்விடங்கம், கொடி வேலி, குன்றி, எருக்கு, அருகம்புல், மஞ்சள், பொடுதலை, கள்ளி கற்றாழை, முத்தககாசு, மிளகு, இந்துப்பு, சங்குபற்பம் இவை -களைத் தேனிலரைத்து கசசரும தோல் குட்டத்திற்குப் பூசலாம்.

***7. கிடீப குட்டம்:***

தகரைவிதை, கோட்டம், முள்ளங்கிவிதை, மஞ்சள், வெண்கடுகு, கொம்பரக்கு, தேவதாரு, முக்கடுகு இவைகளை அரைத்துப் பூசலாம்.

*8. சதாரு குட்டம் :*

இரசம், கெந்தி, வெங்காரம் இவைகளை முள்ளங்கிச் சாற்றிலும், இஞ்சிச் சாற்றிலும் அரைத்துப் பூசி வரலாம்.

வேறு - தாளகம் பங்கு 1, கந்தகம் பங்கு 2, கார்போகி பங்கு 3, இவற்றை பசுமாட்டு நீரிலரைத்துப் பூசலாம்.

*9. தத்துரு குட்டம் :*

இலவங்கம், கெந்தி, இரசம், சரக்கொன்றை, கார்போகி, நாபி, மஞ்சள், வாய்விடங்கம், கடகரோகணி, முத்தக்காசு, கொடிவேலி, முக்கடுகு, தகரை ஓரளவு பழச்சாற்றாலரைத்துப் பூசலாம்.

*10. சர்மதல குட்டம் :*

மஞ்சள், ஆடாதோடைக் குருத்து இவற்றை ஆவின் நீரிலரைத்துப் பூசலாம்.

*11. பாமா குட்டம் :*

கபாலக்குட்டத்திற்குக் கூறிய மேற்பூச்சு இதற்கும் பயன்படும்.

*12. சர்மதல குட்டம் :*

கடுகு, இந்துப்பு, நாட்டுவெல்லம் இவைகளைச் சேர்த்தரைத்துப் பூசலாம்.

*13. சுவேதக் குட்டம் :*

இரசம், கெந்தி, இரசசெந்தூரம், மனோசிலை, மஞ்சள், மரமஞ்சள், கருஞ்சீரகம், சீரகம், மிளகு நெய்யுடன் சேர்த்தரைத்துப் பூசலாம்.

## வேறு சில முறைகள்

1. ஆடு தீண்டாப்பாளைத் தைலம்

2. கரப்பான் தைலம் (தேரன் தைல வர்க்கம்)

3. வங்கக்களிம்பையும், அமிர்த மெழுகையும் கலந்து குட்டத்தில் பூசலாம். (சித்த வைத்தியத் திரட்டு)

### 4. சிரட்டைத் தைலம் :

இது புண்டரீக குட்டத்திற்குப் பயன்படும்.

### 5. குட்டத்திற்கு புகை :

இப்புகையின் வகைகளை ''அகத்தியர் இரண வைத்தியம்'' என்னும் நூலிற் காண்க. இதில் பெரும்பான்மை சேரும் பொருள்கள் வீரம், இலிங்கம், குங்கிலியம், தாளகம், நாயுருவி விதை முதலியவையாம், சில முறைகள் கீழே தரப்படும்.

*''தாரமும் ரசமுங் கந்தி*
*சமன தாய்த்தூ ளேசெய்து*
*பாரமாய்ச் சீலை தன்னில்*
*பரப்பியே தானுருட்டி*
*வீரமாய் விளக்கிற் போட்டு*
*வேப்பெண்ணெய் தன்னை வார்த்துக்*
*கோரமாய்த் தீபமேற்றி*
*கொடும்புகை முகத்திலேற்றே,*
*''ஏற்றிடிற் சன்னி தோஷம்*
*எழும்பிய குஷ்ட ரோகம்*

பாற்றிடிற் பரங்கிச் சூலை

பதகரி முதலா யுள்ள

பூற்றிடும் புண்கள் யாவும்

.........................................................

சாற்றினர் முழுதுந் தேர்ந்த

சாதுக்கள் காண்பாய் நீயே.

அரிதாரம், இரசம், கந்தகம், ஓரளவு, அரிதாரத்தை நன்றாய் ஒரு மணி நேரம் அரைத்துப் பொடி செய்து, பிறகு, கந்தகத்தைப் பொடித்து இரசத்தைச் சேர்த்துக் கருப்புநிறம் வரும் வரை அரைத்து, பிறகு அரிதாரத்தைச்சேர்த்து, அரை மணி நேரம் அரைத்து வெள்ளைத் துணியில் பரப்பிச் சுருட்டித் திரிபோல் செய்து, வேப்பெண்ணெயில் தோய்த்துக் கொளுத்திப் புகைபிடிக்க, சன்னிகள், புண்கள், பரங்கிப்புண், குட்டம் முதலிய எவ்வித இரணங்களும் ஆறும்.

## வேறு

''வீரங் கழஞ்சி தானொன்று

விதமா மிலிங்கந் தானொன்று

வார மிகுந்த குங்கிலியம்

வனமாங் கழஞ்சு தானதுவும்

ஈரம் பெரிய தாளகமும்

இசையுங் கழஞ்சு தானொன்று

நேரம் பெறவே சரிசமனாய்

நிறத்துப் பின்னும் நேர்சொல்லும்''

''சொல்லும் படியோ நாயுருவி
    சுகமாம் அரிசி நாற்கழஞ்சி
வெல்லும் படியே கல்வத்தில்
    விதமாயரைத்துப் பொடி பண்ணி
நில்லும் படியே சீலைதனில்
    நினைவாய் ஏழு கிழிகட்டிப்
புல்லும் புளியஞ் சிராய்கட்டுப்
    பொருந்தக் கிழியைத் தான்வைத்தே''

தானே கண்ணாஞ் சிரட்டைவைத்துத்
    தளரக் குழல்வைத் தேயருந்தில்
மானே யெழு பொழுதருந்தி
    மறுபத் தியமு மானபின்பு
தேனே வெந்நீரதிலே தான்
    திறமாய் மூன்று நாள்விடவே
கோனே தீரும் பிணிரோகம்
    குணமா மின்னம் சொல்வேனே''

''இன்னம் அவ்வா றேகும்
    இடர்செய் குட்டம் பதகரியும்
மின்னுஞ் சூலை முடக்கமது
    மெத்திக் கட்டும் புண்புரையும்
வண்ணஞ் செய்யும் வகைகரப்பான்
    முதலா யுள்ள வலிகளோடு

*துன்னும் வந்த கரப்பானு*

*தொலையு மென்றார் சித்தரரோ''*

வீரம், இலிங்கம், குங்கிலியம் தாளகம் வகைக்கு வராகனெடை 1-1/4, நாயுருவி விதை வராகனெடை 5, குழிக்கல்லிலிட்டு ஒரு மணி நேரம் நன்றாக அரைத்துப் பொடித்து, ஒரு துணியில் புளியஞ்சிராயில் ஏழு கிழிகட்டி தணலுண்டாக்கி, மேற்படி கிழியை அதன்மீது வைத்துக் கண்ணுள்ள அதாவது தொளையுள்ள தேங்காயோட்டை மூடி அத்தொளையின் மீது மூங்கிற் குழாயை வைத்து எழும் புகையை அருந்தவும், இப்படி ஏழு தரம் செய்யவும், வெந்நீர்ச் சோறு அல்லது, பாற்சோறு உண்ணவேண்டும், எட்டாம் நாள் உப்பு, புளி சேர்த்துக் கொள்ளவும்.

இதனால் குட்டவிரணம், சூலை, கை கால் முடக்கு, புரை யோடும் புண், வளிக்கரப்பான் முதலியன தீரும்,

## இந்நோய்க்காகும் உணவுப் பொருள்கள்

கைப்புச் சுவையுள்ள பொருள்கள் சிறப்பு உடையன. புளிப்பு உப்பு கார்ப்புச் சுவையுள்ள பொருள்கள் கூடாவாம். பசுவின் நீர், ஆட்டின் நீர், செம்மறியாட்டு நீர், கழுதை மூத்திரம் ஆகியவை சிறந்தன. தயிர், வெல்லம், எண்ணெய், உளுந்து, நீர் வாழ்வன, மாமிசம், கள் ஆகியவை உதவா.

சீமையகத்திக் கீரை, சரக்கொன்றையிலை, நிலாவாரை ஆகியவைகளையும் உபயோகிக்கலாம்.

இப்பிணியினன் நீராடும் நீரானது கசப்புச் சுவையுள்ள மூலிகைகள் சேர்த்துக் காய்ச்சினதாயிருத்தல் நலம். அவற்றுள் கருங்காலி, வேம்பு இவ்விரண்டுஞ் சிறந்தனவாம். பலாசு உப்புஞ் சேர்த்துக் கொள்ளலாம். சவுரிப் பழத்தைலம் மேல் தடவிக் குளிக்கப் பயன்படும்.

***பத்தியம் :***

மீன், நண்டு, நத்தை, முதலான நீர் வாழ் உயிர் பொருட்களை நீக்குதல் வேண்டும். கத்திரிக்காய் போன்ற பண்டங்களையும் நீக்கல் நன்று. ஈச்சம்பாயில் படுப்பது நோயின் வன்மையைக் குறைக்கும் என்பர். நோயுற்றோன் எப்போதும் தன்னை மிகவும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். தோலில் ஏற்பட்ட கொப்புளம், சிரங்கு புண் ஆகியவற்றை சவுக்காரம் கொண்டு கழுவுதல் தீது. உடலுக்கு பாசிப்பயிற்றின் மாவு தேய்த்து குளிக்கலாம். புண்களை முப்பலைக்கியாழத்தால் கழுவுதல் நன்மையுண்டாகும்.

***நோய்த் தடுப்பு :***

நோய் கண்ட பிணியாளரைத் தனிப்படுத்தி வைப்பதும், அவருடன் நெருக்கமாகச் சேராமல் இருப்பதும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களைப் பயன்படுத்தாமல் இருப்பதும் நோயை பரவாமற் செய்யும். தொற்றும் தன்மையுள்ள நோய்களில் பிணியாளரின் குழந்தைகளைப் பிரித்து விட்டால் அவர்களை நோய் பீடிக்காமல் தடுக்கலாம்.

## ***வெண்குட்டம்***

வெண்குட்டம் என்ற நோயை வெண்படை என்றும் சுவேதகுட்டமென்றும் சொல்வர்.

***நோய் இயல் :***

வெண்படையாவது உடலில் மங்கிய வெண்மையான நிறமுள்ள பல அளவான புள்ளிகளும், படைகளும் விகாரமாகக் காணுவதோடு சிலவேளை அவ்விடத்திலுள்ள மயிரும் வெளுத்துக் காண்பதான ஒரு நோய்.

***பொதுக் குறிகுணம் :***

இந்நோயில் தோல் தடித்தல் அல்லது தடிப்புறாதிருத்தல், உடல் முழுமையுமாவது, முகம், கை, கால், உதடு, உள்ளங்கை, எருவாய், குறி முதலிய சில இடங்களிலாவது மங்கிய வெளுப்பு நிறமான பல அளவுகளுள்ள புள்ளிகளாவது ஏற்படுதல், அவ்விடங்களின் மயிர் வெளுத்தல்; சில வேளை உதிரல், சில வேளை இவ்விடங்களில் எரிச்சல் காணுதல் ஆகிய குறி குணங்களைக் கொண்டிருக்கிறது.

***நோய்க் காரணம் :***

பொதுவாக குட்டம் வரக் காரணமானவைகளே இந் நோயையும் விளைவிக்கின்றன என்று கூறப்படினும் சரியான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை தோலில் துணி முதலியவற்றால் விடாமல் ஏற்படும் உராய்தல், தூம்பற்ற சுரபி நீர்களின் விகற்பம். நெகிழ்ப் (Rubber) பொருட்கள் தோலில் அடிக்கடி உராய்தல், சத்தற்ற உணவு போன்றவை சில காரணங் களாக எண்ணப்படுகின்றன. இத்தோல் நோய் கண்டவிடத்தில் மீத் தோலில் காணும் நிறமிகள் என்ற உடலுக்கு நிறத்தைக் கொடுக்கக் காரணமான வில இம்மிகள் குறைந்து போதல் அல்லது இல்லாமல் இருத்தலைக் கண்டுள்ளனர். இந்நோய் ஒரு வகை காமியத்தால்

பிறக்கும். மேக நோயாகிய கொறுக்கு நோய்க்குத் துணையாகவும் வருவதுண்டு. தொழு நோயிலும் வெண்படை காண்பதுண்டு.

### *நோய் பகுப்பு :*

வெண்படை நோயை குற்ற அளவாக வாத வெண்படை, பித்த வெண்படை, கபவெண்படை என்ற மூன்றாகக் கூறப்பட்டுள்ளது. இதனுடன் மேக வெண்படையையும் கூட்டிக் கொள்ளலாம். மேக நோயிலும், தொழு நோயினாலும் ஏற்படும் வெண்படைகள் தொற்றக் கூடியன. ஏனைய தொற்றாதவை. எனினும் சில வேளை பரம்பரை நோயாக வருவதுண்டு. தொழு நோயிலும் வெண் படை காண்பதுண்டு.

### *1. வாத வெண்படை :*

இது சொர சொரத்துச் சிவந்து கொஞ்சம் கருமைச் சாயலுடன் வெளுத்திருக்கும்.

### *2. பித்த வெண்படை :*

இது செந்தாமரைப்பூ இதழ் போல் சிவந்த வெளுப்பாகப் பரவும். அவ்விடங்களில் எரிச்சலும் மயிர் உதிர்வதுமாய் இருக்கும்.

### *3. கப வெண்படை :*

இது தும்பை மலர் போல வெண்மையாக வெளுத்து கொஞ்சம் தடித்துப் பரவும். பரவும் இடங்களில் நமைச்சல் உண்டாகும்.

இம்மூன்று வகைத் தோற் பிணிகளிலும் குருதி, மாமிசம் கொழுப்பு ஆகிய உடல் தாதுக்களைப் பற்றினால் பார்வைக்கு அருவருப்பும் விகாரமும் ஆன நிறங்களையும் உண்டாக்கும் அன்றியும் இவைகளால் தேகத்தில் வீக்கமும், வெடிப்பும் உண்டாகும் என்றும் யூகியில் கூறப்பட்டுள்ளது.

***மேக வெண்படை :***

இது கொறுக்கு நோய் உடலிற் கலந்த நான்கு முதல் ஆறு மாதங்களுக்குப் பின் தோன்றுகிறது. இது வளர்ந்த நிலையில் கொறுக்கு நோய் மீளும்போது உண்டாகிறது. இவ்வித வெண்படை அனேகமாக கழுத்தின் பின், புறப்பகுதிகளில் காணுகிறது. சில வேளை தோல் பொருத்து, முதுகின் மேற்பாகம், உரம், ஆகிய இடங்களில் தோலையும் பரவலாக பாதிக்கிறது.

மேக வெண்படையால் பாதிக்கப்பட்ட பகுதிகள் நிறமிகள் இன்றி வெளுத்த சிறு சிறு படைகளைக் காட்டும். இப்படைகளின் சுற்று வரம்பு மஞ்சள் கலந்த மர நிறமாகவாவது, இளமர நிறமாகவாவது உள்ள நிறமி அதிகரித்த வளையங்களுடன் காணுகிறது. இப்படைகள் வட்டமாகவும் இரண்டு முதல் மூன்று மில்லி மீட்டர் விட்டமும் அதற்கும் மேற்பட்ட அளவுகளிலும் உண்டாகும். இந்நோயில் நிறமியற்ற பகுதிகளிலும், நிறம் மிக்கப் பகுதிகளும் மாறி மாறி நிறைந்து சேர்ந்து காண்பதால் தோல் கண்ணுள்ள சல்லடை போன்று தோற்றமளிக்கும். இந்நோய் பெண்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இது பலமாதங்களாவது பல ஆண்டுகளாவது உடலில் அப்படியே இருக்கும். கொறுக்கு நோய்க்கான மருத்துவம் செய்ய மெதுவாகக் குறையும்.

இவை தவிர உடல் முழுவதும் நிறமிகளற்றுப் போய் வெளுப் பாக காணும். வெளுப்புடல் (Albanism) என்ற ஒரு நிலையும் சிலரில்

காணப்படுகிறது. இவர்களின் உடல் முழுவதும் வெளுத்துக் காண்பதோடு உடலின் மயிர் பழுப்பாகவாவது வெள்ளையாக வாவது இருக்கும். இவ்வகையான வெளுப்புடல் கொண்டவர்கள் இளம் வெயிலைக்கூட தாங்க முடியாதவர்களாய் இருப்பார்கள் பரங்கியரைப் போல தோற்றம் கொண்டவர்களாய் இருப்பர்.

***நோய் முடிவு :***

மயிர் வெளுத்தல், முதன் முதல் உதடு, உள்ளங்கை குதம், குய்யம் இவ்விடங்களில் தோன்றினாலும் சுட்ட புண் போன்ற நிறத்துடன் இருந்தாலும், கோரமாக சீக்கிரத்தில் பரவினாலும் தீரா. மயிர் வெளுக்காமலும், உடலைக்கையால் தடவ மேடுபள்ளம் இல்லாமல் இருந்தாலும், சடைப் பின்னல்போலும், தீயால் சுட்டாறிய வடுப்போலும், வெளுக்காமலும் இருக்கிற வெண்படை தீரும்.

***மருத்துவம் :***

வெண்படையை மறைக்க இக்காலத்தில் தோல் நிறத்திற் கேற்ற மணமுள்ள பசைகளும், சாயங்களும் கிடைக்கின்றன. நமது மருத்துவ முறைப்படி குட்டம் என்ற தோற்பிணிகட்கு சொல்லப் பட்ட மருத்துவங்களை இதற்குச் செய்யலாம். கொறுக்கு நோய் தாரணமாக ஏற்பட்ட வெண்படைக்கு இவற்றோடு கொறுக்கு நோய்க்கான சிகிச்சையும் செய்யவேண்டும். வெண்படைக்கு கார்போகி, கருஞ்சீரகம், நீரடிமுத்து, சேராங்கொட்டை முதலியவை சிறந்த மருந்தாகும்.

1. நாவல் பழச்சாற்றில் செய்யப்பட்ட அயச் செந்தூரம் அளவுப்படி ஒரு மண்டலம் கொடுக்கலாம்.

2. துவரை வேர்க்குழித் தைலம் கொண்டு அரைத்து புடமிட்டு செய்யப்பட்ட் தாமிரச் செந்தூரம் 1/2-1 அரிசி எடை நெய்யில் கொடுக்கலாம். புளி தள்ள வேண்டும்.

3. தூய்மை செய்த கெந்தகம் 1 பங்கு, சிலாசத்து பற்பம் 2 பங்கு துவரை வேர்க்குழித் தைலம் விட்டரைத்து குன்றியளவு மாத்திரை செய்து இருவேளை வீதம் பாலில் கொடுக்கலாம். இச்சாப் பத்தியம்.

4. தங்க பற்ப உருண்டை: தங்கத்தை முள்ளங்கி கீரைச் சாற்றில் மூன்று நாள் ஊற வைத்து எடுத்து, கழுவிப் பொடியாக்கி அதற்கு சிவப்பு சித்திரப் பாலாடைச் சாறுவிட்டு அரைத்து, வில்லைத்தட்டி உலர்த்திக் கடம்பு இலை கற்கத்தை வில்லைக்கு கவசம் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு, ஏழு சீலை செய்து, நூறு எருவில் புடமிட வெளுக்கும்.

எட்டுப்படி சவுரி இலைச்சாற்றை ஒரு பாண்டத்திலூற்றி வெய்யிலில் வைத்து, மெழுகுப் பதத்தில் சுண்டவைத்தெடுத்து அதன் எடை ஆடாதோடை இலைக் கற்கமும், 35 கிராம் புனுகும் கலந்து இவற்றுடன் 9 கிராம் மேற்படி தங்கபற்பம் சேர்த்து நன்றாய் அரைத்து நெல்லிக்காயளவு உருண்டை செய்துலர்த்தி அவைகளை நல்லெண்ணெயில் ஊறவிட்டு, அதில் ஒரு உருண்டை காலை, மாலை ஆறுமாதம் உட்கொண்டு எட்டு நாட்களுக்கொரு முறை மருந்தூறும் எண்ணெயிட்டுத் தலை முழுகி வர வேண்டும். பெண்போகம் நீக்க வேண்டும்.

இதனால் வெண்குட்டம், தடித்த வெண்குட்டம், மேகக் குட்டம், பறங்கிக் குட்டம், ஆகியவை தீரும்.

5. கெந்தக இரசாயனம் : 10 முதல் 15 குன்றி அளவு வீதம் கொடுக்கலாம்.

6. இரசகெந்தி மெழுகு: அள்வுப்படி கொடுக்கலாம்

7. பரங்கிப்பட்டை பதங்கம், இரசாயனம் இவைகளும் வெண்குட்டப்பிணியை நீக்கும்.

8. சேராங்கொட்டை இளகம் அரை வர்ாகனெடை கொடுக்கலாம்.

9. காட்டுச் சீரகம், உலர்ந்த தராஇலை சம எடை எடுத்து சூரணம் செய்து கல்வத்திலிட்டு வெள்ளாட்டுப் பிச்சுவிட்டு நான்கு நாளரைத்து, தேற்றான் கொட்டையளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். நாள் ஒன்றுக்கு இரு வேளை வீதம் மூன்று மாதம் அருந்திவர வெண்குட்டம் நீங்கும், இதை மேலுக்கும் பூசலாம்.

## *வெளி மருந்துகள்*

1. கார்போகி மெழுகு : 100 மி.லிட், தேங்காய் நெய்யில் 15 கிராம் கார்போகி அரிசியை இட்டு நன்கு காய்ச்சி வடிகட்டிய பின் அந்த நெய்யுடன் 5 கிராம் வீதம் கருஞ்சீரகம், காட்டுச் சீரகம் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

20 மி.லிட். வேப்பம் நெய்யில் 10 கிராம் சேராங்கொட்டை யிட்டுக் காய்ச்சி வடித்து முன் செய்த நெய்யுடன் கலந்து இவற்றுடன் 20 மி.லிட். நீரடி முத்து நெய், 60 மி லிட் பன்றி நெய் கலந்து 240 கிராம் தேன் மெழுகை இதனுடன் துண்டுகளாக்கி, கலந்து காய்ச்சி

மெழுகு இளகிக் கலந்ததும் 10 கிராம் கெந்தகப் பொடி தூவிக் கிளறி ஆறவிட்டெடுக்க களிம்பாகும்.

இதை வெண் குட்டப்பிணியில் மேற்பூச்சுக்குப் பயன் படுத்தலாம்.

2. துவரை வேர்க்குழித்தைலத்தையும் மேலுக்கு பூசலாம்.

3. கடைகளில் கிடைக்கும் தனித்த கார்போகி நெய் (Oleum Psorelia Corlifolia-Bhakuchi Oil) யையும் மேற் பூசலாம்.

4. கார்கோல அரிசியை காடிவிட்டரைத்துப் பூசலாம்.

5. மயில் துத்தத்தை கும்மட்டிக் காய்ச் சாற்றில் அரைத்துப் பூசலாம்.

## *சொறி சிரங்கு*

குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், கிழப்பருவம் முதலிய எல்லாப் பருவங்களிலும் முக்கியமாகக் கோடைக் காலத்தில் இது தோன்றும், சிறுபான்மை மற்ற காலங்களிலும் வரக்கூடும். முதலில் அரிப்புண்டாகி, அவ்விடத்தில் வேர்க்குரு போல் ஒன்று அல்லது பல குருக்கள் தோன்றும். அவை சிறிய நீர்க் கொப்புளங்களாக மாறும், சில சமயங்களில் சீக்கொப்புளங்களாகவும் மாறும். இவ்வளவு மாறுபாடுகளும் சில வினாடிகளில் உண்டாகும். அரிப்பு அதிகமிருந்து கொப்புளங்களாக மாறாது கொஞ்சமாகச் சினைநீரை பெற்ற குருக்களாகவே இருப்பின் சொரியென்னும் சீக்கொப்புளங் களாக மாறின் சிரங்கென்றும் வழங்கப்படும். இவ்விரண்டும் ஒரே காலத்தில் காண்பதுமுண்டு.

சாதாரணமாகக் கைகளிலும், சிறப்பாக இருகை விரல்களின் இடுக்குகளிலும், (சந்துகளிலும்) மணிக்கட்டு, அக்குளின் முன்

ஒரங்கள், ஆண்குறி, பிற்றம் முதலிய இடங்களிலுந்தான் அடர்ந்து தோன்றும். அன்றியும் இந்நோயுற்றோர் தம் உடலில் எங்கெங்குச் சொறிகின்றனரோ ஆங்காங்கும் கிளைக்குமாகையால் முதுகு தவிர மற்றவிடங்களினும் இதனைக் காணலாம். ஆனால் முகத்தில் மட்டும் வருவதில்லை. இஃது ஆங்காங்கு ஒன்று ஒன்று, இரண்டாகாவாவது அல்லது நெருங்கியாவது வரும்.

அதிக சூட்டினால் இரத்தங்கெட்டு வருகிறதென ஒரு சாராரும் கிருமியினால் வருகிறதென வேறொரு சாராரும் கூறுகின்றனர்.

*''கிருமியால் வந்த தோடம் பெருகவுண்டு*
*கேட்கிலதன் பிரிவுதனைக் கிரமமாகப்*
*பொருமிவரும் வாயு வெல்லா கிருமியாலே*
*புழுக்கடிப் போல் காணுமது கிருமியாலே*
*செருமி வரும் பவுத்திரங்கள் கிருமியாலே*
*தேகமதில் சொரிக் குட்டம் கிருமியாலே*
*துருமி வருஞ் சுரோணிதங் கிருமியாலே*
*சூட்சமுடன் கிரிசைப்பால் தொழில் செய்வீரே''*

-குருநாடி

எனச் சொரி முதலிய தோலைப்பற்றிய (குட்ட) நோய்களுக்குக் கிருமிகள் காரணமெனப் பழைய நூல்களிலிருந்தே அறியலாம். மற்றும் அகத்தியர் காவியத்திலிருந்தும் ஒரு மேற்கோளை எடுத்துக் காட்டுவாம்.

*''வியாதிகள் மூவாறுக்கும் விளங்கிய குட்டங்கேளாய்*
*சுயாதியா மேகத்தாலும் சூழ்கின்ற கிரந்தியாலும்*
*பயாதியா மாறதாகும் பலவண்டினாலே யெட்டாம்*
*யயாதியாம் புழுவானாலும் ஐயமாம் பதினெட்டாமே''*

திருமூலரும் அங்ஙனமே கூறுகின்றார், ஆயினும அப்பூச்சி களின் விவரங்கள், அந்நோய்கள் எங்ஙனம் அவைகளால் உண்டாகின்றன என்ற தன்மைகள் முதலியவைகளை நாம் இதுகாறும் எந்தப் பழைய நூல்களிலும் கண்டதில்லை. ஆகையால் தற்கால ஆராய்ச்சியினால் உணர்ந்த சில விவரங்களைக் கீழ்க் கூறுவாம்.

ஓர்விதமான நுண்ணிய பெண்பூச்சி தன் முட்டைகளை வைப்பதற்காகத் தோலின் மேற்புரையில் சாய்வாகத் தொளை செய்து உட்செல்லுகின்றது. அச்சமயத்தில் தான் அரிப்புத் தோன்றி நீர் கொப்புள முண்டாகிறது. அதைச் சொரிவதினாலும், மற்றும் வேறு கிருமிகள் அதில் சேர்வதினாலும் அது சீக்கொப்புளமாக மாறுகிறது.

கத்திரிக்காய், பாகல், கம்பு, சோளம், சில வகை மீன்கள், கருவாடுகள் முதலிய பொருள்களை அதிகமாக உண்பதினால் சூடு மிகுதியாய் இரத்தத்தில் மலஞ்சேர்ந்து கெட்டுச் சிரங்கு உண்டாகிறது. ''ஒட்டிய சிரங்கு'' எனத் தமிழ் நூல்களில் வழங்கப் பட்டிருப்பதால் இது பிறரிடமிருந்தும் ஒட்டிவரக் கூடுமென அறியப்படுகிறது, சிரங்கு உள்ளவர்களின் படுக்கையில் படுப்பதினாலும், அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதினாலும், அவர்களுடைய ஆடைகளை அணிவதினாலும், விளையாடு வதினாலும் ஒட்டிக்கொள்ளுமெனினும் தினமும் குளித்துச் சுத்தமான ஆடைகளை அணிபவர்களுக்கு அங்ஙனம் ஒட்டுவது அரிது. ஒருக்கால் வரினும் சீக்கிரத்தில் நீங்கும். குளியாமல் அழுக்காடைகளை அணிபவர்களுக்குவரின் அவ்வளவு சீக்கிரத் தில் நீங்காது. தினந்தோறும் குளித்துச் சுத்தமாக இருப்பதுடன் சிகிச்சை செய்து கொண்டால் எளிதில் தீரும். உஷ்ண தேகிகளுக்கு

இலகுவில் வசப்படும். மேக முள்ளவர்களுக்கு வரின் விரைவில் வசப்படுவதில்லை. சிரங்குகளுக்கு மட்டுமின்றி மேகத்திற்கும் சிகிச்சை செய்ய அது ஒழியும்.

முதலில் தோன்றும்போதே நெருங்கி அடர்ந்து தோன்றுமாயின் 'அடர்சிரங்கு' எனவும், பிறரிடமிருந்து ஒட்டிக் கொண்டு ஆங்காங்கு வருமாயின் 'ஒட்டு சிரங்கு' எனவும், ஆங்காங்குத் தோன்றிப் பிறகு அவைகளைச் சுற்றி பல தோன்றுமாயின் 'கிளைத்த சிரங்கு எனவும் மேக தேகிகளுக்கு வரும் சிரங்கு எளிதில் வசப்படாதாகையால் 'துட்ட சிரங்கு' எனவும் கூறப்பொருந்தும், சிரங்கை இவ்வித, அடைமொழிகளுடன் தமிழ் நூல்களில் வழங்கியிருப்பதைக் காணலாம். மற்றும் 'சிறு சிரங்கு' (பொடி சிரங்கு) பெருஞ் சிரங்கு என வழங்கப்படுவதால் சிரங்கு இரு வகைப்படுமெனவும் கூறலாம். முன்சொன்ன சிரங்குக் கொப்புளங்கள் சிறியதாயும், அவை வெடித்துச் சிறு புண்களாயிருப்பின் சிறு சிரங்கு என்றும், பெரிய கொப்புளங்களும் புண்களுமுண்டானால் 'யானைச் சிரங்கு' அல்லது 'பெருஞ்சிரங்கு' என்றும் அழைக்கப் படும். மேக தேகிகளுக்குச் சொரிவரின் மேகச் சொரி எனப்படும்.

***நீக்கம் :***

தினந்தோறும் குளித்து துப்புரவாய் வைத்துக் கொண்டால் சொரி சிரங்கு வராதென முன் கூறினோம், அவை தோன்றிய போதும் இலுப்பைப் பிண்ணாக்கு அல்லது சிகைக்காய்யிட்டு நன்றாய்த் தேய்த்துக் குளிக்கவேண்டும். வெந்நீர்க் குளியல் நன்றெனக் கருதப்படுகிறது. பிறகு ஈரம் போகும்படித் துடைத்து உற்ற மருந்துகளைப் பூசி வெண்மையான தூய ஆடைகளை யணிய

வேண்டும். சிரங்கை யதிகரிக்கச் செய்யும் உணவுப் பொருள்களான கத்திரி, பாகல் முதலியவற்றை நீக்கி பால், மோர், கீரைகளை அதிகமாகச் சேர்க்கவேண்டும். இங்ஙனம் செய்ய, ஒட்டிய சொரி சிரங்குகள் நீங்கும். வேறு வகைச் சொரி சிரங்குகளுக்கு அக மருந்துகளையும் கொடுத்தால் அன்றி அவை எளிதில் தீராவாம்.

***புற மருந்துகள் :***

பருப்புக் கந்தகத்தை ஒருவராகன் எடுத்து ஒரு ஊமத்தங் காயைக் குடைந்து, அதற்குள் வைத்து குடைந்த தூளால் மூடி, எருமைச் சாணத்தால் கவசித்து உலர்த்தி இரு வரட்டியில் புடமிட்டு எடுத்து, அக்காயின் எடைக்குத் துளசி இலை சேர்த்து அரைத்து இலந்தைக் கொட்டையளவு மாத்திரைகள் செய்து, உலர்த்தி வைத்துக் கொள்ளவும். வேண்டியபோது ஒன்றைப் பொடித்துத் தேங்காய் நெய்யில் குழைத்துப் பூசச் சொரியும், அதைச் சார்ந்த நமையும், சிரங்கும் நீங்குவனவாம்.

காட்டுச் சீரகம், கார்போகியரிசி, கத்தூரி மஞ்சள், ஓமம், கடுக்காய்த்தோல், நீரடிமுத்து இவை வகைக்கு அரை வராகனெடை யும் அவைகளுக்குச் சமன் வெண்மிளகு கூட்டி, நன்றாய்ப் பொடித்து, ஊமத்தங்காய்களைக் குடைந்து அவற்றுள் அடைத்து, குடைந்த தூளால்மூடி மண் சீலை செய்து, ஒன்றரை எருவிற் புடமிட்டு, ஆறவிட்டுச் சீலை நீக்கி, முற்பொடியைக் காய்களுடன் சேர்த்து நன்றாய் அரைத்து, தேங்காய் நெய் சிறுகச் சிறுக விட்டு மேலும் நன்றாயரைத்து, தக்க அளவு தேங்காய் நெய்யிற் கலந்து மூன்று நாள் சூரிய புடம் வைத்துத் தடவச் சிரங்கு நீங்கும். சொரிக்கும் தடவலாம்.

கார்போகிப்பற்றைப் புளித்த தயிரில் அல்லது தேங்காய் நெய்யில் குழைத்துப் பூசி மூன்று மணி நேரங் கழித்துக்குளிக்க வேண்டும் இதனால் சொரி, அடர்சிரங்கு, முதலியன நீங்கும். குளிக்கும் போது கொப்புளம், புண் இவைகளை நன்றாய்த் தேய்க்கவேண்டும்.

பிரமதண்டி விதை, வசம்பு, மஞ்சுள் இவைகளை அரைத்து மேற் பூசச் சொரி நீங்கும்.

பேன் கொட்டையைத் தேங்காய் நெய்யில் இழைத்து மேற் பூசக் கொப்புளங்கள் உடையும். பிறகு கழுவிச் சிரங்குகளுக்கும் மருந்துகளைப் பூசலாம்.

ஆடுதீண்டாப்பாளைக் கற்கத்தைக் தேங்காயளவு எடுத்து வேம்புநெய் ஒரு வீசையிலிட்டுப் பக்குவமாகக் காய்ச்சி மேலுக்குப் பூசி ஊறிய பிறகு குளிக்கவும்.

நீரடிமுத்துப் பருப்பு ஒரு வீசை, கொப்பரைத் தேங்காய் அரை வீசை சேர்த்து இடித்து கொதி தண்ணீரில் போட்டு நன்றாய்க் கொதிக்க வைத்தால் நீர்மேல் வெண்மையான நுரைவரும். அதையெல்லாம் வழித்துக் கடாயில் போட்டுக் காய்ச்சினால் நெய்யாகும். அதை வைத்துக் கொண்டு தடவினால் சொரிசிரங்கு, பெரும்புண், படைப்புண், மேகப்புண், என்னும் இவை நீங்கும்.

கடாயில் காய்ச்சும்போது தாளகம், துருசு, கந்தகம் வகைக்கு கால் பலம் எடுத்துப் பொடித்துச் சேர்த்தும் காய்ச்சலாம்.

கந்தகம் 16- குன்றியை நன்றாய்ப் பொடித்துத் தக்க அளவு தேங்காய் நெய்யில் குழைத்துப்பூசலாம்.

கந்தகத்திற்குப் பதிலாக மிருதார்சிங்கியை மேற்படியே உபயோகிக்கவும், வங்கக்களிம்பு, அமிர்தவெண்ணெய் இவைகளும் நன்று:

***அகமருந்துகள் :***

சொரி சிரங்குள்ளவர்களுக்கு முதலில் பூர நெய், வெள்ளை எண்ணெய் ஒரு அவுன்ஸ் கொடுக்கவேண்டும். துட்ட சிரங்காக இருப்பின் இதனை அல்லது மேகநாத எண்ணெயை மூன்று நாள் கொடுத்து உப்பில்லாத பத்தியம் வைக்க வேண்டும்.

உஷ்ண, தேகிகளாயிருப்பின் சிலாசத்துப் பற்பம் குங்கிலிய பற்பம் வகைக்கு இரு குன்றிகளாகக் கலந்து, பறங்கிப் பொடி ஐந்து குன்றி எடை சேர்த்துப் பாலில் கலந்து காலை மாலை தினத்திற்கு இரு வேளை கொடுக்கவும் தனிப் பறங்கிப் பொடியையும் வழங்கலாம்.

மேக தேகிகளுக்குக் கந்தகரசாயனம் பத்து குன்றி வீதம் பாலில் இருவேள்ள கொடுக்கலாம் அல்லது பறங்கிப் பதங்கத்தை மூன்று குன்றி வீதம் பாலில் தினம் இரு வேளை கொடுக்கவும் சேராங் கொட்டை லேகியம், இரசகந்தி மெழுகும் பயன்படும்.

***பத்தியம் :***

எண்ணெய், கடுகு சிரங்கை அதிகரிக்கச் செய்யும் பொருள்கள் முதலியவைகளை நீக்கி பால், மோர், கீரைகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**நோய் இயல் :**

தோலில் திமிர் குரு புண், தடிப்பு ஆகியகுறி குணங்களை யுடைய படைகளை உண்டாக்கி, அவ்விடங்களில் வீக்கம் கொப்புளங்கள் கண்டு அல்லது செதில் போன்று தோல் சுர சுரப்பாகி தோலின் இயற்கை நிறத்தை வேறுபடுத்தி சிலவேளை வெடிப் புண்டாகி, நீர் கசிதல் ஆகிய குறி குணங்களை காட்டும் தோற் பிணியை கரப்பான் அல்லது கரப்பன் என்று கூறுவர், இதில் தினவும் சொரியும் இருத்தலும் இல்லாதிருத்தலும் உண்டு. யூகி முனிவர் நூலில் தோற்பிணிகளைக் குட்டம் என்ற பிரிவின் கீழ் பகுத்துக் கூறுமிடத்து இந்நோய் கூறப்படாது தனித்துக் கூறப்பட்டுள்ளது. கரப்பான் ஏனைய தோற்பிணிகளினின்றும் குறிகுணங்களாலும் உண்டாகும் வகையாலும் மாறுபடுவதாலேயே இவ்வாறு கூறப்பட்டதெனத் தேறலாம் எனினும் இது தோலைப்பற்றியெழு கின்ற பிணியானமையின் தோற்பிணிகள் என்ற பகுதியில் இதுவும் ஒன்றாக ஈண்டு கூறப்படுகிறது.

**நோய்க்காரணம் :**

கரப்பான் நோயை உண்டாக்கும். காரணங்கள் அறுதியிட்டு கூற முடியாதாயினும், இது உண்டாவதற்கான அடிப்படைக் காரணம் கிருமிகள் அன்று என்று எண்ணப்படுகின்றது. யூகி முனிவர் குட்டத்தினின்று வேறாகக் கரப்பானைக் கூறியமை இதனாற்றான் போலும் ஆனால் கரப்பான் கண்டவிடத்தில் மேற்பரப்பில் கிருமிகள் சஞ்சாரம் காணப்படக் கூடும். சுணையுள்ள சில பொருட்கள் (Poison Ivy) கம்பளி போன்ற தோலில் உராய்

வதாலும் அந்தகரண வேறுபாடுகளாலும் (psycosomatic) இந் நோய் உண்டவதாகக் கூறப்படுகிறது. பொதுவாக குழந்தைகளில் கரப்பான் சில வகை உணவுப் பொருட்களாலேயே வருவதாகத் தெரிகிறது. இப்பண்டங்களை நமது முன்னோர் நன்கு அறிந் திருந்தனர். அவற்றை கரப்பான் பண்டங்கள் என்று அவர்கள் தொகுத்துக் கூறினர். இவ்வகை பொருட்களை உணட காலத்து சிலரின் உடலுக்கு அப்பொருள் ஒவ்வாத் தன்மையுடையதால் கரப்பான் உண்டாகிறது.

*''பெருகுஞ் சோள மிறுங்கும் பெரும்தம்பு*
*வரகு காருடன் வாழையின் காயொடு*
*உரைகொள் பாகற் கெளிற்றுமீன் உண்டிடில்*
*விரிவ தாய்க்கரப் பானுமிகுந்ததே''*

மேனாட்டாரும் சில வகை ஒவ்வாப் பொருட்களால் இந்நோய் பிறப்பதாகவும், அப்பொருட்களை அறிந்து நீக்க நோய் விலகும் என்றும் ஒப்புக்கொள்கின்றனர்.

**(Most Cases of eczema especially in infants are really food allergies; they are reaction of the skin, at a particular time to particular foods. The treatment of such cases is prevention: discovery and avoidence of the particular food, Justus J.Schifferes Ph.D. Family medical encyolopedia)**

**யூகியில் மாமிசம் உண்ணல், கம்பு, தினை, வரகு, சாமை, கிழங்கு வகை முதலியவற்றைக் கொள்ளல், தாழ்வான பண்டங்களைத் தின்னல், பெண் போக விரகம் (இச்சை) மூத்த பெண்ணை மருவல் முதலியனவும் நோய் உற்பத்திக்கு காரணங்களாகக் கூறப்படுகிறது அநேகருக்கு கொய்யா, முட்டை,**

மீன், கருவாடு கத்திரிக்காய், தடியன் காய் போன்றவை, கரப்பான் நோயை வருவிக்கின்றன.

மேற்சொன்ன ஒவ்வாப் பொருட்களால் இந்நோய் உண்டாவதால் இது ஒவ்வாமை நோய், (allergic disease) களுள் ஒன்றாமெனினும் இப் பொருட்கள் எவருக்கும் எக்காலத்தும் ஒவ்வாதவை என்று கொள்ள முடியாது. சிலருக்கு ஒத்துக் கொள்ளுபவை வேறு சிலருக்கு பிடிக்காமல் இருக்கலாம். இங்கு கூறப்படாத வேறு பொருட்களும் கூட சிலருக்கு ஒவ்வாமையுடையனவாக இருக்கலாம். சில பொருட்கள் ஒரு காலத்து ஒவ்வாதனவாயும் வேறுகாலத்து ஒவ்வுவனவாயும் இருக்கலாம்.

***நோய்எண் :***

யூகி முனிவர் கரப்பான் பிணியை ஏழுவகையாகக் கூறுவர். அவை 1. வாதகரப்பான் 2. கண்டக்கரப்பான், 3.வறட்சிக்கரப்பான் 4. திமிர்வாதக் கரப்பான், 5. கபாலக் கரப்பான், 6. பித்த கரப்பான், 7. சேத்தும கரப்பான் என்பன. பதினென் சித்தர் பாலவாகடத் திரட்டில் வாத கரப்பான், பித்த கரப்பான், சேத்தும கரப்பான், அரி கரப்பான், ஊதுகரப்பான், சூலைக் கரப்பான், வெடி கரப்பான், மண்டைக் கரப்பான், பொரி கரப்பான், சட்டைக் கரப்பான், ஓடு கரப்பான், கருங் கரப்பான், செங்கரப்பான், கொள்ளிக்கரப்பான், தோட கரப்பான், வாலைக் கரப்பான், வரன் கரப்பான், வீங்கு கரப்பான், என்று பதினெண் வகை கூறப்பட்டுள்ளது. இவை பதினெட்டும் பாலர்கட்கு வருவன. இப்பகுப்பின் படி, பதினெண் வகையும் பாலவாகடத்திரட்டில் கற்பிக்கப்படும். ஆதலின் இப்பகுதியில் யூகி முனிவரின் நூற்படி ஏழுவித கரப்பான் பிணிகள் மட்டுமே கூறப்படும். இவை ஏழும் பொதுவான கரப்பான் பிணிகளாகும்.

**பொதுக்குறிகுணம் :**

உடலின் தோலில் நமைச்சல் ஏற்பட்டு சொரியும், பின் சொரிந்த இடத்தில் சிறிது அகலத்துக்கு தடிப்பு ஏற்பட்டு வேர்க்குரு போல உண்டாகி மீண்டும் தினவெடுக்கும் பின் கொப்புளங்கள் வெடித்து புண்ணாகி எரிச்சல், நீர்க்கசிவு ஏற்படும்.

தடிப்பு நாளுக்கு நாள் தளர்ந்து கொண்டே வரும். அதில் கசியும் நீர் பட்டவிடமெல்லாம் இது போன்றே சொரியுண்டாகி தடிப்பும் உண்டாகும். முற்றிய நிலையில் தவளையின் தோல் போல் காணப்படும். தோலின் நிறமும் மாற்றமடையும்.

சிலவகை கரப்பானில் நீர் வடியாமல் வறட்சியாக இருக்கும்; சிலவற்றில் ஊனீரன்றி குருதியும் கசியலாம். கசிந்த ஊனீர் உறைந்து பக்குகட்டுதலும், புலால் நாற்றம் வீசுதலும் உண்டு.

## நோய் வகை

**1. வாதக் கரப்பான் :**

''கொள்ளவே உடம்பெல்லாம்...'' யூகி 76. உடம்பு வெதும்பி நொந்து குடைந்து நீர் சுரந்து வீக்கமுண்டாகும், உடம்பு புண்போல் நொந்து வெடித்து புண்ணாகும்; விரல்களும் சந்துகளும் முடங்கி, நாளங்கள் புடைத்து, முழிகள் பக்கம் உலர்ந்து மேனி வரண்டு காணும்.

**2. கண்டக் கரப்பான் :**

''தளிராகச் சிரமெங்கும்...768'' தளிர்போல் தலை, காது, மண்டை இவை தடித்து நோகும்; நளிருண்டாகி, நாவுதடித்து, உடம்பில் சொரியுண்டாகும்; உடல் குளிர்ந்து மயிர் கூச்சாகும்; கண் கூசும், கண்டத்தில் முள்போன்று கரகரக்கும்.

### 3. வறட்சிக் கரப்பான் :

''கண்டமாய் முகவீங்கும்....'' 769. உடம்பெங்கும் வீங்கி, குத்தலுண்டாய் ஊரல், நமை உண்டாகும். மயக்கம், சோர்வு, உடம்பு வற்றல், பிதற்றல் கசிவு உண்டாய் புலால் நாற்றம் வீசல் ஆகிய குறி குணங்கள் காணும்.

### 4. திமிர்வாதக் கரப்பான் :

''வண்மையாய் உட்கார்ந்து....770. உட்கார்ந்து எழும்பும்போது வருத்தமுண்டாய் கால், கைகள், இடுப்பு, சந்து இவை திமிர்த்து கரடு கட்டும். உடம்பு செயலழிந்து வீங்கி வெடித்துப் புண்ணாகும், உடல் முழுதும் ஊதும்,, நீர்விடாய் அதிகமிருக்கும்; உடல் சூடு, உலைச்சல், உதறல் உண்டாகும்.

''பேராகத்ததனெழுத்து...171. எழுந்து நடக்கும் போது கால் சந்து திமிர்த்து வீங்கி, உடம்பு வெடித்துப் புண்ணாகும், உடலெங்கும் வெதும்பி பொருமலாகும்; உடம்பு திரையும் திமிரு முண்டாகும்.

### 5. கபாலக் கரப்பான் :

காணவே காதெல்லாம்...772. காது தினவுண்டாகி, கண் அருகில் தினவு கண்டம் கரகரத்தல், கண்ணில் பீளையும், கண்ணீரும் பாய்தல், மூக்கில் நீர் பாய்தல், சிரசில் சொரிதல், அதிக தும்மல், நெற்றி துடித்தல், அணணாக்கில் அழல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

### 6. பித்தக் கரப்பான் :

தானாகக் கண் தூங்கி...773. கண் தானாக தூங்குவது போல் காணல், நடுவயிறு தளர்தல், உட்சுரந்து வெதுப்புண்டாதல், கிறுகிறுப்பு, உடல் சோர்வு, உடல் மஞ்சளித்தல், உணவு

செல்லாமை, பசிக்குறைவு, உடலில் பேன் ஊருதல் போல காணப்படுதல் ஆகியவை காணும்.

### 7. சேத்துமக்கரப்பான் :

பெற்றியாய்ச்சரீரமது.....774 உடல் வெளுப்பு, குரல் கம்மல், மெதுவாகப் பேசுதல், மிகுதியாக பேசினால் மூச்சுண்டாதல், ஈளை, இருமல், இரைப்பு, ஆகிய குறிகுணம் காணும். பிறருடைய உதவியை எல்லாக் காரியங்களிலும் எதிர்பார்க்கும்.

### பிற நோய்களில் துணை நோயாக கரப்பான் காணல்:

கரப்பான் தனியாகவன்றி பித்த நோயிலும் பிரமேக நோயிலும் துணை நோயாக வருவதுண்டு.

### கரப்பான் பித்த ரோகத்தில் :

உடல் முழுதும் சொரி, கட்டிகள், திமிர், காந்தல், நிறக் குறைவு, குழம்பு போன்ற பேதி, வயிறு இரைச்சல், பொருமல், இசிவு, கால்கள் விலவிலப்பு, இடுப்பு நோவு, என்னும் குறி குணங்கள் காணப்படும்.

### கரப்பான் பிரமேக ரோகத்தில் :

வயிறு உளைச்சல், சீதம் விழல், நீர்வெப்பமுடன் கடுத் திறங்கல், நீர்ப்புழாய் புண்ணாகி சுண்ணம் கரைத்த நீர்போல சிறுநீர் குத்தலுடன் இறங்கல், அழலையாய் வாட்டத்துடன் கைகால் ஓய்தல், உடம்பெல்லாம் நெருங்கிய பெருஞ்சொரி ஆகிய குறி குணங்கள் காணப்படும்.

இவை இரண்டும் அந்தந்த நோயின் கீழ் விரிவாகக் கூறப்படும்.

***தீரும் தீராதவை :***

வாதக்கரப்பான், பித்தக்கரப்பான், வறட்சிக் கரப்பான், கபாலக்கரப்பான், நாலும் தீரும். மீதி தீருவது கடினம்.

***நாடி நிதானம் :***

*''தானமுள்ள சேத்துமந்தானிளகில்.........*
*.........கரப்பான் விரணதோடம்''*

சதகம் 53,

*சிறப்பான வாதத்தில் உட்ணந்தானே*
*சேர்ந்திடுகில்................*
*.......மதகரி நீர் கரப்பான்.....*

*சதகம் 56*

***மருத்துவம் [பொது] பத்தியம் :***

கரப்பான் பிணி கண்டவருக்கு நல்ல ஓய்வும் தூக்கமும், உடற்பயிற்சியும் காற்று வசதியும் வேண்டும். இந்நோயினருக்கு மரக்கறி உணவு, பாலும் பாற்பொருட்களும், ஆகிய சத்துள்ள உணவுகள், வெந்த மாமிசம் ஆகியவை கொடுக்கலாம். மசாலை (சம்பாரப்) பொருட்கள், மணப்பொருட்கள், காரப்பொருட்கள் கரப்பான் பண்டங்கள், போதைப் பொருட்கள் ஆகியவை நீக்க வேண்டும். குழந்தைகளுக்கு உணவைக் குறைத்து கொடுக்க வேண்டும். குடற்கிருமி போன்ற வேறு நோய்களில் கரப்பான் கண்டு இருந்தால் அவைகளை நீக்க கரப்பான் விரைவில் குணமாகும். மலக்கட்டு இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கொப்புளங்கள் இருக்கும் காலத்து கழுவு நீர்கள் பயன்படுத்தலாம்.

தாபிதம் இருக்கும் போது நெய்ப்புப் பொருட்களைப் பயன் படுத்தலாம். புண்களாக இருந்தால் களிம்பு, பசை இவைகளைப் பயன்படுத்தல் நல்லது. தோலின் தன்மைக்கு தக்கபடி காரவேறுபாடு உள்ள மருந்துகளை வெளியில் தடவவேண்டும் பக்குகட்டியிருந்தால் நெய்ப்பு பொருட்கள் உள்ள மருந்துகளைப் பயன்படுத்தவேண்டும் வெதுவெதுப்பான நீரில் குளிக்கவேண்டும்.

சிகைக்காய் தூள், சவுக்காரம் பயன்படுத்தக் கூடாது பாசிப் பயிறு, நலுங்குப்பொடி தேய்த்து குளிக்கலாம். தொழிலாளர்கட்கு வருகின்ற கரப்பானை நீக்க அவருக்கு எப்பொருளின் தொடர்பால் அந்நோய் உண்டானதோ அப்பொருட்களின் சம்பந்தமில்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். அல்லது தொழிலை மாற்றிக்கொள்ள வேண்டும். சாயத்தொழில் முலாம்பூசும் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களுக்குஇந்நோய் வருவதுண்டு. மருத்துவ செவிலியர் கள், மருத்துவர் ஆகியவர்கள் (Streptomycin) போன்ற மருந்து களைக் கையாளுவதால் அவர்களுக்கும் இந்நோய் காண்பதுண்டு.

***மருத்துவம் : அகமருந்துகள் :***

1. கருங்கோழிச் சூரணம் 15.நெ. எ. வீதம் அரை மண்டலம், புளி, கரப்பான் பண்டம் நீக்கி உண்ணலாம்.

2. கருங்குங்கிலிய சூரணம் முன்போலவே அருந்தலாம்.

3. மலம்கட்டியிருந்தால் : விளெக்கெண்ணெய் 250 மி.லிட். ஈருள்ளி 125 கிராம், காட்டு மொச்சைக் கிழங்கு (நாகமொச்சை) 3 பலம் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி, ஈருள்ளி மொருமொருப்பான பதத்தில் பரங்கிப்பட்டை, 35 கிராம் பொடித்துத் தூவி பதத்தில் இறக்கி வடித்து 5 மி.லிட். வீதம் காலை மாலை கொள்ள

பேதியாகும். அதன் கடுகை கழற்சிக்காய் அளவு உள்ளுக்கு கொடுக்கலாம். கைப்பு, புளிப்பு நீக்க வேண்டும்.

4. அமுக்கரா வேர் 140 கிராம், திப்பிலி, ஓமம், திப்பிலி மூலம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லி வற்றல், பரங்கிப்பட்டை, நீரடிமுத்து வகைக்கு 35 கிராம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, வகைக்கு 13 கிராம் இடித்து சூரணித்து 1 கிராம் வீதம் தேனில் கொடுக்கலாம்.

5. மேற்றோல் சீவிய கொல்லன் கோவை 70 கிராம், அப்பைக் கிழங்கு 18 கிராம், இவைகளை அரைத்து 250 மி லிட் (Ageratum Copyzoides) விளக்கெண்ணெயில் போட்டு எள் நெய் 125மி.லிட். சேர்த்து மிருதார்சிங்கி 7 கிராம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி கரபாகத்தில் கருப்புக்கட்டி 70 கிராம் தட்டிப் போட்டு இறக்கி வைத்துக் கொண்டு கடுகில் 18 கிராமும் எண்ணெயில் 5 மி.லிட்டருமாய் 12 வேளை சாப்பிட்டு ஏழாம் நாள் மேற்படி எண்ணெய் தேய்த்து குளித்து புளி கூட்டவும்.

6. பச்சைக் கொடிவேலி வேர்ப்பட்டை 280 கிராம் தோல் நீக்கிய வெள்ளைப்பூண்டு 280 கிராம். அரைத்து 500 மி.லிட் நல்லெண்ணெயில் கலந்து 500 மி.லிட் பொடுதலைச் சாறு விட்டுக் காய்ச்சி வெள்ளைப் பூண்டு பொன் நிறமாய் வருகிற சமயத்தில் இறக்கி நாளொன்றுக்கு ஒரு கரண்டி எண்ணெயும், ஒரு கரண்டி கடுகும் சாப்பிட்டு உப்பு, புளி தள்ளி பத்தியம் வைக்கத் தீரும்.

7. கொடிவேலி, மாவிலங்கு தலைச்சுருளி என்ற ஈசுரமூலி, இவைகளின் இலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 250 மி.லிட் மேற்படி வேர்ப்பட்டைகள் மூன்றும் வகைக்கு 18 கிராம், மிளகு, வெள்ளைப்பூண்டு, கடுக்காய், கடகரோகினி, கத்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வகைக்கு 14 கிராம் அரைத்துப் போட்டு கலந்து காய்ச்சி வடித்து 3 நாள் சாப்பிட்டு 6 நாள் வரை உப்பு, புளி தள்ளி

பத்தியமாய் இருந்து ஏழாம் நாள் தலைக்கு தண்ணீர் வார்க்க வாதக்கரப்பான், அரையாப்பு, கண்டமாலை நீங்கும்.

8. பொடுதலை சமூலம், பூவரசம் பட்டை வகைக்கு 9 கிராம் வீதம் மைபோலரைத்து, 65 மி.லிட். காடி நீரில் கரைத்து மூன்று நாள் காலை சாப்பிட்டு உப்பில்லா பத்தியம் வைத்து நீர்கஞ்சி கொடுக்கவும். மறு பத்தியம் மூன்று நாள் வைத்து எட்டாம் நாள் தலைக்கு தண்ணீர் விட்டு உப்பு வறுத்து கூட்ட கரப்பான், அரையாப்பு, பரங்கிப்புண், கிரந்தி தீரும், ஒரு வாரம் வரை கரப்பான் பண்டம் நீக்கவும்.

இவை தவிர பரங்கிப்பட்டைச் சூரணம், பரங்கிப்பட்டை பதங்கம், சங்கு பற்பம், பவள பற்பம், குக்கில் பற்பம் சிலாசத்துப் பற்பம், போன்றவைகளை அளவுப்படி நோய்க்குத்தக்கவாறு கொடுக்கலாம். புறமருந்துகள் இலிங்கம், மிருதார்சிங்கி இரசகர்ப்பூரம், வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய், மாசிக்காய், காய்ச்சுக்கட்டி, தான்றிக்காய் இவைகளை சமஎடை எடுத்துப் பொடித்து ஆவின் வெண்ணெயில் அரைத்து தண்ணீரில் ஒரு நாள் மிதக்கப் போட்டு மறுநாள் எடுத்து புண்களில் போட மாறும்.

கரப்பான் தைலம் அருகன் - தேங்காய் நெய் - தைலம், குங்கிலிய வெண்ணெய் இவைகளை மேலுக்குப் போடலாம்.

புண்களாக இருந்தால் புங்கன் எண்ணெய், வங்கக் களிம்பு முதலியவைகளைப் பயன்படுத்தலாம்.

### *சிவப்பு எண்ணெய்*

புங்க வேர் 4 கிலோ, தேங்காய் நெய் 1 கிலோ, மஞ்சிட்டி 62 கிராம். நன்னாரி 62 கிராம், தேன்மெழுகு 62 கிராம், வெள்ளைக்

குங்கிலியம் 52 கிராம், சுருள்பட்டை 3 கிராம், செவ்வல்லிக்கொடி 10 கிராம், புங்கன் வேர் மேல் பட்டையைச் சீவி பால் எடுத்து அதில் தேங்காய் எண்ணெய் கலந்து அடுப்பேற்றி அதில் மஞ்சிட்டி, நன்னாரி இவ்விரண்டையும் இடித்து பாதி சரக்கை கியாழமிட்டு மீதியைச் சூரணித்துக் கற்கமாக்கி சேர்க்கவேண்டும் கொதித்து பாகம் வரும் சமயத்தில் சுருள்பட்டை செவ்வல்லிக் கொடி இரண்டையும் இடித்து சூரணித்து வடிகட்டும் தறுவாயில் கலந்து வடிகட்டும் பொழுது மெழுகு குங்கிலியம் இவ்விரண்டையும் ஒரு பாத்திரத்திலிட்டு அதில் மேற்கண்ட தைலத்தை வடிகட்ட வேண்டும். இதையும் மேலுக்குப் போடலாம்

## தோல் புற்று

உடலின் அகவுறுப்புகளில் அல்லது புற உறுப்புகளில் திசுக்கள் மிக வேகமாக புற்று போல வளர்ந்து அதில் வலியும் குருதி வடிதலுமாகிய குறிகுணங்களைக் காட்டி கொல்லக் கூடிய நோய். இது அகப்புற்று, புறப்புற்று என்று இரு வகையாகும். அகப்புற்று அகவுறுப்புகளைப் பற்றி நிற்பது; வெளியில் தெரியாது. புறப்புற்று வெளிப்படையாகத் தெரிவது. இவை ஆண், பெண் இருபாலரை யும் பொதுவாக முப்பத்தைந்து வயதுக்குமேல் பீடிக்கக்கூடியது. அகப்புற்று பெரும்பான்மையாக, புப்புசம், மூளை, நரம்பு, கணையம், புரஸ்த்த கோளம், குதம் இவற்றில் காணுகின்றன.

புறப்புற்றுகளே தோலைப் பாதிக்கின்றன. அவை அரிக்கும் தன்மையுள்ள கட்டி போல உண்டாகி புண் போலத் தோன்றும். சில உட்புறத் தோலின் இழையங்களை மெல்ல மெல்ல அரித்து தின்று விடும். வேறு சில மலர் போலத் தோற்றமளிக்கும்.

முகத்திலும் கண்களிலும் தோன்றும் புறப்புற்றுகள் புண் கட்டிகள் போன்றும், உதட்டிலும், நாக்கிலும் இன உறுப்புகளிலும் உண்டாகின்றன. உட்புறத்தோல் இழையங்களை தின்னக் கூடிய தாகவும் பித்துப்பை, மலக்குடல் ஆசனம், கருப்பை, இவைகளில் ஏற்படும் புற்று மலர் போன்ற தோற்றமுடையதாயும் இருக்கின்றன.

புற்று முதலில் வலியில்லாத சிறுகட்டி போன்றோ அல்லது தசைத்தடிப்பாகவோ ஆரம்பித்து சில திங்கள் வரை அப்படியே இருந்து நாட்செல்ல செல்ல பெரியதாகி புண்ணாகி துவளும்.

புற்றுநோய் ஆரம்பித்தவுடன் நமக்குத் தெரிவதில்லை அது முழுவளர்ச்சி அடைந்த பின்னரே உடலின் மேற்புறத்தில் அறிகுறிகள் தோன்றுகின்றன. இவை படிப்படியாக வளர்ந்து வலியுண்டாகி தீவிரமடையும்.

வெற்றிலை, பாக்கு, புகையிலை அடக்கிக் கொள்வதால், வாயில் நா, உதடு, கன்னம், இவற்றில் புற்று பல வேளைகளில் வளர்ந்து நாக்கை தொளை செய்வதும் உண்டு.

நோயை ஆரம்ப நிலையில் கணித்தறிவது கடினம், நோயை அருதியிட்டவுடன் அதை முற்றாமல் இருக்கச் செய்ய மருத்துவம் செய்ய வேண்டும். புற்றுநோயைத் தீர்ப்பது மிகக் கடினம்.

சேங்கோட்டை நெய், சேங்கோட்டை இளகம், நந்திமை, இரசகெந்தி மெழுகு இரசபற்பம் வங்கபற்பம் போன்ற பெரு மருந்துகைள உள்ளுக்குக் கொடுக்கலாம்.

அரசு, ஒதி, வேல், நெல்லி, செம்புரா, இவைகளின் வேர்ப்பட்டை, 3-பலம், புங்கம்வேர் 2-பலம் இவற்றை இடித்து சாறெடுத்து துளசிச்சாறு 1/2 படி கூட்டி களிப்பாக்கு, காய்ச்சுக்கட்டி வகைக்கு ஒருபலம், தூளாக்கிப் போட்டு 1/2 வீசை பன்றி நெய்

கலந்து மூன்று நாள் சூரிய வெய்யிலில் வைத்து நான்காம் நாள் எரித்து தைலம் வடித்துக் கொண்டு இதை பஞ்சில் தோய்த்து மேலுக்குப் போட்டு வர புற்றினால் தோலில் உண்டாகும் புண்கள் தீவிரமாகாமல் விரைவில் குணப்படும்.

## படுக்கைப் புண்

நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருப்பவர் கட்கு தோலில் கட்டிகள் அழுத்துவதால் படுக்கைப்புண்கள் உண்டாகின்றன. சுகாதாரக் குறைவும் கவனக் குறைவால் இது அதிகமாகித் தொல்லை கொடுக்கும். நோயாளியை சுத்தமான படுக்கையில் வைத்திருந்து படுக்கை நிலைகளை மாற்றிக் கொண்டிருந்தால் இது வராது. நோய் காணுமுன் அழுத்தும் இடங்களில் சாராயத்தைப் பூசினால் தோல் கடினமாகி படுக்கைப்புண் வராமல் தடுக்கும்.

நோய் கண்டால் குக்கில் வெண்ணெய், புங்கு நெய், சிவப்பு எண்ணெய், குக்கில் தைலம், அறுகன் தைலம், போன்ற மருந்து களை நோய்க்குத் தக்கவாறு கொடுக்கலாம்.

## சேற்றுப் புண்

தண்ணீரில் அதிகம் பழகுதல் ஈரத்தரை சகதி முதலிய அழுக்கான இடங்களில் நடமாடுதல் இவற்றால் அவற்றிலுள்ள கிருமிகள் தோலிற் புகுந்து சேற்றுப்புண்ணை விளைவிக்கின்றன. பெரும்பாலும் பெண்களுக்கு அதிகமாக காணப்படுகிறது. கால் விரல்கள் மிக நெருக்கமாக இருப்பவர்களுக்கு இது அடிக்கடி உண்டாகி தீர்வது கடினமாய் இருக்கும்.

விரலிடுக்குகளில் வெளுத்த நிறமுடைய புண் ஏற்பட்டு, அரிப்பு தினவு அதிகம் இருக்கும். சொரியச் செய்யும்; சொரிந்து முடிந்த பின் காந்தலும் எரிச்சலும் பொறுக்க முடியாத அளவு காணும். புண் வளர்ந்து சதையை அரித்துத் தின்று விடலாம். சில வேளைகளில் மிக ஆழமான புண்ணாக ஏற்படுத்துவதும் உண்டு சிலருக்கு விரல் இடுக்குகளிலும் நகத்திற்குப் பக்கத்திலும் உண்டாகிறது. நகம் சொத்தைப் பிடித்து விளிம்பில் சீழ் கோர்த்துக் காணும்.

பரங்கிச் சக்கையாலான மருந்துகள், சங்கு பற்பம் போன்ற மருந்துகளை உள்ளுக்குக் கொடுக்கலாம்.

மேற்பூச்சாக இலுப்பை நெய், குக்கில் வெண்ணெய், மிருதார் சிங்கி களிம்பு, அருகன் தேங்காய் நெய் இவைகளில் ஒன்றைப் போடலாம். மேலும் மஞ்சள், கடுக்காய் இவற்றை தனியாகவாவது சேர்த்தாவது அரைத்து இரவில் பூசி காலையில் கழுவி விடலாம்.

மருதோன்றி இலையையும் அரைத்துப் பூசலாம். காய்ச்சுக் கட்டியை நீரில் ஊற வைத்து கரைத்துப் பூசலாம்.

நகத்தில் காணும் புண்ணுக்கு இலுப்பை விதையை கரி சாலைச்சாறு, துளசிச்சாறு இவைகள் விட்டு அரைத்துப் பூசலாம்.

## தீப்புண்

இது இருவகைப்படும். 1. சுட்டப்புண்:....உலர் நெருப்பு அதாவது தீ, பழுக்கக் காய்ச்சிய உலோகம், எரியும் கட்டை, முதலியன படுவதால் உண்டாவது. 2. வெந்த புண் வெந்நீர், காய்ந்த எண்ணை போன்ற சூடான நீர்த்துவப் பொருட்கள் படுவதால்

உண்டாவது. திராவகங்கள் போன்ற காரப்பொருட்கள் தோலில் படுவதாலும் புண் ஏற்படும்.

தீப்புண் முதலில் கொப்புளமாக எழும்பிப் பின் அதிலுள்ள நீர் உடைந்து கசிந்து மிகுந்த எரிச்சலையும் காந்தலையும் கொடுக்கும். சில வேளை அதிக தீயினால் தோலன்றி சதை மற்றும் என்பு வரை தாக்கப்படுவதுண்டு. தோல் வழண்டு புண்ணாகும். புண் ஆறியதும் அவ்விடம் வெள்ளை வெளேரென்று இருக்கும்.

அறுகன் தேங்காய் நெய், குக்கில் வெண்ணெய், ஆகியவைகள் தீப்புண்ணை குணமாக்கும்.

சுண்ணாம்புத் தெளிநீரை தேங்காய் நெய் கலந்து தீப்புண் மீது தடவலாம். தீப்பட்டவுடன் தேனை தடவ கொப்புளம் எழும்பாது, இதை அழுத்தி தேய்க்கக் கூடாது.

சோற்றுக் கற்றாழை மடலைப் பிளந்து சோறுள்ள பாகம் தீப்புண்ணின் மேல் படும்படி வைத்திருக்கலாம். இதுவும் கொப்புளம் எழும்பாமல் தடுக்கும்.

புண்ணானால் புண்ணாற்றி மருந்துகளை நோய்க்குத் தக்கபடி வழங்கலாம்.

ஆறிய புண்ணின் நிறம் மாற வேப்பம்பட்டை கியாழத்தை நன்றாகக் கலக்கி அதில் வரும் நுரையை எடுத்து ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு தடவை போடலாம்.

## *பித்த வெடிப்பு*

அநேகமாக பாதங்களின் அடிப்பாகத்தில் தோலில் வெடிப்பு காணும், முக்கியமாக குதிகாலில்தான் உண்டாகுமெனினும், பாதமுழுதும் வெடிப்பதுண்டு. ஒரு சிலரிடம் உள்ளங்கையிலும்

இவ்வெடிப்பு ஏற்படுவதுண்டு பித்த வெடிப்புப் பகுதிகள் அனேகமாகக் கடினமான தோற் பகுதிகளேயாகும். பனிக்காலத்தில் இந்நோய் மிகுதிப்படும்.

பனியினால் சில வேளை, உதடு,மூக்குநுனி, கன்னப் பொட்டு, இவைகளிலும் உடலின் வேறு பகுதிகளிலும் வெடிப் புண்டாவதுண்டு. காலில் பித்த வெடிப்புண்டாவதுண்டு. காலில் பித்த வெடிப்பு கண்டிருந்தால் காலைக் கீழே ஊன்ற முடியாதபடி வலி, விண் விண்ணென்று தெரிக்கும் நோவு, சில வேளைக் குருதிக் கசிதல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

பறங்கிச் சக்கையாலான சூரணம், கியாழம், ரசாயனம் பதங்கம், இவைகளில் ஒன்றாவது பவளபற்பம், சிப்பிபற்பம் போன்றவைகளாவது நோய்க்குத் தக்கவாறு கொடுக்கலாம் உணவில் எண்ணெய், நெய் போன்ற நெய்ப்புப் பொருட்களை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## கால் ஆணி

அநேகமாக காலணியில்லாமல் நடப்பவர்களுக்கு உள்ளங்காலில் அதிக உராய்தலும் தேய்வும் ஏற்பட்டு கரடுகட்டி கட்டிபோல் உண்டாகி காலைக் கீழே ஊன்றமுடியாதபடி வேதனை கொடுக்கும். முள் தைப்பதாலும், பருக்கை கல் குத்துவதாலும், செருப்பின் ஆணிகள் உறுத்தி வருத்துவதாலும், கால் ஆணிகள் ஏற்படக்கூடும். இதனுள்ளே மரத்தின் ஆணிவேர் அல்லது ஆணி போன்ற ஒரு முனை இருக்கும் கரடு கட்டிய இடங்களை கத்தியால் சீவி விட்டாலும் மறுபடியும் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

கால் ஆணியை அறுவை செய்து ஆணியை நீக்கிவிட்டு அதில் உண்டான குழியை புண்ணாற்றி மருந்துகளால் ஆறச் செய்யலாம். இரசகந்தி மெழுகு போன்ற மருந்துகளை வழங்கலாம். சித்திரப் பாலாடை, பாலை, 2 அல்லது 3 நாட்கள் தடவி வர காலாணி மிருதுவாகி ஆணிவிழும். பின் இதற்கு கண்டங்கத்திரி பழத்தை உலர்த்தி எரித்து புகை பிடிக்கலாம். கார மருந்துகளையும் பயன்படுத்தலாம்.

## நகச்சுற்று

இதை நகச்சுற்று, விரல்சுற்று, உகிர்சுற்று என்றும் சொல்லு வார்கள். விரல் நுனியில் வீக்கம், எரிச்சல், எரிப்புடன் கூடிய வலி கண்டு, புண்ணாகி எளிதில் ஆருமல் நகக் கண்ணில் விண், விண் என்ற தெரிப்புடன் மிக்க வலியை கொடுக்கும் நோய். விரல் நுனியில் நரம்பு முடிச்சுகள் நுண்ணியதாக நிறைந்திருப்பதால் வலி பொறுக்க முடியாத அளவு இருக்கும்.

நகக் கண்ணிலுள்ள அழுக்கை எடுக்கையில் குத்துப்பட்டு புண்ணாதல், நகம் கத்தரிக்கும் போது சதை வெட்டுப் படல், சிராய் தைத்தல், ஆகியவற்றால் ஏற்படும் ஊறு நச்சடைந்து சீழ் கொண்டு வீங்கி இந்நோயைப் பிறப்பிக்கும். நகத்தின் அடியில் புண் வளர்ந்து சிலசமயம் ஆறாதபடி செய்யும், இந்நோயில் கை தொங்க விட்டிருந்தால் வலி அதிகமாயிருப்பதால் இந்நோய் கண்டவர்கள் நோயுற்ற கையைத் தூக்கியபடி வைத்திருப்பார்கள் நகச்சுற்று கண்ட இடம் வெப்பமுடையதாய் இருக்கும்.

அதிக சீழ் கொண்ட கட்டியானால் வெள்ளை மெழுகு அல்லது அமிர்த வெண்ணெய் போட்டு உடையச் செய்யலாம்.

அல்லது கீறி சீழை வெளியேற்றி புண்ணையாற்ற பச்சை எண்ணெய், புங்கு நெய் முதலியன போடலாம் புண்ணிலிருந்து தனியாக இருக்கும் நகத்தை முடிந்த அளவு வெட்டி நீக்கிவிட்டு மருந்து போட வேண்டும்.

விரல் சுற்று தொடக்க நிலையில் இருந்தால் பாலேட்டை துணியில் கனக்கப் பூசி சுற்றி வைக்கலாம். இப்பாலேட்டுடன் விளக்கெண்ணெய் அல்லது கற்சுண்ணாம்புத் தெளிநீர் கூட்டிக் குழைத்தும் பூசலாம்.

சிவப்புக்குக்கில் நெய்யைத் தாராளமாகப் பூசி வைத்திருக்க லாம். அல்லது இது தோய்த்த பஞ்சால் விரலைச்சுற்றி வைக்கலாம்.

எலுமிச்சம்பழத்தில் விரல் நுழையத் தக்க துவாரம் செய்து அதனுள் விரலை நுழைத்து வைக்கலாம்

புண்ணாக இருந்தால் குக்கில் வெண்ணெய் போன்ற மருந்துகள் போடலாம்.

வெற்றிலையுடன் கற்சுண்ணாம்பு சேர்த்தரைத்து சீழ்கோர்த்த நகச்சுற்றுக்குப் பூசலாம் .

இப்பரிகாரங்களால் குணமாகாமல் விரல் நுனியில் புண்ணானாஞல் புண்ணாற்றி மருந்துகளைப் போட வேண்டும்.

## *அக்கரம் [வாய்ப்புண்]*

வாயில் காணும் புண்கள் பலவகைப்படும். அவற்றுள் நாக்கிலும், உதட்டிலும் ஏற்படும் புண்கள், வெடிப்புகள், ஆகியவை காரமான பொருட்கள் உண்ண முடியாதபடி எரிச்சலையும்,

நோவையும் கொடுக்கும். பொதுவாக இவைகள் செரிமன உறுப்பு களின் (அமர்வாசயம், பகிர்வாசயம், மலவாசயம்) கோளாறு களினால் உண்டாகின்றன. சுண்ணாம்பு முதலியவற்றின் காரத் தாலும், இரசம் போன்ற மருந்துகளின் வேக்காட்டாலும் வாய்ப்புண் ஏற்படுவதுண்டு பெண்களுக்கு சூல் காலத்தில் ஒரு வகை வாய்ப்புண் உண்டாகி பேற்றுக்குப் பின் தானாகவே மறைந்து விடுகிறது.

தேங்காய், மணத்தக்காளி இலை இவைகளை மென்று தின்ன அல்லது மணத்தக்காளி இலையைச் சமைத்துண்ண வாய்ப்புண் குணமாகும் அழலாற்றி மருந்துகளையும் குக்கில் பற்பம், சிலாசத்து பற்பம் போன்றவைகளையும் வெண்ணெய் முதலியவைகளையும் வழங்கலாம்.

வெங்காரம், படிகாரம், காய்ச்சுக்கட்டி, மாசிக்காய் போன்ற துவர்ப்பிகளைப் பொடித்து தேனில் குழைத்துத் தடவலாம். தேனை நீரில் கலந்தாவது, தேங்காய்ப் பாலால் ஆவது, மணத்தக்காளி திரிபலைக் கியாழத்தாலாவது வாய் கொப்பளிக்கலாம்

குக்கில் வெண்ணெய் தடவி வர வாய்ப்புண் ஆறும்

வெற்றிலை போடுபவர்களுக்கு சுண்ண வேக்காட்டால் உண்டான வாய்ப்புண்ணிற்குக் காய்ச்சுக்கட்டியைச் சேர்த்து மெல்லச் செய்யலாம்.

இரசம் முதலிய மருந்துகளின் வேக்காட்டால் ஏற்பட்ட வாய்ப்புண்களுக்கு கருவேல் கொப்பளிக்கியாழத்தால் வாய் கொப்பளிக்கச் செய்யலாம் இதோடு மருந்துக்கு ஏற்ற முறிவும் செய்ய வேண்டும்.

உணவுப் பாதையில் கோளாறு கண்டிருந்தால் அவற்றை தக்க முறையில் மருத்துவம் செய்ய அதனால் உண்டான வாய்ப்புண் குணப்படும், மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம்.

## வேர்க்குரு, கோடைக் கொப்பளம்

கோடைக்காலத்தில் வியர்வை அதிகம் காணும் ஒரு சிலருக்கு இதனால் நமைச்சலுண்டாகி சிறு சிறு குருக்கள் ஏற்பட்டு தினவெடுத்து சொரியச் செய்யும். வேனிற்காலத்திலுண்டாகும் இக்குருக்களே வேர்க்குரு எனப்படுகிறது. இது முகம், கை, மார்பு, முதுகு முதலிய இடங்களில் அதிகமாகவும் நெருக்கமாகவும் காணும். இவற்றைச் சொரிந்தால் அழற்சியும் காந்தலும் உண்டாகும் சில வேளைகளில் கொப்புளங்களாக இவை கண்டபோது கோடைக் கொப்புளம் என்றும் கட்டிபோலானால் கோடைக்கட்டி அல்லது வேனிற்கட்டி என்றும் சொல்லப்படுகிறது.

நன்னாரி, மணப்பாகு, இளநீர், நன்னாரி, வெட்டிவேர், விலாமிச்சன்வேர் இவை சேர்ந்த குடிநீர், சந்தன ஊரல் குடிநீர் ஆகிய குளிர்ச்சி தரும் அழலாற்றிகளை வழங்கலாம். சிலாசத்து பற்பம், நீர்முள்ளி கியாழம் போன்ற சிறுநீர் பெருக்கி மருந்துகளையும் கொடுக்கலாம்.

வேர்ங்குருக்களுக்கு சந்தனக் குழம்பு, சந்தன பச்சைக் கற்பூர பூச்சு, பனைநுங்கு நீர் ஆகியவற்றைத் தேய்க்கலாம்.

வெந்நீர் விட்டெடுத்தத் தேங்காய் பாலில் சீரகத்தை அரைத்துப் பூசலாம் இதனால் வேர்க்குரு, கோடைக் கொப்புளம், வேனிற்கட்டி யாவும் குணமாகும். இவைகளுக்கு மேற்படி தேங்காய்ப்பாலில் ஏலம், கார்போக அரிசி, ஆலம்பட்டை, அல்லது அரசம்பட்டை ஏதாவது ஒன்றை அரைத்தும் பூசலாம்.

## கட்டி, புண்

தோலில் வீக்கம் கண்டு குருதியாவது, சீழாவது கோர்த்துள்ளதைக் கட்டியென்றும், உடைந்த புண் என்றும் கூறப்படுகின்றது. பொதுவாக சிறுவர்களுக்கு அதிகமாகக் காணப்படுகிறது. கோடையில் ஏற்படும் கட்டிகளை வேனிற்கட்டி என்று சொல்லுவர். சில வேளைகளில் புண்கள் துளைபோல காணும். இவை சிலைப்புண்கள், புரைப்புண்கள் எனப்படும். அடிபடுதல், கீறுதல், உராய்தல், இவற்றால் காயமேற்பட்டும் புண்ணாகலாம்.

கட்டியை உடையச் செய்ய வெள்ளை மெழுகு, நந்திப்பசை, முதலியவைகளைப் போடலாம. புண்களையாற்ற புண்ணாற்றி மருந்துகளை நோய்க்குத் தக்கவாறு வழங்கலாம். புண்களை வெந்நீர், புண்கழுவுநீர், வீரநீர் அல்லது கிருமிநாசினி கலவைநீர் ஏதாவது ஒன்றினால் சுத்தமாக கழுவி, சீழிருந்தால் வெளிப்படுத்தி மருந்திட விரைவில் ஆறும்.

சிலைப் புண்களுக்கு மருந்துகளைத் திரியிலூட்டி செருகி வைத்துகட்டி குணப்படுத்த வேண்டும். தொடக்க நிலையிலுள்ள கட்டிகளை அமுங்கச் செய்வதற்கான மருந்துகளைப் போடுவதும், முற்றிய கட்டிகளைப் பழுக்கச் செய்வதற்கான மருந்துகளைப் போடுவதும் சீழ் கொண்டு பழுத்து முகப்புடைய கட்டிகளைக் கீறி சீழை வெளியேற்றி புண்ணாற்றி மருந்துகளைப் பயன்படுத்துவதும் வழக்கு.

## முகப்பரு

அநேகமாக பருவநிலையில் உள்ள வாலிப ஆண், பெண்களில் இது முகத்திலுண்டாகிறது. சிலருக்கு முதுகிலும் இது

போன்ற பருக்கள் காண்பதுண்டு தோலில் அளவோடு நுண்ணிய கட்டி போன்று ஒன்றிரண்டாகவோ நிறைந்தோ காணப்படும். பருவினுள் ஒருவகை கொழுப்புப் பொருள் முளை போன்று இருக்கும். இதை அமுக்கி வெளியேற்றினால் வீக்கமும் வலியும் ஏற்பட்டு வேதனை கொடுப்பதோடு மேலும் மேலும் பல பருக்கள் உண்டாகி தோலைக் கெடுக்கும் சில வேளைகளில் புண்ணாகி தழும்பு ஏற்படுவதும் நச்சுநிலை உண்டாகி உயிருக்குக் கேடு உண்டாவது உண்டு.

முகத்தை குளிர்ந்த நீரில் அலம்பி சுத்தமாக வைத்திருக்க முகப்பரு வராமல் தடுக்கலாம். பச்சைக் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். மலச்சிக்கலைத் தவிர்க்கவேண்டும்.

*புனுகை முகப்பருவின் மீது தடவிவர குணமாகும்.*

*சங்கை பன்னீரில் உரைத்துப் பூசலாம்.*

*குக்கில் வெண்ணெய் தடவலாம்.*

கருஞ்சீரகம், சீரகம், இரண்டையும் பசும்பாலில் அரைத்து முகத்தில் அப்பி தடவி ஒரு மணி நேரம் ஊறவிட்டு குளிர்ந்த நீரில் கழுவி வரலாம்.

## தோல் வறட்சி

தோலில் நெய்ப்புப் பசையில்லாமல் உடம்பு வெண் நிறக்கோடு காணுவதுமான நிலையை தோல் வறட்சி என்கிறோம். சில வேளை தினவெடுத்து சொரியச் செய்யும். நமட்டுச் சிரங்கு உண்டாகும்; சொரிந்த இடங்கள் கரடு முரடாக மாறிவிடுதலும் உண்டு இவ்வகை தோல் வறட்சி எண்ணெய் முழுக்கின் பின் குறையும். ஆனால் பின் மீண்டும் பழைய நிலையை காட்டும்.

கொழுப்புச் சத்துள்ள பொருட்கள் - பால், வெண்ணெய் மாமிசம் ஆகிய உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ள தோல் வறட்சி வராமல் காக்கும்.

அறுகன் தேங்காய் நெய், திரிபலை தைலம், அரக்குத் தைலம் போன்றவற்றைத் தேய்த்து ஊறவைத்து குளிக்க தோல் வறட்சி நீங்கும்.

## தடிப்புகள், காணாக்கடி

கை, கால் அல்லது உடம்பின் வேறுபகுதிகளில் தினவெடுத்து, சொறிந்தால் அங்கெல்லாம் திட்டுத் திட்டமாக தடித்துக் கொள்ளும். தினவு மிக அதிகரிக்கும். சில வகை தடிப்புகள் ஏற்படுவதன் காரணம் சரியாகத் தெரியவில்லை. ஒவ்வாப் பொருட்களை உண்பதாலும், ஒவ்வாத் தன்மையுள்ள வேறு செயல்களாலும் தடிப்புகள் உண்டாகக் கூடும். எனவே இதை ஒவ்வாமை நோய்த் தடுப்புகள் எனவும் சொல்வர். காணாக்கடி என்றும் சொல்லப்படும்.

மருந்துகள் ஒவ்வாமையாலும் தோலில் தடிப்புகள் ஏற்படலாம் இதற்கு அம்மருந்துகளை நிறுத்திவிட்டு அவைகளுக்கு முரிவு செய்யத் தடிப்புகள் மாறும்.

இந்நோயில் மலத்தைக் கழித்து, சிறுநீரைப் பெருக்கும் மருந்துகளும், வண்ணச் சத்துள்ள பற்பங்களும் வழங்கலாம்.

விடதாரிச் சூரணம்-மஞ்சிட்டி 20 கிராம், குக்கில் 30 கிராம், வேங்கைப்பட்டை, வசம்பு, மூங்கிலுப்பு, கோமூத்திர சிலாசத்து

வகைக்கு 10 கிராம், மரமஞ்சள், 5 கிராம் பொடித்து சூரணம் 10-5 நெல் அளவு நீரில் கொடுக்கலாம்.

மேலுக்கு சிவப்புக் குக்கில் நெய், அருகன் நெய் இவற்றில் ஒன்றைப் பூசி ஊறவிடலாம்.

மருந்துகள் ஒவ்வாமையால் ஏற்படும் தடிப்புகட்கு அருகன் கட்டை 10 கிராம், நல்ல மிளகு 1 கிராம் சேர்த்துக்கியாழமிட்டு குடிக்கச் செய்யலாம்.

## *சில்விட தடிப்புகள், சிறுபாம்புக்கடி*

கம்பளிப் பூச்சியின் மயிர், காஞ்சொரி போன்ற பயிர்களின் சுணை முதலிய பொருட்கள் தோலிற் படுவதால் சொறியும் தினவும் உண்டாகி சொறியச் செய்யும். நமையும், தடிப்பும் உண்டாகும். காணாக் கடிக்கான மருந்துகளையே இதற்கும் தரலாம்.

சிறுபாம்பின் நஞ்சாலும் தினவு, சொறி, தடிப்பு இவை உண்டாகும். இதில் ஒரு வகையான தழும்புகளும் உண்டாவதுண்டு. முன் சொன்ன மருந்துகளே இதற்கும் உதவும். சிறு பாம்பு நஞ்சிற்கு சிறப்பாக வாழைப்பழதுண்டினுள் 5-10 நெல் எடை பெருங்காயத்தை வைத்து காலையில் மூன்று நாட்கள் விழுங்கி வர குணமாகும். பால் சோறு; அல்லது கேழ்வரகு கூழ் உண்ணலாம்.

வேறு வகை நஞ்சுகளாலும் தடிப்புகள் படைகள், தழும்புகள் போன்ற தோல் பிணிகள் ஏற்படுவதுண்டு. அந்தந்த நஞ்சுக்குரிய முறிவுகளைச் செய்ய அவை மாறும்.

## படர்தாமரை, படை

இவை சுத்தமாக தேய்த்துக் குளிக்காதவரிடம் இடுப்பு, தொடை இடுக்கு முதலிய இடங்களில் வெகுவாக உண்டாகிக் காணுவது ஒருவகை. மற்றொன்று முகத்தை மழுப்பிக் கொள்ளும் ஆண்களுக்கு முகத்தில் உண்டாகிறது இரண்டும் தொற்றக் கூடியவை. முன்னது ஆடைகளாலும் பின்னது முகம் மழுப்பும் கத்திகளாலும் பரவுகின்றன. இவற்றில் அதிக நமைச்சல் இருக்கும். நோய் கண்ட இடம் சிவந்தாவது கருமை நிறமுடனாவது வரம்பு கட்டி எரிச்சலுடன் காணும்; சொரியச் செய்யும். சொரிந்தால் காந்தலுண்டாகும்; சிலபடைகள் தடித்த பனைமரப்பட்டை போல சுரசுரப்பாக இருக்கும். இவற்றின் தன்மைக் கேற்ப மருந்துகளை வழங்க வேண்டும்.

பரங்கிப் பட்டைக் கியாழம், சூரணம், பதங்கம், இரசாயனம் இவற்றையாவது கெந்தக இரசாயனம் முதலிய உள் மருந்துகளை யாவது கொடுக்கலாம். அமிர்த வெண்ணெய், மிருதார்சிங்கிக் களிம்பு, வங்கக் களிம்பு, அருகன் தேங்காய் நெய் சிரட்டைத் தைலம், புங்கன் தைலம் ஆகிய வெளி மருந்துகள் பயன்படும்.

அமிர்த வெண்ணெய், சிரட்டைத் தைலம் இரண்டும் கலந்த படைக்களிம்பு போடலாம்.

வண்டு கொல்லி என்ற சீமை அகத்திச் சாறு பூசலாம்.

தகரை இலை அல்லது வேரை பழச்சாறு அல்லது காடி விட்டரைத்துப் பூசலாம்.

தகரை விதையை இலைக்கள்ளிச் சாற்றில் ஊற விட்டெடுத்து பசுநீர் விட்டரைத்துப் பூசலாம்.

மருந்துகள் பயன்படுத்துகையில் எரிச்சல் கண்டு படை சினத்துச் சிவந்தால் அதை விட்டுவிட்டு குங்கிலிய வெண்ணெய் போன்ற மருந்துகள் தடவலாம். தனித்த தேங்காய் நெய்யும் தடவலாம்.

முகம் மழுப்பியதும் படிகி போன்ற துவர்ப்பிகளின் கலவை நீர், கிருமிநாசினி கலவை நீர்கள் பயன்படுத்தலும் துணிகளை வெந்நீரில் நனைத்து நல்ல வெய்யிலில் உலர்த்திக் கட்டுதலும் இவற்றை வராமல் தடுக்கும்.

## தேமல்

தோலில் வட்டமாகவாவது பல வடிவங்களிலாவது தோன்றி வளர்ந்து பரவிக் கொண்டே வந்து சில சமயங்களில் உடல் முற்றிலும் காணப்படுகிறது. இது கண்டவிடத்தில் வரம்பு கட்டி தோல் நிறம் மாற்றமடைந்து, சொறியும் போது தவிடு போன்ற தூள் உதிரும். இவற்றுள் சில கருப்பாகவும். சில சிவப்பாகவும் காணுகின்றன. சிலவற்றில் நமை அதிகமிருக்கும்..ஒருவகைத் தேமலை அழகுத் தேமல் என்கின்றனர்.

படைகளுக்கான மருத்துவத்தையே இதற்கும் செய்யலாம்.

## புழுவெட்டு

தலையில் திட்டுத்திட்டாக முடி உதிர்ந்து அவ்விடங்கள் வழுக்கையாகக் காணப்படும் ஒருவகைக் கிருமி நோயைப் புழுவெட்டு என்கிறோம். மயிர் உதிர்ந்த இடங்கள் மினுமினுப்பாய்த் தோன்றும். ஒரு சிறிய இடத்தில ஆரம்பித்து

மயிர் உதிரல் கூடிக்கொண்டே போய் வழுக்கைத் திட்டு பெரிதாகிக் கொண்டு வரும்.

அரளிச் செடியின் பாலை இவ்விடங்களில் தடவி வர மயிர் முளைக்கும். சிலர் அரளிப் பாலுடன் சிரட்டைத் தைலம் ஒரு துளியும் தேங்காய் நெய்யும் கலந்து தடவுதல் சிறந்தது என்கின்றனர்.

## நரை, மயிர்உதிரல், வழுக்கை

வயது முதிர்வடையும் போது கருத்த மயிர் வெளுத்தலும் முடி உதிர்ந்து தலை வழுக்கையாதலும் இயல்பாகக் காணப்படுகிறது. சில போது இளவயதினருக்கு முடி நரைப்பதும் பெண்களுக்கும் கூட வழுக்கை ஏற்படுதலும் உண்டு. இவற்றை நீக்குவது மிகக் கடினம் நரை முடியை மறைக்க பல மைகள், முடிச்சாயங்கள் கிடைக்கின்றன.

சித்த மருத்துவ முறையில் நரை முதலியவை வராமற் செய்யக் கூடிய பல கற்ப மருந்துகள் கூறப்பட்டுள்ளன. இவைகள் கற்ப விதிகள் என்ற பகுதியில் கூறப் பெற்றன.

இவையன்றி அயம் சேர்ந்த மருந்துகள். கரிசாலை இளகம் போன்ற மருந்துகளும் உடல் வன்மைக் குறைவிருந்தால் அதற்கான மருந்துகளையும் வழங்குதல் நன்மை தரலாம்.

திரிபலைத் தைலம், அவுரி சேர்ந்த நெல்லிக்காய் தைலம், கரிசாலைத் தைலம், அசைத் தைலம், சந்தனாதித் தைலம் போன்ற தைலங்களைப் பதமிடவும் முழுகவும் பயன் படுத்தலாம்.

யானையின் தந்தத்தை அரத்தால் உரசித் தூளாக்கி வறுத்து அக்கரியை தேங்காய் நெய்யில் குழைத்துப் பூச ஆரம்ப நிலையிலுள்ள வழுக்கை மாறி அவ்விடத்தில் மயிர் முளைக்கும் எனப்பட்டுள்ளது.

சங்கன் சமூலத்தைலம், புங்கமரத்தைலம் தும்பைத் தைலம், துளசித்தைலம், தேங்காய்த்தைலம் இவைகளைச் சம அளவில் கூட்டிய தைலம் 32 பங்கிற்கு ஒரு பங்கு சங்கு பற்பம் சேர்த்து மயிரில் தடவி ஊறவிட்டு முழுகினால் மயிரைப்பற்றிய நரை, செம்பட்டை மயிர், மயிர் முனை வெடித்தல், நடுவில் முறிதல், சுருண்டிருத்தல் ஆகிய நோய்கள் நீங்கும்.

## பொடுகு

இதை பொட்டு, சுண்டு என்றும் கூறுவர். பொடுகு ஒருவகை நுண்ணிய காளானினால் தலையில் உண்டாகும் நோய், தலையில் அரிப்பு, சொரிந்தால் தவிடு போல் பொடி உதிரல் கண்டு கொஞ்சங் கொஞ்சமாய் இந்த அரிப்பு தலை முழுவதும் பரவி சொறியச் சொறிய அவ்விடங்களில் வெண்மையாய் சாம்பல் பூத்ததுபோலத் தோன்றி முடி உதிருதலும் ஏற்படும். அரிப்புள்ள இடம் வரம்பு கட்டி வளர்ந்து கொண்டே போகும். சிலரில் இந்நோய் புருவத்திலும் காண்பதுண்டு. புருவத்தில் மயிர் உதிர்ந்து அழகைக் கெடுக்கும் குழந்தைகட்கு இந்நோய் உண்டானால் அவர்கள் தலையைச் சொறிந்த கையால் வேறு இடங்களிலும் சொறிய அந்த இடங்களிலெல்லாம் அந்நோய் பரவும். குறிப்பாக காதிலும் இது உண்டாகிறது.

உடலில் தேவையான அளவு நெய்ப்புப்பசை இல்லாததால் இந்நோய் உண்டாகிறது என்கின்றனர். இந்த நெய்ப்புப் பொருளைச் சுரக்கும் சுரப்பிகள் தோலிலேயே இருக்கின்றன. இச்சுரப்பிகளினின்று உண்டாகும் பொருளே தோலையும் மயிரையும் நெய்ப்புப் பூச்சுடன் வைத்திருக்கிறது.

எண்ணெய்க் குளியல் செய்தல், நெய், பால், வெண்ணெய், மாமிசங்கள் முதலிய கொழுப்புச் சத்துள்ள உணவு உண்ணல் ஆகியவற்றால் தோலிலுள்ள நெய்ப்புக் குதுவங்கள் நல்ல முறையில் தொழில் பட்டு இந்நோயை வரவிடாமல் தடுக்கும்.

வெள்ளை மிளகு அல்லது நல்ல மிளகைப் பாலில் அரைத்து தலைக்குத்தடவி குளித்து வந்தால் பொடுகு வராது.

பொடுதலை (கீடாரி) தைலம் தேய்த்து முழுகலாம்.

150 மி.லிட் நல்லெண்ணெயில் 5 கிராம் வேம்பின் பூ, 8 கிராம் வெல்லம் இரண்டையும் போட்டு முறியக் காய்ச்சி வடிகட்டி தலைக்குப் பதமிடவும் தலை முழுகவும் பயன்படுத்த பொடுகு மறையும்.

அருகன்-தேங்காய் நெய் தேய்த்துக் குளிக்கலாம்.

பழத்தோலை உலர்த்திப் பொடித்து தலைக்குத் தேய்த்துக் குளிக்கலாம்.

குங்கிலியம், சந்தனம், கிச்சலிக்கிழங்கு, சாம்பிராணி இவற்றுள் ஒன்றையாவது, இரண்டு மூன்றையாவது எண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பூசி வரலாம்.

பொடுகில் ஏற்படும் தழும்பு போன்ற வரம்புகட்கு வேம்பின் பட்டைக் கியாழ நுரை தடவி வரலாம்.

## பாலுண்ணி

தோலில் ஏற்படுகின்ற காய்கள் போன்ற வளர்ச்சிகளுள் ஒன்று பாலுண்ணி எனப்படுகிறது. இவற்றுள் சில உண்டான அளவோடு அப்படியே நின்று விடும். வேறு சில வளர்ந்து பெரிதாகிக் கொண்டு வரும். பாலுண்ணியின் மேற்பரப்பு மொழு மொழுவென்றும் நடுவில் பதிந்த ஒரு புள்ளியுடனும் உள்ளே பால் போன்ற நீர்த்துவப் பொருள் கோர்த்துக் கொண்டும் இருக்கும். முகம், கை, கால் இவ்விடங்களில் அதிகமாக உண்டாகிறது. இதில் ஒருவகை தொற்றக்கூடியது. அநேகமாக பாலுண்ணிகள் தாமாகவே சில திங்களில் உதிர்ந்து மறைந்து விடுகின்றன.

பாலுண்ணிகளை கீறுதல், உடைத்துவிடல் நன்றல்ல. இவற்றுக்கு அமிர்தவெண்ணெய் குக்கில் வெண்ணெய், அருகன் தேங்காய் நெய் போன்ற மருந்துகளை வெளியில் தடவி உள்ளுக்கு பரங்கிச் சக்கையாலான மருந்துகள் தரலாம்.

## மருள்

இதை நாய் முள் என்றும் கூறுவர். இதுவும் பாலுண்ணி போன்றே முகம் கை கால்களில் அதிகமாக உண்டாகிறது. இதன் மேற்பரப்பு முட்கள் போன்ற பல முகப்புகளைக் கொண்டதாகவாவது. தேனடையில் தேனீக்கள் மொய்த்திருத்தல் போன்ற தோற்றத்துடயனாவது காணும் இவை சாம்பல் செஞ்சாம்பல், வெண்சாம்பல் நிறங்களில் இருக்கும் ஒரளவு வலியும் காண்பதுண்டு.

நீண்ட குதிரைவால் முடியொன்றை மருள் தோலுடன் இணைந்திருக்குமிடத்தில் இறுக்கிக் கட்டி நாளுக்கு நாள் கட்டை இறுக்கிக் கொண்டு வர மருள் அற்று விழும்.

அமிலங்களை மிக எச்சரிக்கையுடன் மருளின் மேற் பகுதியில் காணும் முனைகளில் தடவ அவை கரிந்து உதிரும்.

ஊதுபத்தியைக் கொளுத்தி அதனால் சுட்டிகை செய்ய மருள்கரித்து உதிர்ந்து விடும். சுட்டிகை அமிலப் பூச்சு முதலிய முறைகளைச் செய்யும்போது அவற்றால் ஆழமான புண்கள் ஏற்பட்டு விடாதபடி கவனமாகச் செய்யவேண்டும்.

மிருதார்சிங்கிக் களிம்பு, பிரம்மதண்டிப்பால் இவைகளையும் மேலுக்குப் போட்டு வரலாம்.

அமுக்கராங்கிழங்கு, அதிமதுரம் இரண்டையும் பழச்சாறு விட்டரைத்து தேங்காய் நெய் கலந்து குழைத்துப் பூசலாம். இதனுடன் வசம்பையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சவுக்காரமும் சுண்ணாம்பும் கலந்து குழைத்துப் பூசுவதும் வழக்கில் உண்டு.

நீர்முள்ளிச் சமூலம் அல்லது முள்ளிக்கீரைச் சமூலம் உலர்த்திச் சுட்டு சாம்பலாக்கி அதனுடன் ஆமணக்கு நெய் கலந்து பூசினால் மரு உடைந்து புண்ணாகும். இதன் பின் புண்ணாற்றும் மருந்துகளிடலாம்.

## *மச்சம்*

சிலருக்கு பிறக்கும் போதே தோலில் வெண்ணிறமாயாவது கருநிறமாயாவது புள்ளி அல்லது படை போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. இவை இவ்விடத்தில் நிறமிகள் குறைவு

பட்டதாலோ அல்லது அதிகமானதாலோ ஏற்படுகின்றன. இவைகளுள் பெரும் பாலானவை எந்தவித கெடுதியும் செய்வதில்லை. அநேகரால் இது நல்லதோர் குறியாக எண்ணப்படுகிறது. அடையாளக் குறியாகவும் இவற்றைக் கொள்வதுண்டு. இவை தொல்லை கொடுக்காததினால் மருந்துகள் வழங்க வேண்டிய அவசியமில்லை. மருந்துகளினால் இவை மறைவதும் கடினம்.

## மேகத் தழும்புகள்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் உண்டாகும் கொறுக்கு மற்றும் வெட்டை நோய்களில் ஏற்படும் கசிவுகளினால் அரிக்கப்பட்டு படைபோன்ற தோற் பிணியும் அவை புண்ணாகி தழும்புகளாவதும் உண்டு. வெட்டை நோயில் கசியும் நீர் அனேகமாக தொடைகளின் அகப்புறத்தில் பட்டு அவ்விடத்தை தினவெடுக்கச் செய்து சொறியச்செய்து புண்ணாகும். இதனால் மிக்க வேதனையுண்டாகும். மேக நோய்கட்கான மருத்துவம் செய்தாலன்றி இவை குணப்படா. இத்துடன் படைகளுக்கான மருந்துகளை மேலுக்குப் போடலாம். உள்ளுக்கு இரசம், வங்கம் கெந்தி சேர்ந்த மருந்துகள் சேங்கொட்டையாலான மருந்துகள் ஆகியவை நன்மை தரும்.

## அம்மைக் கொப்புளம்

அம்மை நோயில் தோலில் கொப்புளங்கள் காணும். சிறு குழந்தைகள் இவைகளைச் சொரிந்து விடுவதால் மிக்க வருத்தம்

கொடுக்கும். அம்மைக் கொப்புளங்கள் மாறியதும் தழும்புகளை விட்டுச் செல்லும். இவை தோலை மிகவும் கேடாக்கும்.

அம்மை (மருந்து) குத்திய இடங்களிலும் பூரிப்பு ஏற்பட்டு கொப்புளமாவதுண்டு இதை குழந்தைகள் சொறிந்து உடைத்துவிட புண்ணாவதோடு பல கொப்புளங்களும் உண்டாவதுண்டு.

அம்மை கொப்புளங்கட்கு வேப்பிலை மஞ்சள் இவற்றை அரைத்துப் பூசலாம்.

கற்பூரத்தைலம் தடவலாம்.

தேங்காய்ப்பால் 250 மி.லிட்டரில் 15 கிராம் கடுக்காய் தோலை அரைத்துக் கலந்து காய்ச்சி எண்ணெயாக காய்ந்ததும் ஆற வைத்துப் பூசலாம்.

அம்மை கொப்புளம் கண்டவர்களுக்கு வேப்பிலை மஞ்சள் பொடித்து கலந்த நீரை வெய்யிலில் வைத்து சூடான பின் குளிப்பாட்டலாம்.

பூங்காவியை பாலில்.குழைத்து அம்மை குத்திய இடங்களில் ஏற்படும் பூரிப்புக்கு தடவலாம். அம்மை மருந்து குத்திய இடத்தினின்று வடியும் நீர் படுவதால் ஏற்படும் கொப்புளங்களுக்கும் இதையே போடலாம்.

அம்மை போன்ற பிற நோய்களிலும் கொப்புளம் உண்டாகி தோல் பாதிக்கப்படுவதுண்டு.

## அக்கி

முதுகெலும்பின் நரம்பு முடிச்சுகளிலிருந்து வரும் உணர் நரம்புகளின் போக்குக்கு நேராய் தோலில் சிவந்த தடத்தில்

நெருக்கமான பல கொப்புளம் காணும் நோயை அக்கி என்கிறோம். இந்நோயில் முதன் முதலில் நரம்புப் போக்குக்கு நேராய் வலி காணும். இதில் காணும் கொப்புளங்கள் பல அளவுகளில் வட்டமாகவோ, முட்டை வடிவமாகவோ இருக்கும். இதனுள் தெளிந்த நீர் கோர்த்திருக்கும். நோய் தீர்ந்த பின்னும் அவ்விடங்களில் நரம்பு வலி இருக்கும்.

அக்கி ஒரு கிருமிநோய் எனினும் காயம், நச்சு சுரம், பல் சொத்தை, அண்ணாக்குத் தூறு தாபிதம், வேறு தொற்று நோய்கள் வெள்ளைப் பாடாணம், சூதம், தங்கம் போன்ற மருந்துகள் உட்கொண்டதன் பின்னும் இது உண்டாவதாக சொல்லப் படுகிறது. அக்கி கண்ட போது தடுமன் வயிற்றுப்பிணி, சூதகக் கோளாறுகள் ஆகியவும் காணப்படுகிறது. அக்கியில் ஒரு வகை முகத்திலும், குய்யத்திலும் உண்டாவதுண்டு இந்நோய் தீர்ந்த பின் மறுபடியும் வரக்கூடும்.

பூங்காவியை நீரில் குழைத்துத்தடவலாம் வெங்காரப்பச்சை போடலாம். துவர்ப்பிகளும்• வழங்கலாம். நெய்ப்புப் பசையுள்ள களிம்புகள், பசைகள் போடக் கூடாது.

அக்கி நோய் தீர்ந்த பின் நரம்பு வலி இருந்தால் அமுக்குரா சூரணம் போன்ற மருந்துகளைக் கொடுத்து வரலாம்.

## தழும்பு

சொறி, சிரங்கு, தீப்புண், காயம், மற்றும் அநேக தோற்பிணிகள் ஆறியபின் அவ்விடத்தின் தோலில் தழும்புத் திசு

ஏற்பட்டு இயற்கை நிறம்மாறி செவ்வெண்மை நிறமுடையதாய் மினுமினுப்புடன் காணுவதை தழும்பு என்கிறோம். தழும்புகள் அம்மை, வைசூரி, கொப்புளங்கள் மாறிய பின் உடலில் நிறைய நின்று விடும். சில சமயம் கண்களில் தழும்பு ஏற்பட்டு பார்வை மறைந்து விடலும் உண்டு. சிலரின் உடலில் தழும்பு மிக எளிதில் உண்டாகக் கூடியதாகவும் உண்டானபின் விரைவில் வளரக் கூடியதாகவும் காணப்படும். தழும்புகள் இவ்வாறு வளர்ச்சியடைந்தால் கண்டு கண்டாக இருக்கும். வலியும் காணப்படும்.

மேனாட்டு முறைப்படி வெளிப்பார்வைக்குத் தெரியும் தழும்புகளை வெட்டி நீக்கி விட்டு அவ்விடத்துக்கு வேறு இடத்திலிருந்து எடுத்த தோலை ஒட்டி அறுவை மருத்துவம் செய்கின்றனர்.

தழும்புகள் நாட்பட நிறம் மாறி தன் நிறமடைதல் கூடும். இவை மிக எளிதில் மாறாததால் ஆட்களின் அடையாளக்குறியாக பயன் படுகிறது.

யானைத் தந்தத்தை நீரில் ஊறவைத்து சந்தனக்கல்லில் நீர் விட்டரைத்து உலர்த்திக் கொண்டு இத்துடன் சிவப்புக் காவிக்கல், கத்தூரி மஞ்சள் சம எடை கூட்டி தேன்விட்டரைத்து நெருப்புச் சுட்ட தழும்பு மற்றும் வேறு தழும்புகட்கு போட்டுவர நாளடைவில் மாறும்.

வேப்பம்பட்டைக் கியாழத்தைக் கலக்கி அதில் வரும் நுரையை தடவி வரலாம்.

வேப்பிலையை மோரில் அல்லது கழுநீரில் அரைத்துப் பூசி வரலாம்.

350 கிராம் வேங்கை மரக்கட்டையை 500 மி.லிட்டர் கியாழம் செய்து அதில் 150 கிராம் கார்போகி அரிசியைப் போட்டு கியாழம் உலரும் வரை வெய்யிலில் வைத்து எடுத்தபின் முன் அளவுப்படி செய்த கருங்காலிக் கட்டை கியாழத்தில் ஊறப்போட்டெடுத்து உலர்த்திச் சூரணித்துக் கொண்டு அதில் 5-10. நெல் அளவு வீதம் பாலுடன் நாளொன்றுக்கு இரு வேளை வீதம் கொடுக்கலாம் புளி, காரம் நீக்கி பால், நெய் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## தாபிதம்

தாபிதம் என்பது உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறிக்கும். இது கொசு போன்ற உயிர்கள் கடித்தாலும் அடிபடுவதாலும் ஏனைய ஊறுகளாலும் உண்டாகிறது. தாபிதம் உண்டான காலத்து அவ்விடத்தில் அழற்சி, வலி இவை காணும். வெளி உறுப்புகளிலன்றி அக உறுப்புகளிலும் தாபிதம் ஏற்படுவதுண்டு.

ஊறுபட்ட இடத்தில் குருதி அதிகமாகப் பரவுவதால் வீங்குதல், சிவத்தல், வெப்பம் அதிகரித்தல் ஆகிய குறிகள் காணுகின்றன.

தாபிதம் படிப்படியாக வற்றி விடுதலுண்டு. சிலவேளை கட்டி கழலையாக மாறுவதுண்டு. தாபிதம் ஏற்பட்ட உடன் குளிர்ந்த நீரினால் அவ்விடத்தை நனைத்து வைத்திருக்கலாம்.

பச்சை அமுக்கிறாங்கிழங்கை நீரில் அரைத்துப் பூசலாம்.

ஆளிவிரை புற்கை, வாட்டிய அந்திமல்லி இலை இவையும் தாபிதத்தைக் குறைக்கும். ஆமணக்கு இலையை அதன் நெய் தடவிவதக்கி மேலுக்கு போடலாம்.

அழற்சி இருந்தால் சந்தனக் குழம்பு, சிவப்பு குக்கில் தைலம் இவைகளைப் பூசலாம்.

## காளாஞ்சகப் படை

### (வெண்பருச் செதில், செதில் உதிர்நோய்)

### (Psoriasis)

சர்ம நோய்களில் ஒன்றான காளாஞ்சகப்படையும் அதன் தீர்வும் ஒரு பெரும் பிரச்சினை மக்கள் தொகையில் சற்றேறக்குறைய 2 சதவிகிதத்தினர் இந்நோயால் பாதிக்கப் பட்டிருக்கின்றனர். 5 லிருந்து 25 வயதினர் பெரும்பாலும் முதலில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் பீடிப்புக்குப் பிறகு குணம் ஆவது குறைவு குணம் கிடைத்தாலும் நீடிப்பதில்லை. திரும்பத் திரும்ப வரும் 10 சதவிகிதத்தினருக்குத் திரும்ப 5 ஆண்டுகள் வராமல் இருக்கிறது. ஆண்களை விட பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள் இந்நோய் தோலையும் சளிசவ்வையும் பாதிக்கும்.

***நோய்க்காரணம் :***

வரும் காரணம் தெரியவில்லையாயினும் பரம்பரை நோயாக மூவரில் ஒருவருக்கு வருகின்றது சுனதாபிதம், புப்புசப்பிணிகள், ஒவ்வாமை, மனஉளைச்சல், கவலை, அதிர்ச்சி, காலமாறுபாடுகளினாலும் அதிகப்படும். பேதைப்பெண் பருவத்திலும், (Before Puberty) பேரிளம்பெண் பருவத்திற்குப்

பின்னும் (After Menopause) அதிகப்படுவதும், கருப்பமுற்றிருக்கிற காலத்தில் குணமாவது குழந்தை பிறந்தபிறகு திரும்பவும் நோய் வருவதும் உண்டு. சில மருந்துகள் அதிகப்படுத்துவதும் உண்டு. உதாரணமாக வலிகுன்மத்திற்கு தாம்பிரச் செந்தூரம் கொடுத்த போது வலிகுன்மம் நீங்கி, குணமாகி இருந்த காளாஞ்சகப்படை தீவிரமடைந்துவிட்டது. இதுபோல இளம்பிள்ளைத் தடுப்பு மருந்து (Polio Vaccine) குளோரோகுவின் (Chloroquin) குருக்களையும் படையையும் உண்டுபண்ணலாம்.

### *நோயின் குறிகுணங்கள் :*

செந்நிறப் பருக்களும், தடிப்புகளும் உண்டாகும். இவை மென்மையும், வெண்மையும், பளபளப்பும் உடைய செதில்களால் மூடப்பட்டிருக்கும் செதில்களைச் சொறிய இரத்தக்கசிவு ஏற்படும். படை உண்டாம் இடங்களும் படையின் உருவங்களும் அளவும், வடிவமும் வேறுபடுவதுண்டு. சிறுவர்களில் நீர்த்துளிகள் போல் உடலிலும் அவயவங்களிலும், தலையிலும் சிலசமயம் முகத்திலும் குருக்கள் உண்டாகும். நாட்பட்டு விட்டால் செதில்கள் முழங்கால்களிலும், முழங்கைகளிலும் காணும். சிலருக்கு உள்ளங்கைகளிலும் பாதங்களிலும் தோல் கனத்து வெடித்துச் செதில்கள் தோன்றும் மற்றும் உடல் முழுதும் பாதிக்கப் பெற்று செதில்கள் அதிக அளவில் உதிர்ந்து சிவந்து காண்பதும் உண்டு. நாணயங்கள் போன்ற வடிவத்தையுடைய படைகளும், கிருமிகளற்ற சீழ்க் கொப்புளங்களும் தோன்றும், படைகள் வட்டங்களாகவும், நீளமாகவும் காட்சியளிப்பதுண்டு. பெண்களுக்கு அக்குள் தொடைமடிப்பு, தொப்புள்

இவ்விடங்களில் பாதிப்பு ஏற்பட்டால் நீர்க்கசிவு ஏற்படுவதுண்டு கால் வாசிப்பேரில் நகங்களைப் பாதித்து நகத்தின் குறுக்கே பள்ளம் விழுதலும் ஊசியால் குத்துண்டது போன்ற குழிகளையும் காணலாம். இப்பிணி கண்டவர்களில் 7 சதவிகிதத்தினருக்கு கீல்களைப் பற்றிய சந்துவாத சூலையும் உண்டாகும். இதனைக் கீழ்க்கண்ட செய்யுளில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை அறியாம்.

### *காளாஞ்சகம்*

*''மாத மாங் கால்கையில் குரங்கி ரண்டும்*
*வருத்து சந்து முறுக்கியே குடைந்து நொந்து*
*நாதமா நடைதானுந் தான்கொடாமல்*
*நலிந்துமே முடமாகிக் கரடு கட்டிச்*
*சேதமாஞ் சடந்தானு மிகவெ ளுத்துத்*
*தின வோடு சிரங்குமாய்ச் சேட்ப மாகிக்*
*காதமாய ருசியொடு மயக்க மாகும்*
*கருதிய காளாஞ் சகமாம் வாதமாமே.*

-யூகி வைத்திய சிந்தாமணி செய்யுள் 259

***மருத்துவம் :***

உயிருக்கு ஆபத்தை விளைவிக்காது நாட்பட இருக்கக் கூடிய நோயாகும். கடுமையான மருந்துகளை வழங்குவதையும் வேகமாகச் சிகிச்சையளிப்பதையும் தவிர்த்தல் அவசியம்.

மருந்துகள் உள அமைதியைக் கொடுக்கக் கூடியதாகவும் நரம்பு மண்டலத்தைத் தூண்டாததாகவும் இருக்க வேண்டும்.

படைகளை இளவெந்நீரில் நன்றாக நனையச் செய்து மென்மையாகத் தேய்த்துச் செதில்களை அகற்றி, துவட்டி, உலர்த்திய பிறகு புற மருந்துகளை உபயோகிக்க வேண்டும். பழவினையால் வரும் நோய்கள் தீர்வதில்லை என்றும், கன்மம் தீரவேண்டும் என்றும், இந்நோய் அறிகுணங்களையும் தீர்வையும் அகத்தியர் பரிபூரணம் 400ல் கூறப்பட்டு இருக்கிறது இதனை,

*''பழவினையால் விஷப்பூச்சி கடித்த தோஷம்*
*பாதகர்க்கு ஒருநாளும் தீர்வதில்லை......*
*..............................................................................*
*அடையாளம் விரல் குறுகு மின்னங்களே''*

-செய்யுள் 214

*''விரல்குறுகுங் கால் திமிரும் விஷம் போலேறும்*
*மெய்யழுந்துந் தலைசுழலும் வெளுக்குமேனி*
*பரமான தேகமெல்லாந் தடித்துக் காணும்*
*பாதமெல்லாம் வெடித்து மிகப் புண்ணாங்காணுங்*
*சரசமுடன் சொறிகரப்பான் பணம்போல் தோனும்*
*சாந்தையமே விந்துகெடுந் தடித்து வீங்கும்*
*நரருலகி லிந்நோய்க்கு மருந்தீயாதே*
*நல்லோரைப் பழித்த குஷ்டங்கன்மமாமே'*

-செய்யுள், 215.

''வாங்கியே பொதிகைக்குத் தென்கிழக்கு மூலை
வரிசையுள்ள வானமா மலைக்குச் சென்றால்
தூங்கியே யாலிலைமேற் பள்ளிகொண்ட
சுவாமியிட சந்நிதியில் தியானஞ் செய்து
தேங்கி யேயுதக மென்ற கிணரங்குண்டு
திரமாக ஒருசெம்பு நெய்யை வாரே''

செய்யுள், 216

''வார்த்துமே மறுசெம்பு தயிலமொண்டு
மைந்தனே வேடுகட்டிக் கொண்டுபோய்நீ
ஆற்றுமே யந்திசந்தி காசெடையாய்க் கொள்ள
அப்பனே திங்களது மூன்றுக்குள்ளே
தோற்றுமே தேகமது பொன்போலேதான்
துயரான கன்மனோய் தூரவோடுங்
காத்துமே யித்தயிலங் கொள்ளாவிட்டால்
கன்ம நோய் தீராது யின்னங்களே''

-செய்யுள், 217

என்ற செய்யுட்களால் தெளியலாம்.

மற்றும் இத்தைலத்தைப் பற்றிய சிலசெய்திகள் இந்திய மருத்துவ ஆராய்ச்சி வெளியீட்டில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

# NANGUNERI ENNAI

According to Agasthiar Paripooranam 400, the oil accumulated in a well in the temple of Ananda Sayanar at Nanguneri Tirunelveli district of Tamilnadu, is an effective remedy for many skin diseases including leprosy.

The materials for the Abishegam (holy wash) contains Sambirani (benzoin), Panneer (rose water), Santhanam (sandal wood paste) Illaneer (tender cocoanut water), Gingely oil and other various holy things, which pass through a channel and accumulate in a protected well from the time of the construction of the temple. Patients who are suffering from Chronic skin disorders are found to be benefited by this oil obtained from this temple.

The oil is applied externally in affected parts twice daily (morning and evening). After two hours wash with green gram powder.

- Jour Res Ind. med. Vol XIV No 3.4.1979

## *வெட்பாலைத் தைலம்*

### *காளாஞ்சகப் படைத் தீர்விற்கு செய்முறை*

வெட்பாலை இலைகளையும் தேங்காய் எண்ணெயையும் சமன்எடை எடுத்து, இலைகளைச் சிறு துண்டுகளாக வெட்டி ஒரு வாயகன்ற பாத்திரத்திலிட்டு அதில் தேங்காய் எண்ணெயை விட்டுப் பிசறி சூரிய புடமிடவும். பின் இலைகளைப் பிழிந்து எண்ணெயைச் சேகரித்துக் கொள்ளவும் தைலம் அழுத்தமாகவும், கருநீலச் செந்நிறமாகவும் இறங்கும். அளவு 1 தேக்கரண்டி காலை

மாலை உள்ளுக்குப் பாலுடன் கொடுத்து வெளிப் பிரயோகத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளவும் இரண்டு மணிநேரம் ஊறியபின் பச்சைப் பயிறு மாக்கொண்டு கழுவவும்.

இம் மருந்து சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் நோயினர்களுக்கு வழங்கி ஆய்வு செய்யப் பட்டிருக்கிறது அதனைக் கீழ்க்காண்க :

14 Cases of Kalanjagapadai were selected from the out patient Department of Central Research Institue (Siddha), Arumbakkam and admitted there in the inpatient Department, To all these 14 Cases, Vetpalai Oil was Administered orally in 5ml, doses thrice a day along with milk and the same oil was applied externally for local application 50% of cases responded well to the treatment. Four cases were followed up for six months without any recurrence.

Wrightia tinctoria (Description of the plant)

It is an apocynaceae tree growing through out India. Its flowers are white and fragrant. The leaves are the source of blue dye called Mysore Pala Indigo, An analysis of the leaves from Tamilnadu showed that the leaves possess proteolytic properties and contain indigo yielding glucosides.

The drug was found to be microbiologically active against gram positive organisims-staphylo coccus aureus, S. albus and S.citreus

*Jour. Res. in Ay & Siddha,*
*Vol II No. 1, March 81,*
*Page 61*

## பேன்கள்

பேன்கள் மனிதரின் இரத்தத்தை உறிஞ்சி வாழும் சிறகில்லாத ஆறுகால் பூச்சிகள். மனிதரின் தலை, உடல், மேகனம் ஆகிய இடங்களில் இவற்றைக் காணலாம். இதன் தலையில் இரத்தத்தை உறிஞ்சும் தும்பிக்கையும், உணர்ச்சி உறுப்புகள் இரண்டும் பல கூறுகளடங்கிய இரு கண்களும்உண்டு. ரோமத்தை நன்கு பிடித்துக் கொள்ளுவதற்கு ஏற்றபடி கால்களில் வளைவான நகங்கள் உண்டு. பெண் பேன் ஆண்பேனைக் காட்டிலும் பெரிது. தலையில் வசிக்கும் பேனும் உடற்பேனும் ஒன்றுபோல இருக்கின்றன. மேகனப்பேன் சிறியது. நண்டு போன்றிருக்கும். பேனின் முட்டையே ஈரு என்று சொல்லப்படும். பிசின் ஒத்த வஸ்துவினுல் ரோமத்தின் கீழ்பாகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். முட்டையின் முனையிலிருக்கும் மூடிவழியே குஞ்சு வெளியேறும்.

### *தலைப்பேன்:*

தட்டையாகவும் வெண்பழுப்பு நிறமுமுள்ள தலைப்பேன்கள் தோலைத்துளைத்து இரத்தத்தை உறிஞ்சும், அப்போது ஒரு நச்சுப்பொருளை உற்பத்தி செய்கிறது. இந்நச்சுப் பொருள் கடித்த இடத்தில் இரத்தம் உறையாதபடியும் எரிச்சலையும், நமைச்சலையும் கொடுக்கும். அவ்விடத்தில் சிவந்து நீர்க்கசிவு ஏற்பட்டு சீழ்பிடித்து கழுத்தின் பிற்பகுதியின் நெறிகட்டும். உடலின் மேற்பகுதியில் காணாக்கடியும் உண்டாகும். பேனின் ஆயுள் ஒரு மாதம் தான்.. ஒவ்வொரு நாளும் 10 முட்டைகள் வரை இடும். எட்டு தினங்களுக்குப் பிறகு குஞ்சு உண்டாகும். இது மறு எட்டு தினத்திற்குள் வளர்ந்துவிடும். பேன்கள் நீக்ரோ இனத்தவரைப்

பாதிப்பதில்லை. உடல் வெப்பமடையும் போதும் பிணத்திலும் பேன் தங்குவதில்லை. தலைப்பேன் ஆண்களைவிட பெண்களை அதிகம் பாதிக்கின்றது 15 முதல் 20 சதவிகிதம் பள்ளிப்பிள்ளைகளைப் பாதிக்கின்றது. நெருக்கமான சுகாதாரக் குறைவுள்ள குடிசைவாழ்ப் பகுதி மக்களிடம் அதிகம் காணப்படுகிறது. மாணவியர் விடுதிகளிலும், ஒரே சீப்பையோ, பிரஷையோ பலர் உபயோகிப்பதினாலும் நீண்ட தலைமுடி, தாடி, ஹிப்பி முடியுள்ளவர்களிடமும், சுத்தக் குறைவினாலும் பேன் பரவுகின்றது. பேன்கள் தலையின் பின்பகுதியிலும், பக்கங்களிலும் அதிகமாக வாழுகின்றன.

***உடல்பேன்:***

இதனையே சீலைப்பேன் என்பர். தைத்த உடைகளின் ஓரங்களில் இவை வாழும். உடையைவிட்டு தோலில் உள்ள குருதியை உறிஞ்சிவிட்டு பழைய இருப்பிடத்திற்குச் சென்றுவிடும். இவற்றின் ஈரும் துணி இழைகளில் ஒட்டிக்கொண்டு ஒரு மாதம் வரை உயிரோடிருக்கும். இப்பேன்கள் ஓரிடத்தில் தங்காமல் சுற்றித்திரிகின்ற வயோதிகர்களிடமும் கும்பலாகக் கூடி வசிக்கின்றவர்களிடமும், அடிக்கடி உடை மாற்றாதவர்களிடமும் அதிக உடைகளை அணிகின்ற குளிர் நாட்டு வாசிகளிடமும், ராணுவத்தினரிடமும் அதிகம் காணப்படும்.

***நோய்க் குறிகுணங்கள்:***

உடல் முற்றும் பொதுவாகவும், சிறப்பாகத் தோள்பட்டை, மார்பு, பிட்டம் முதலிய இடங்களிலும் அரிப்பு ஏற்படும். சொறிந்த

இடங்களில் நகக்காயங்களும், இரத்தக் கசிவும், பக்கு கட்டுதலும் ஏற்படும்.

### *மேகனப்பேன் அல்லது அடிவயிற்றுப்பேன் :*

மேகனத்தில் இருக்கும் சுருண்ட ரோமங்களிடையே காணப்படும். இப்பேன்கள் ரோமம் உள்ள கண் இமைகளிலும் அக்குள் ரோமங்களிலும், நெஞ்சு முடிகளிலும் பரவும். இப்பேன்கள் இரண்டு ரோமத்தை கால்களால் நன்கு பற்றிக் கொண்டு ரோமங்களின் இடையில் உள்ள தோல் பகுதியில் தலையை புதைத்துக் கொண்டிருக்கும். விரல்களில் சிறுமணல்போல் தட்டுப்படும்.

### *நோய்க் குறி குணங்கள் :*

மேகனத்தில் அரிப்பு, சொறிவதால் புண்கள் உண்டாகும். வெளியில் தெரிவதில்லை மற்றும் அடிவயிறு, தொடை, நெஞ்சு, கைகளில் கருநிறமுள்ள சிறு தடிப்புகள் காணும் வாலிபர்களில் மேகநோய் போல பரவும்.

### *மருத்துவம் :*

தலைப்பேனை ஒழிக்க மொட்டையடித்து ரோமத்தை அறவே நீக்குதல் சாலச்சிறந்த முறையாகும் இல்லையேல் முடியை ஒட்ட வெட்டிவிடுதல் வேண்டும். அதேபோல் மேகனப்பேனை ஒழித்திட மேகன பாகத்திலுள்ள ரோமத்தை அகற்ற வேண்டும். சீலைப்பேனை ஒழிக்க துணிகளைச் சுத்தமாகச் சலவை செய்து இஸ்திரிப் பெட்டி போட்டால் பேன்களும் ஈறுகளும் மடியும். உடலைச் சுத்தமாக வைத்திருப்பது போல துணிகளையும் சுத்தமாக

வைத்துக் கொண்டால் பேன்கள் மடியும். மற்றும் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பேன் தொற்றுவதைத் தவிர்க்க குடும்பத்திலுள்ள மெத்தை, தலையணை உறைகள், போர்வைகள், களைந்த உடுப்புகள் ஆகியவற்றை வெளுத்தோ அல்லது கொதிக்கும் வெந்நீரில் இட்டு உலர்த்தியோ உபயோகிக்கவும்.

***புறமருந்து :***

நன்றாக பொடி செய்த காக்கை கொல்லிப் பருப்பை நீர்விட்டு அரைத்துத் தலையில் தேய்க்கப் பேன்கள் சாகும்

☐ காக்கை கொல்லி இதுவே பேன்கொட்டை, நஞ்சுக்கொட்டை

(Anamirta Cocculus, Ointment prepared from drupes-Used as insecticide, to destroy pediculi and chronic skin diseases)

# மருத்துவச் சொற்கள் அகரமுதலி


அகங்காரம் 52
அகத்தி 72
அகத்தியர் செந்தூரம் 300
அக்கரம் 298
அக்கி 313
அகத்தவம் 35
அகத்தியிலை 107
அகத்தியரின் மானிடர் கிறுக்கு நூல் 65
அகமருந்துகள் 280, 288
அங்கிதாரணை 60
அசதி 23
அசுவகெந்தி 252
அடங்கல் 153, 176
அட்ப்பக்காலம் 189, 196
அடிவயிற்றுப்பேன் 326
அட்டயோக நூற்கள் 36
அட்டயோகம் 33, 35
அண்டத்தில் வர்மம் 200
அதிகாரம் 4
அதிமதுரம் 248,252
அத்திசுருக்கிக் காலம் 198
அத்திச் சுருக்கிவர்மம் 201
அபஸ்மாரம் 65, 104
அபரிசம் 227, 236
அபினி 65,66,113
அமரகண்டவலிப்பு 96
அமிர்தநிலைகள் 147
அமுக்கரா 253
அமுக்கராக்கிழங்கு 113,251
அமுதவர்ம சூத்திரம் 149
அமுரி 61,246
அமுரிகற்பம் 62
அமுரிதாரணை 5, 62
அம்மைக் கொப்புளம் 312
அயசம்பீர கற்பம் 22
அயபிருங்காரச கற்பம் 23
அயம் 155

அரிகிரந்தி 250
அரிதாரம் 248, 249
அரையாப்பு 249
அவிழ்தம் 5
அவுதும்பரம் 227, 235
அறிவுக் கேடு 114
அறுகம்வேர் 252
அழல் உன்மாதம் 87
அழல் மத அழிவு 90
அழல்மதம் 93
அழல் மயக்கம் 106
அழிஞ்சி 246, 247
அழிஞ்சில் 12, 248
அனற் கிரிகை 74
அனுபோக நாலுமாத்திரை 150
அன்னபேதி 155

ஆசான் 156
ஆடுதீண்டாப்பாளை 71,246
ஆதண்டையிலை 252
ஆதனம் 5,31,33,35,36
ஆமணக்கு 15
ஆமணக்கெண்ணெய் 70
ஆமைக்காலம் 201
ஆவரைவேர் 251
ஆவாரை 246
ஆவின்பால் 251,252
ஆலகாலவிடத்தைலம் 100
ஆலம்பால் 14
ஆல் 246
ஆல்விழுது 252
ஆனை நீர் 252
ஆனைநெருஞ்சில் 252

இச்சாபத்தியம் 85,246
இஞ்சிச்சாறு 73,85
இஞ்சித்தேன் 8
இடகலை 30
இடி 147
இதயவர்மம் 188
இந்திர கோப்பூச்சி 25
இந்துப்பு 100

இயம நியமம் 49
இயமம் 5
இரச கற்பூரம் 250, 251
இரசத்தைலம் 259
இரசம் 155,248,251
இரசமெழுகு 259
இரணங்கள் 251
இரத்தக் குறைவு 23
இரத்தம் வெளிப்படுதல் 147
இராசயோகம் 36,46
இருக்கை 35
இருவேலி 248
இரேசகம் 25,29,34
இலக்கு நூல் 153
இலவங்க பத்திரி 248
இலவங்கம் 248, 252
இலவங்கரசம் 85
இலாடசூத்திரம் 172
இலிங்கப்பொடி 70
இலிங்கம் 249
இலிங்க வர்மம் 201
இளக்கு முறை 181
இளநீர் 252

**ஈ**டு 158
ஈட்டு நிதானம் 153
ஈருள்ள 250,251,253

**உ**சிலம் 85
உடலுபாதி 153
உடல்பேன் 325
உடற்கேடு 91
உடற்கோளாறுகள் 109
உணவுப்பாதைக் கோளாறுகள் 111
உதிரக் காலம் 185
உதைபடும் போது 147
உத்தரமணி 18
உபரசம் 5
உப்புக் குத்திவர்மம் 201
உப்புப் பொருட்கள் 5
உயிருடலுபாதி நிலையங்கள் 153
உயிருபாதி 153

உயிர்ப்பு 35
உருக்கு 57
உருமிக்காலம் 189
உருளைக்கிழங்கு 11
உலகத் தமிழ் மகாநாடு 154
உலோகம் 5
உளப்பிறழ்வு 109
உள் சூத்திரம் 172
உள்மூச்சு 25
உள்வர்ம குறி சூத்திரம் 151
உள்ளங்கால் வர்மம் 205
உறக்க காலம் 183,186,189,193
உறுப்புகள் செயலிழத்தல் 147
உறுமிக் காலம் 197
உன்மதம் 65
உன்மத்தம் 20
உன்மாதம் 87
ஊழலாற்றித் தைலம் 255

எச்சில் கிரிகை 68
எட்டி 246
எட்டிக்கொட்டை 249
எட்டி விதை 247
எண்ணிலா ஆதனம் 37
எருக்கு 12
எலுமிச்சம் பழம் 20, 253
எலும்பு முறிவு சாரி 153
எள் 156
என்புகள் 147, 187
ஏலம் 17, 248, 252

ஐங்கூட்டுத் தைலம் 100
ஐய உன்மாதம் 87
ஐய மத அழிவு 91
ஐய மதம் 93
ஐய மயக்கம் 106
ஐயமூர்ச்சை 102
ஒடிவு முறிவு சர சூத்திரம் 164, 172
ஒடிவு முறிவு ஞான நூல் 151
ஒட்டு வர்மம் 185
ஓமம் 250, 251
ஓரிதழ்த் தாமரை 16

ஓரிலைத் தாமரை 8
ஔவை குறள் 4, 57, 26, 35

**க**சகசா 252
கசசர்மம் 232
கஸ்தூரி மஞ்சள் 251, 252, 22
கஜசர்மம் 227
கஷாயங்கள் 155
கஞ்சா 65, 71
கஞ்சா விரை 13
கஞ்சா வேர் 250
கஞ்சுகி 66
கடல் தண்ணீர் 156
கடிவிழி காலம் 200
கடுக்காய் 8, 13, 246, 251
கடுக்காய்த் தூள் 70
கடுக்காய்த் தோல் 22
கடுக்குத் தண்ணீர் 156
கடும் பத்தியம். 249
கட்டி 301
கட்டு 57
கட்டுகள் 155
கண்டக் கரப்பான் 284
கண்ணாடிக் காலம் 185, 181
கதம்பைச் சாறு 156
கந்தகச் சுடர்த் தைலம் 259
கந்தகம் 155
கந்தக ரசாயனம் 259
கபபிரமை 86
கபப்பிணி 17
கபமூர்ச்சை 103
கபம் 17
கபவாதசுரம் 66
கபவெண்படை 269
கபாலக்கரப்பான் 285
கமலாக்கினி 19
கயப்பிணிகள் 23
கரணம் 227, 233
கரண்டைக்கண் வர்மம் 201
கரண்டை வர்மம் 201
கரப்பான் 251, 281
கரிசாலை 253

கரிய சீரகம் 246
கருங்கழுதை 71
கருங்காக்கட்டான்பூ 107
கருங்கிரந்தி 252
கருங்கோழி 250
கருஞ்சீரகம் 247, 248, 249, 250, 251
கருஞ்சூரை 248, 253
கருங்சூரைப்பட்டை 250
கருடாசனம் 45
கருணைக் கிழங்கு 250
கருநெல்லி 8
கருந்துளசி 8
கருவூரார் வாத காவியம் 6, 8
கருவேம்பு 8
கர்ச்சூர் 13
கர்ப்பாண்டாசனம் 44
கலாங்கிநாலு மாத்திரை 150
கலிக்கம் 78, 80, 82
கலித்தொகை 50
கல்எறிக் கிரிகை 72
கல்யாணப் பூசனி 11
கல்லிடைக் காலம் 189, 199
கல்லிடை வர்மம் 201
கல்லுப்பு 58
கழஞ்சு 246, 250
கழற்சி நெய் 100
கழுதைப் பால் 67
களங்கு 57
களிப்பறட்டை 11
கள் 65
கறிமலை வேம்பு 19
கற்ப அவிழ்தம் 5, 62
கற்பப் பொருள் 5
கற்ப மருந்து 3
கற்ப முறை 14
கற்பம் 3,4,31
கற்ப யோகங்கள் 6
கற்ப யோகம் 5
கற்பூரம் 155, 251
கற்றாழை 9, 252
கற்றாழைச் சார் 70
கன்மேந்திரியம் 110

காகபுசுண்டர் 27, 56
காகபுசுண்டர் ஞானம் 30
காகபுசுண்டர் குறள் 31, 57
காக்கை கொல்லி 327
காக்கை வலி 97, 127
காக்கை வலிப்பு 113, 120
காசெடை 246, 249
காஞ்சிரை 248
காடித் தண்ணீர் 156, 252
காட்டாமணக்கு 246
காணாக்கடி 303
காந்தம் 155
காமம் 53
காமாலை 16, 23
காமாலைப் பிணி 13
காமேசுர கல்பாவிழ்தம் 21
காம்பூரிக் காலம் 185
காயகற்பம் 3
காயசித்தி 15
காயம் 147
காய் 155
காய்ச்சினிபால் 24
கார்போகரிசி 246, 250
கால் ஆணி 296
காளாஞ்சகப் படை 317
காளாஞ்சகம் 319
கிடிபம் 227, 238
கிட்டம் 155
கிட்டிக்கிழங்கு 18
கிரந்தி 66, 249, 251
கிராணி வகைகள் 23
கிராம்பு 72, 250, 251
கிரந்திப் புண் 252
கிரிகை 65, 67
கிருட்டிணம் 227, 234
கிறுக்கு 65
கீழாநெல்லி 8, 12
குக்குடம் 37
குக்குடாசனம் 37, 40
குடிவெறி 65
குஷ்டகஜ கேசரி 260
குணக்கேடு 114

குணமாற்றங்கள் 109
குண்டலி 36, 37
குண்டலினிசக்தி 60
குண்டிகைக் காலம் 185
குதிகால் வர்மம் 201
குதிரை வர்மம் 201
குத்து 147
குப்பை மேனி 15
குமரகண்ட வலிப்பு 96
குமரி 253
குமரிக் கிழங்கு 247
குமிழ் 246, 252
கும்பகம் 25,29,34
கும்பமுனி நாலு மாத்திரை 253
குறட்டை 253
குரு 58
குருசாணி ஓமம் 251
குருதிமதம் 93
குருதிமூர்ச்சை 102
குழம்பு 83
குழித்தயிலம் 155, 246, 249
குளிகை 57
குளிர்சுரம் 125
குறுணி 246
குற்றிக்காலம் 185
குன்மவகைகள் 23
குன்றி 248
குன்றிமணிச்சாறு 249
கூம்பு வர்மம் 195
கூவிளத்தி 246
கெந்தகம் 249, 251
கெந்தக வடகம் 248
கெந்தி 250
கையாந்தகரை 250, 252
கையான் 8, 11
கொடி 155
கொடிக்கள்ளி 251
கொடிவசளை 10
கொடிவேலி 71, 247
கொடிவேலிவேர் 246, 251
கொடிவேலிவேர்ப்பட்டை 249
கொடுப்பை 252

கொண்ட வர்மம் 185
கொண்டைக் கொல்லி 185
கொம்பு குற்றிக்காலம் 186
கொருக்கு நோய் 114
கோசலம் 252
கோஷ்டம் 248
கோடைக் கொப்பளம் 300
கோமுகம் 37
கோமுகாசனம் 37
கோரைக்கிழங்கு 18,248
கோரோசன்ன 252
கோர்த்தக நாடிச்சுவர் தடுப்பு 120
கோர்த்தக்கழலை 120
கோர்த்தக் கிரந்தி 120
கோழியின் அண்ட ஓட்டுப் பொடி 71

**ச**க்கராசனம் 43
சங்கங்குப்பி 253
சங்கங்குப்பியிலைச் சாறு 251
சங்கம் 250
சங்கம் வேர் 249
சங்கரன் கோவில் 65
சங்கு 246, 248, 252
சங்கு திரிககாலம் 186
சஞ்சார நோய்கள் 126
சடம் 58
சடாமாஞ்சில் 252
சடாமாஞ்சில் தைலம் 99
சண்டரச பற்பம் 259
சண்பகப்பூ 248
சதகுப்பி 251
சதகுப்பை 248
சதாரு 240
சதாருகுட்டம் 262
சதுரக்கள்ளி 248
சத்திச்சாரணைக் கிழங்கு 250
சந்தனம் 248
சந்திரகலை 30
சந்திராமிர்தம் 60
சமாதி 35
சமுத்திராப்பழம் 251
சரகம் 153

சரநூல் 35
சருதி வர்மம் 185
சரும நோய் 225
சர்க்கரை 252
சர்மதலகுட்டம் 262
சர்மதலம் 227, 238
சர்வங்காசனம் 43, 44
சலபாசனம் 42, 45
சவாசனம் 43, 46
சவுக்கார பீச்சு 100
சவுக்காரம் 58, 249
சன்னி 17, 18
சாக்கிரடீசு 52
சாதிக்காய் 251, 252
சாதிபத்திரி 251, 252
சாரணை 253
சாரம் 251
சாராயம் 65, 66
சாலவம் 66
சிகுரம் 227, 233
சிங்காசனம் 37
சிங்காதனம் 41
சித்தம் 52
சித்தர் 3
சித்தாசனம் 36, 40
சித்தாதனம் 3
சித்தாதி நெய் 100
சித்தானம் 48
சித்திரமூலம் 248, 252, 253
சித்திராசனம் 39
சித்து 3
சித்துமா 240, 227
சிரசாசனம் 42, 46
சிரசு 18
சிரட்டைத் தைலம் 263
சிரட்டை வர்மம் 201
சிலேத்பனக் கிரிகை 70
சில்விடதடிப்புகள் 304
சிவக்குடிலைநீர் 36
சிவநிலை 37
சிவப்பு எண்ணெய் 290
சிவயோகசாரம் 35

சிவயோகம் 36
சிவவாக்கியம் 26
சிவவாக்கியர் 54
சிவனார்வேம்பு 8, 246, 248, 249
சிவனார் வேம்புக் குழித்தைலம் 257
சிறப்புக் கற்பம் 4
சிறிய அத்திசுருக்கி 189
சிறுகாஞ்சோரி 253
சிறுகீரை 18
சிறுகுறிஞ்சான் 247
சிறுசிரங்கு 252
சிறுசெருப்படை 251
சிறுபாம்புக் கடி 304
சிற்றாமணக்கு 252
சிற்றாமணக்கெண்ணெய் 253
சிற்றின்ப வர்மம் 153
சின்னத்திருமேனி 208
சீக்கிரான் 85
சீதக்கழிச்சல் 14
சீதளம் 20
சீதேவியார் செங்கழுநீர் 12
சீரகம் 14, 86, 248, 252
சீலை 246
சீவசந்துக்கள் 73
சீவப்பொருள் கற்பம் 24
சீவரட்சாமிர்தம் 228
சீறுங்கொல்லி 175, 185
சுக்கிலத் தம்பனம் 21
சுக்கு 246, 250
சுசுருதம் 153
சுண்ணம் 55
சுதாரு 227
சுத்தி 247
சுப்ரமணியர் ஞானம் 27
சுரவலி 97
சுரை 12
சுவாமி சிவானந்தர் 54
சுவேத குட்டம் 262
சுவேதம் 241, 227
சுழிமுனை 30
சூடாமணித் திறவுகோல் 172
சூதகசன்னி 128

சூதிகாவாதம் 65, 107, 110
சூதிகாவாத வலிப்பு 109
சூரியகலை 30
சூலை 249
சூலை வகைகள் 23
சூலைவலி 16
செங்கத்தாரி 253
செங்கரந்தை 8
செங்கள்ளி 8
செங்கிரந்தி 250, 252
செங்கொடிவேலி 8
செந்தூரம் 55, 155
செந்நாயுருவி 8
செம்பு 55
செம்புபற்பம் 260
செம்முள்ளி 253
செவிகுத்துக்காலம் 191
செவிக்குற்றிக்காலம் 185
செவிக்குற்றி வர்மம் 189
செவிக்கோளாறுகள் 111
செவிட்டுப் பிணி 20

செவ்வலரி 249
செவ்வாப்பு 250
சேங்கோட்டை 248, 249
சேத்துமக் கரப்பான் 286
சேராங்கொட்டை 15
சேற்றுப்புண் 293
சொத்திராசனம் 37
சொரி 249
சோமநீர் 60
சோம்பு 252
சோளிங்கர் 65
ஹலாசனம் 44

**ஞா**னநூல் 35
ஞான முப்பூ 57
ஞானவெட்டியான் 61
ஞானேந்திரியம் 110

**த**க்காளியிலை 252
தங்கம் 55, 57
தசதீட்சை 5

தசிரங்கள் 147, 187
தடிப்புகள் 303
தட்டம்மை 66
தட்டு 147
தட்டு வர்மம் 159
தத்துரு 227
தத்துருகுட்டம் 262
தமரகத்துடிப்பு 122
தமரகம் 122, 127
தமரகவலி 97
தமிழ்நூல்கள் 153
தமிழ் மூவாயிரம் 49
தருப்பை 13, 39
தலைப்பாக்காலம் 186
தலைப்பேன் 324
தவளவர்மம் 201
தழுதாழை 246
தழும்பு 314
தனுராசனம் 42
தனுர்வாயு 13
தாதுக்கற்பம் 5
தாக்கு 147
தாதுப்பொருள் கற்பம் 22
தாபிதம் 316
தாமரை 20, 252
தாரணை 35
தாரம் 155
தாழைவிழுது 252
தான்றிக்காய் 246, 248
திப்பிலி 12, 250, 251
திப்பிலிமூலம் 250
திமிர்வாதக் கரப்பான் 285
தியானம் 35
திரிகடி 249
திரிகடியளவு 251
திரிகடுகு 248, 252
திரிகோணாசனம் 46
திரிசாதி 155
திரிபலாதி 252
திரிபலை 155, 251
திருகடுகு 155
திருக்குறள் 49

திருமந்திரம் 3, 26, 41, 60, 62
திருமூலர் 8, 49
திருவள்ளுவர் ஞானம் 35
திருவிடைமருதூர் 65
திரை 3
திலர்த காலம் 180, 185
திலர்த வர்மம் 189
திவளைக் காலம் 194
திவளை வர்மம் 189
தீட்சை 55
தீதகற்றல் 35
தீபாக்கினி 16
தீப்புண் 294
தீயகம் 25
தீராக்குறி 92
தீர்த்தம் 36
தீவிர நுண்ம சஞ்சார நோய்கள் 125
தீவிர நோய் நிலை 108
துட்ட கணம் 67
துண்டுவர்மம் 201
துத்தி 252
தும்மிக்காலம் 194
தும்மிசகம் 91
துருசு 155, 251
துருசு செந்தூரம் 260
துவாலை 71, 73, 77, 79, 81
துளசி 17, 72
துளசிச் சாறு 86
துன்பம் 53
தூதுவேளை 15
தெங்கு 156
தென்னம்பாளை 252
சேத்துரு 239
தேமல் 306
தேரன் கரிசல் 15
தேரன் யமகவெண்பா 6
தேவதாரம் 248
தேற்றான் 16, 248
தைலம் 83
தொகை நிலை 35
தொடுவர்மத் திறவுகோல் 152
தொடுவர்மம் 159

தொல்காப்பியம் 49
தொழுநோய் 242
தோல் நோய் 225
தோல் புற்று 291
தோற்பிணி 225
தோன்றி 247

**ந**கக்கண்வர்மம் 200
நகச்சுற்று 297
நசியம் 77, 80, 82
நச்சுமதம் 94
நஞ்சு உன்மாதம் 88
நஞ்சுக்கொட்டை 327
நஞ்சுமூர்ச்சை 102
நஞ்சுவலி 97
நட்சத்திரக்காலம் 180, 185, 189, 190
நத்தைச் சூரி 67
நபுஞ்சகம் 20, 21
நரம்புகள் 147, 187
நரை 3, 23, 307
நல்லதண்ணீர் 156
நவரெத்தினம் 155
நவலோகங்கள் 155
நற்சீரகம் 250, 251
நன்னடத்தை 5
நன்னாரி 18
நன்னாரிவேர் 107, 250
நாடி நிதானம் 287
நாட்பட்ட நோய் நிலை 108
நாணல் 13
நாதவிந்து கிரிகை 70
நாலுமாத்திரை 172
நாழி 251
நியமம் 5
நிலக்குமிழ் 252
நிலப்பனைக்கிழங்கு 250, 252
நிலவாகை 67, 71, 246, 253
நிலவேம்பு 246
நீரடி முத்து 249
நீரேற்றப்பிணி 12
நீர்குடிக் கிரிகை 76
நீர்ப்புலா 252

நீர்மேல் நெருப்பு 252
நுணாயிலைச் சாறு 251
நெருஞ்சி 253
நெல்மாநெய் 9
நெல்லி 16, 253
நெல்லிக்காய் 252
நெல்லிமுள்ளி 248
நேர்வர்மம் 195
நேர்வாளக்கொட்டை 249
நொசிப்பு 35
நொச்சி 246
நொச்சில் 14
நோய்க்குறி 326

**ப**க்கசூலை 20
பக்ஷி வர்மம் 185
பங்கம்பாளை 253
பசியின்மை 43
பசுந்தயிர் 12
பசுமஞ்சட்சாறு 248
பச்சைப் பசும்பால் 24
பஸ்பம் 155
பஞ்ச கற்பம் 22
பஞ்ச பூதம் 58
படமுறித்தான் வர்மம் 200
படர்தாமரை 305
படுக்கைப் புண் 293
படுவர்மத் திரட்டு 152
படுவர்ம நிதானம் 153
படுவர்ம நூல் 151
படுவர்மம் 12, 159, 175, 189, 210
பட்டை 155, 305
பட்சிமோத்தாசனம் 43
பதார்த்தம் 251
பதுமம் 37
பதுமாசனம் 36, 37, 39
பதுமாதனம் 33
பத்திரகிரியார் 54
பத்திரம் 37
பத்திராசனம் 37, 40
பரிகாரம் 155
பலகறைபற்பம் 259

பல்ஆதனம் 37
பவழம் 155
பழம் 155
பறங்கிப்பட்டை 247, 248, 250
பற்பம் 251
பனிக்குடத்தின்நீர் 58
பனிக்குடநீர் 61
பனங்கள் 86
பனைவேர் 16
பாண்டு 16
பாதஹஸ்தாசனம் 45
பார்வைக்கோளாறுகள் 111
பாலனி 66
பாலுண்ணி 310
பாமாகுட்டம் 262
பாதாளவர்மாணி 149
பாமம் 227, 234
பாலவர்மம் 185
பிசின் 155
பிஞ்சு 155
பிடரிக்காலம் 182, 192
பிடரி வர்மம் 176, 185, 189
பிட்டவித்து 246
பிதற்றுதல் 71
பித்தகாங்கை .13, 20
பித்தகிரிகை 68
பித்தக்கரப்பான் 285
பித்தப்பிரமை 85
பித்தவெடிப்பு 295
பித்தவெண்படை 269
பித்தாதிக்க உளப்பிறழ்வு நோய்கள் 128
பிரத்தியாகாரம் 35
பிரமகண்டவலி 97
பிரமை 65, 85
பிரமியம் 252
பிரமியவழுக்கை 107
பிரமை 20, 85
பிரம்மதண்டுமகரந்தப்பொடி 21
பிரம்மி நெய் 113
பிராணன் 147
பிராணாயாமம் 5, 25, 35, 46
பிளவை 249

பின்கலை 30
பீரங்கித் திறவுகோல் 172
புங்கம் வித்து 247
புங்கு 156, 246, 247, 248
புண் 301
புண்டரீகம் 227, 230
புத்தி 52
புப்புசுரம் 125
புயங்காசனம் 42, 45
புலப்பம் 71
புலித்தோல் 39
புல் 155
புழுவெட்டு 16, 306
புளியந்தேன் 72
புளியமடற் கிழங்கு 250
புளியாரை 14
புன்னை 156, 246, 247
பூதக்கிரிகை 71
பூண்டு 155
பூ 155
பூசணிக்காய்ச்சாறு 252
பூதகரப்பன் 253
பூநீறு 55
பூரகம் 25, 34
பூரண சந்திரோதயம் 23
பூரம் 252
பூவரசம்பட்டை 246, 251
பூவரசு 248
பெருங்கானான் 10
பெருஞ்சிரங்கு 252
பெரும்பாடு 16
பெருவயிறு 16
பேசி 187
பேசிகள் 115, 147
பேச்சுக்கோளாறுகள் 111
பேய்பிடிக் கிரிகை 76
பேய்ப்பீர்க்கு இலைச்சாறு 73
பேரீச்சங்காய் 13
பேன்கள் 324
பேன்கொட்டை 327
பொடிகள் 155
பொடுகு 308

பொதுகற்பம் 4
பொய்கைக் காலம் 185
பொரிகாரம் 249
பொரிகிரந்தி 250
பொருத்துகள் 147, 187
பொறைநிலை 35
பொற்சீந்தில் 8
பொற்சைக் காலம் 185
பொற்றலை 8
பொன்னாங்கண்ணி 71
பொன்னாங்காணி 9
போகர் ஏழாயிரம் 56
போகர் தீட்சை 58
போகர் நாலுமாத்திரை 150
போகர்வர்ம சூத்திரம் 154
பைத்தியம் 20

மகாவாத ரோகம் 66
மகோதரம் 16, 20
மச்சம் 311
மச்சாசனம் 44, 45
மஞ்சள் 249
மணத்தக்காளி 10
மணிபந்தகம் 160
மண்டலம் 7, 227, 235
மதநோய் 65, 92
மதாத்தியம் 65
மதிஅமுது 59
மத்தன்சாறு 67
மந்திரக்காலம் 185
மந்திரம் 78, 80
மயக்கநோய் 104
மயக்கம் 53, 65
மயிர்உதிரல் 307
மயூராசனம் 41, 45
மரணம் 147
மரத்துப்போதல் 147
மரமஞ்சள் 248
மரம் 155
மருட்டுக் கிரிகையின் குணம் 74
மருதோன்றி 248
மருள் 310

மர்மக்கலை 147
மர்ம நிலைகள் 147
மர்மம் 147, 157
மலச்சிக்கல் 43
மலடு 21
மலட்டுக்கு கற்பம் 21
மலம் 61
மல்லி 248
மனத்தூய்மை 5
மனோவலி 97
மாத்திரை 155
மாவிலிங்கு 246
மான்தோல் 39
மிளகரணை 246
மிளகு 22, 249, 250, 251
மின்வெட்டிக்காலம் 185
முகப்பரு 301
முக்குற்றஉன்மாதம் 88
முக்குற்ற சுரம் 125
முக்குற்றமத அழிவு 91
முக்குற்றமதம் 93
முக்குற்ற மயக்கம் 106
முக்குற்ற மூர்ச்சை 102, 103
முடக்கு 20
முட்டைத் தைலம் 99
முத்திரை 48
முத்தெண்ணெய் 73
முப்பு 55
முப்புதீட்சை 5
முப்பூ 24, 31
முருங்கைப் பூ 70
முயல்வலி 97
முல்லைப்பூ 72
முல்லைவேர் 247
முறிவுசாரி 172
முனங்கல் கிரிகை 73
மூக்கிரட்டை 15
மூச்சுப்பயிற்சி 25, 60
மூடுகிரிகையின் குணம் 75
மூத்திரக்காலம் 189, 200
மூப்பு 3
மூர்ச்சை 17, 65

மூர்த்திவர்மம் 185
மூலக்கனல் 60
மூலம் 16
மூலிகைக் கற்பப் பொருட்கள் 6
மூலிகைக் கற்பம் 5, 8
மூளைச் சவ்வு 66
மெருகங்கிழங்கு 250
மெருகன் நெய் 100
மெழுகுத் தைலம் 99
மேகக் கடுப்பு 249
மேகத் தழும்புகள் 312
மேக நோய்கள் 23
மேகம் 249
மேகவெட்டை 14
மேகவெண்படை 270
மேகவெப்பம் 16
மேகவேட்கை 155
மேகனப்பேன் 326
மோகினி கிரிகை 72

**யோ**கநித்திரை 44
யோகநூல் 35
யோகமுத்திரை 44
யோகமுப்பு 5, 57, 60
யோகம் 31
யோகாசனம் 36

**வ**ங்கம் 55
வசம்பு 248
வசவெண்ணெய் 206
வண்டுகடி 249
வராகபட்சணி 18
வர்ம அசாத்தியம் சூத்திரம் 151
வர்ம அஞ்செழுத்து ஊதல் 152
வர்ம அடங்கல் 150
வர்ம அடங்கல் இரகசியம் 152
வர்ம அமுதநிலைசூத்திரம் 149
வர்ம அளவு சூத்திரம் 149
வர்ம அணுப்பிரமாணம் 150
வர்ம ஆணி 172
வர்ம ஆணி அடி சுருக்கம் 149
வர்ம ஆணி சூத்திரம் 149
வர்ம உரை நூல் 149

வர்ம ஊசி சூத்திரம் 149
வர்ம ஊண் மாத்திரை 151
வர்ம ஊற்றுநூல் 152
வர்ம ஏணி சூத்திரம் 149
வர்ம கண்டி 149
வர்ம கருப்பிணி இளக்கு 149
வர்ம கலசச் சூத்திரம் 149
வர்ம குருநாடி சூத்திரம் 151
வர்ம குருநூல் சூத்திரம் 148
வர்ம குறுந்தடிச் சாத்திர்ம் 152
வர்மக் கண்ணாடி 172
வர்மக் கண்ணாடிச் சுருக்கம் 149
வர்மக் க்ண்ணாடிச் சூத்திரம் 149
வர்மக் கலை 147
வர்மக் கைபாகச் சூத்திரம் 151
வர்மக் கைமுறை ஏடு 152
வர்மக் கைவல்லியம் 150
வர்ம சர்ச்சை செவுடு நூல் 151
வர்ம சர்வாங்க அளவு 149
வர்ம சர்வாங்க நூல் 151
வர்ம சவுட்டு முறை 152
வர்ம சாத்திய சூத்திரம் 151
வர்ம சாத்திர மாத்திரை நூல் 153
வர்ம சிந்தாமணி சூத்திரம் 148
வர்ம சுரம் 149
வர்ம சூட்சம் 149
வர்ம சூத்திர நிகண்டகராதி 150
வர்ம சூத்திரம் 172
வர்ம செய்பாகச் சூத்திரம் 151
வர்ம சோதனைச் சூத்திரம் 151
வர்ம சுவடு நூல் 151
வர்மத் தடவு 150
வர்மத் தட்டு 150
வர்மத் தட்டுச் செவுடுநூல் 152
வர்மத் திறவுகோல் 150
வர்மத் தீர்ப்பு 152
வர்மத் தைல சூத்திரம் 151
வர்ம நாடி இரகசியம் 152
வர்ம நிதானம் 150
வர்ம நூட்சம் 152
வர்ம நெடுந்தடிமுறை நூல் 152
வர்ம நெய் 207

வர்ம நேர்நூல் 150
வர்ம பரிகாரம் 147, 156
வர்ம பிடிமுறைநூல் 152
வர்ம பீரங்கி 172
வர்ம பீரங்கிச் சூத்திரம் 149
வர்மப் பொன்னூசித் திறவுகோல் 150
வர்மம் 147
வர்மரெத்தினம் 153
வர்ம விடைச் சூத்திரம் 151
வர்ம விதி 154
வர்ம விமானம் 153
வர்ம விரல் அளவு 149
வர்ம விரற் கடை சூத்திரம் 149
வர்ம வில்விசை 150
வர்ம வைத்தியபலதிரட்டு 151
வர்ம வைத்தியம் 150
வர்மாணி 147, 156
வர்மாணிக் கலை 148
வர்மாணிக் குளிகை 213
வர்மாணித் திறவுகோல் 152
வலி அத்தி சுருக்கி 189
வலி 147
வலிப்பு 65, 114
வலிப்பு கிரிகையின் குணம் 75
வல்லாரை 252
வல்லாரை நெய் 107, 113
வல்லை 16
வழுக்கை 307
வளி உன்மாதம் 87
வளி நிலை 35, 37
வளிமத அழிவு 90
வளிமதம் 93
வளி மயக்கம் 105
வள்ளுவ நாயனார் 50
வள்ளுவர் 53
வள்ளைக் கொடி 14
வறட்சிக் கரப்பான் 285
வன்மைக் கேடு 91
வாசிப்பழக்கம் 59
வாட்கோரைக் கிழங்கு 10
வாத கிரிகை 69
வாதக் கரப்பான் 284

வாதப்பிணி 17
வாதபிரமை 85
வாதமுப்பு 5, 57
வாதவெண்படை 269
வாயுதாரணை 25, 60
வாய்ப்புண் 298
வாய்விளங்கம் 248
வாலுழுவை அரிசி 113
வாலுளுவையரிசி 246, 249
வால் மிளகு 252
விசர்ச்சிகம் 227, 236
விசிகள் 147, 187
விஷக்கடி 249
விடமுட்டித்தயிலம் 100
விடமூர்ச்சை 103
விடையம் 251
விதனம் 147
வித்து 155
வித்துவர்மம் 201
விபாதிகம் 227
விபாதிகள் 237
வியாகூலஉன்மாதம் 88
விராகனெடை 246
விரைவாதம் 14
வில்வம் 17, 248, 252
வில்வலி 97
வில்வாதி இளகம் 107
வில்விசை 172
விளக்கெண்ணெய் 250, 251
விளா 10, 246, 253
விற்போடகம் 227, 237
வீக்கம் 17, 147
வீரமெழுகு 259
வீரம் 37, 251
வீராசனம் 37
வீடதி 252
வைத்தியமுப்பு 5
வெகுமூத்திரம் 14
வெகுளி 53
வெங்காயம் 248
வெடியுப்பு 58
வெண்குட்டம் 267

வெட்டு 147
வெட்பாலைத் தைலம் 322
வெண்கரந்தை 8
வெண்குட்டம் 18
வெண்துகில் 39
வெண்தூதுவளை 8
வெண்நீர்முள்ளி 8
வெண்புரசு 248
வெண்ணொச்சி 248
வெந்தயம் 252
வெளிமூச்சு 25
வெள்ளறுகு 246, 249, 250, 251
வெள்ளாட்டுப் பால் 246
வெள்ளுள்ளி 73
வெள்ளெருக்கு 246, 248
வெள்ளை எருக்கு 8
வெள்ளை வர்மம் 201
வெறி நோய் 65
வெற்றிலைச் சாறு 70, 73
வேடுகட்டி 246, 250
வேதை 57
வேப்பம்பட்டை 250
வேப்பம்வித்து 22
வேம்பு 9, 156, 246, 248, 253
வேர் 155
வேர்க்குரு 300
வேலிப்பருத்தி 72
வைத்தியமுப்பு 57

◎✦◎

# இந்திய மருத்துவத்துறை இயக்கக வெளியீடுகள்

| வ.எண். | நூல்களின் பெயர்கள் | ரு.பை |
|---|---|---|
| 1. | வைத்திய திருப்புகழ் பாடல்கள் | 6.15 |
| 2. | அங்காதிபாதம் | 5.00 |
| 3. | குணபாடம் பாகம்-1 | 119.15 |
| 4. | குணபாடம் பாகம்-2&3 | 39.00 |
| 5. | நல்வாழ்விற்கு ஓர் நல்மருத்துவம் | 1.40 |
| 6. | அஷ்டாங்க சங்கிரகம் | 71.00 |
| 7. | சரக சம்ஹிதை (ஆயுர்வேதம்) பாகம்-1 | 105.30 |
| 8. | சரக சம்ஹிதை பாகம்-2 | 235.65 |
| 9. | சரக சம்ஹிதை பாகம்-3 | 390.00 |
| 10. | சுசுருத சம்ஹிதை பாகம்-1 | 390.00 |
| 11. | சித்த மருத்துவம் | 86.00 |
| 12. | சூல் மருத்துவம் | 33.30 |
| 13. | பாலவாகடம் | 33.00 |
| 14. | கடுக்காய் வல்லாரை தனிமாண்பு | 29.00 |
| 15. | சித்த மருத்துவ நோய்நாடல் திரட்டு பாகம்-1 | 26.95 |
| 16. | சித்த மருத்துவ நோய்நாடல் திரட்டு பாகம்-2 | 96.85 |
| 17. | நோய்கட்குச் சித்த பரிகாரம் பாகம்-1 | 92.05 |
| 18. | கைமுறை வைத்தியம் | 20.00 |
| 19. | மருந்து செய்யியலும், கலையும் | 27.00 |
| 20. | உடற்கூறு | 103.00 |
| 21. | ஒடிவுமுறிவு சாரி நிகண்டகராதி | 80.00 |
| 22. | சட்டஞ்சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும் | 105.00 |
| 23. | தலைநோய் மருத்துவம் | 7.25 |
| 24. | Simple Home Remedies | 1.10 |
| 25. | டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதி தொகுதி-2 | 202.15 |
| 26. | டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதி தொகுதி-3 | 81.00 |
| 27. | தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் | 35.00 |
| 28. | உடல் தத்துவம் | 75.15 |
| 29. | பிள்ளைப்பிணி மருத்துவம் | 78.25 |
| 30. | பிணியுடற்பொருள் தேர்வக ஆய்வு முறைகள் | 30.30 |
| 31. | நோயில்லா நெறி | 67.20 |
| 32. | Introduction to Siddha Medicine | 11.35 |

நூல்கள் கிடைக்குமிடம்: டாக்டர் அம்பேத்கர் மைய நூலகம்,
அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனை வளாகம்,
அரும்பாக்கம், சென்னை-600 106.